

# இலக்கிய இன்பம்

# இலக்கிய இன்பம்

நாமக்கல் கவிஞர்

வெ. இராமலிங்கம் பிள்ளை

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 600 014 திருச்சி - 620 002
சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001
மதுரை - 625 001 ஈரோடு - 638 001

ஆறாம் பதிப்பு — 1964
ஏழாம் பதிப்பு — 1977
எட்டாம் பதிப்பு — 1982
ஒன்பதாம் பதிப்பு — 1994

விலை: ரூ. 30-00

ஏஷியன் அச்சகம் சென்னை - 600 014.

## முன்னுரை

**பொ. திருகூடசுந்தரம்,** எம்.ஏ., பி.எல்.

நாமக்கல் கவிஞர் அவர்கள் இதுவரை தமிழ் நாட்டார்க்கு உயர்ந்த இலக்கியங்களையே சிருஷ்டி செய்து தந்திருக்கிறார்கள். அவர்களுடைய கவிதைகள் தேச பக்தியும் சுதந்தர ஆர்வமும் நிறைந்துள்ள ஜீவ ஊற்றுகள் என்பதை எல்லோரும் அறிவார்கள். அவர்களுடைய **'என் கதை'** என்னும் நூல் தமிழ் மொழியில் இதுவரை பிறவாத ஓர் அற்புத இலக்கிய இனமாகும். அவர்களுடைய சிறை வாசத்தில் ஜனித்த **'மலைக்கள்ளனை'**க் கையில் எடுத்தால் யாரும் இறுதி காணும் வரை கீழே வைக்க மாட்டார்கள்.

இதுவரை இலக்கியங்களைச் செய்து தந்த கவிஞர் அவர்கள், இப்பொழுது இலக்கியத்தில் நாம் காணக்கூடிய இன்பத்தையும் வடித்துத் தர முன்வந்திருக்கிறார்கள்.

**இலக்கியம்** என்றால் என்ன? அது தரக்கூடிய **இன்பம்** யாது? நம்முடைய மனத்தில் நிகழும் காரியங்கள், எண்ணங்கள் என்றும், உணர்ச்சிகள் என்றும் இரண்டு வகைப்படும். ஒருவருடைய எண்ணங்களைப் பிறர் மனத்தில் உண்டாகும்படி செய்வதற்காக ஏற்பட்ட சாதனங்களை அறிவு நூல்கள் (ஸயன்ஸ்) என்று கூறுவார்கள், அதுபோல், ஒருவருடைய மனத்தில் எழும் உணர்ச்சிகளைப் பிறருடைய மனத்திலும் உண்டாகும்படி செய்வதற்காக

ஏற்பட்ட சாதனங்களை **இலக்கிய நூல்கள்** (கலை) என்று கூறுவார்கள்.

அறிவு நூல்கள் நமக்கு நம்முடைய வாழ்வின் இலட்சியத்தைக் காட்டும்; அதை அடைவதற்கு வேண்டிய சாதனங்களையும் செய்து தரும். இலட்சியம் தெரிந்தாலும் போதாது, சாதனங்களைப் பெற்றாலும் போதாது. இலட்சியத்தை அடைந்து தீர வேண்டும் என்ற அடங்காத ஆர்வம் உண்டானால்தான் இலட்சியத்தை அடைவோம். அத்தகைய ஆர்வத்தை உண்டாக்குவதுதான் இலக்கியத்தின் தனிப்பெரும் நோக்கம். ஆயினும், அதன் அற்புத இலட்சணம் யாதெனில் லட்சியம் இது என்று அறிவு நூல் கூறுகிறதுபோல் அதைக் குறித்து விவரித்துக் கூறாமலே நம்முடைய மனத்தில் ஆசையை எழுப்புவதேயாகும். இப்படி அறிவு மூலமாக எதையும் கூறாமல் நம்மை உயர்த்துவதனாலேயே இலக்கியத்தை வாழ்வின் ஜீவநாடி என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே, எது உணர்ச்சி ஊட்டுமோ அதுவே இலக்கியம். அதனால் உணர்ச்சி ஊட்டப்பெறுவதே இலக்கியத்தால் நாம் அடையும் இன்பம். இதுதான் நாம் இலக்கியத்தால் பெறக்கூடிய பிரதான இன்பமும் நன்மையுமாயினும், இந்த இன்பத்தை இலக்கிய கர்த்தா எந்தவிதமான சாதனங்களைக் கையாண்டு நம்முடைய மனத்தில் உண்டாகும்படி செய்கின்றார் என்பதை அறிவதும் ஒருவித இலக்கிய இன்பமாகும்.

இந்த விதமான இலக்கிய இன்பத்தையே கவிஞர் அவர்கள் இந்த நூலில், நமக்கு எடுத்துக் காட்டுகின்றார். இவ்விதம் அறிவு மூலமாக அறியகூடிய இலக்கிய இன்பத்தை நமக்குக் கூறுவதற்காக, உலக



மகா கவிகளில் ஒருவராகிய கம்பர் பெருமானுடைய இராமாயண காவியத்தையே உபயோகிக்கின்றார்.

"தமிழுக்குக் கதியாவர் இருவர். 'க' என்பது கம்பனையும், 'தி' என்பது திருவள்ளுவரையும் குறிக்கும்" என்று காலஞ் சென்ற செல்வகேசவராய முதலியார் கூறினார்.

அந்த இருவர் நூல்களிலும் அனவரதமும் திளைத்து வளர்ந்தவர் நம்முடைய நாமக்கல் கவிஞர். அதனாலேயே அவருடைய மலைக்கள்ளனும், பூங்கோதையும், திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் பெரிதாகப் போற்றுகின்றார்கள். மலைக்கள்ளனுடைய காவலாளிகள் கம்பராமாயணத்திலுள்ள விஷயங்களையே தங்கள் சமிக்கை வாசகங்களாகக் கூறும் பொழுது நாம் ஆசிரியருடைய திறமையையும், அவருக்குக்கம்பனிடமுள்ள அபார பக்தியையும் கண்டு, ஆனந்தமும் ஆச்சரியமும் அடைகின்றோம்.

இப்படிக் கவிஞருக்குக் கம்பனிடத்தில் அளவு கடந்த ஈடுபாடு உண்டாகியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனென்றால்,

"இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கு நீழலில் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க்கு இதயம் களியாதே"

புலவர் என்றால் வள்ளுவரையும், கவிஞர் என்றால் கம்பரையுமே எண்ணுபவர் நம்முடைய நாமக்கல் கவிஞர். அவர் "கம்பன் என்ற பெரும்பெயரை நினைக்கும்போதெல்லாம் கவிதை என்ற கன்னிகை தான் வருவாள்." ஆதலால், அவர் கம்பராமாயணத்தில் நாம் பெறக்கூடிய பலவிதமான இன்பங்களை எடுத்து, இந்த நூலில் தமிழ் மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் பரிமாறுகின்றார். அஹிம்சா தர்மத்தைக் குறித்துக் கம்பர் பாடியிருப்பதாகக் கவிஞர் அவர்கள் எடுத்துக்காட்டும் இலக்கிய இன்பம் இதயத்துக்கு அமுதம் போல இனிமையாக இருக்கின்றது.

அவர் பரிமாறும் இன்பங்களை இவை என்று முன் கூட்டி உரைப்பது நல்லதுமில்லை; என்னால் சாத்தியமுமில்லை. அத்துடன் அவர் எடுத்துக் காட்டும் முறையே ஒருவித இலக்கிய இன்பம் தருவதாக இருக்கிறது. அதையெல்லாம் நான் அழித்துவிட விரும்பவில்லை. அவரையே, "மெள்ளக் கிறி மெதுவாகச் சுளை எடுத்துத் தேனும் வார்த்து" உங்களுக்கு விருந்து செய்யுமாறு விட்டுவிடுகின்றேன்.

ஆயினும், எனக்கு அவரிடத்தில் ஒருவிதமாகக் கோபமும் உண்டாகிறது என்பதைக் கூறாமல் இருக்க முடியவில்லை. இதுகாறும் இவர் இந்த இன்பங்களை எல்லாம் தனியாகவே நுகர்ந்து வந்திருக்கிறார் என்பதை நினைக்கும்பொழுது என்னைப் போலவே உங்களுக்கும் கோபம் உண்டாகும். இனியேனும் அவர் தாம் கம்பனுடைய இலக்கியப் பூங்காவனத்திலிருந்து பறித்து வைத்திருக்கும் பச்சிலைகளையும் மலர்களையும் நமக்கு அளிப்பார் என்று நம்புகிறேன்.

## உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இலக்கிய இன்பம் | 1 |
| 2. | உடலும் உயிரும் | 62 |
| 3. | உடலுக்கு வந்த நோய் | 87 |
| 4. | மதியின் மறு | 127 |
| 5. | விதியாவது ஒன்றாவது | 137 |
| 6. | உதயமும் அஸ்தமனமும் | 150 |
| 7. | சர்வ கலாசாலை | 180 |
| 8. | மெய்ஞ்ஞானம் | 199 |

# 1. இலக்கிய இன்பம்

'இலக்கியம்' என்ற சொல் 'இலட்சியம்' என்ற சொல்லின் திரிபு. 'இலட்சியம்' என்ற பதம் 'லக்ஷியம்' என்ற வடமொழிப் பதத்தின் தமிழ் உச்சரிப்பு. 'க்ஷ' என்னும் எழுத்து தமிழில் இல்லை. அதற்காக 'க்ஷ' என்ற எழுத்துக்கு 'க்க' என்ற இரண்டு எழுத்துகளும் சேர்ந்து போலியாக உபயோகிக்கப்படுகின்றன. ஆதலால், 'லக்ஷியம்' என்ற வடமொழிப்பதம் தமிழில் 'லக்கியம்' என்று ஆகிறது. தமிழ் இலக்கண வழக்குப்பிரகாரம் 'ல' என்னும் எழுத்து, மொழிக்கு முதலில் வராது. அதனால், 'லக்கியம்' என்பது 'இலக்கியம்' என்ற உருக்கொள்ளுகிறது; 'லக்ஷ்மணன்' என்ற வடமொழிப் பெயர் 'இலக்குமணன்' என்று தமிழில் மாறுவது போல.

ஆகையினால், 'இலக்கியம்' என்னும் சொல், 'லட்சியம்' என்னும் வடமொழிப் பதத்தின் திரிபு என்பது தெரிகின்றது. இந்த 'லட்சியம்' என்ற சொல்லுக்கு அர்த்தம் என்னவென்றால் 'நோக்கம்' அல்லது, 'குறிக்கோள்' அல்லது 'பயன்' என்பதுதான். 'நோக்கம்', 'குறிக்கோள்' அல்லது 'பயன்' என்ற உடனேயே— நல்ல 'நோக்கம்', நல்ல 'குறிக்கோள்' அல்லது விரும்

பத் தகுந்த 'பயன்' என்பதுதான் பொருளாகும். நல்ல நோக்கம் அல்லது நல்ல பயன் என்றே பொருள் தரக் கூடிய இந்த 'இலக்கியம்' என்ற சொல்லைத் தமிழர்கள் எழுத்தாலாக்கப்பட்ட எல்லா நூல்களுக்கும் பொதுப் பெய ராக வழங்கி வருவதைக் கவனித்தால் தமிழுக்குள்ள ஒரு தனிச் சிறப்பைக் காணலாம். என்னவென்றால், தமிழ் மொழியில் எழுதப்படுகிற எந்த நூலுக்கும் ஒரு சிறந்த நோக்கம் இருக்கவேண்டும் என்பதையே தமிழர்கள் விரும்பினார்கள் என்பது விளங்குகின்றது. அதாவது உயர்ந்த நோக்கத்தையும் நல்ல பயனையும் குறிக் கோளாகக் கொள்ளாத எந்த எழுத்தையும் தமிழர்கள் ஒரு நூலாகப் பாராட்டிப் போற்ற மாட்டார்கள் என்பது புலனாகிறது. இது தமிழ் மக்களின் 'பண்பு' என்பதைத் தடையின்றிச் சொல்லலாம். ஏன் எனில், 'உயர்ந்த நோக்கத்தைக் குறிப்பது' அல்லது 'நல்ல பயனைத் தருவது' என்று பொருள் தரக்கூடிய 'லட்சியம்' என்ற பதத்தையோ, அல்லது, அதைப் போன்ற ஒரு நல்ல கருத்தைக் காட்டக்கூடிய வேறு சொல்லையோ பாது காத்துப் பாராட்டிப் படிக்கவேண்டிய தன்னுடைய நூல் களுக்குப் பொதுப்பெயராகச் சூட்டியிருக்கிற பாஷை இன்னொன்று இருப்பதாகத் தெரியவில்லை. 'இலக்கியம்' என்று தமிழில் சொன்னால் 'ஒரு நூல்' அல்லது 'ஒரு புத்தகம்' என்றுதான் அர்த்தமாகும்.

'லட்சியம்' என்ற வடமொழிப் பதந்தான், 'இலக் கியம்' என்று மாறியிருக்கிறது என்பதை மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சிக்காரர்கள் அறிவார்கள். ஆனால், மொழிகளைப்பற்றிய ஆராய்ச்சிகளைச் சிறிதும் அறி யாதவர்கள் 'இலக்கியம்' என்ற சொல் ஒரு நூல்' என்று



பொருள் தரக்கூடிய ஒரு தமிழ்ப்பதம் என்றுதான் எண்ணுவார்கள். 'லட்சியம்' என்ற வடசொல், 'இலக் கியம்' என்று தமிழில் மாறி 'ஒரு நூல்' என்றபொருளைக் குறிக்கிறபோது, அதற்கு வடமொழியில் உள்ள அர்த்தமும் முற்றிலும் மாறிப்போய்விட்டது போல, வேறு ஓர் அர்த்தத்தையே கொடுக்கிறதனால் 'இலக்கியம்' என்பது, 'லட்சியம்' என்ற பதத்துக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத தனித் தமிழ்ப்பதம் போலத்தான் இருக்கிறது. ஆனால், உண்மையில் 'இலக்கியம்' என்பது, 'லட்சியம்' என்ற பதத்தின் திரிபுதான். அதன் அர்த்தமும் 'லட்சியம்' என்ற பதத்துக்குள்ள 'நோக்கம்' 'குறிக்கோள்' அல்லது 'பயன்' என்பதுதான்; அந்த அர்த்தத்தை மனத்தில் வைத்தேதான் அந்தப் பதத்தைத் தம் நூல்களுக்குப் பொதுப்பெயராகத் தமிழர்கள் உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதும் உண் மையே. தமிழன் உலகத்திலுள்ள எல்லா மொழிகளி லிருந்தும் அறிவைத் திரட்டிக்கொள்ளும் இயல்புடைய வனாகவே நெடுங்காலமாக வாழ்ந்து வந்திருக்கிறா னாகையால், பிற மொழிப் பதமாகிய 'லக்ஷியம்' என்ற சொல்லைத் தன் சொந்தச் சொல்லாகவே மதித்து வந்ததைக் கொஞ்சங்கூட இழிவாக எண்ணுவதில்லை.

எனவே, 'இலக்கியம்' என்றால் மனித வர்க்கத்தின் நல்வாழ்விற்கு உதவக்கூடிய உயர்ந்த லக்ஷியங்களை அதாவது, உயர்ந்த நோக்கங்களை — நினைவூட்டத் தகுந்த ஒரு நூல் என்பது நிச்சயமாகின்றது. எல்லாத் தமிழ் நூல்களினும் பொதுவாக இந்த 'உயர்ந்த நோக்கம்' தெய்வ நம்பிக்கையை வலியுறுத்துவதும் ஒழுக்கத்தைக்

காப்பதும் அன்பைப் புகட்டுவதும் அறங்களைச் சொல்வதுமாகவே இருக்கும். அன்பையும் அதற்கான அறங்களையும் போதிக்கக்கூடிய நூல்களைத்தான் தமிழ் மக்கள் 'இலக்கியம்' என்று போற்றிப் புகழ்ந்து படித்துப் பாதுகாத்து வந்திருந்தார்கள். வெறும் சுகபோக வாழ்க்கைக்கான பலவிதக் கைத்தொழில்களைப் பற்றியோ, வியாபாரம், விவசாயம், கூட்டுறவு, வரி, வட்டம், அரசியல் முதலியவைகளைப்பற்றியோ தமிழ் நூல்கள் எழுதப்பட்டனவாகவோ, அவற்றைப் பாதுகாத்த தாகவோ தெளிவாகத் தெரியவில்லை. இந்த விஷயங் களையெல்லாம் அந்தந்தத் தொழிலாளிகளின் குல தர்மத்துக்கான பரம்பரைப் பாடமாகவும் அநுபவத்தில் அறிவிக்கவேண்டிய சிட்சையாகவுமே கருதப்பட்டு வந் திருப்பதால் அவற்றிற்கென்று எழுத்தாலான நூல்கள் இல்லாமற்போயினவோ என்றும் அநுமானிக்க இட மிருக்கிறது. உதாரணமாக,ஒரு மரத்தச்சன் தன்னுடைய தச்சுவேலை முறையைத் தன்னுடைய இனத்தவரான மாணாக்கர்களுக்கு நேரடியாகத் தொழிற்பயிற்சியி னாலேயே பழகிக் கற்றுக் கொடுத்தானேயல்லாமல், 'எப்படி மரத்தைப் பொறுக்குவது, எப்படி அதைச் சதுரிப்பது, எப்படி அதில் தொளையிடுவது, எப்படி மெருகேற்றுவது?' என்பதற்கான புத்தகங்களை எழுதி முடித்துக்கொண்டு, அதைப் பாடமாகச் சொல்லித் தந்த பிறகு, வேலை கற்றுக்கொடுத்ததில்லை. அதே மாதிரி விவசாயம், வியாபாரம் முதலான மற்ற எல்லாத் தொழில்களும் வாழையடி வாழையாக அநுபவ பாடங் களாகவே அறிவிக்கப்பட்டு வந்திருப்பதால், அவற்றிற் கான அறிவை நூல்களாக எழுதி வைக்கவில்லை



போலும். அப்படி எழுதி வைத்திருந்தாலும் அவை மனித வர்க்கத்தின் மேலான நோக்கங்களுக்கு அத்தியாவசிய மான இலக்கியங்களாகப் பாதுகாக்கப்படாமல் அழிந்து போயினவோ, என்னவோ? இதன் உண்மை எப்படியிருந் தாலும் சரி, தமிழில் நமக்கு, 'இலக்கியம்' என்று கிடைத் துள்ள நூல்கள் எல்லாம் தெய்வ உண்மையையும் அன்பையும் அறங்களையுமே போதிப்பனவாக இருக் கின்றன. அந்த நூல்களில் சொல்லப்பட்டுள்ள பல வழக்க ஒழுக்க சம்பிரதாயங்கள் இந்தக் காலத்துக்குச் சிறிதும் பொருந்தாதனவாக இருக்கலாம். இருந்தாலும் அந்த நூல்களின் முக்கிய அம்சங்கள் அனைத்தும் இந்தக் காலத்திலும், இனி வரும் எந்தக் காலத்திலும் மனிதன் சிந்தனை செய்தே தீரவேண்டிய கடவுள் சர்ச்சை, அன்பு, அறம் என்பனவற்றைத்தான் குறிப் பாகக் கூறுகின்றன என்பதை மட்டும் எவரும் மறுக்க முடியாது.

இந்தக் கடவுள், அன்பு, அறம், ஒழுக்கம் என்ப வற்றைப் பேசுகின்ற எல்லா நூல்களும் பொதுவாக எல்லாப் பாஷைகளிலும் பெரும்பாலும் கவிதை வடிவி லேயே காணப்படுகின்றன. இதற்குக் காரணம், அச் சடிக்கும் சாதனங்கள் இல்லாத அந்தக் காலங்களில், வேண்டியபடியெல்லாம் பின்னால் விரித்துரைத்து, சக்திக் கும் சாமர்த்தியத்திற்கும் ஏற்றவாறு வியாக்கியானம் செய்துகொள்ளத் தக்கதாகப் பெருக்கமான விஷயங் களையும் சுருக்கமாக எழுதி வைப்பது கவிதைக்குத்தான் சுலபம் என்பதாக இருக்கலாம். அதைக்காட்டிலும் கவிதையில் கலையழகு இருப்பதே சிறந்த காரணம்.

காரணம் எதுவானாலும் சிறந்த நூல்கள் எல்லாம் கவிதைகளாகவே இருக்கின்றன. பிற மொழிகளிலாவது சிற்சில வசன நூல்களும் இருக்கின்றன. ஆனால், தமிழ் மொழியில் நெடுங்காலமாக நல்ல இலக்கியங்கள் அத்தனையும் செய்யுள் வடிவிலேயே செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இன்றைக்குங்கூடத் தமிழன் கவிதையையே சிறப்பாகக் கருதுகின்றான். சோதிடம், வாகடம் முதலான சாஸ்திரங்களையுங்கூடத் தமிழன் கவிகளாகச் செய்தே பாடம் செய்து வந்திருக்கிறான் என்பதும் குறிக்கத்தக்கது.

கவிதை இயற்றும் கலையைத் தமிழ் மக்கள் மிகவும் ஆர்வத்தோடு ஆதரித்தும் அநுபவித்தும் வந்திருக்கிறார்கள் என்பது சரித்திர சத்தியம். தமிழ்நாட்டைப் பரம்பரையாக ஆண்டுவந்த சேர, சோழ, பாண்டிய மன்னரும், அவர்களுக்குக் கீழிருந்த சிற்றரசர்களும், பாளையத் தலைவர்களும் கவிஞர்களை மிகவும் கௌரவத்துடன் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சியில் சமஸ்தானக் கவிஞர்கள் இல்லாத சபைகளே இருந்ததில்லை. கவிஞர் என்று எவர் எப்போது வந்தாலும் அவரை ஆதரிக்காத அரசன் இருந்ததில்லை. இந்த மன்னர்கள், தங்கள் அந்தரங்கக் குடும்ப விஷயங்களிற்கூடத் தமக்கு அறிவு சொல்லக்கூடிய உரிமையைத் தந்து கவிஞர்களைப் பெருமைப்படுத்தி வந்திருந்தார்கள். சேர, சோழ, பாண்டிய சாம்ராஜ்யங்கள் சிதறிப்போன பிற்பாடும் சிற்றரசர்களும் செல்வவான்களும் பட்டையக்காரர்களும் பண்ணையக்காரர்களும் மிட்டாதார்களும் மிராசுதார்களும் கவிஞர்களை ஆதரிப்பது மிகவும் கண்ணியமான கடமையென்றும், புண்ணியம் என்றுங்கூடப் போற்றி வந்திருக்



கிறார்கள். கவிதைகளை அமைதியுடன் அமர்ந்து கேட்டு அநுபவிக்க வேண்டிய ஆசையும் அவகாசமும் அரிதாகப்போன இந்தக் காலத்திலுங்கூடக் கவிஞர்களுக்குச் சிறப்புச் செய்கிற பணக்காரக் குடும்பங்கள் பல இருக்கின்றன. பணம் கொடுத்து ஆதரித்துக் கவிதைக் கலையை வளர்த்து வந்த அரசர்களும் பணக்காரர்களும் ஒருபுறம் இருக்க, கவிதைகளின் நுட்பங்களை நுகர்ந்து மகிழக்கூடிய ரஸிகர் கூட்டமும் தமிழ்நாட்டில் எப்போதும் ஏராளமாக இருந்து வந்திருக்கிறது இந்த ரஸிகர்களில் பரம ஏழைகளும் பலபேர் உண்டு. எந்த விஷயத்தையும் பாட்டாகப் பாடச்சொல்லிக் கேட்பதுதான் தமிழ்நாட்டுப் பாமர மக்களுக்கு மிகவும் பிரியமான பழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

இதனால் கவிகளை இயற்றும் திறமை ஒரு தனிக் கலையாக வளர்க்கப்பட்டு வந்தது. பிற்காலத்தில் அது ஒரு தொழில் போலவும் மாறிவிட்டது. அதனால், இயற்கையாகவே உடன்பிறப்பதாக மதிக்கப்படுகிற கவிதா சக்திகளோடு விளங்கிய பிறவிக் கவிஞர்கள் மட்டுமல்லாமல், இலக்கண வரம்புகளுக்குட்பட்டுச் செய்யுள்களைச் செய்யத் தெரிந்த எண்ணிறந்த புலவர்களும் தமிழ்நாட்டில் ஏற்பட்டார்கள். இப்படிப்பட்ட புலவர் ஊருக்கு ஒருவராவது இருப்பது ஊராருக்கே பெருமையென மதிக்கப்பட்டு வந்தது. இந்தப் புலவர்களிற் பலர் மிகவும் வியக்கத்தக்க வித்தைகளைக் கவிகளில் காட்டியிருக்கிறார்கள். இந்த வித்தைகளில் பல சபைகளில் பகிரங்கமான போட்டிகளை ஊராரே ஏற்படுத்தி, விருதுகளும் பணமுடிப்பும் வெகுமதி அளித்திருக்கிறார்கள்.

இந்தப் புலவர்களின் காலத்தில்தான் வெறும் விருத்தம், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என்று சொல்லப்படுகிற சாதாரண பாடல் வகைகளோடு சிந்து, வண்ணம், பதம் முதலான புதுப்புதுச் சந்த வகைகளும்; யமகம், திரிபு, சிலேடை, பந்தனம் முதலிய யாப்பு வகைகளும், சித்திரக் கவி, ஆசுகவி, வித்தாரக்கவி முதலான கவி வேறுபாடு களும்; கலம்பகம், தூது, கோவை, அந்தாதி முதலான பிரபந்த பேதங்களும் மிகவும் விரும்பத் தகுந்த விதங் களில் விருத்தியடைந்தன.

வேண்டியபோதெல்லாம் பிற மொழிப் பதங்களைப் பிரயோகிக்கக் கொஞ்சங்கூடக் கூசாத தமிழ் மொழியில் உள்ள விஸ்தாரமான சொல் வளமும், தமிழ்மொழிக்கே சிறப்பான சந்தி, விகாரம், நீட்டல், குறுக்கல், வலித்தல், மெலிதல், திரிதல், இரட்டித்தல் முதலான இலக்கணச் சலுகைகளும், இந்தப் பிற்காலப் புலவர்கள் இயற்றிய அழகான சந்தங்களுக்கு மிகவும் அநுகூலமாக இருந் திருக்கின்றன. இப்படிப்பட்ட சந்தங்களைத் தமிழில் அல்லாமல் வேறு எந்த மொழியிலாவது இயற்ற முடியுமா என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் விழிப்பார்கள். அவ் வளவு அபூர்வமான சந்தங்களையும் விசித்திரமான பதப் பிரயோகங்களையும், மிகப்பெரிய படிப்பாளிகளையும் திகைத்துத் திணற வைக்க வேண்டுமென்ற ஒரே சாமர்த்தியத்திற்காகவே இணைக்கப்பட்ட பாட்டுகளை யும் இந்தப் புலவர்கள் இயற்றியிருக்கிறார்கள் மொழி யின் அழகையும் சொல்லடுக்கின் சுவையையும் அநுப விக்கவென்று படிக்கிறவர்களுக்கு இந்தப் பாடல்கள் மிகவும் இன்பம் பயக்கக்கூடியவைகளே.



ஆனால், இந்தக் காலத்துக்கு அந்தப் பாட்டுகளிற் பல, 'பல்லுடைக்கும் பாட்டுகள்' என்ற ஏளனத்துக்குத் தான் இலக்காகலாம். காரணம், அவற்றிலுள்ள பதங்கள் இக்கால வழக்கத்துக்குக் கடினமாக இருப்பதுடன் பாட்டின் பொருளும் எளிதில் விளங்காமைதான். பதங்கள் பண்டிதர் கள் நடையில் கடினமாக இருப்பது மட்டுமல்லாமல், இந்தப் பாடல்களில் அநேகம் வேண்டுமென்றே எளிதில் பொருள் கண்டுபிடிக்கமுடியாதபடி சித்திரிக்கப் பட்டுள்ளன. முன்னே சொன்ன கவிபுனையும் கலைத் திறத்தைக் காட்டவென்றே இவை இயற்றப்பட்டன. இந்தப் பாட்டுகளிலுள்ள பதங்களையும், சந்தி விகாரங் களையும் சிக்கறுத்து, அவற்றில் அடங்கியுள்ள பல அழகான கருத்துகளைக் கண்டுபிடித்து விரித்துரைப்ப தும் ஒரு வித்தையாக விருத்தி செய்யப்பட்டு வந்த காலம் அந்தக் காலம், அப்படிப்பட்ட பாட்டுகள் பாமர மக்களைக் கருதிப் பாடப்பட்டவை அல்ல. அவற்றால் பெரும்பாலும் மக்களுக்கு எவ்விதப் பிரயோஜனமும் இல்லை. ஆனாலும், அப்படிப்பட்ட கவிகளை ஆதரித்து ரஸிப்பதற்கென்றே ஒரு படிப்பாளிகள் பரம்பரை தமிழ்நாட்டில் எப்போதும் இருந்து வந்திருக்கிறது. அது எப்படிப் போல என்றால், ஒரு சங்கீத வித்வான் பாடுகின்ற பலவித ராக வித்யாஸங் களைப் பெரும்பாலும் ஜனங்கள் அறியமாட்டார்கள். ஒரு ராகத்தையே பாடும் போதுகூட அதில் அந்த வித்வான் கையாளுகிற ஆரோகண, அவரோகண சமத்காரத்தை யும், பாமர மக்கள் அனுபவிக்க முடியாது. அந்த ராகத்தைத் திருப்பித் திருப்பி இழுத்துக்கொண்டிருக்கிற

நேரமும், அதற்காக அந்த வித்வான் படுகின்ற பாடுகளும் வீண் காலப்போக்குப் போலத்தான் சாதாரண ஜனங்கள் கருதிச் சலிப்படைவார்கள். 'இந்த இழுப்புகளை நிறுத்திவிட்டு எப்போது அந்த வித்வான் வார்த்தைகள் புரியக்கூடிய உருப்படியான பாட்டுகளைப் பாடுவார்' என்று அவர்கள் ஏங்கிப் பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதையும் பார்த்திருக்கிறோம். ஆனால், அந்த வித்வான் ராகவித்யாஸங்களை அறியாத பாமர மக்களை எண்ணி, அவற்றைப் பாடுவதில்லை. உண்மையில் ராகவிஸ்தார ரகசியங்களை அறியக்கூடிய ரஸிகர்களுக்காகவுங்கூட அந்த வித்வான் அவற்றைப் பாடுவதில்லை. அவர் வெறும் சங்கீதக் கலையை உத்தேசித்துத்தான் பாடுகின்றார். அந்தக் கலையை அநுபவிக்கத் தெரிந்த ரஸிகர்கள், அதைப் பாராட்டுகின்றார்கள். அதே மாதிரிதான் பழைய காலத்தில் கடின பதங்களுடன் இயற்றப்பட்ட பல கரடுமுரடான கவிகளும் அப்படிக் கவி செய்யும் கலையை எண்ணித்தான் எழுதப்பட்டன. அந்தக் கலையை அநுபவிக்கத் தெரிந்த படிப்பாளிகளும் பழைய காலத்தில் ஏராளமாக இருந்தார்கள். அந்தக் கூட்டம் இக்காலத்தில் மிகவும் குறைந்துவிட்டது. அப்படிப்பட்ட கவிகளைப் படித்துப் பார்க்கவோ, நின்று கேட்கவோ நமக்கு நேரம் இல்லை. பள்ளிக்கூடத்தில் பரீட்சைக்காகப் படித்துத் தொலைக்க வேண்டிய பாடங்களைத் தவிர, பரீட்சைக்குப் பிறகு அறிவுக்கான எல்லா விஷயங்களையும் ஓடுகிற ஓட்டத்தில் காதில் பட்ட வரையிலுந்தான் கவனிக்கலாமே தவிர, நிதானமாக ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியமும் அவகாசமும் இக்காலத்தில் இல்லை. வேதாந்த



சித்தாந்த விஷயங்களை இக்காலத்தில் வேலையற்றவர்கள்தாம் விரும்பக்கூடும். அப்படி வெறும் வேதாந்த சித்தாந்த விஷயங்களில் பொழுதைச் செலவிடுகின்றவர்களைச் சமுதாயம் விரும்புவதில்லை. இது யாருடைய குற்றமும் அல்ல. காலப்போக்கின் கட்டாயம். ஆகையினால், வெறும் கவி இயற்றும் கலைக்காகவென்றே செய்யப்பட்ட பல பழைய செய்யுள்கள், இப்போது பயனற்றுப்போனதில் அதிசயம் ஒன்றுமில்லை. அடிமை வாழ்வின் பயனாகவும், உலகத்தில் வெவ்வேறு நாடுகளிலிருந்து வரும் பல விதக் குழப்பங்களின் காரணமாகவும், உணவு கிடைக்காமல் பட்டினி கிடக்கும் பலகோடி பாமர மக்களின் பரிதவிப்பினாலும் வெறும் கலை-இலக்கியமாகச் செய்யப்படும் கடினபதங்களடங்கிய பாட்டுகள் இப்போது தேவையில்லை. மனித சமூகத்தை இப்போது வாட்டி வதைக்கின்ற அடிமைத்தனம், ஜாதிக் கொடுமை, நிறக் கொடுமை, சோற்றுப் பஞ்சம் முதலான தீமைகளை மாற்றுவதற்கு வழி சொல்லக்கூடிய பிரசாரப் பாட்டுகள்தாம் இப்போது தேவை. அந்தப் பாட்டுகளும் பாமர மக்களுக்குப் புரியும்படியான எளிய நடையில் இருக்க வேண்டும். அதனால்தான் பழைய காலத்துப் பாட்டுகளை நாம் இப்போது மதிப்பதில்லை. இந்தப் பாமர மனப்பான்மையின் வேகம், பல படித்தவர்களையும் பற்றிக்கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்துக்காகப் பழைய இலக்கியங்களையும் பழிக்கின்றார்கள். மனித சமூகத்துக்கு இன்றியமையாத அறங்களையே சொல்லக்கூடிய மிக உயர்ந்த இலக்கியங்களையுங்கூட இகழ்ந்து பேசத் துணிவது இப்போது சமுதாயத்தில் இருந்துவரும் சச்சரவுகளால்தான்.

ஆனால், இந்த நிலைமை நிரந்தரமானது அல்ல. உலகம் எப்போதும் இதே குழப்பத்தில் இருந்துவிடாது. இப்படிப்பட்ட குழப்பங்களையும் அவற்றால் பொங்கி வரும் புரட்சிகளையும் எவ்வளவோ தடவைகளில் இந்த உலகம் கண்டிருக்கும். ஆதலால், இந்தக் குழப்பங்களால் குலைந்து போகாமல் மனித சமூகத்துக்கு நிரந்தரமாக வேண்டிய மெய்யறிவுகளைப் பாதுகாத்து வருகிற ஒரு சிறு கூட்டம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். அவர்கள் பழமைகளில் புதுமைகளையும் புதுமைகளில் பழமைகளையும் பார்க்கக்கூடியவர்கள். பழமைகள் எல்லாம் பழிக்கத்தக்கனவும் அல்ல, புதுமைகள் எல்லாம் போற்றத்தக்கனவும் அல்ல. இறந்த காலங்களின் அநுபவத்திலிருந்துதான் நிகழ்காலத்தின் அறிவு பிறந்தது. நிகழ்காலத்தைப் பார்த்துத்தான் எதிர்காலத்தை எண்ணவேண்டியிருக்கிறது. இந்த நியாயம் மனிதனுடைய எல்லாச் செய்கைகளுக்கும் பொருந்தும். எழுத்தாலான இலக்கியங்களும் அந்தச் செய்கைகளைச் சேர்ந்தனவே. முன்னிருந்த இலக்கியங்களின் தொடர்புதான் இப்போது தோன்றும் இலக்கியங்கள். இப்போது தோன்றும் இலக்கியங்கள் தாம் இனிவரும் இலக்கியங்களுக்கு ஆதாரம். இதை எண்ணுகின்ற ஒரு சிறு தொகுதியினர் பழைய கால இலக்கியத்தின் ஜீவன்களைப் பாதுகாத்து வருபவர்கள். இதற்கு அசாதாரணமான அறிவோ, திறமையோ தேவையில்லை. 'பழமையின் தொடர்ச்சிதான் புதுமை' என்ற நம்பிக்கைதான் வேண்டும். அந்த நம்பிக்கையோடு பழைய இலக்கியங்களைப் பார்த்தால் அவற்றைப் பழிக்க வேண்டிய பழியைச் செய்ய மனம் இடந்தராது.



ஆதலால், இப்போது பயனற்றனவாகத் தோன்றுகின்ற பழைய பாட்டுகளிலும் சிற்சில இன்பம் இருப்பதை நாம் மறுத்துவிடக்கூடாது. இந்தப் பாட்டுகளில் பல வெறும் சொல்லடுக்கின் அழகுக்காகவென்றே ஆக்கப்பட்டன. இன்னும் பல, படிப்பவர்கள் பதங்களைப் பிரித்துப் பார்த்துச் சிந்தனை செய்து பொருளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றே மறைபொருளோடு செய்யப்பட்டுள்ளன. மற்றும் பல, 'சந்தி', 'விகாரம்' முதலிய சலுகைகளைக்கொண்டு பதங்களைப் பின்னிக் காட்டும் திறமைக்காகவே பிணைக்கப்பட்டன. இப்படிப்பட்ட கவிகள் பழைய தமிழ் இலக்கியங்களிலும் தனிப் பாடல்களிலும் ஏராளமாக இருக்கின்றன.

'இலக்கிய இன்பம்' என்னும் இந்தக் கட்டுரை இப்படிப்பட்ட பழைய பாட்டுகளை எடுத்துக் காட்டுவதற்காக எழுதப்படுவது அல்ல. இந்தக் கட்டுரையின் நோக்கம், தமிழ் மொழிக்குத் தலைசிறந்த ஓர் இலக்கியத்திலிருந்து சில குறிப்பிட்ட 'இலக்கிய இன்பத்தை' மிகவும் புதுமையான ஒரு முறையில் தொகுத்துக்காட்டி, அதில் நான் கண்ட இன்பத்தை இதைப் படிக்கிற எல்லோரும் அநுபவிக்கச் செய்யவேண்டும் என்பதுதான். அந்த 'இலக்கிய இன்பம்' இன்னதெனச் சொல்வதற்கு முன்னால், மேலே சொல்லப்பட்ட கலைத்திறம் காட்டவென்றே இயற்றப்பட்ட பாடல்களில் சிலவற்றை உதாரணத்துக்காக எடுத்துக் காட்டுவது முற்றிலும் இலக்கிய இன்பம் இல்லாதது ஆகிவிடாது.

அப்படிப்பட்ட பாட்டுகளில் வெறும் வேடிக்கைக்காகவும், சிற்றின்ப சிங்காரத்துக்காகவும், நிந்தா ஸ்துதிக்

காகவும், பொருள் வாங்கப் புகழ்ந்து பேசுவதற்காகவும், வசையாகவும் பாடப்பட்டவைகளை நீக்கி, நல்ல கருத்துகளை - கவி புனையும் கலைக்காக - வேண்டுமென்று மறைத்துச் சொல்லுகின்ற சில பாடல்களை மட்டும் இங்கே உதாரணமாகக் காட்டுவோம் :

"அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக
ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன்நம்மை அளித்துக் காப்பான்."

இந்தப் பாட்டை நம்மிற்பலர் படித்தோ, கேட்டோ இருக்கலாம். இதை முன்னாலேயே அறிந்தவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு இதன் பொருள் சுலபமாகப் புரியாது. இந்தப் பாடல் கம்பராமாயணத்தில் ஆரம்பத்திலுள்ள தோத்திரப் பாடல்களில் ஒன்று. இது கம்பன் பாட்டு அல்லவென்று பல அறிஞர்கள் இப்போது கருதுகிறார்கள். ஆனால், இது வெகு காலமாகக் கம்பன் பாட்டாகவே வழங்கி வந்திருக்கிறது. இது யாருடைய பாட்டாக இருந்தாலும் இருக்கட்டும். இந்தப் பாட்டில் ஒரு நல்ல அர்த்தம், வேண்டுமென்றே சுலபமாக விளங்காதபடிக்கு மறைத்துக் கொடுக்கப்படுகிறது. இதை விரித்துரைத்து விளக்கும்பொழுது அதில் ஒருவிதக் கவிதைக் 'கலை இன்பம்' காணப்படுகிறது.



இனி, இந்தப் பாடலின் பொருளைப் பார்ப்போம் :

இது இராமாயணத்தின் ஜீவநாடிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த அனுமானைப்பற்றிய துதி. இராமாயணக் கதையில் அனுமான் செய்த பல அரிய பணிகளில் முதல் தரமானது, அவன் விஸ்வரூபமெடுத்து, ஆகாய மார்க்கமாகக் கடலைக் கடந்து, சீதையைக் கண்டு, இலங்கைக்குத் தீ வைத்துவிட்டு, இராமனிடத்துக்குத் திரும்பி வந்து, சீதை ஒருவிதக் குறைவுமில்லாமல் இருப்பதைச் சொல்லி, இராமனுடைய ஏக்கத்தைப் போக்கியதுதான். அதைத்தான் இந்தக் கவியில் புகழ்ந்து பேசி அனுமானைத் துதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது: 'வாயு பகவான் புத்திரனாகிய அனுமான் ஆகாச மார்க்கமாகக் கடலைத் தாண்டி, பூமாதேவியின் மகளாகிய சீதையைக் கண்டு (பேசி, கணையாழியைக் கொடுத்து, சூடாமணியை வாங்கிக்கொண்டு), இலங்கைக்கு நெருப்பு வைத்துவிட்டு வந்தவன். அவன் நம்மைப் பாதுகாத்து ரட்சிப்பான் என்பதுதான் இந்தப் பாடலின் கருத்து, அந்தக் கருத்தைக் கவிஞன் இந்தப் பாட்டில் எப்படி மறைமுகமாகச் சித்திரிக்கிறார் என்பது பதங்களை விளக்கினால்தான் தெரியும்.

பதப்பொருள் : அஞ்சிலே ஒன்று பெற்றான்—பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய வாயுபகவான் பெற்ற புதல்வனான அனுமான், அஞ்சிலே ஒன்றைத் தாவி - அந்தப் பஞ்ச பூதங்களில் இன்னொன்றாகும் நீராகிய கடலைத்தாண்டி, அஞ்சிலே ஒன்று ஆறாக - அந்தப் பஞ்ச பூதங்களில் மற்றொன்றாகிய ஆகாயத்தின் வழியாக, (ஆறு-மார்க்கம், ஆறாக-மார்க்கமாக). ஆரியர்க்காக ஏகி-மேலோனாகிய

இராமனுக்காகச் சென்று, அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு - அந்தப் பஞ்ச பூதங்களில் வேறொன்றாகிய பூமியில்பிறந்த பெண்ணை(சீதையை)க் கண்டு, அயலார் ஊரில் - பகைவர்களுடைய பட்டணத்தில், அஞ்சிலே ஒன்றை வைத்தான் - அந்தப் பஞ்சபூதங்களில் மிச்சமுள்ள ஒன்றாகிய நெருப்பை வைத்தான், அவன் நம்மை அளித்துக் காப்பான் - அந்த அனுமான் நம்மைப் பாதுகாத்து ரட்சிப்பான்.

முதலில் பார்க்கிறபோது கொஞ்சங்கூடப் புரியாமல் இருந்த இந்தப் பாட்டு, இப்போது வெகு சுலபம் போலத் தோன்றுகின்றது. இந்தப் பொருளை அந்தப் பாட்டில் அப்படி மறைத்துவைத்து, அதை நாம் தேடித் தெரிந்து அநுபவிக்கும்படி கவி செய்ததில் ஒரு கலைத்திறம் இருக்கவில்லையா? அதில் நமக்கு ஒருவித இன்பம் உதிக்கவில்லையா?

இன்னொரு சிறு உதாரணம்: ஓர் ஆடவன் ஓர் அழகான இளங்கன்னிகையைத் தனியே சந்திக்கிறான். அவளுடைய அழகைப் பலவாறுபுகழ்ந்துவிட்டு அவளோடு சல்லாபிக்கிறான். அவர்களுடைய சம்பாஷணைக்குப்பின் ஒரு கட்டத்தில் அந்தப் பெண்,

"காலாயுதக் கொடியோன்
கையாயுத வழியே
மாலாயுதம் ஈன்ற
மாமணியைத் தானுதிர்த்தாள்."

என்று கவி பாடுகின்றார். இதில் நமக்கு என்ன தெரிகிறது? 'காலாயுதமாம், கையாயுதமாம், மாலாயுதமாம், என்ன இது?' என்று திகைப்புத்தான் உண்டாகிறது.



விடுகதை போலத்தான் இருக்கிறது. சாதாரண ஜனங்கள் எவ்வளவு முயன்றாலும் கண்டுபிடிப்பது கஷ்டந்தான். படித்தவர்கள்கூட மிகவும் பாடுபட்டுத்தான் பொருள் தேட வேண்டும். பொருளைச் சொல்லிவிட்டால் படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோருக்கும் சுலபந்தான். படிக்காதவர்களுக்குங்கூட இதிலுள்ள ஜதீகங்கள் பழக்கமானவைதாம்.

அர்த்தத்தைப் பார்ப்போம்; இதில் என்ன சொல்லப் படுகிறதென்றால், 'அழுதாள்' என்ற ஒரே ஒரு சொல்லில் உள்ள பொருள்தான் அவ்வளவு நீளமாக அலங்கரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பாருங்கள்: காலாயுத - தனது காலையே தன் ஆயுதமாக உபயோகப்படுத்தி (காலால்) யுத்தம் செய்கிற கோழியை, கொடியோன் - தன் கொடியின் சின்னமாக வைத்துக்கொண்டிருக்கிற முருகனுடைய, கையாயுத - கையாயுதமாகிய வேல் போன்ற கண்களின், வழியே — வழியாக, மாலாயுதம் ஈன்ற — திருமாலின் ஆயுதங்களில் ஒன்றாகிய சங்கிலிருந்து பிறக்கும், மாமணியை — முத்துகளை, தான் உதிர்த்தாள் - அவள் கொட்டினாள்.

அதாவது, 'வேல் போன்ற அவள் விழிகளிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீரை உகுத்தாள்' என்பதுதான் இதன் பொருள்.

"அப்பாடா! 'அழுதாள்' என்று சொல்லுவதற்கா இவ்வளவு பாடு?" என்றுதான் சாதாரணமாகத் தோன்றுகின்றது. இப்படி மறைத்து நீட்டிச் சொல்லுவதில்

உலக வாழ்வுக்கு என்ன நன்மை என்ற கேள்வி ஒரு புறம் இருந்தாலும், இதில் ஒரு கலை இருப்பது உண்மைதான்.

சொல்லும் திறமையைத் தவிர உலக வாழ்விற்கோ, அறிவின் வளர்ச்சிக்கோ உதவியற்றது என்று சொல்லி விடக்கூடிய கருத்துகள் அடங்கிய பாட்டுகளில் மட்டுமல்ல, உயர்ந்த ஆன்ம ஞானங்களை உபதேசிக்க வென்று பாடிய பாடல்களிலுங்கூட இப்படிப்பட்ட கவி புனையும் கலையைக் கையாண்டிருக்கிறார்கள் நமது பெரியோர்கள்.

உலகப் பற்றுகளை விட்டுவிட வேண்டும், 'நான்' என்ற மமதை அடங்க வேண்டும், ஏகாக்ர சித்தத்தோடு தியானம் செய்ய வேண்டும் என்பன போன்ற பேச்சுகள் நம் நாட்டில் அடிக்கடி காதில் விழுகிற ஆன்ம ஞானக் கருத்துகள். 'நான்' என்னும் அகங்காரம் போன பிறகு தான் ஆன்ம சிந்தனைக்கு ஆயத்தமாக முடியும் என்பதற்கு ஒரு கதை சொல்வதுண்டு. அந்தக் கதை:

ஓர் அரசன் ஒரு முனிவருடைய ஆசிரமத்துக்குப் போனான். ஆசிரமத்தின் வெளிக் கதவண்டை தன் ரதத்தை நிறுத்தி இறங்கினான். வெளிக் கதவென்பது பிரமாதமான ஆசார வாசலல்ல; ஆசிரமத்தைச் சுற்றி யுள்ள வேலியில் இருந்த ஒரு சிறு வழிதான். உள்ளே இருக்கும் ஆசிரமத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள இடங் களில் இருக்கிற எல்லாவற்றையும் வெளியே இருந்த படியே யாரும் பார்க்கலாம். வேலிக்கு உள்ளே இருக் கிறவர்களும் வெளியே வருகிற எதையும் காணலாம்.

ரதத்தைவிட்டு இறங்கும்போதே வேலிக்கு உட்புறத் தில் இரண்டொரு துறவிகள் அங்குமிங்கும்போய்க்கொண் டிருந்ததையும், அவர்கள் தான் வந்ததைப் பார்த்ததையும் மன்னன் கண்டான். அந்தத் துறவிகளும் ஆடை ஆபரண அலங்காரங்களுடன் ஒரு மனிதன் தேரைவிட்டு இறங்கி னதைப் பார்த்தார்கள். ஆனால், அவர்கள் அதில் அதிகக் கவனம் செலுத்தாமல் தங்கள் அலுவல்களை நாடிப்போய் விட்டார்கள். கழிகளால் கட்டப்பட்டிருந்த அந்த வேலிக் கதவண்டை மன்னன் வந்து சேர்ந்தான். கதவு அடைபட் டிருந்தது. நெடுநேரம் நின்று நின்று பார்த்தான். அவனை வரவேற்பதற்கு அங்கு யாரும் வரவில்லை. மிகுந்த கோபத் தோடு பல்லைக் கடித்துக்கொண்டு காத்திருந்தான். முன்னே, தான் வந்ததைப் பார்த்துவிட்டுக் கவனியாமல் மறைந்து போன ஒரு துறவி மறுபடியும் அவ்வழி வந்ததைக் கண்டான். ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அந்தத் துறவியைக் கைகாட்டி அழைத்தான்; அவர் வந்தார்.



"நான் வந்ததை நீர் பார்க்கவில்லையா?" என்றான் மன்னன்.

"ஆம்; பார்த்ததுண்டு."

"நான் வந்து எவ்வளவு நேரமாயிற்று?"

"எவ்வளவு நேரமாயிற்று என்பதை நினைக்க வில்லை."

"உனக்கு இங்கே என்ன வேலை?"

"நான் ஒரு சிஷ்யன்."

"சிஷ்யனா? நல்ல சிஷ்யன்! மகரிஷிக்கு நல்ல பணிவிடை செய்வீர்! நான் வந்ததைப் பார்த்துக் கொண்டே பேசாமல் போய்விட்டீரே!"

"மகரிஷிக்குப் பணிவிடை செய்யத்தான் போனேன்."

"நான் இங்கே எத்துணை நேரமாக நின்றுகொண்டிருப்பது?"

"ஏன் இங்கே நின்றுகொண்டிருக்க வேண்டும்?"

"ஓய்! என்ன ஏளனமா செய்கிறீர்? நான் யார் தெரியுமா?"

"தெரியாது."

"நான்தான் இந்த நாட்டை ஆளுகின்ற அரசன். அதை அறிந்துகொள்ள முடியவில்லையா உமக்கு?"

"அறிந்துகொள்ளாவிட்டாலும் அநுமானித்தேன். அரசராக இருக்கலாம் என்ற ஐயத்தால்தான் பேசாது போய்விட்டேன்."

"அரசன் என்று அநுமானித்துங்கூடவா வந்தவனை 'வா' என்றுகூடச் சொல்லாமல் மறைந்துவிட்டீர்?"

"நீங்கள் இந்த ஆசிரமத்தை நாடிவர நியாயம் இருக்காது என்று நினைத்துத்தான் என் வேலைகளைப் பார்க்கப் போய்விட்டேன்."

"ஓ! அப்படியா! நான் இந்த ஆசிரமத்தை நாடித்தான் வந்திருக்கிறேன். முனிவரைப் பார்க்க வேண்டும். உடனே போய் நான் வந்திருப்பதாகச் சொல்லும்."

"முனிவர் இப்போதுதான் அவருடைய ஏகாக்ர அறையில் யோக நிஷ்டையில் அமர்ந்தார். நிஷ்டை கலைகிறவரையில் அவரிடம் யாரும் போகக்கூடாது. ஆகையால், அவரை இப்போது நீங்கள் பார்க்க இயலாது."



"ஓய், அதிகமாகப் பேசவேண்டாம். சொன்னபடி செய்யும். உடனே போய் முனிவரிடம் நான் வந்திருக்கிறதாக—இந்த நாட்டுச் சக்கரவர்த்தி—தெரியுமா ?—நான் வந்திருப்பதாகச், சீக்கிரம் போய்ச் சொல்லும்—நான் வந்திருப்பதை அறிந்தால் அவர் உடனே அழைத்துவர அநுமதி கொடுப்பார். போய் நான் வந்திருப்பதாகச் சொல்லும்."

"ஐயோ! இப்போது யாரும் அவர் அருகிற்கூட போகக்கூடாதே! நிஷ்டையைக் கலைத்தால் சபித்துவிடுவாரே!"

"நான் வந்திருப்பதாகச் சொன்னால் சபிக்க மாட்டார். போய் நான் வந்திருப்பதாக—அரசன் வந்திருப்பதாக—சொல்லும்."

"பார்த்து வருகிறேன்" என்று சிஷ்யர் ஆசிரமத்துக்குள் அடிமேல் அடிவைத்துப் போனார்.

சிறிது நேரத்தில் சிஷ்யத் துறவி திரும்பி வந்து, அரசனிடத்தில் வேலிக்கு அப்பால் இருந்தபடியே, "முனிவர் நிஷ்டையில் அமர்ந்துவிட்டார். நிஷ்டையைக் கலைப்பது மகாபாவம். நீங்கள் இன்னொரு நாள் வருவது நல்லது. குறிப்பிட்ட ஒரு நாளில், குறிப்பான நேரத்தில் வருவதாகச் சொன்னால், நான் அதைக் குருதேவரிடத்தில் சொல்லித் தங்களை அவர் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்து வைக்கிறேன்" என்றார்.

அந்த ஆசிரமத்தையே அழித்துவிட வேண்டுமென்று நினைக்கக்கூடிய அவ்வளவு கோபம் அரசனுக்கு

உண்டாயிற்று. ஆனாலும், முனிவரைத் தரிசித்து அவரிடத்தில் சில சந்தேகங்களைச் சொல்லி, உபதேசம் பெற்றுப் போகவேண்டுமென்றே வந்தவனாகையால் கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, சில நாளைக்குப் பின் ஒரு தினத்தைக் குறிப்பிட்டு, அன்றைக்கு வருவதாகக் கூறி, "நான் வந்திருந்ததாக— இந்த நாட்டு அரசன் வந்திருந்ததாக—முனிவருக்கு விவரமாகச் சொல்லி என்னை அந்தக் குறிப்பிட்ட நாளில் வரவேற்க ஏற்பாடு செய்து வையும்" என்று அதிகாரமாகச் சொல்லிவிட்டு, அரசன் போய்விட்டான்.

மன்னன் குறிப்பிட்டுச் சொல்லிப்போன நாளுக்கு முன் ஒரு நாள் சிஷ்யர், அரசன் வந்திருந்ததையும், அப்போது அவர்களுக்குள் நடந்த சம்பாஷணைகளையும் ஒன்றையும் விடாமல் முனிவரிடத்தில் சொல்லி, மன்னன் மறுபடியும் வருவதாகக் குறிப்பிட்டிருந்த தினத்தையும் நேரத்தையும் கூறினார். முனிவர், சிஷ்யர் சொன்னதையெல்லாம் கேட்டுவிட்டு 'வரட்டும்' என்று சொன்னார்.

குறித்த நாளில், குறிப்பிட்ட நேரத்தில், மறுபடியும் மன்னன் ஆசிரமத்தின் வாசலுக்கு வந்தான். சிஷ்யர் உடனே கதவைத் திறந்து, அரசனை அழைத்துக் கொண்டு, மகரிஷியின் சன்னிதானத்துக்குச் சென்றார். ஆடை ஆபரண அலங்காரங்களின் தடையினாலோ என்னவோ அரசன் முனிவரைத் தாழ்ந்து நமஸ்கரியாமல் நின்றபடியே வணங்கினான். முனிவர் வழக்கமாக யாரோடும் அதிகமாகப் பேசுவதில்லை. அவசியமான சமயங்களில் மட்டுந்தான் மிகவும் சுருக்கமாகப் பேசுவார்.



பெரும்பாலும் மௌன விரதத்தையே பின்பற்றுவார். வணக்கத்தை அங்கீகரித்த அடையாளமாகச் சமிக்ஞை செய்து, முனிவர் அரசனை அமரும்படி இடத்தையும் கை ஜாடையால் காட்டினார். உட்காரும்போதே அரசன், "நான் முன்னே வந்திருந்ததைச் சொன்னார்களா?" என்றான்.

'ஆம்' என்பதற்கு அறிகுறியாக முனிவர் தலையை அசைத்தார்.

"நான் இந்த நாட்டை ஆளும் அரசன். தங்களைப் பற்றிச் சமீபத்தில்தான் கேள்விப்பட்டேன். தங்களைப் பார்ப்பதற்காகத்தான் வந்திருந்தேன் என்றான் மன்னன்.

அதற்கும முனிவர் அங்கீகாரம் அறிவிக்கத் தலையை அசைத்தார்.

"நான் இங்கே வந்து ரதத்தைவிட்டு இறங்கினதைப் பார்த்துக்கொண்டிருந்தும் உங்கள் சிஷ்யர் உங்களிடம் நான் வந்ததை அறிவிக்காமல் இருந்துவிட்டார்."

அதற்கும் முனிவர் தலையை அசைத்தார்.

"வெகுநேரம் வெளியிலேயே நின்றுகொண்டே இருந்தேன்."

அதற்கும் முனிவர் தலையை ஆட்டினார்.

"வெகு நேரத்துக்குப் பின் வெளியில் வந்து, உங்கள் சிஷ்யரை நானே கூப்பிட்டுப் பேசியும் அவர் என்னைச் சரியானபடி மதிக்கவில்லை. கதவைத் திறந்து உள்ளே வர இடங்கொடுக்காமல், வேலிக்கு வெளியிலேயே நிறுத்திப் பேசி அனுப்பிவிட்டார்."

முனிவர் புன்முறுவல் செய்து அதற்கும் தலையை அசைத்தார்.

"இந்த நாட்டை அரசாளும் என்னைத் தங்களுடைய சிஷ்யர் இப்படி நடத்தினது சரிதானா?" என்று அரசன் வருத்தப்பட்டான்.

முனிவர் சற்றே சிரிப்புக்குறி தவழ, "என்ன செய்திருக்கவேண்டும்?" என்றார்.

"ஒன்றும் செய்திருக்க வேண்டியதில்லை. ஆனாலும் என்னையும் என்னுடைய ரதத்தையும் பார்த்த உடனேயே அரசன் என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். வந்தவனை 'வா' என்றுகூடச் சொல்லக் கூடாதா? அல்லது 'எங்கே வந்தீர்கள்?' என்றாவது உடனே கேட்டுப்போகச் சொல்லிவிட வேண்டாவா? கதவுக்கு வெளியே நின்று காத்துக் கிடக்கச் செய்து விட்டாரே" என்றான் அரசன்.

இதுவரையில் புன்சிரிப்போடு கேட்டுவந்த முனிவர் சற்றே வாய்விட்டுச் சிரித்து, "இது அரண்மனையல்லவே, ஆசிரமந்தானே?" என்றார்.

"ஆசிரமம் என்பதை அறிந்துதான் வந்தேன். இது அரண்மனை அல்லவென்றாலும் நான் அரசன் என்பதை அறிந்ததற்காகவாவது, 'எதற்காக வந்தாய்' என்று கூடவா கேட்கக்கூடாது?"

"சரி. நம்முடைய சிஷ்யர் கேட்காதது குற்றந்தான். அவருக்குப் பதிலாக இப்போது நாம் கேட்கிறோம், இங்கு எதற்காக வந்தீர்?"

"உங்களைக் கண்டு பேசி, உபதேசம் பெற வந்தேன்."



"உபதேசம் பெறவா?"

"ஆம்; உண்மையாக உபதேசம் பெறத்தான் தங்களை நாடி வந்தேன்."

"உமக்கு உபதேசம் வேண்டுமானால் நான் செத்துப் போன பிற்பாடுதான் வரவேண்டும்" என்றார் முனிவர்.

அரசன் திடுக்கிட்டு அசையாமல் சற்று நேரம் முனிவரை உற்றுப் பார்த்தான்.

"என்ன முனிவரே, நீங்கள் செத்த பிறகா உபதேசம் செய்வீர்கள்?"

"நான் செத்த பிறகுதான் உமக்கு உபதேசம்."

"அப்படியானால், நீங்கள் எனக்கு உபதேசம் செய்ய மாட்டீர்களா?" என்று அரசன் ஆத்திரத்தோடு கேட்டான்.

"நான் செத்த பிறகுதான்" என்று முனிவர் பேச்சை முடித்துவிட்டு, வேறு வேலைகளைக் கவனிக்கவேண்டியவர் போல் எழுந்தார்.

அரசனும் எழுந்து, நின்றபடியே பல கேள்விகளைக் கேட்டான். அவற்றிற்கெல்லாம் முனிவர் வாய் பேசாமல் தலையை அசைத்தும் கையை ஆட்டியுமே பதில் காட்டி விட்டார்.

உடனே, அரசன் கோபமும் கொதிப்பும் குமுற, முனிவருக்கு முறைமைக்காகவேனும் வணக்கம் சொல்லிக் கொள்ளாமல், விரைந்து வெளியே வந்து, ரதத்தில் ஏறி அரண்மனையை அடைந்தான். அரசனுடைய ராஜ தானிக்கும் முனிவருடைய ஆசிரமம் அமைந்திருந்த

வனத்திற்கும் வெகுதூரம். என்றாலும், அந்த அடவி அரசனுடையராஜ்ஜியத்துக்குள் அடங்கியதுதான். அந்த ராஜ்ஜியத்துக்கே அதிபதியான அரசனை ஓர் ஆண்டி யான முனிவர் அப்படி அவமதித்துவிட்டது லேசாக விட்டுவிட முடியுமா? அரசனுக்குக் கோபம் நிலை கொள்ள முடியாமற் செய்துவிட்டது.

அந்த முனிவரைப்பற்றித் தன்னிடம் மிகவும் பெருமையாகப் பேசிய முதன் மந்திரியை அழைத்து வரக் கட்டளையிட்டான். முதன் மந்திரி ஏதோ அரசாங்க அலுவலாக வெளியே போயிருப்பதாகத் தெரிந்தது. உடனே சேனாதிபதியை அழைத்துவரச் சொன்னான். சேனாதிபதி வந்தான். முனிவர் தன்னை அவமதித்து விட்டதை அரசன் அவனிடம் சொன்னான். சேனாதி பதிக்கும் கோபம் வந்து, அந்த முனிவருக்குப் புத்தி வரும்படியான காரியத்தைத் தான் செய்து வருவதாக அரசனுடைய அனுமதியைக் கோரினான். என்ன செய்ய லாம் என்பதைப்பற்றி அரசனும் சேனாதிபதியும் பலவித ஆலோசனைகளைச் செய்து முடிப்பதற்குள், தன்னை அரசன் அவசரமாக அழைத்துவரச் சொன்னதாகக் கேள்விப்பட்ட முதன் மந்திரி அங்கே வந்து சேர்ந்தார்.

அரசன் மந்திரியிடத்தில் நடந்ததையெல்லாம் சொல்லி, "'உனக்கு உபதேசம் வேண்டுமானால் நான் செத்த பிற்பாடு வா' என்று என்னை இவ்வளவு அவமதித்துவிட்ட முனிவனுக்குத் தக்கபடி புத்தி கற்பிக்க வேண்டும். அவனுடைய அகங்காரத்தைப் போக்க வேண்டும்" என்று அரசன் துடித்து, தானும் சேனாதி பதியும் அதற்காகச் செய்த ஆலோசனைகளையும்



அறியப்படுத்தினான். அரசன் பேச்சைக் கேட்ட மந்திரி, அந்த முனிவரின் பெருமைகளை நன்றாக அறிந்தவரான தால் மிகவும் அதிசயப்பட்டு, அதைப்பற்றிச் சிறிது ஆலோசனை செய்துபார்க்கத் தமக்கு அவகாசம் கேட்டார்; அரசன் அனுமதித்தான். மந்திரி, சேனாதி பதியை அனுப்பிவிட்டு, அரசனை ஆகாரம் உண்டு கொஞ்சம் ஓய்வு கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, தாமும் வீட்டுக்குப் போய்விட்டு விரைவில் வருவதாக விடை பெற்றுச் சென்றார்.

முதன் மந்திரியின் ஆலோசனைக்கு இடங்கொடுக்க வேண்டிய கடமைக்காகக் கட்டுப்பட்டான் என்றாலும், அரசன் தனக்கு நேர்ந்த அவமதிப்பையே நினைத்து நினைத்துப் புகைந்துகொண்டிருந்ததால் அமைதியும் கிடைககவில்லை; ஆகாரமும் செல்லவில்லை. உடலிலும் உள்ளத்திலும் நிம்மதி இல்லாமல் ஓய்வுகொள்ளத்தான் முடியுமா? பொங்கிப் புழுங்கிக்கொண்டு மந்திரியின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

ஆலோசனை செய்து நல்ல முடிவுக்கு வந்துவிட்டவர் போல, மலர்ந்த முகத்தோடு மந்திரி வந்தார். அவருடைய ஆலோசனையின் முடிவை அறிய அரசன் ஏகாந்தமான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றான்; அரசன் முனிவரைச் சந்திக்க ஆரம்பித்ததிலிருந்து கடைசி வரையிலும் அவர்களுக்குள் நடந்த சம்பா ஷணையை, முடிந்த வரையில் ஒரு வார்த்தையைக்கூட விடாமல் அப்படியே சொல்ல வேண்டுமென்று மந்திரி கேட்டுக்கொண்டார். மன்னனும் தன்னால் கூடியமட்டும் கொஞ்சம் கொஞ்சமாக நினைவுகூட்டி, முதல் தடவை

ஆசிரமத்திற்குப் போனது முதல் நடந்தவற்றையெல்லாம் சொன்னான். அரசன் சொல்லச் சொல்ல அமைச்சனுக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது. மன்னன் சொல்லி முடித்ததும் மந்திரி வணங்கி நின்று, "அரசே! முனிவர் தங்களுக்கு உபதேசம் செய்ய விரும்புவதாகத்தானே சொல்லியிருக்கிறார்."

"என்ன மந்திரி! நீருமா ஏளனம் செய்கிறீர்? உனக்கு உபதேசம் வேண்டுமென்றால் 'நான் செத்த பிற்பாடு வா' என்று அவர் சொன்னது இன்னும் என் காதில் ஒலித்து என் நெஞ்சைப் பிளக்கிறது. 'அவர் எனக்கு உபதேசம் செய்யத்தான் விரும்புகிறார்' என்று நீர் சொல்லுகிறீரே!"

"அரசே, மிகவும் தயவு கூர்ந்து அமைதியாகக் கேட்கவேண்டும். ஒரு குருவை நாடி ஞானோபதேசம் பெற வேண்டுமானால், அதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. ராஜரீகம் நடத்துவது வேறு, ஞான உபதேசம் பெறுவது வேறு அல்லவா?"

"ஆம்."

"அரசு செலுத்துவது, அதிகாரம் செய்து மற்றவர்களை நம் ஆணைக்கு அடங்கி நடக்கச்செய்வது. ஆனால், உபதேசம் பெறுவது, நாம் அதிகாரி என்பதை முற்றிலும் மறந்துவிட்டுக் குருவுக்கு அடங்கி நடப்பது அல்லவா?"

"அதை யார் இல்லையென்றது?"

"தயவு செய்து பொறுத்துக் கேளுங்கள். தாங்கள் முனிவரைப் பார்க்க முதல் தடவை ஆசிரமத்துக்குச் சென்று, அங்கிருந்த சிஷ்யரோடு பேசின போதும், இன்றைக்கு முனிவரோடு அதைப்பற்றிக் குறை கூறிக் கொண்டபோதும் அரசர் என்ற அதிகாரத்தோடுதான் பேசியிருக்கிறீர்கள். 'நான் யார் தெரியுமா'—'நான் வந்திருப்பதாகச் சொல்' — 'அரசன் வந்திருக்கிறதாகச் சொல்லு'—'நான் வந்திருந்ததைச் சொன்னார்களா'— 'நான் -- நான் -- நான்' என்றும் 'அரசன் — அரசன் — அரசன்' என்றுமே பேசியிருக்கிறீர்கள். அன்றியும், தாங்கள் முனிவரையும் முதல் முதல் சந்தித்தபோது அவரை வணங்கவேண்டிய முறையில் வணங்கவும் இல்லை. அதனால் 'நான்' என்ற அகங்காரமும் 'மன்னன்' என்ற மமகாரமும் கொஞ்சங்கூடக் குறையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அகங்கார, மமகாரங்கள் அடங்கின பிறகுதான் ஆன்ம ஞானோபதேசத்துக்கு ஒருவன் அருகதையுடையவன் ஆக முடியும் என்பதையும் இடித்துக்கூறவே 'உமக்கு உபதேசம் வேண்டுமானால் 'நான்' செத்த பிற்பாடு வரவேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். 'நான் செத்த பிறகு' என்பதற்கு, 'முனிவர் செத்த பிறகு' என்று அர்த்தமல்ல; உங்களிடத்திலுள்ள 'நான் என்ற அகந்தை அழிந்த பிறகு' என்றுதான் அர்த்தம். ஆதலால், அரசே! தாங்கள் மன்னர் என்பதை முற்றிலும் மறந்துவிட்டு, ஒரு குருவினிடத்தில் உபதேசம் கேட்கப்போகிற சிஷ்யனுக்கு அத்தியாவசியமான அடக்க ஒடுக்கத்துடனும் பணிவு தணிவுகளுடனும் வரவேண்டும் என்று உங்களுக்கு உபதேசம் செய்யவேண்டிய முதல் பாடத்தை இப்போதே முனிவர் உபதேசித்துவிட்டார்" என்றார் மகா புத்திசாலியான மந்திரி.

மந்திரி சொன்ன அறிவுரையை அங்காந்து கேட்டுக் கொண்டிருந்த மன்னன் கோபத்தை விடுத்து, மதி

தெளிந்தவனாகி, உண்மையில் உபதேசம் கேட்டுக் கொண்ட சிஷ்யனைப் போலவே, 'தான்' என்ற அகங் காரம் தணிந்துவிட்டவன் ஆயினான்.

பிறகு, போகவேண்டிய முறையில் போய், வணங்க வேண்டிய முறையில் வணங்கி, அதே முனிவரிடத்தில், அதே அரசன், கேட்கவேண்டிய முறையில் ஞானோப தேசத்தைக் கேட்டுக்கொண்டதாகக் கதை.புதுமுறையில் சொல்லப்பட்டிருந்தாலும் இந்தக் கதை மிகவும் பழங் கதைதான். இந்தக் கதையின் போதனை என்ன வென்றால், 'தான் என்ற அகந்தையை விடாமல் ஆன்ம ஞானம் அடைய முடியாது' என்பதுதான்.

இந்தக் கருத்தை எத்தனையோ தமிழ்ப்புலவர்கள் வெவ்வேறு விதங்களில் பாடியிருக்கிறார்கள். மிகவும் தெளிவாக, எளிய பதங்களில் பாடிப் பரப்பவேண்டிய இந்த வெகு பிரயோசனமான கருத்தையும் வெறும் கவி புனையும் கலைத்திறத்தை எண்ணி, ஒரு சித்தர் எப்படிப் பாடியிருக்கிறார் என்பதைப் பாருங்கள்.

பழங்காலத்துப் பாடல்களில் 'சித்தர்கள் பாடல்கள்' என்று பதினெட்டுச் சித்தர்கள் பாடிய ஞானமார்க்கப் பாட்டுகள் இருக்கின்றன. அந்தச் சித்தர்களுக்குள் 'குதம்பைச்சித்தர்' என்று ஒருவர். அவர்.

"தாவாரம் இல்லை தனக்குஒரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி — குதம்பாய் !
தேவாரம் ஏதுக்கடி ?"

என்று பாடியிருக்கிறார். இதில் அவர் அடக்கியிருக்கிற நல்ல அறிவை இந்தப் பாட்டைப் படிக்கிற சிலர் அறிய முடியாது. சாதாரண ஜனங்கள் மட்டுமல்ல, இதன் உட்பொருளை ஏற்கெனவே அறியாத நல்ல படிப்பாளி களுங்கூட, இந்தப்பாட்டில் என்ன அர்த்தம் கொள்ளுவார் கள் என்றால், 'தனக்கென்று ஒரு வீடில்லாதவனுக்கு, அல்லது ஒரு தாழ்வாரங்கூடத் தனக்கென்று சொந்தமாக இல்லாத ஒருவனுக்குத் தேவாரம் முதலிய தெய்வத் தோத்திரங்கள் ஏதுக்கு?' என்றுதான் அர்த்தம் கொள்ளு வார்கள். 'தேவாரம்' என்றால் குறிப்பாக நால்வர் பாடிய தோத்திரப் பாடல்களையும், பொதுவாகத் 'தோத்திரம்'என்ற பொருளையும் குறிக்கிறது. அதனால், 'ஒரு வீடாவது ஒரு தாழ்வாரமாவது தனக்கென்று இல்லாதவனுக்குத் தெய்வத் தோத்திரத்தால் என்ன பலன் ?' என்பதுதான் இதில் தோன்றுகிறது. அப்படி யானால், வீடு வாசல் இல்லாதவனுக்குப் பக்திப் பாட்டு களால் பயனில்லை என்றுதான் இந்தப் பாட்டில் சொல்லப்பட்டிருப்பதாக எல்லோரும் எண்ணுவார்கள். 'என்ன! ஒரு சித்தர் ! தெய்வபக்தி வேண்டும் என்றே எவ்வளவோ வேதாந்தக் கருத்துகளை வேறு பல பாடல்களில் விரிவாகச் சொல்லியிருக்கிற இவர் "வீடுவாசல் இல்லாதவனுக்குத் தெய்வத் தோத்திரம் எதற்காக என்றா சொல்வார் ?' என்று சிந்திக்கப் புகுந்தால்தான் இந்தப் பாட்டின் உண்மையான அர்த்தத்தை அறிய ஆசைவரும். அப்படிச் சிந்திக்கப் போகிறவர்கள் வெகு சிலரே.

சிந்தனை செய்து பார்ப்போம் : 'தா' என்ற தனி எழுத்துக்குத் தமிழில் 'துன்பம்' என்று அர்த்தம். இந்த அர்த்தம் இப்போதும் வழக்கத்தில் இருந்துவருகிறது. அதை நாம் கவனிப்பதில்லை. 'தாவில்லை' என்று

சொன்னால் 'துன்பமில்லை' அல்லது 'பாதகமில்லை' என்பது பொருள். இந்தத் 'தாவில்லை' என்ற சொல்லைத் தமிழ்நாட்டின் தென்பகுதிகளில் இன்னும் அப்படியே 'தாவில்லை' என்றுதான் உச்சரிக்கிறார்கள். தமிழ் நாட்டின் வடபாகங்களில் இந்தத் 'தாவில்லை' என்ற சொல், 'தேவில்லை' என்று திரிந்து, இப்போது 'தேவலை' என்று மாறிவிட்டது, சரியான பதம் 'தாவில்லை' என்பதுதான். தா + இல்லை என்பது கூடும் பொழுது 'தாவில்லை' என்று ஆகிறது. 'தா' என்றால் 'துன்பம்' என்பதை இந்தச் சொல்லில் எளிதில் காணலாம்.

இனி, 'வாரம்' என்றால் 'பங்கு' என்பது பொருள். இந்த அர்த்தத்தை "என் நிலத்தை வாரத்துக்கு விட்டு விட்டேன்" என்று விளைநிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் சொல்வதை அடிக்கடி நாம் கேட்கிறோம். 'வாரத்துக்கு விடுவது' என்றால் 'பங்குக்கு விடுவது' என்று பொருள். அதாவது, விளைச்சலில் சரிபங்கு, உழுபவன் நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுப்பது என்ற ஒப்பந்தத்தில் விடுவது.

இதனால் 'வாரம்' என்பதற்குப் 'பங்கு' என்பது இன்னும் பழக்கத்தில் இருந்து வருகிற அர்த்தம்.

அதன் பிறகு 'தனக்கு' என்ற பதத்திற்கு இங்கே 'தான்' என்ற அகங்காரம் என்றும், 'தன்னலம்' என்றும் பொருள் ஆகும். 'வீடு' என்பதற்கு 'விடுபடுவது' அல்லது 'விடுதலை' என்பது அர்த்தம். 'தேவாரம்' என்றால் 'தோத்திரம் பாடுவது' என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.



'குதம்பை' என்றால் ஆபரணம். அதனால் 'குதம்பாய்' என்றால், 'ஆபரணங்களை அணிந்த பெண்ணே!' என்பது தமிழ் வழக்கம். இப்போது பாட்டைக் கவனிப்போம். பதத்துக்குப் பதம் மேலே சொன்ன அர்த்தத்தை அமைத்துப் பார்ப்போம்.

"தாவாரம் இல்லை தனக்குஒரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி — குதம்பாய் !
தேவாரம் ஏதுக்கடி?"

துன்பம் பங்கில்லை. 'தனக்கு' (என்ற தன்னலம்) ஒரு விதத்திலும் விடுபடவில்லை. தேவாரம் என்னத்திற்காக? பெண்ணே! தேவாரம் என்னத்துக்கு?

இந்த அர்த்தத்தை வைத்துக்கொண்டு கொஞ்சம் ஆழ்ந்து எண்ணிப் பாருங்கள். சித்தருடைய சித்தம் நன்றாகத் தெரியும். சித்தர் என்ன சொல்லுகிறார் என்றால்,

"பெண்ணே! பிறருடைய துன்பங்களில் இரக்கங் கொண்டு, அந்தத் துன்பத்தில் தானும் பங்குகொண்டு கருணை காட்டாமலும், எந்த நலத்தையும் 'தனக்கு', 'தனக்கு' என்று அலைகிற தன்னலப் பற்றையும் அகந்தையையும் ஒருதரங்கூட விட்டுவிட மனமில்லாமலும் சும்மா தேவாரத்தை மட்டும் சொல்லிவிடுவதால் என்ன பயன்?" என்றுதான் சித்தர் சொல்லுகின்றார் என்பது தெளிவாகிறது.

"பிறருக்கு நேரும் துன்பங்களில் பங்குகொண்டு உதவி செய்வதும், 'தான்' என்ற அகங்காரத்தையும் ஆசையையும் விட்டுவிடுவதுந்தான் உண்மையான

தெய்வ பக்தியாகுமே அல்லாமல், வெறும் தோத்திரங் களைப் பாடிவிடுவது மட்டும் பக்தியாகிவிட மாட்டாது" என்ற வெகு உயர்ந்த ஞானத்தை உபதேசிக்கிற இந்தப் பாட்டை, பார்ப்பதற்கு வேறு பொருள் படும்படியாக வேண்டுமென்றே செய்தது கவி புனைவதில் ஒருவிதக் கலைத்திறத்தைக் காட்டவே.

இவருடைய பாட்டுகளில் இன்னோர் அருமையான பாடலைப் பாருங்கள்:

"மாங்காய்ப் பால்உண்டு மலைமேல் இருப்போர்க்கு
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? — குதம்பாய்!
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?"

இதுவும் மேலாகப் பார்த்தால் புரியாது. முன் சொன்ன பாட்டிலாவது மேலாகப் பார்க்கிறபோது ஏதோ கொஞ்சம் அர்த்தம் இருக்கிற மாதிரி தோன்றியது. "ஒரு தாழ்வாரங்கூட இல்லாமல், தனக்கு என்று ஒரு வீடுகூட இல்லாமல், வெறும் தேவாரம் பாடி மட்டும் என்ன பயன்?" என்று தோன்றிய அர்த்தத்தில் 'மக்கள் வெறும் தேவாரத்தைப் பாடிக்கொண்டே இருந்துவிடாமல் தங்களுக்கென்று ஒரு வீடு வாசலையாவது சம்பாதித்துக் கொள்ள வேண்டும்' என்று சித்தர் நல்ல புத்திதான் சொல்லுகிறாராக்கும் என்று எண்ணிவிடவாவது இடமிருந் தது. இந்தப் பாட்டில் அப்படிக்கூட வேறு ஓர் அர்த்தம் பண்ணிக்கொள்ள முடியவில்லை.

மாங்காய்ப்பாலாம்! அதை உண்பார்களாம்! அவர்கள் மலைமேல் இருப்பவர்களாம்! அவர்களுக்குத் தேங்காய்ப்பால் எதற்காக என்பதில் வேறு என்ன அர்த்தமாவது செய்ய முடிகிறதா? ஒன்றும் விளங்க



வில்லை. ஆனால், சித்தர் இதை அர்த்தமில்லாமல் பாடியிருக்க மாட்டாரல்லவா? பார்க்கலாம்.

நமது நாட்டில் எத்தனையோ காவியணிந்த துறவி களையும், காஷாயமில்லாத சாமியார்களையும் காண் கிறோம். அவர்களில் பெரும்பாலோர் வெறும் பிச்சைக் காரர்கள். சிலர்தான் துறவு பூண்டவர்கள். அதிலும் வெகுசிலர்தான் உண்மைத் துறவிகள். இந்தப் பெரும் பாலோரான பிச்சைக்காரச் சாமியார்களும் உண்மைத் துறவிகள் போலவும் யோகிகள் போலவும் நடிக்கிறார்கள். அவர்களில் சிலர் 'பங்கி'யடித்து மயங்குவதையும், சிலர் கஞ்சாக் குடித்து வெறிப்பதையும், பலர் கள்ளுண்டு உருளுவதையும், நாம் அனைவரும் பார்த்திருக்கிறோம்.

"என்ன சாமியாரே! எதற்காகக் கஞ்சாக் குடிக் கிறீர்?" என்று கேட்டால் அதற்கு அவர், "கஞ்சா நாமா குடிக்கிறோம்? இந்தக் கட்டையல்லவா குடிக்கிறது! கஞ்சாக் குடித்தால் கடவுளைக் காணலாம்" என்பார்.

"பங்கியடித்தால் பயன் என்ன, சாமியாரே?" என்று கேட்டால், "நாமா பங்கியடிக்கிறோம், இந்தக் கட்டை யல்லவா பங்கியடிக்கிறது? பங்கியடிப்பது பரமாத்மாவைப் பார்க்கத்தான்" என்பார்.

"என் சாமியாரே! என்னவோ வேதாந்தம் பேசு கிறீர்? காவி உடுத்தி, கமண்டலம் ஏந்தி, விபூதி பூசிக் கொண்டு ருத்ராக்ஷம் போட்டுக்கொண்டு கள்ளைக் குடிக்கலாமா?" என்றால்,

"கள்ளை நாமா குடிக்கிறோம்? இந்தக் கட்டை எதைக் குடித்தால் நமக்கென்ன? இந்தக் கட்டை கள்ளைக் குடிப்பது நம் சித்தத்தை நிறுத்திச் சிவனைக்

காணத்தான்'' என்பார். இமயம் முதல் குமரிவரை இப்படிப்பட்ட பேச்சை எங்கே வேண்டுமானாலும் இந்நாட்டின் எந்த பாஷையிலானாலும் கேட்கலாம். இதன் ரகசியம் என்னவென்றால் :

நமது முன்னோர்கள் கடவுளைத் தேடும் முயற்சி களில் மிகவும் கருத்துள்ளவர்கள். கடவுளை அறிவதற்கு அவர்கள் நான்கு வித யோகங்களை வகுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவை, பக்தி யோகம், கர்ம யோகம், ராஜ யோகம், ஞான யோகம் என்பன. யோகம் என்றால் 'சாதனையான முயற்சி' என்று அர்த்தம். இந்த நான்கு யோகங்களில் ராஜ யோகம் என்பது பலவித தேகாப்பியா சங்களைப் பழகி, தேகத்தை வசப்படுத்திக்கொண்டு, ஐம்புல ஆசைகளை அடக்கி, மனத்தை ஒரு நிலையில் ஏகாக்ரப்படுத்தி, ஆன்ம தரிசனத்தை அடைய முயல்வது. இந்த முறையில் ஆன்ம தரிசனம் மட்டுமல்லாமல் வேறு பல சித்திகளையும் பெற முடியும் என்பது சாஸ்திரம். இந்த யோக மார்க்கத்தில் 'சமாதி நிலை' என்ற ஓர் அப்பியாசம் உண்டு. அந்த அப்பியாசத்தால் யோகி யானவன், 'தன் உடலையும் உலகத்தையும் முற்றிலும் மறந்தவனாகி ஜீவான்மாவை வயப்படுத்தி, பரமான்மா வோடு ஒன்றுபட்டு நிற்க முடியும்' என்பது பரம்பரை யான நம்பிக்கை.

பரமாத்மாவை அநுபவிக்க உதவக்கூடிய மார்க்கம் என்பதோடு, தபோபலம், நோயின்மை, ஆயுள் விருத்தி, காயசித்தி முதலான அரிய சித்திகளையும் அடைய முடியும் என்ற நம்பிக்கையினால் இந்தக் கஷ்டமான ராஜயோகத்தை மிகச்சிறந்த யோகமாகத் தவசிகள்



மேற்கொள்ளுவார்கள். நோயின்மை, ஆயுள் விருத்தி முதலான சித்திகளைப் பெற அநுகூலமாக இருக்கும் என்று ராஜயோக அப்பியாசம் செய்கிறவர்கள் இந்த யோக முயற்சிகளோடு வைத்திய சாஸ்திரத்தின் பகுதி யான மூலிகைகளின் மர்மங்கள், கல்பம் செய்கிற முறைகள் முதலியவற்றையும் பழகலானார்கள். (கொஞ் சம் கொஞ்சமாக ரஸவாதம் செய்கிற ரகசிய முயற்சி களும் இந்த யோகிகளை ஒட்டிக்கொண்டன.) ஆகை யினால், வைத்தியத்தையும் ரஸவாதத்தையும் (ரஸவாதம் என்றால், செம்பைத் தங்கமாக மாற்றுவது போன்ற காரியங்கள்) காட்டி ஊராரை ஏமாற்றி ஜீவனம் செய் வதற்கு இந்த ராஜயோகந்தான் போலித் துறவிகளுக்கும் சோம்பேறிச் சாமியார்களுக்கும் மிகவும் சாதகமானது. இந்த மோசக்காரப் போலிச் சன்னியாசிகள்தாம் பங்கி யடிப்பதும் கஞ்சாப் புகைப்பதும் கள்ளுண்பதும் 'சித்தத்தை நிறுத்திச் சிவத்தைக் காண' என்றும் சொல்லித் திரிபவர்கள். இந்தச் சாமியார்கள் பொய்யர் களானாலும் ராஜயோகம் என்பது பொய்யுமல்ல ; பிறரை ஏய்த்து வாழ ஏற்பட்டதும் அல்ல. அந்த ராஜயோகத் தில் சொல்லப்படுகிற 'சித்தத்தை நிறுத்திச் சிவத்தைக் காண்பது' என்கிற தத்துவமும் பிறரை ஏமாற்றுவதல்ல. ரஸவாதம் என்பது உண்மை என்றுதான் ஊகிக்க இட மிருக்கிறது.

'மாங்காய்ப் பால் உண்டு மலைமேல் இருப்போர்க்கு தேங்காய்ப்பால் ஏதுக்கடி?' என்ற பாட்டுக்கு அர்த் தத்தை அறிய நாம் கவனிக்க வேண்டிய விஷயம் இதில்

எதுவென்றால், 'சித்தத்தை நிறுத்திச் சிவத்தைக் காண்பது' என்பதுதான்.

ராஜயோகத்தின் வெகு முக்கியமான நோக்கம் எதுவெனில், சமாதி நிலை. சமாதி என்பது நிஷ்டையின் முதிர்ந்த நிலை. அலைந்துகொண்டே இருக்கிற மனத்தை ஒரே குறிப்பில் ஏகாக்ரப்படுத்தி, உடலைப் பற்றிய உணர்ச்சியே இல்லாமல் கண்களை மூடிக் கொண்டு, மூச்சை அடக்கி, மற்ற இந்திரியங்களுக்கும் வேலையில்லாமல் உள்ளுக்குள்ளேயே பரமாத்மா என்னும் ஒரு ஜோதியைக் காண முயன்று தியானத்தில் இருப்பது. இப்படிப்பட்ட சமாதி நிலையில் லயித்து விட்டவர்களுக்கு அந்த நிலை கலைகிறவரையிலும் பசி, தாகம், வலி, களைப்பு முதலிய எந்தவித உபாதையும் இருக்காது. இந்த நிலையிலேயே ஒருநாள் இரண்டு நாள் அல்ல, பல நாள்கள், பல வாரங்கள், பல மாதங்கள்கூட இருந்துவிடுவது உண்டு. அந்தக் காலத்தில் ஒரு கல் அல்லது கட்டை போலத்தான் இருப்பார்கள். மூச்சு விடுவதுகூட உண்டோ இல்லையோ என்று எண்ணும்படியாக இருக்கும். அந்தச் சமாதி நிலையில் இருக்கும்போது உணவில்லாமல் எப்படி இருக்க முடியும் என்றால், அதுதான் உண்மையான ராஜயோகத்தின் ரகசியம். (அந்த ரகசியத்தை விளக்க முயல்வது வீண். அப்படி விளக்க வேண்டியதும் இப்போது அவசியம் இல்லை. அதை விளக்கிச் சொல்வதற்கும் அதைப்பற்றிய படிப்புமட்டும் போதாது; பழக்கமும் வேண்டும்.) ஆனாலும், ஆகாரம் இல்லாமல் எப்படி உயிரோடிருக்க முடியும் என்பதைப்பற்றி யோகசாஸ்திரம் சொல்லுகிற நியாயங்



களைச் சற்று நினைக்க வேண்டியதுதான். அந்த நியாயங்கள் என்னவென்றால், சமாதியில் இருக்கிற ஒரு யோகி சமாதிக்காக அமர்வதற்கு முன், அந்த யோக சாஸ்திரத்தின் சட்டதிட்டங்களில் விதிக்கப்பட்டிருக்கிறபடி தம்முடைய குடலினும் நீர்ப்பையினும் மலமோ மூத்திரமோ மிச்சமில்லாதபடி சுத்தப்படுத்திக் கொண்டுதான் நிஷ்டையை ஆரம்பிப்பார். அதனால், மல மூத்திர உபாதைகள் உண்டாகா. பின், உணவுக்கு வழி என்னவென்றால், அதே யோக சாஸ்திரத்தின் விதிகளின்படி, அந்த யோகியின் உடலில் ஏற்கெனவே இருக்கிற ஜீவ சத்துகளே உணவு போல் உதவி, மூளையிலிருந்து 'குண்டலிப்பால்' என்று யோக சாஸ்திரம் சொல்லுகின்ற ஒருவித ரஸம் ரத்தாசயமான இதயத்துக்கு வந்து, ரத்தம் போல் ஓடி, உணவும் நீரும் செய்கிற வேலைகளைச் செய்து, உடலையும் உயிரையும் பாதுகாக்கிறதாம். இந்த ஜீவ சத்தான அமுதத்தில் ஆகாரத்திலும் தண்ணீரிலும் உள்ள அசத்துகள் சிறிதும் இல்லாமையால் மலமோ ஜலமோ கழியவேண்டிய அவசியமே இல்லையென்பது யோக சாஸ்திரம். மலஜலமாக உடலைவிட்டு வெளியே போய்க் குறைந்து போகிற பொருள் அல்ல அந்தக் குண்டலிப்பால். திரும்பத் திரும்ப அதே சத்து அமுதமாகவும் ரத்தமாகவும் மாறி மாறி ஓடி, குறையாமல் இருப்பதால் அடுத்தடுத்து ஆகாரம் போட வேண்டிய அவசியமும் அற்றுப்போகிறது.

அப்படிப்பட்ட சமாதியில் அநேக நாள்கள், அநேக மாதங்கள் (அநேக வருஷங்கள்கூட) வசித்திருந்தவர்கள்

எத்தனையோ பேர் இந்த நாட்டில் இருந்திருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். அந்தச் சமாதி நிலையில் இருக்கும்போது அவர்களுடைய உடலுக்கு என்ன நேர்ந்தாலும் அவர்களுக்குத் தெரியாது. அப்படிச் சமாதியில் உயிரற்ற உடல்போல் இருந்த தாயுமானவரைப் பிணமென்று தவறாக நினைத்துத் தகனம் செய்யும்போது, பாதி உடல் வெந்துபோன பிறகு சமாதி கலைந்து விழித்துப் பார்த்து, நெருப்பில் இட்டவரைச் சபித்ததாகச் சொல்லப்படுகிறது.

இதைப் பொய்க்கதை என்று புறக்கணித்து விட்டாலும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைப்பற்றிய உண்மையான சரித்திரமாக நேரில் கண்டவர்கள் எழுதி வைத்தும், பல இடங்களில் சொல்லியும் இருக்கிறதான ஒரு நிகழ்ச்சி உண்டு.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சமீப காலத்தில் தோன்றிய ஞானிகளில் சமானமற்றவர் என்பது உலகப் பிரசித்தமானது. அவருடைய அபூர்வ உபதேசங்களை ஐரோப்பியர்களும் அறிந்து அதிசயித்திருக்கிறார்கள். அவரைத் தரிசித்துப்போக உலகத்தின் எல்லா நாடுகளிலிருந்தும் அறிஞர்கள் வந்துபோவது வழக்கம். அவருடைய வேதாந்த மார்க்கத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுங்கூட அவருடைய புகழைக் கேள்விப்பட்டு வெறும் வேடிக்கை பார்க்கவென்றாவது வருவார்கள். (பிற்காலத்தில் அவருடைய பிரதம சிஷ்யராகி அவரைப்பற்றி உலகமெல்லாம் சுற்றிப் பிரசாரம் செய்த ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுங்கூட அவருடைய தத்துவங்களை நெடுநாள்வரை ஏளனம் செய்துகொண்டிருந்தவர்தான்.



அவரும் 'இந்த ராமகிருஷ்ணரிடத்தில் என்னதான் மகிமை இருக்கிறது; ஏன் இவரைத் தரிசிக்க இப்படி ஏராளமான ஜனங்கள் போகிறார்கள்? இவற்றைக் கண்டறிவோம்' என்று வேடிக்கையாகத்தான் முதல்முதல் வந்தார். வந்தவர், விவரிக்க முடியாத ஏதோ ஒரு பிரேமை உண்டாகி, அவரிடத்திலேயே தங்கிவிட்டார் என்பது சரித்திரம்.) அப்படி ஸ்ரீராமகிருஷ்ணருடைய தத்துவங்களில் சிறிதும் நம்பிக்கையில்லாத ஒருவர், ஒருநாள் அவரைக் கண்டு பேச வந்தார். அவர் வந்த சமயம் ஸ்ரீராமகிருஷ்ணர் நிஷ்டையில் இருந்த நேரம். ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதி யோகத்தில் சாதனை பெற்றவர். பல நாள்கள் சமாதியில் இருந்துவிடுவார். அவரைப் பார்க்க வந்தவர், அந்த மடத்திலிருந்த சிஷ்யர்களிடத்தில் தாம் வந்த காரியத்தை அறிவித்தார். சிஷ்யர்கள் பரமஹம்ஸர் சமாதியில் அமர்ந்திருப்பதாகவும், அவரைப் பார்க்க முடியாதென்றும் சொன்னார்கள். 'அப்படியானால் மறுபடியும் எப்போது பார்க்கலாம்' என்று வந்தவர் கேட்டார். 'நிஷ்டை கலைய எத்தனை நாள் ஆகுமோ, எவராலும் சொல்ல முடியாது' என்று சிஷ்யர்கள் சொன்னார்கள். நிஷ்டை கலைய அநேக தினங்கள் ஆகலாம் என்று சொன்னதைக் கேட்டு, வந்தவர் அதிசயப்பட்டார். அந்த நிஷ்டையைப்பற்றிய விவரங்களை விசாரித்தார். வந்தவர், மதிக்கத்தகுந்த மனிதராக இருந்ததைக் கண்டு, சிஷ்யர்களும் நிஷ்டையின் மர்மங்களைப்பற்றிக் கூறினார்கள். நிஷ்டையில் இருக்கிறவர்களுக்கு உடலைப்பற்றிய உணர்ச்சியே இருக்காது என்பதைக் கேட்டு, 'அப்படி நிஷ்டை செய்கிறவர்கள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்களா?'

என்று தமக்குள்ளேயே எண்ணிக்கொண்டு பேச்சை முடித்த பின், அந்த ஆசிரமத்தைச் சுற்றிப்பார்க்க ஆசை கொண்டு, அந்தப் புது மனிதர் நிதானமாக அதையும் இதையும் நின்று நின்று பார்த்துக்கொண்டிருந்தார். பார்க்கட்டும் என்று விட்டுவிட்டு சிஷ்யர்கள் அவரவர் களுடைய அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டார்கள்.

ஆசிரமத்தின் எல்லாப் பகுதிகளையும் பார்வை யிட்டுக்கொண்டு வந்த அந்தப் புது மனிதர் ஸ்ரீ ராம கிருஷ்ணர் நிஷ்டையில் அமர்ந்திருந்த அறையண்டை வந்தார். பரமஹம்ஸரைப் பார்த்தார். அவர் ஒரு கற் சிலைபோல அசையாது இருப்பதை அறிந்தார். கொஞ்சங்கொஞ்சமாக அருகிற்சென்றார். சுற்று முற்றும் பார்த்தார். அருகில் சீடர்கள் யாரும் இல்லை. கொஞ்சம் இருமினார்; கனைத்தார். அந்த ஓசைகள் நிஷ்டையில் இருந்தவரை ஒன்றும் செய்யவில்லை. வந்த வருக்கு உடனே ஓர் ஆசை உதித்தது, நிஷ்டையில் இருப்பவர்களுக்கு உடலைப்பற்றிய உணர்ச்சிகளே இருக்காது என்பதன் உண்மையைச் சோதனை செய்து பார்த்துவிட வேண்டும் என்று.

அது குளிர் காலம். குளிர் காலத்தில் கல்கத்தாப் பிரதேசத்தில் எந்த இடத்திலும் கணப்புச்சட்டிகள் இருக்கும். நாலா பக்கமும் நன்றாகப் பார்த்து, எவரும் பக்கத்தில் இல்லையென்று தெரிந்துகொண்டு, அந்த மனிதர் சிறிது தூரத்திலிருந்த கணப்புச்சட்டியில் இருந்த ஒரு நெருப்புத்துண்டை எடுத்து வந்து, பழி பாவத்துக்கும் பயப்படாமல் பத்மாஸனமாக வீற்றிருந்த பரமஹம்ஸருடைய வலத்துடையில் வைத்துவிட்டு எட்டச் சென்று மறைந்துகொண்டார். நெருப்பின் சூட்டினால்



நிஷ்டை உடனே கலைந்து அந்தத் தணல் துண்டை அவர் தள்ளிவிடலாம். பிறகு, அவரைக் கண்டு பேசலாம் என்றுகூட அந்த மனிதர் எண்ணியிருக்கக்கூடும். தூரத்தில் மறைந்திருந்து வெகு நேரம் காத்திருந்தார் அந்த மனிதர். நெருப்புச் சுட்டுவிட்டதாகவோ, நிஷ்டை கலைந்துவிட்டதாகவோ அநுமானிக்கத்தக்க அறிகுறிகள் காணப்படவில்லை. பார்த்தார் அந்தப் பரிசோதகர். ஆசையும் அச்சமும் அடுத்தடுத்துத் தள்ள, மெதுவாக நடந்து, வேறு எதையோ பார்க்கப்போவது போலப் பாவனை செய்து, மீண்டும் ஸ்ரீராமகிருஷ்ணர் அமர்ந் திருந்த அறைக்கு நேராக வந்து, ஒன்றும் அறியாத வரைப்போலத்திரும்பிப்பார்த்தார். ஸ்ரீராமகிருஷ்ணர்முன் போலவே கற்சிலைபோல் இருப்பதைக் கண்டார். அருகிற் சென்று, தாம் வைத்த நெருப்புத்துண்டு என்னவாயிற்று என்று பார்க்க எண்ணி, அறைக்கு அருகிற்போகும் சமயத்தில் அங்கே வந்த சிஷ்யர், இந்த மனிதரைக் கையைப் பிடித்து எட்ட அழைத்துக்கொண்டு போய், "பாபு, அந்த அறைக்குள் யாரும் போகக்கூடாது" என்றாராம். 'தப்பினோம், பிழைத்தோம்' என்று அந்த மனிதர் போய்விட்டாராம்.

ஐந்தாறு தினங்களுக்குப் பின் ஸ்ரீராமகிருஷ்ணரின் யோகம் கலைந்தது. நிஷ்டை கலைந்தவுடன் உடலைப் பற்றிய உணர்ச்சிகள் வந்துவிடும். அதனால் வலக் காலில் ஒரு வலி உண்டாவதை உணர்ந்தார். வலி உண் டான இடத்தைத் தொட்டுப் பார்த்தார். அங்கே என்னவோ கடினமான பதார்த்தம் கையில் பட்டது. அந்த அறை அதிக வெளிச்சமில்லாத அறை. (யோகிகள்

வெளிச்சமில்லாத அறையில்தான் நிஷ்டையில் உட்காரு வார்கள்.) கையிற்பட்டது என்னவென்று தெரியவில்லை. சிஷ்யர்களைக் கூப்பிட்டார். அவர்கள் வந்து பார்த்தார் கள். ஒரு நெருப்புக் கரித்துண்டு நிணத்தில் ஊறியிருப் பதைக் கண்டு, யாரோ துடையில் நெருப்புத்துண்டை வைத்திருக்கிறார்கள் என்று கண்டு துணுக்குற்றார்கள். ஆலோசித்துப் பார்த்தபொழுது, ஐந்தாறு நாள்களுக்கு முன்னால் வெகு பெரிய மனிதனைப் போல வந்த புது மனிதர் பேசிய பேச்சுகளாலும், நிஷ்டையைப்பற்றிக் கேட்ட கேள்விகளாலும், அவர் வெகுநேரம் ஆசிரமத்தில் அதையும் இதையும் பார்க்க விரும்பினவர்போல் நடந்து கொண்ட பாவனைகளாலும், கடைசியாக அவரை ஒரு சிஷ்யர் பரமஹம்ஸர் நிஷ்டை அறைக்குப் பக்கமாகப் பார்த்துக் கையைப் பிடித்து இட்டுக்கொண்டு போய், 'அங்கே போகக்கூடாது' என்று சொன்னது நினைவிற்கு வந்ததனாலும், இது அவருடைய வேலைதான் என்று கண்டார்கள். தாங்கள் அவரை ஒரு கனவான் என்று நம்பி ஏமாந்துவிட்டதைக் குறித்து வருத்தப்படுவதைக் குருதேவருக்குத் தெரியப்படுத்தினார்கள். அதை அறிந்த ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு அதற்காக யாரும் வருத்தப்பட வேண்டாமென்று அறிவித்தாராம்.

இந்நிகழ்ச்சியை எதற்காக எழுதுகிறோம் என்றால், உண்மையான நிஷ்டையில் இருப்பவர்களுக்கு உடலைப் பற்றிய உணர்ச்சியே இருக்காது என்பது முற்றிலும் உண்மையே என்பதற்காக மட்டுந்தான்.

நிஷ்டை நிலையின் முதிர்ச்சியான இந்தச் சமாதி நிலையை அடைய வேண்டும் என்பது யோகப்பயிற்சி களில் விருப்பமுள்ளவர்களின் முக்கியமான முயற்சி.



இந்த நிஷ்டைக்கு, மனத்தை ஒருநிலையில் நிறுத்தப் பழகுவதுதான் முதற்படி. அதைத்தான் 'ஏகாக்ரம்' என்று சொல்லுவார்கள். அதையேதான் தாயுமானவர் "ஆடிய கறங்குபோல் ஓடி உழல் சிந்தையை அடக்கி ஒருகண மேனும் நான்—காணிலேன் திருவருளை, அல்லதுமௌனி யாய்க் கண்மூடி ஓடும் மூச்சைக் கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெம் கனலினை எழுப்ப நினைவும் பூணி லேன்" என்று பாடுகிறார். இதன் பொருள் என்னவெனில், ஆடுகின்ற பம்பரம் போல் (கறங்கு—பம்பரம்) ஓடித் திரி கின்ற மனத்தை ஒரு க்ஷண நேரத்துக்காவது ஒரு நிலை யில் நிறுத்தித் தெய்வத் திருவருளைக் காண்பேனில்லை. அல்லது (அதற்கு அடுத்த நிலையான) கண்களை மூடி ஓடுகின்ற மூச்சைப் பந்தனப்படுத்திச் சிரசின் உச்சியி லுள்ள 'கலாமதி' என்னும் அமுத கலசத்தை முட்டி (அதி லிருந்து வரும் குண்டலிப் பாலைஉண்டு ஆகாரமில்லாமல் சமாதியில் இருக்க) யோக சித்தியைத் தரக்கூடிய மூலக் கனலான ஜீவசக்தி நெருப்பைக் கிளப்பவும் பழகினே னில்லை—என்பது. இதனால் யோகிகளின் முதல் அப்பி யாசம் சிந்தையை அடக்குவது; அதற்குப் பின்தான் சமாதிக்கு வழி.

இதற்காக, மனத்தை ஏகாக்ரப்படுத்துவதற்கென்று பல உண்மையான யோகிகளுங்கூடச் சில செயற்கை வழி களை முயல்வது உண்டு. அதாவது கஞ்சா, அபின், கள் முதலிய போதை வஸ்துக்களை உட்கொண்டு அந்த வெறி ஏகாக்ர நிலையைப் பழக உதவும் என்று ஏமாந்து போவது. உண்மையாகவே யோகத்தில் பக்தி சிரத்தை உள்ள நல்லவர்களுங்கூட இந்தப் போதைகளில் ஈடுபட்டு

அதை யோக முயற்சி என்பார்கள் என்றால், பொய்த் துறவிகளும் போலிச் சாமியார்களும் இந்தப் போதை உண்பதையேதான் யோகமாகப் பாசாங்கு செய்வார்கள் என்பதில் என்ன தடை? அப்படிப்பட்ட போலித்துறவிகள் மிகுந்துவிட்டதைக் கண்ட குதம்பைச் சித்தர், 'இந்தப் போதை உண்பதனால் யோகம் சித்திக்காது ; யோக நிலையை அறிந்தவர்களுக்குப் போதை எதற்கு உதவும்' என்றுதான்,

"மாங்காய்ப் பால்உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி ? — குதம்பாய்!"

எனப் பாடுகிறார்.

இப்போது இப்பாட்டின் மிக உயர்ந்த பொருள் எளிதில் புரியும்; மாங்காய்ப்பால் உண்டு - (இயற்கையான முறையில் யோகாப்பியாசம் பழகி, மூச்சைக் கட்டி, மூலக்கனலை எழுப்பி, மூளையின் நடுவே இருக்கும் 'கலாமதி' என்னும் அமுத கலசத்தை அசைத்து, அந்த அமுத கலசத்திலிருந்து மாங்காய் வடிவமாக இருக்கும் இருதயத்துக்கு வந்து, ரத்தம் போல் ஓடி உயிரைப் பாதுகாக்கும்) மாங்காய்ப்பாலை உண்டுகொண்டு; மலைமேல் இருப்போர்க்கு—பரமாத்மாவோடு கலந்து நிற்கிற (சமாதி நிலையாகிய) மிக உயர்ந்த மலையின்மேல் இருக்கக்கூடிய யோகிகளுக்கு; தேங்காய்ப்பால் ஏதுக்கடி —(யோகத்துக்குச் சிறிதும் உதவாத) கள்ளுத் தண்ணி எதற்காக ?' என்பதுதான் இதன் பொருள். கள்ளோடு மற்ற போதைகளும் சேர்ந்ததுதான்.

இந்த மிக உயர்ந்த போதனையான கருத்து அந்தப் பாட்டில் அடங்கியிருப்பதைச் சாதாரணமாக எவரும்



கண்டுபிடிக்க முடியாது; அதைக் கண்டுபிடிப்பது வெகு கடினமாகும்படி, வேண்டுமென்றே மறைத்துப் பாடி, படிப்பவர்களைத் திணறவைப்பது ஒரு கலைத் திறமையைக் கருதியே. அந்த மறைபொருளைக் கண்டு பிடித்துச் சொன்ன உடனேயே நமக்கெல்லாம் அதிசயத்தோடு கூடிய இன்பம் உண்டாகிறது. இது இலக்கிய இன்பம்.

அர்த்தங்களை வேண்டுமென்று மறைத்து வைக்காமல், எல்லோருக்கும் எளிதாகத் தெரியக்கூடிய பாட்டுகளிலும் வெகு சாதாரணமான கருத்துகளையும் சொல்லுகின்ற சாதுரியத்தால் படிப்பவர்களுக்கு இன்பம் உண்டாகும்படி இயற்றுவதுண்டு. அப்படிப்பட்ட பாட்டிற்கு ஓர் உதாரணம் பார்ப்போம்.

திருவெங்கைக் கலம்பகம் என்பது ஒரு தமிழ் நூல். அதை இயற்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள் ; அநேக அருமையான நூல்களைச் செய்த பேரறிஞர். அவரது பாட்டுகள் மிக்க இலக்கியச் சுவை நிறைந்தவை.

அந்தத் திருவெங்கைக் கலம்பகத்தில் ஒரு வேடிக்கையான பாடலை இங்கே எடுத்துக்காட்டுவோம் :

கலம்பகம் என்ற இலக்கணப் பெயரமைந்த நூலில் பல 'துறைகள்' உண்டு. 'துறை' என்றால் 'நிலை'. ஒரு பொருளைப் பல நிலைகளில் வைத்து, வெவ்வேறு குணங்களையும் அவற்றிற்கான கற்பனையோடு பாடுவது. அந்தத் 'துறை' என்பதை அறியாதவர்களுக்குப் புரியும்படியாகப் பாரதியாருடைய பாடல்களில் ஒன்றைச்சுட்டிக் காட்டினால் 'துறை' என்பது என்னவென்று துலங்கிவிடும்.

பாரதியார், 'கண்ணன் பாட்டு' என்ற ஒரு சிறு நூல் பாடியிருக்கிறார். அதில் கண்ணனைப் பலபடியாக அநுபவிக்கிறார். 'கண்ணன் என் காதலி', 'கண்ணன் என் வேலைக்காரன்', 'கண்ணன் என் தோழன்' என்று வெவ்வேறு நிலைகளில் கண்ணனை நிறுத்திப் பாடுகிறார். அப்படிப் போல, ஒரு கதாநாயகனை அல்லது ஒரு தத்துவத்தை வெவ்வேறு நிலையில் வைத்துப் பாடுவதற்குத்தான் வெவ்வேறு 'துறைகள்' என்று சொல்லுவது. ஒரே மனிதன் குழந்தையாக எப்படி நடந்துகொள்கிறான், மாணவனாக எப்படி நடந்து கொள்கிறான், காதலனாக எப்படி நடந்துகொள்கிறான், கணவனாக எப்படி நடந்துகொள்கிறான், தந்தையாக எப்படிநடந்து கொள்கிறான்என்றெல்லாம் தனித்தனியாக அதற்கேற்ற குணங்களைக் காட்டிச் சொல்வதுதான் வெவ்வேறு 'துறை' அல்லது 'நிலை' எனப்படுவது.

அப்படிப்பட்ட பல துறைகளில் 'மறம்' என்பது ஒரு துறை. 'மறம்' என்றால், ஒருவன் தன்னுடைய சௌரியத்தைப்பற்றி, தன்னை அறியாத வேறொருவனிடத்தில் தானே சொல்லிக்கொள்வது. 'ஓய்! என்னை யாரென்று எண்ணிக்கொண்டீர். நான் அப்படிப்பட்டவனாக்கும், இப்படிப்பட்டவனாக்கும் ; ஜாக்கிரதை' என்று தனது வெற்றிப் பிரதாபங்களை வெளியிட்டு, எதிரியின்கருத்தை மறுத்துப் பேசுவதற்கு 'மறம்' என்று தமிழ் இலக்கியங்களில் பெயர். திருவெங்கைக் கலம்பகத்தில் :

ஒரு வேடர் குலத் தலைவன், அரசர் அனுப்பிய தூதனாகிய மந்திரியின் கோரிக்கையை மறுத்து, 'மறம்' பேசுகின்றான். கதை என்னவென்றால்: வெங்கை



என்பது ஒரு சிற்றூர். அது ஒரு முருகன் ஸ்தலம். அது ஒரு சிற்றரசு. அதற்குத் தலைவன் ஒரு வேடன். அவனுக்கு மிகவும் அழகு வாய்ந்த மகள் உண்டு. அவள் நந்தவனத்தில் தோழிகளோடு விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, வேட்டைக்கு அவ்வழியே வந்த பாண்டிநாட்டு இளவரசன் அவளைப் பார்த்துவிட்டான். உடனே அவள்மீது ஆசை பிறந்துவிடுகிறது. அந்தப் பெண் யாரென்று விசாரிக்கிறான். அவன் தன்னுடைய ஆட்சிக்குள் அடங்கிய ஒரு வேடர்குலச் சிற்றரசனுடைய மகள் என்பதை அறிந்தான். தன்னுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட ஒரு வேடர் தலைவனுடைய மகளாக இருப்பது மட்டுமல்லாமல் ஜாதியிலும் தனக்கு மிகவும் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவளாக இருப்பதனால் கேட்ட உடனேயே தனக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுத்துவிடுவான் என்று எண்ணிக்கொண்டே இளவரசன் வெகு வேகமாகத் தன்னுடைய தலை நகருக்குச் சென்று, முதல் மந்திரியை வேடர் குலத் தலைவனிடம் பெண் கேட்கத் தூது அனுப்புகிறான். பாண்டி நாட்டுச் சக்கரவர்த்தியிடமிருந்து புறப்பட்ட முதல் மந்திரி, அதுவும் அரசிளங்குமரனுக்குப் பெண் கேட்கப் போகிறவர், எவ்வளவு ஆடம்பரங்களோடு போனார் என்பதை எழுதவே தேவையில்லை. ஏராளமான சீர் வரிசைகளுடன் நால்வகைச் சேனைகளும் முன்னே செல்ல, பலவித வாத்தியங்களும் முழங்க, பாண்டி நாட்டு முதல் மந்திரி திருவெங்கைக்கு வந்தார். எதிர்பாராதபடி அவ்வளவு வைபவங்களோடு வந்த மந்திரியை வேடுவர் தலைவன் வழக்கமான மரியாதைகளுடன் வணங்கி வரவேற்றான். பாண்டிய மந்திரியார் தாம் கொண்டுவந்த

வெகுமதிகளையெல்லாம் வேடர்குலத் தலைவனுக்கு வழங்கினார். அவ்வளவு வரிசைகளைப் பெற்றுப் பழக்க மில்லாத வேடர்குலத் தலைவன் திடுக்கிட்டுத் திகைத்து, சந்தோஷமும் சங்கடமும் கலந்த மனத்துடன் விஷயம் புரியாமல் விழித்துக்கொண்டு நின்றான். தூதுவந்த பாண்டிநாட்டு மந்திரி சொல்லுகிறார் : "வேடர்குலத் தலைவரே! உங்களுக்கு வந்த யோகமே, யோகம். ஐம்பத்தாறு தேசங்களையும் அரசாளும் மன்னவர் களுக்கும் கிடைக்காத மகிமை உங்களைத் தேடி வந்திருக்கிறது. ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றார். "என்ன!" என்று வியப்போடு கேட்டான் வேடர் தலைவன். "பாண்டி மன்னர் பரம்பரையைப்பற்றியும் வீர தீர பராக்கிரமங்களைப்பற்றியும் நீங்கள் அறியாதது ஒன்று மில்லை. பாண்டியர் மிகவும் உயர்ந்த க்ஷத்திரிய பரம்பரையைச் சேர்ந்தவர். 'சூரிய வமிசம்', 'சந்திர வமிசம்' என்று பெரும் புகழ் படைத்த க்ஷத்திரிய பரம்பரைகளின் தொடர்புள்ளவர். குலத்திலும் பலத்திலும் மற்றெல்லாச் சிறப்புகளிலும் உங்களுக்கு எவ்வளவோ மேற்பட்டவர் என்பது உங்களுக்கே தெரியும்; அவருடைய சம்பந்தத்தை அடைவதற்கு எத்தனையோ பெரும் பெரும் அரசர்களெல்லாம் வெகு ஆவலோடு முயன்று வருகிறார்கள். அந்தப் பெரிய அரசர்களுக்கெல்லாம் கிட்டாத ஒரு பெருஞ்சிறப்பு பாண்டியருடைய சிற்றரசர் களில் ஒருவரான உங்களுக்கு கிடைத்திருப்பது அதிருஷ்டவசத்தால்தான்" என்றார், மந்திரி மிக்க மகிழ்ச்சியுடன்.

இன்னும் விஷயம் தெரியாமல் வேடர் மன்னன் விழித்தான். "உங்களுடைய மகளை எங்கள் இளவரசர்



மணந்துகொள்ள விரும்புகின்றார். சந்தேகப்பட வேண்டாம் ; இது சத்தியமான பேச்சு. இதோ மண ஓலை கொண்டுவந்திருக்கிறேன்" என்று மந்திரி தாம் கொண்டுவந்த மணவோலையை எடுத்து நீட்டினார்.

அந்த மணவோலையை வாங்கிக்கொள்ளாமல் வேடர் மன்னன் பாண்டி நாட்டு மந்திரியைப் பலமுறை ஏற இறங்கப் பார்த்தான். அவனுடைய முகம் சிவந்தது; மீசைகள் துடித்தன; விழிகள் விரிந்தன; உதடுகள் பதறின; உடல் வெதும்பிற்று; உள்ளம் குமுறிற்று. பல பேருக்கு முன்னால் மிகவும் அவமானம் அடைந்து விட்ட ஒரு மானியைப்போல் அவதியுற்றான்.

பணத்திலும் பலத்திலும் மற்றச் சிறப்புகளிலும், வேடர்குலத் தலைவன் பாண்டியனுக்குக் குறைந்தவன் தான் என்பதை அவனே ஒப்புக்கொள்வான் என்றாலும், குலத்தைக் குறைத்துப் பேசிவிட்டதில் அவனுக்குக் கொதிப்பும் கோபமும் உதித்துவிட்டன. வந்திருப்பவரோ முதல் மந்திரி. அனுப்பியவரோ தனக்கு அதிபரான அரசர். அப்படியிருந்தும் சிறிதேனும் அஞ்சாமல் வேடர் தலைவன் மந்திரியின் பேச்சை மறுத்து, 'மறம்' பேசுகின் றான். அந்தப் பாடலைப் பாருங்கள். மறைபொருள் ஒன்றுமில்லாத பாட்டுத்தான். சாதாரணமாக நமக்கெல் லாம் தெரிந்த விஷயங்கள்தாம் அதில் சொல்லப்படு கின்றன. உபமான உபமேயச் சிறப்போ, வேறு சொந்தக் கற்பனையோ அதில் இல்லை. ஆனாலும், சொல்லுகிற முறையில் அது நமக்கு எவ்வளவு இன்பளிக் கிறது என்பதைப் பாருங்கள் :

வெங்கை மாநகரத்தின் வேடர்தலைவன் பாண்டி நாட்டு மந்திரியைப் பார்த்துச் சொல்லுகின்றான் :

"விற்றதார் ? கலைபாதியோடு
வனத்திலே அழவிட்டதார் ?
வெஞ்சிறைபுக விட்டதார் ?
துகில் உரியவிட்டு விழித்ததார் ?
உற்ற தாரமும் வேண்டும் என்றுஇனி
மன்னர் பெண்டுகொளல் ஒக்குமோ ?
உமியடா மணம்என்ற வாய்கிழித்து
ஒலைகாற்றில் உருட்டடா !
வெற்றீ யாகிய முத்தி தந்திடும்
வெங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவர் எமையடுத்து இனிது
எங்கள் எச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலன் தனக்கு நாம்ஒரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பெண்ணைக் கொடுப்பமோ இதென்
பேய்பிடித்திடும் தூதரே."

படிக்கும்போதே பொருள் நன்றாகப் புரிகிறது. இருந்தாலும் சற்று விளக்கிச் சொன்னால் பின்னும் இன்பமாக இருக்கும்.

"ஓய், பாண்டிநாட்டு முதல் மந்திரியவர்களே! என்ன சொன்னீர்? பாண்டியனுடைய பரம்பரை க்ஷத்திரிய பரம்பரையா ! சூரியவமிசம் சந்திரவமிசம் முதலான உயர்ந்த இனங்களின் தொடர்புடைய ஜாதியா! நாங்கள் வனத்திலே வசிக்கிற வேடர்கள் என்று எங்களை இழி குலத்தைச் சேர்ந்தவர்களாக எண்ணிப் பேசிவிட்டீரோ ! இந்தச் சூரிய குலம் சந்திர குலம் என்பனவற்றைச் சேர்ந்த க்ஷத்திரிய அரசர்களின் யோக்யதைகளெல்லாம்



எங்களுக்குத் தெரியாது என்று எண்ணிவிட்டீரோ ! புத்தியுள்ள எவனாவது இந்த அரசர்களுக்குப் பெண் கொடுக்கச் சம்மதிப்பானா? அல்லது பெண்ஜாதி வேண்டுமென்று ஒரு பெண்ணை மணந்துகொள்ள ஒரு தகுதியாவது உண்டா? கேளும் :

**விற்றதார் ?** :- 'உயிருள்ள வரையிலும் கைவிடாமல் காப்பாற்றுவேன்' என்று கங்கணம் கட்டிக் கலியாணம் செய்துகொண்ட மனைவியை விலைக்கு விற்றுவிட்டுப் போனானே அந்த அரிச்சந்திரன், அவன் ஓர் அரசனல்லவா? க்ஷத்திரியன் அல்லவா? நீர் சொன்ன சூரிய சந்திர வமிசத்தின் உயர்ந்த பரம்பரையைச் சேர்ந்தவன் அல்லவா ?

**கலை பாதியோடு வனத்திலே அழ விட்டதார்? :** தேவர்களையெல்லாங்கூட வெறுத்துவிட்டுத் தனக்கு மாலை சூட்டிய தன் மனைவி தமயந்தியைத் திக்குத் தெரியாத நடுக்காட்டில், நடுச்சாமத்தில், பாழடைந்த மண்டபத்தில், இருவரும் கட்டியிருந்த ஒரே புடைவையைப் பாதியாகத் துணித்துக் கொண்டு, 'காதலியைக் காரிருளில் கானகத்தில்' கைவிட்ட பாதகனாகிய நளன் ஓர் அரசனல்லவா ? க்ஷத்திரியனல்லவா ? நீர் சொல்லிய உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவனல்லவா ?

**வெஞ்சிறை புகவிட்டதார் ? :** பிரிந்திருக்க மாட்டேனென்று கல்லும் முள்ளும் கஷ்டங்களும் நிறைந்த காட்டிற்குத் தன்னுடன் வந்த சீதையை இராவணன் சிறையில் கொண்டுபோய் வைக்கும்படி விட்டு விட்டுத் தவித்தானே அந்த இராமன். அவன் ஓர்

அரசிளங்குமரன் அல்லவா ? க்ஷத்திரியன் அல்லவா? நீர் சொன்ன உயர்ந்த பரம்பரையான 'சூரிய குல திலகன்' என்று சொல்லப்பட்டவன் அல்லவா ? அது போகட்டும்.

**துகில் உரியவிட்டு விழித்ததார் ? :** —ஆயிரக்கணக்கான ஆடவர்கள் நிறைந்த சபையில் தங்களுடைய மனைவியான திரௌபதையை விரோதிகள் மானபங்கம் செய்து, துகிலுரிய விட்டுவிட்டு, அதைப் பார்த்துக்கொண்டு வெட்கமில்லாமல் விழித்துக் கொண்டிருந்தார்களே அந்தப் பாண்டவர்கள், அவர்களும் அரசர்கள் அல்லவா ? க்ஷத்திரியர்கள் அல்லவா? நீர் சொன்ன உயர்ந்த குலமாகிய சந்திர வம்ச பரம்பரையைச் .சேர்ந்தவர்கள் அல்லவா ? ஆதலால்,

**உற்ற தாரமும் வேண்டுமென்று இனிமன்னர் பெண் கொளல் ஒக்குமோ ?**—இனிமேல் இந்த அரசர்கள் தங்களுக்கு மனைவியென்று கலியாணம் செய்து கொள்ள ஒரு பெண்ணைக் கேட்கக்கூட யோக்யதை உடையவர்களாவார்களா ?

**உமியடா மணம் என்ற வாய்** — எங்கள் பெண்ணுக்கும் உங்கள் இளவரசனுக்கும் 'மணம்' என்று சொன்ன அந்த வார்த்தைகூட உன் வாயிலிருக்கக்கூடாது. துப்பு கீழே, அந்த 'மணம்' என்ற சொல்லை.

**கிழித்து ஓலை காற்றில் உருட்டடா**— மண ஓலை என்று கொண்டுவந்திருக்கும் அந்தப் பனையோலையைக் கிழித்து—நீளத்தில் நடுவிலுள்ள நரம்பை நீக்கி இரண்டாகக் கிழித்து-வட்டமாக வளைத்துக் கட்டிச்



சிறுவர்கள் காற்றில் உருட்டிவிட்டு விளையாடுவது போல - காற்றில் - உருட்டு. எங்களை யாரென்று எண்ணிக்கொண்டு இப்படி இலேசாகப் பெண் கேட்க வந்துவிட்டீர்கள்? நாங்கள் யார் தெரியுமா? உங்கள் அரசுக்கு அடங்கிய வெறும் சிற்றரசு என்று மட்டும் எண்ணிவிட வேண்டாம்.

**வெற்றியாகிய முத்தி தந்திடும் வெங்கை மாநகர் வேடர்யாம்**—வெறும் ஆயுத பலத்தால் அடைகின்ற அற்ப வெற்றியாகிய உங்கள் அரசியல்வெற்றியைப் போல் அல்லாமல் ஞான பலத்தால் கிடைக்கும் உண்மையான வெற்றியாகிய முத்தியைத் தரக் கூடிய முருகக் கடவுள் திருக்கோயில் கொண்டிருக்கிற திருவேங்கை க்ஷேத்திரத்தைச் சேர்ந்த வேடர்களாக்கும் நாங்கள்—குமரக் கடவுளின் அடியார்கள். நாங்கள் என்ன செய்தோம் தெரியுமா?

**விமலரானவர் எமையடுத்து இனிது எங்கள் எச்சில் மிசைந்த பின்** — விமலராகிய பரமசிவன் எங்களிடத்தில் வந்து நெடுநாள் தங்கியிருந்து, எங்கள் குலத்தவராகிய கண்ணப்ப (நாயனா)ரின் எச்சிலை வெகு இன்பமான நைவேத்தியமாக உண்டுவந்த பிறகு, அதற்காக,

**பெற்ற வேலன் தனக்கு**—அந்தப் பரமசிவன் பெற்ற வேலனாகிய குமரக் கடவுளுக்கு,

**நாம் ஒரு பெண் வளர்ப்பினில் ஈந்தனம்**—நாங்கள் ஒரு பெண்ணைக் கொடுத்தோம். அதுவும் எந்தப் பெண்ணைக் கொடுத்தோம் தெரியுமா? யாருடைய குழந்தையோ, எந்த ஜாதியைச் சேர்ந்ததோ

என்றுகூடத் தெரியாமல், காட்டில் அநாதையாகக் கிடந்து நாங்கள் எடுத்துப் பாதுகாத்த வளர்ப்புப் பெண்ணாகிய வள்ளியைத்தான் கொடுத்தோம்.

**பெற்ற பெண்ணைக் கொடுப்போமோ இதென் பேய் பிடித்திடும் தூதரே** — அந்தப் பரமசிவனே வலிய வந்து எங்களுடைய எச்சிலைத் தின்றுகொண்டிருந்ததற்காக, அவன் பெற்ற வேலனுக்கு — எங்கள் குலதெய்வமாகிய வேலனுக்கு — நாங்கள் ஒரு வளர்ப்புப் பெண்ணைத்தான் கொடுத்தோம் என்றால், உங்களுடைய இளவரசனுக்கு நாங்கள் பெற்ற பெண்ணைக் கொடுத்துவிடுவோமா? இதென்ன பேய் பிடித்தவன் சொல்லுகின்ற பேச்சாக இருக்கிறது! ஓய் தூதரே! போய் வாரும்."

இந்தப் பாட்டில் வெறும் சில புராணக் கதைகளைச் சேர்த்துச் சொல்லுகின்ற மாதிரியில் ஒரு தனிப்பட்ட இலக்கியச்சுவை உண்டாகின்றதல்லவா? இதுவும் 'இலக்கிய இன்பம்.'

இப்படித் துண்டுதுண்டாகப் பல நூல்களில் நாம் பார்க்கிற இலக்கியச் சுவைகள் ஒருபுறம் இருக்க, பெரிய காவியங்களில் உபமான உபமேயச் சிறப்புகளிலும், கற்பனைகளின் மேன்மையிலும், ஒரு குறிப்பிட்ட கருத்தை ஒரு தரம் சொன்னபின், அதற்குச் சம்பந்தமே இல்லாத பல்வேறு விஷயங்களைப் பாடிவிட்டு, மீண்டும் அந்தக் கருத்தையே குறிப்பிடவேண்டிய சமயம் வருகிற போதெல்லாம், முன்சொன்ன தொடர்பு விடாமல் பதங்களைக் கையாளுகின்ற திறமையிலும், 'இலக்கிய இன்பம்' பயக்கவென்றே அநேக நயங்களைக் கவிஞர்கள் அமைப்பதுண்டு. அப்படிப்பட்ட பல வித கவிநயங்களுள் ஒரு குறிப்பிட்ட உபமானத்தால் ஒரு குறிப்பிட்ட கருத்தைக் கருதி வைத்து, அந்த உபமானத்தையும் கருத்தையும் பின்னால் வருகின்ற பல இடங்களிலும் வியக்கத்தக்க விதமாகத் தொடர்ந்து பாடுகின்ற ஒரு கலைத்திறத்தை எடுத்துக்காட்ட வேண்டுமென்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம். சிற்சில பாட்டுகளை மட்டும் இயற்றி, ஒரு குறிப்பிட்ட கருத்தைத் தொடர்ந்து பாடிவிடுவது சுலபம். ஆனால், நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் கவிகளைப் பாடி, அவற்றில் ஒரு தரம் சொன்ன உபமானத்தின் தொடர்பையோ அல்லது அதற்குள்ள வேறு சம்பந்தத்தையோ ஆயிரக்கணக்கான பாட்டுகளுக்கு அப்பாலும் விட்டுவிடாமல் அமைக்கின்ற கலைத்திறம் மிகவும் அபூர்வமான 'இலக்கிய இன்பம்' பயப்பதாகும். அதில் வெறும் ஞாபகசக்திப் பெருமை மட்டும் அல்லாமல் கலையழகும் கலந்திருக்கக் காணும் போது அந்த 'இலக்கிய இன்பம்' அதிகப்படுகிறது.

அப்படிப்பட்ட இலக்கியச் சுவையை அநுபவிப்பதற்கு, அந்தக் காவியத்தில் பல இடங்களில் அங்கங்கே கவிஞன் அமைத்திருக்கிற அழகுகளை ஆராய்ந்து படிக்கும் ஆர்வம் வேண்டும். ஆர்வம் இருந்தால் மட்டும் போதாது; அவகாசமும் கிடைக்க வேண்டும். சாதாரணமாகப் படிப்பதற்கு வேண்டிய அவகாசம் அதிகமாக உள்ளவர்களிலும், கவிஞன் தன் இலக்கியத்தில் வேறு இடங்களில் வேண்டுமென்றே அமைத்திருக்கிற சுவைகளைக் கண்டறியும் நோக்கத்தோடு

தேடிப் பார்த்துப் படிக்கிறவர்கள் மிகவும் சிலராகவே இருப்பார்கள். அந்தச் சிலருங்கூட அவர்களுடைய ஆராய்ச்சியின் அநுபவத்தைச் சேர்த்துச் சொல்லி, ஆராய்ச்சிக்கு அவகாசம் இல்லாத பிறருக்கும் பயன் தரக் கூடிய முயற்சிகள் எதையும் செய்வதில்லை. சிற்சிலர் தமது பிரசங்கங்களில் அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்வது உண்டு; என்றாலும் எழுத்தாக எதையும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகையினால், ஒரு காவியத்தில் அங்கங்கே பல இடங்களில் பரவிக்கிடக்கும் அநேக பாடல்களில் அமைக்கப்பட்டிருக்கிற தொடர்பு களில் மிகவும் சுவைதரக்கூடிய 'இலக்கிய இன்பம்' இருப்பதைச் சாதாரண வாசகர்கள் அறிவது சாத்திய மல்ல. ஆனால், அப்படிப்பட்ட பாடல்களைச் சேர்த்துக் காட்டி, அவற்றிலுள்ள பொருத்தங்களைக் கூறி, அந்தப் பொருத்தங்களில் புலப்படுகின்ற கவித்திறத்தின் கலை யழகைக் காட்டினால் எல்லோரும் அந்த இலக்கிய இன்பத்தை அநுபவிக்க முடியும்.

நாம் சொல்லப்போகிற பாடல்களை ஏற்கனவே சாதாரண முறையில் கதைப்போக்கில் பல முறை படித் தவர்களும் இருப்பார்கள். அந்தப் பாடல்களில் உள்ள பொருத்தங்களை இப்போது நாம் எடுத்துக் காட்டும் போது, அவர்கள் இதுவரையினும் அப்பாட்டுகளில் அநுபவித்தறியாத இன்பத்தை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

அப்படி ஒரு காவியத்தில் வெவ்வேறு பகுதிகளில் இருக்கிற பல பாடல்களைச் சேர்த்துப் பார்த்து,



அதனால் அடையக்கூடிய 'இலக்கிய இன்பத்தை' எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் கருத்து.

கம்பராமாயணத்திலே ..................

கம்பராமாயணம் என்ற உடனேயே, 'அப்பாடா! திருப்பித் திருப்பி இந்தக் கம்பராமாயணந்தானா கிடைத்தது? அதைச் சொல்லத்தானா இவ்வளவு முகவுரை முயற்சிகளும்?' என்ற சலிப்புக்கூட சிலருக் காவது உண்டாகலாம். அதுவும் அரசியல் மனஸ்தாபங் களையும் சமூக சச்சரவுகளையும் எண்ணிக்கொண்டு, கம்பராமாயணத்தை வேண்டுமென்றே குறைத்துப் பேசு கின்ற இந்தத் தருணத்தில், சில பேராவது அப்படிச் சலித்துக்கொள்வதை சகஜமாக எதிர்பார்க்கலாம். அவர் களுங்கூட அந்தத் தாபங்களைத் தள்ளிவைத்துவிட்டு நான் எடுத்துக்காட்டப் போகிற 'இலக்கிய இன்பத்தை' மட்டும் ரசித்து இன்புற வேண்டும்.

கம்பராமாயணம் ஓர் இலக்கிய சமுத்திரம். சப்த சாகரங்களும் ஒன்றாகச் சேர்ந்தது போன்ற ஆழமுள்ளது. சமுத்திரத்தால் பல பேர் பல விதமான பயன்களை அடை கிறார்கள். சிலர் அதன் விஸ்தாரமான நீர்ப்பரப்பை வியந்து பார்த்து மகிழ்கிறார்கள். சிலர் அதில் புரண்டு புரண்டு வரும் அலைகளைப் பார்க்க ஆசை கொள்ளு கின்றார்கள். பலர் அதன் உப்பங்காற்று உடல் நலத்துக்கு மிகவும் உகந்ததென்று நாடுகின்றார்கள். இன்னும் பலர் அந்தக் கடலின் காம்பீரியத்தையும், கடற்கரையின் ஏகாந்தத்தையும் அனுபவித்து ஆனந்திக் கிறார்கள். பலர் படகுகளிற் சென்று மீன் பிடிக்க வலை பரப்புகின்றார்கள். ஆராய்ச்சிக்காரர்கள் சமுத்திரத்தில்

என்னென்ன பொருள்கள் இருக்கின்றன, எத்தனை ஜீவராசிகள் இருக்கின்றன என்று மூழ்கிப் பார்க்க முயற்சி செய்கிறார்கள். பலர் பவளம் அடைகிறார்கள். சிலர் விலையிடமுடியாத இன்னும் பல்வேறு பொருள் களை அடைகிறார்கள். சங்குகளுக்காகச் சமுத்திரத்தை நாடுகின்றவர் அநேகர். எண்ணிறைந்த மக்கள் அதில் முழுகிக் குளித்து நீந்தி விளையாடுகிறார்கள்.

இப்படியாகப் பல பேர் சமுத்திரத்தில் பல நன்மை களையே பார்க்கிறபோது, அந்தச் சமுத்திரத்திலுள்ள பயங்கரமான சில விபரீதப் பிராணிகளை மட்டும் பார்த்து விட்டுப் பயந்துபோய், சமுத்திரம் என்றால் சங்கடமாக நினைக்கிற வேறு சிலரும் இருக்கத்தான் இருப்பார்கள். சமுத்திரத்திலிருந்து நல்ல பொருள்களைக் கண்டவர்கள் எல்லோரும் அதை நன்றியோடுதான் எண்ணுவார்கள். உருப்படி தெரியாத விபரீதப் பொருள்களை மட்டும் பார்த்துவிட்டு வெருண்டவர்கள் வெறுப்புத்தான் காட்டு வார்கள்.

அப்படிப் போலவே, கவிதைக் கலையின் கடலாகிய கம்பராமாயணத்தில் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக அருமை பெருமைகளையே பல கோடித் தமிழர்கள் அனு பவித்து வந்திருக்க, சிலர் இப்போது அதற்குச் சிறுமை கற்பிக்க முயல்வதைக் கண்டு வருந்த வேண்டியதில்லை.

கம்பராமாயணம் தமிழுக்குத் தலைசிறந்த காவியம் என்பது மட்டும் அல்லாமல், இதற்கு இணையான கவிதை வேறு எந்த மொழியிலும் இல்லையென்பதே ஆய்ந்துணர்ந்த அறிவாளர்களின் தீர்ப்பு. வாழ்நாள் முழுவதும் கம்பராமாயணம் ஒன்றையே ஆராய்ச்சிக் கண்



கொண்டு படிப்பவர்களுங்கூட அதில் அமைந்துள்ள நயங்கள் அனைத்தையும் கண்டறிதல் அசாத்தியம்.

தமிழ் மொழிக்குத் தனிப்பெரும் செல்வமாகிய அந்தக் கம்பன் காவியத்தில் அடங்கியிருக்கிற எண் ணிறந்த இலக்கியச் சுவைகளில் ஒரே ஒரு கற்பனையை எடுத்துக்கொண்டு, அந்தக் கற்பனையில் கவிஞன் பிரயோகப்படுத்தியிருக்கிற ஓர் உபமானத்தை எவ்வளவு சிந்தனையோடு சித்திரித்திருக்கிறான் என்பதையும், அந்த உபமானத்தில் தான் கருதிய நோக்கத்தை அநேக ஆயிரம் பாட்டுகளுக்கு அப்பாலும் விடாது தொடர்ந் திருக்கிற விநோதத்தையும் எல்லோரும் அனுபவித்து ஆனந்திக்க வேண்டும்.

## 2. உடலும் உயிரும்

தசரதன் என்கிற உடலுக்கு இராமன் என்பது உயிராக இருந்தது. இராமன் என்ற உயிர் பிரிந்து போன உடனே தசரதன் என்ற உடல் பிணமாகி விடுகிறது. இவ்வளவே இதில் சொல்லப்போகிற விஷயம்.

உடலில் இருந்து உயிர் பிரிவதற்கு ஒரு காரணம் வேண்டும். போர்க்களத்தில் பகைவர்களால் கொல்லப் பட்டோ, அல்லது ஓர் அபாயத்திற்கு உள்ளாகியோ, அல்லது ஒரு நோய் வந்தோ இந்த மூன்றில் ஒரு காரணத்தினால்தான் மக்கள் மரணம் அடைய வேண்டும். கிழட்டுப்பருவம் வந்து இயற்கையாக இறக்கும்போது கூடக் கடைசியில் ஒரு நோய்தான் மரணத்துக்குக் காரணமாக வேண்டும். நெடுநாள் நோயில் படுத்துக் கிடக்காவிட்டாலும் சரீர சாஸ்திரப்படிக்கும் வைத்திய சாஸ்திரப்படிக்கும் மரணம் என்பது ஒரு நோயினால்தான் ஏற்பட வேண்டும். மனிதன் எப்படி இருந்தாலும் கடைசிக் காரணம் ஒரு நோய்தான் என்பது வைத்திய சாஸ்திரம்.

தசரதன் போர்க்களத்தில் மாளவில்லை. எதிர்பாராமல் சரீரத்துக்கு ஏற்பட்ட அபாயத்தினால் இறக்கவில்லை. பின் எப்படி இறந்தான் என்றால், ஒரு வியாதியினால்! அந்த வியாதி அவனுடைய உடலில் உற்பத்தியானதல்ல. விஷம் தீண்டியதைப் போல வெளியேயிருந்து அவ



னுடைய தேகத்துக்குள் செலுத்தப்பட்டது. விஷம் தீண்டின ஒருவருக்கு உடனே பரிகாரம் தேடினால் அப்போதைக்கு மரணத்தைத் தடுத்துவிடலாம். ஆனாலும், அந்த விஷம் உள்ளே இருந்துகொண்டேயிருந்து கடைசியில் மரணத்துக்கும் அதுவே காரணமாகும் என்பது அனுபவம்.

விஷம் தீண்டினதைப் போல, திடீரென்று கைகேசி இராமன் காட்டிற்குப் போய்விட வேண்டுமென்று கேட்ட வரத்தினால் உண்டான வியாதியினால் இராமன் என்கிற தசரதனுடைய உயிர் பிரிந்துபோக, தசரதன் இறந்து விடுகிறான். இதுதான் கம்பன் சித்திரம். கைகேசி வாங்கிக்கொண்ட வரத்தைப் போர்க்களத்தில் பகைவன் வீசிய வேலாகவும், விஷம் தீண்டின ஆபத்தாகவும், உடலுக்குள் ஊசி போட்டுச் செலுத்தப்பட்ட வியாதியாகவும், கம்பன் கற்பித்துக் காட்டுகின்ற அழகே இக்கட்டுரை.

மேற்சொன்ன கருத்துகளை நினைவில் வைத்துக் கொண்டு கம்பன் பாட்டுகளைக் கவனிப்போம்.

**தசரதனாகிய உடல்**

"வயிரவாள் பூணணி
  மடங்கல் மொய்ம்பினான்
உயிரெலாம் தன்னுயிர்
  ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினில்
  சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர்
  உடலும் ஆயினான்."

இதற்கு, "உயர்ந்த வைர ஆபரணங்களை அணிந்த சிங்கத்தைப் போன்ற தசரதன், எல்லா உயிர்களையும் தன்னுயிரைப் போலவே பாதுகாத்து அரசபுரிந்ததனால் அவனுடைய ஆட்சியில் சண்டையென்பதே இல்லாமல் இருந்தது, அவன் இடம் விட்டு இடம் பெயர்ந்து இச்சைப்படி 'சென்று' வாழக்கூடிய ஊர்வன, நடப்பன, பறப்பன முதலிய பிராணிகளின் உயிர்களும், இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்ல முடியாமல் ஒரே இடத்தில் 'நின்று' வாழக்கூடிய செடி, கொடி, மரம் முதலிய தாவர உயிர்களும், ஆக, உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் பாதுகாப்புக்காகத் தங்கியிருக்கக்கூடிய ஒரே உடலாக இருந்தான்" என்பது பொருள். உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் அவனே உடலாக இருந்தான் என்று கருத்து.

இதில் 'சென்று நின்றவாழ் உயிரெலாம்' என்ற தொடர் மிகவும் கவனிக்க வேண்டியது. நாம் சொல்லப் புகுந்த விஷயத்துக்காக அல்ல; வெறும் அறிவுக்காகக் கவனிக்க வேண்டியது. செடி, கொடி, மரங்களும் ஜீவன்கள் என்பது நம்முடைய இந்திய நாட்டு முன்னோர்கள் அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே உபதேசித்த உண்மை. அந்த உண்மை சமீப காலம் வரைக்கும் சாதாரண ஜனங்களுக்கு 'செடி, கொடி, மரங்களை முரிக்கக்கூடாது. அது பாவம்' என்ற பாவ புண்ணியப் பேச்சில் மட்டுந்தான் அடங்கிக் கிடந்தது. பெயர் பெற்ற தாவர வர்க்க சாஸ்திர ஆராய்ச்சிக்காரரான காலஞ்சென்ற **ஜகதீச சந்திர போஸ்** என்னும் வங்காள அறிஞர், 'செடி, கொடிகளும் ஜீவன்கள்தாம்.



அவைகளுக்கும் உடல், எலும்பு, நரம்பு, தசை, இரத்தம் முதலியன உண்டு. அவைகளுக்கும் உணர்ச்சி உண்டு, துக்கம் உண்டு, மகிழ்ச்சி உண்டு, தூக்கம் உண்டு, விழிப்பு உண்டு' என்பவற்றையெல்லாம் சிறு சிறு நுண்ணிய எந்திரங்களைக்கொண்டு கண்ணுக்கு முன்னால் மெய்ப்பித்துக் காட்டிய பிறகுதான் ஐரோப்பியரும் அந்த உண்மைகளை அறிய ஆரம்பித்தார்கள். அதன் பிறகுதான் நாமும் நமது முன்னோர்கள் பல அபூர்வ உண்மைகளை அறிந்தவர்கள் என்று நினைத்துப் பார்க்க நேர்ந்தது. அதுவரையிலும் நாம் மேல்நாட்டு மோகங்களிலேயே மயங்கி, நம்முடைய மூதாதைகளை முட்டாள்கள் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தோம். அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்திய அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்ட, சாஸ்திர ஏடுகளில் மந்திரமாக மறைந்து கிடந்து, பாமர மக்களின் பழமொழிகளுக்குள் பதுங்கிக்கிடந்த இந்த அறிவை, சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கம்பன் தனது காவியத்தில் மேற்சொன்ன பாட்டில் வெகு அழகாக அமைத்திருக்கிறான்; ஏன், அழகாக அமைத்திருக்கிறான் என்று சொல்ல வேண்டும் என்றால், கம்பன் காலத்துக்கு ஆயிரம் வருஷங்களுக்குப் பின்னால் வந்த **ஜகதீச சந்திர போஸ்** தமிழே அறியாதவர்; கம்பராமாயணத்தின் பெயரைக்கூடக் காதால் கேட்டிருப்பாரோ என்னவோ! கம்பன் சொல்லுகின்ற 'சென்று நின்று வாழ் உயிர்கள்' என்ற தொடரை அப்படியே மொழி பெயர்த்துவைத்தது போலச் சொல்லுகிறார்.

அவர் 1925ஆம் வருஷத்தில் இலண்டன் மாநகரில் 'இந்தியா ஆபீஸில்' அநேக ஐரோப்பிய 'ஸயன்டிஸ்டஸ்' (இயற்கை சாஸ்திர நிபுணர்கள்) அடங்கிய சபையில் செடி, கொடி, மரங்களுக்கும் உயிர் உண்டு, உணர்ச்சி உண்டு என்ற உண்மைகளைக் கருவிகளைக்கொண்டு நிரூபித்துக் காட்டியபோது சொல்லுகிறார் :

"Friends! Men and other animals are only moving plants and trees; plants and trees are only stationary animals."

"நண்பர்களே! மனிதர்களும் பிராணிகளும் இடம் விட்டு இடத்துக்குச் 'சென்று' வாழுகின்ற செடி கொடிகள் தாம்; செடி, கொடி, மரங்கள் நடமாட்டம் இல்லாமல் ஒரே இடத்தில் 'நின்று' வாழக்கூடிய பிராணிகள் தாம்" என்பது பொருள்.

இந்த விஷயம் இந்தக் கட்டுரைக்குச் சற்றே புறம்பானதாகத் தோன்றினும் இதிலும் ஓர் இலக்கிய இன்பம் இருக்கிறது.

இனி, தசரதனைத் தொடர்வோம். மேற்சொன்ன பாட்டு இராமன் பிறப்பதற்கு முன்னால் தசரதனுடைய அரசாட்சியின் சிறப்பைக் காட்டுவதற்காக அவனுடைய இயல்பைக் குறித்தது.

தசரதன் எல்லா உயிர்களுக்கும் இருப்பிடமான உடலாக இருந்தான்; அதாவது, எல்லா உயிரையும் தன்னுயிர்போல எண்ணினான்.

மேலே சொல்லப்பட்ட பாட்டு இராமன் பிறப்பதற்கு முன்பு தசரதனைப்பற்றிச் சொல்லப்பட்டது.



இனி, உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் ஒரே உடலாக இருந்த தசரதன், இராமன் பிறந்த பிற்பாடு என்னவாயினான் என்பதைக் கவனிக்க வேண்டும். மேற்சொன்ன பாட்டுக்கு 126 பாட்டுகளுக்குப் பின்னால், இராமன் பிறந்ததனால் தசரதனுக்கு உண்டான மகிழ்ச்சியையும் மறுமலர்ச்சியையும் சொல்லுகின்ற கம்பன்,

"காவியும் ஒளிர்தரு
கமலமும் எனவே
ஓவிய எழிலுடை
ஒருவனை அலதோர்
ஆவியும் உடலமும்
இலதென அருளின்
மேவினன் உலகுடை
வேந்தர்தம் வேந்தன்"

என்று பாடுகின்றான்.

"சித்திரத்தில் வரையப்பட்ட நீலோற்பலமும், ஒளி மிகுந்த தாமரையும் போன்ற அழகுள்ளவனாகிய இராமனைத் தவிர, வேறு உடலோ உயிரோ இல்லாதவனாகி, உலகத்தை ஆளுகின்ற அரசர்கள் எல்லோருக்கும் அரசனான தசரதன் மகிழ்ச்சியில் முழுகினான்" என்பது பொருள்.

இந்தப் பாட்டினால், இதுவரைக்கும் உலகத்திலுள்ள பிற உயிர்களுக்கெல்லாம் தங்குமிடமாக இருந்த தசரதன், இராமன் பிறந்த பிறகு, அந்த இராமனே தன்னுடைய உடலும் உயிரும் என்று உணர்ச்சியில் மாறிவிடுகிறான். தசரதனுடைய உடலும் உயிரும் இராமனுடைய உடலிலும் உயிரிலும் கலந்துவிடுகின்றன.

அதனால், இராமன் தசரதனுக்கு உயிராகிவிடுகின்றான். அன்றியும், இதுவரையிலும் மற்ற உயிர்களுடைய க்ஷேமத்தை எந்நேரமும் சிந்தனை செய்துகொண்டு வந்த மன்னன், இராமன் பிறந்தபின் மற்ற உயிர்களையெல்லாம் உடனே மறந்துவிட்டவன் போலவும், இராமனைத் தவிர உலகத்தில் வேறு உயிரே இல்லையென்று எண்ணிவிட்டது போலவும், இராமனுடைய க்ஷேமம் ஒன்றையே சிந்திக்க வேண்டியவன் போலவும் மாறிவிடுகின்றான்.

இந்தப் பாடலில் இராமனே தசரதனுடைய உயிரும் உடலும் உணர்ச்சியும் ஆகிவிடுகின்றான்.

மிகுந்த பிரியத்தைக் காட்டுவதற்கான இடங்களிலெல்லாம் யாரும் சகஜமாக 'உயிர் போன்றவன், உயிர் போன்றவன்' என்றுதான் சொல்லுவார்கள். 'அதிகப் பிரியம்' என்பதைத் தவிர வேறு பொருள் அதற்கு இருப்பதற்கில்லை. ஆனால், கம்பன் அந்த உபமானத்தை இந்த இடத்தில் கையாண்டு இருக்கிற விதம் மிகவும் அசாதாரணமான இலக்கிய அழகுடையது. கம்பனுடைய எல்லா ஒப்புவமைகளும் உயர்ந்த கருத்துகள் அமைந்தனவாகத்தான் இருக்கும். அவற்றுள் இந்த 'உயிர்' என்ற உபமானத்தை எவ்வளவு சிந்தனையோடும், கற்பனையோடும் திட்டம் போட்ட ஞாபகத்தோடும் அமைத்திருக்கிறான் என்பது பின்னால் வரும் விஷயங்களிலிருந்து விளங்கும். தசரதனுக்கும் இராமனுக்கும் தொடர்பு வருகின்ற இடங்களில் எல்லாம் இந்த 'உயிர்' என்ற சொல்லையும் அதன் பொருளையும்



எப்படி இணைத்திருக்கிறான் என்று காட்டுவதே இந்த 'இலக்கிய இன்பத்'தின் நோக்கம்.

இராமன் தசரதனுக்கு 'உயிர் போன்றவன்' என்று, தசரதனுக்கு இராமனிடத்திலிருந்த அத்தியந்தப் பிரேமையைக் காட்டுவதற்காக மட்டும் சொன்னது போன்று தோற்றுகின்ற இந்த உபமானத்தை, உபமேயத்தோடு கலந்துவிடச் செய்கிறான் கம்பன். அதனால் இராமன் தசரதனுக்கு 'உயிர் போன்றவன்' அல்ல; ஆனால், இராமன் தசரதனுடைய 'உயிராகவே' இருந்தான் என்பதை அணியணியாகச் சொல்லி, இராமனுடைய பிரிவு, தசரதனுடைய உயிரின் பிரிவாகக் கம்பன் முடிக்கிற விதம், கவிதா தெய்வமே களிக்க வேண்டிய ஓர் அற்புதக்கலை. அந்தக் கலை அழகை நாமும் கண்டு களிப்பதற்கு, கம்பன் கலைக்கோட்டையான காவியத்தில் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்ற சில பாட்டுகளை எடுத்து வரிசைக்கிரமத்தில் வைத்துவிட்டால் போதும்; கம்பராமாயணத்தில் அதிகப் பரிச்சயம் இல்லாதவர்களுங்கூடப் பயனடைந்து பரவசப் படுவார்கள்.

இதுவரையிலும் எடுத்துக்காட்டப்பட்ட இரண்டு பாட்டுகளில் முதற்பாட்டில், உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் தசரதன் உயிராக இருக்கிறான்.

இரண்டாவது பாட்டில், தசரதனாகிய அந்த உடலுக்கு இராமன் ஒருவனே உயிராகிவிடுகிறான்.

இனி, அந்தத் தசரதனாகிய 'உடலுக்கும்' இராமன் என்கிற 'உயிருக்கும்' உள்ள உறவைக் கம்பன் எப்படித் தொடர்கின்றான் என்பதைக் கவனிப்போம்.

மேலே சொல்லப்பட்ட இரண்டாவது பாட்டுக்கு இருபத்திரண்டு பாட்டுகளுக்குப் பின், விசுவாமித்திர முனிவர் தம்முடைய வேள்வியைக் காப்பதற்குத் துணையாக இராமனைக் கூட்டிக்கொண்டு போகத் தசரதனுடைய சபைக்கு வந்து, இராமனைத் தம்முடன் அனுப்பும்படி, தாம் வந்த காரியத்தைச் சொல்லும்போது,

"தருவனத்துள் யானியற்றும் தவவேள்விக்
கிடையூறாத் தவம்செய் வோர்கள்
வெருவரசசென்று அடைகாம வெகுள்யென
நிருதர் இடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்திஎன நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதிஎன உயிரிரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்"

என்கிறார்.

இதன் அர்த்தம் "மரங்கள் அடர்ந்த வனத்தில் நான் செய்யும் தவத்துக்கும் யாகத்துக்கும் இடையூறாகத் தவசிகள் பயப்பட வேண்டிய காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களைப்போல (தாடகை, சுபாகு, மாரீசன் என்னும் மூன்று) அரக்கர்கள் வந்து என் தவத்தையும் யாகத்தையும் கெடுத்துவிட வருகிறார்கள். அப்படி அவர்கள் கெடுப்பதைத் தடுத்து, யுத்தம் செய்து என் வேள்வியைக் காப்பதற்காக உன் புத்திரர்கள் நால்வருக்குள் கருமையான அழகனாகிய இராமன் ஒருவனை மட்டும் எனக்குத் துணையாகத் தரவேண்டும் என்று (விசுவாமித்திரன்) உயிரைக் கேட்கின்ற கொடிய எமனைப் போல் வருத்தமூட்டும்படி சொன்னான்" என்பது.



இதில், விசுவாமித்திரன் இராமனைத் தரும்படி தசரதனைக் கேட்டது, எமனானவன் ஒரு மனிதனுக்கு முன்னால் நின்று, 'உன் உயிரைக் கொண்டுபோக வந்திருக்கிறேன்; கொடு' என்று சொன்னால் எப்படியிருக்குமோ, அப்படிக் கேட்டான் என்று சொல்லப்படுகிறது. அதனால், இராமனைக் கேட்பது தசரதனுடைய உயிரைக் கேட்பதுதான் என்று தெரிகின்றது. எனவே, இந்தப் பாட்டில், இராமன்தான் தசரதனுடைய உயிர் என்பதை உறுதிப்படுத்துகிறான் கம்பன்.

அந்தக் கருத்தை இன்னும் உறுதிப்படுத்த இதற்கு அடுத்த பாட்டில்,

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தில் எறிவேல பாய்ந்த
புண்ணில்ஆம் பெரும்புழையுள் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்
உள்நிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின்று ஊச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉழந்தான்
கடும்துயரம் கால வேலான்."

இதன் பொருள், 'அளவிட முடியாத தவ வலிமையுள்ளவரான விசுவாமித்திரர் சொன்ன சொல், நடு மார்பில் வேலால் குத்தி உண்டான புண்ணாக இருக்கிற பெரிய துவாரத்தில் கொள்ளிக்கட்டையைச் செருகியது போல் (தசரதனுடைய) காதில் நுழைந்தவுடனே, அவனுடைய மனத்தில் எற்கெனவே இருந்து கொண்டிருந்த துயரமானது பிடித்துத் தள்ள, அவனுடைய உயிரானது வெளியே போய்விடவும் விருப்பமில்லாமல் உள்ளே தங்கவும் முடியாமல், உள்ளுக்கும் வெளிக்குமாக

ஊசலாட, கண்ணில்லாத குருடன் கண்ணைப் பெற்று மறுபடியும் அதை இழந்துவிட நேர்ந்தால் எப்படி யிருக்குமோ அப்படிக் கடுமையான துயரத்தை அடைந் தான், பகைவர்களுக்கு எமனைப் போன்ற வேலாயு தத்தையுடைய தசரதன்' என்பது.

இந்தப்பாட்டிலுள்ள உபமானச் சிறப்புகளைச் சிறிது உற்று நோக்க வேண்டும். தசரதனுடைய மனத்தில் முன்னமேயே ஒரு வேல் பட்ட புண் இருந்ததாம். அது புழையாகப் புரையோடி இருந்ததாம். அந்தப் புண்ணில் நெருப்பைச் செருகியது போல இருந்ததாம், 'கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' என்று விசுவாமித்திரன் சொன்ன சொல். இவற்றுள் 'எறிவேல்' என்பது, தசரதன் முன் ஒரு காலத்தில், யானையே என்று தவறாக எண்ணி, அம்பு விட்டுக் கொன்றுவிட்ட மகனை இழந்த ஒரு முனிவன் இட்ட சாபம். அந்தச் சாபம் என்னவென்றால், 'என்னைப் போல் நீயும் உன் மகனைப் பிரிந்து அப்புத்திர சோகத்தினால் இறப்பாய்' என்பது. இராமன் பிறப் பதற்கு வெகு காலத்துக்கு முன்னால் இடப்பட்ட இந்தச் சாபம், இராமன் பிறந்தபின் புண்ணாகிப் புரையோடிய புழையாக இருந்துகொண்டிருந்தது. விசுவாமித்திரர் இராமனைத் தன்னுடன் அனுப்பக் கேட்டபோது, இராமனைப் பிரிந்து இறந்து போகும் காலந்தான் வந்து விட்டதோ என்று தசரதன் வருந்திய வருத்தம், அந்தப் புண்ணில் நெருப்பைச் செருகினதுபோல் இருந்தது. இருந்தாலும், இராமனைக் கேட்ட விசுவாமித்திரரோ 'எண்ணிலா அருந்தவத்தோன்.' அதனால் அவனிடம் இல்லையென்று சொல்லிவிட இயலாமல், இராமனை



அனுப்புவதா வேண்டாவா என்பது, உயிர் போவதா இருப்பதா என்று 'ஆருயிர் நின்று ஊசலாட' வேண்டிய தாகிவிட்டது.

இந்தப் பாட்டில் இராமன் போவது தசரதனுடைய உயிர் போவதற்குச் சமானமாகக் கற்பிக்கப்பட்டிருப் பதனால் இராமன் தசரதனுடைய உயிராகவே இருந்த தாகத் தொடங்கிய உபமானத்தைக் கம்பன் இங்கேயும் தொடர்ந்து காட்டுகிறான்.

இந்தப் பாட்டுக்கு எட்டுப் பாட்டுகளுக்குப்பின்னால், இராமனும் லக்ஷ்மணனும் விசுவாமித்திரரோடு அயோத்தியை விட்டுப் போவதைக் கம்பன் எப்படிச் சொல்லுகிறான் என்பதைப் பாருங்கள்.

விசுவாமித்திரருக்கு இராமனைக் கொடுக்கத் தயங்கி, தசரதன் யாகத்தைக் காக்கத் தானே வருவதாகச் சொன்னான். அதனால் விசுவாமித்திரர் கோபத்தோடு சபையை விட்டுப் போக எழுந்தார். அதைக் கண்ட தசரதனுடைய குலகுருவாகிய வசிஷ்டர், இராமனை விசுவாமித்திரருடன் அனுப்புவதால் நன்மை உண்டென் பதை உணர்ந்து, விசுவாமித்திரரைச் சமாதானப்படுத்தி இராமனை அவருடன் அனுப்பும்படி தசரதனுக்குத் தெரி விக்கிறார். உடனே தசரதன் இராமனைச் சபைக்கு வர வழைக்கிறான். இராமன் வந்தான் என்றால் லக்ஷ்மணனும் வந்தான் என்று சொல்லவேண்டியதில்லை. இராமனையும் லக்ஷ்மணனையும் தசரதன் விசுவாமித்திரரிடம் ஒப்படைக் கிறான். குலகுருவின் வார்த்தைக்கு இணங்கி, இராமனைத் தசரதன் விசுவாமித்திரரிடம் ஒப்படைத்தாலும் இராமன் பிரிவது மன்னனுக்குத் தன் உயிர்போவது போலத்தான்

உணர்ச்சியில் இருந்தது என்பதைக்கம்பன் குறிக்கிறான். அந்தப் பாட்டைப் பாருங்கள் :

"அன்ன தம்பியும்
தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர்
வழிக்கொண் டால்என
சொன்ன மாதவற்
றொடர்ந்த சாயைபோல்
பொன்னின் மாநகர்ப்
புரிசை நீங்கினார்."

இதன் அர்த்தம், "இராமனும் அதைப் போலவே அவனுடைய தம்பியாகிய லக்ஷ்மணனும் விசுவாமித்திர முனிவரை, அவருடைய நிழல்போலப் பின் தொடர்ந்து அயோத்தி மாநகரத்தின் மதில்களைக் கடந்து சென்றார்கள். அப்படி அவர்கள் போனது எப்படியிருந்தது என்றால், தசரத மன்னனுடைய 'உயிரே' அவனை விட்டுப் போனதைப்போல் இருந்தது" என்பது.

இந்தப் பாட்டினால் கம்பன் தசரதனை உயிர்போய் விட்ட பிணம் போலச் செய்துவிட்டான். இது மிகவும் அமங்கலமாகத்தான் இருக்கிறது. ஆனால், இந்த அசுப மான உபமானத்தால், 'தசரதனுக்கு உயிர் போன்ற இராமன் போய்விட்டான்' என்று இராமனுடைய சிறப்பைச் சொல்லுவதற்காக மட்டும் சொன்னதல்ல. உண்மையிலேயே தசரதன் இராமன் போனபின் முற்றிலும் செயல் அற்றவனாகி உயிரில்லாதவனுக்குச் சமானமாகி விட்டது போலவே, கம்பன் கதையை நடத்துகின்ற கவித்திறம் அற்புதத்திலும் அற்புதம்.



இராமன் தசரதனை விட்டுப் போனபின் தசரதனைப் பற்றிய பேச்சேயில்லை. விசுவாமித்திரருடன் சென்ற இராமன், தாடகையைக் கொன்று, வேள்வியைக் காத்து, அரக்கர்களை வென்று, அகலிகைக்குச் சாப விமோசனம் அருளி, மிதிலைக்குச் சென்று, வில்லை வளைத்து முரித்தபின், சீதா கல்யாணத்துக்காகத் தசரதனையும் அழைக்க ஜனகனிடத்திலிருந்து அயோத்திக்குத் தூதர்கள் ஓலை கொண்டுவந்து இராமனைப்பற்றிச் சொன்ன பிறகுதான் பிணம் போல் இருந்த தசரதனுக்குச் சிறிது பிரக்ஞை வந்தது போல் கதை நடக்கிறது. அதன் பின் தசரதன் மிதிலைக்குப் புறப்படுவதுதான், இராமனைப் பிரிந்த பிறகு தசரதனுடைய அசைவு. தசரதன் மிதிலைக்குப் புறப்படுகிற வைபவங்களையெல்லாம் கம்பன் வெகு அழகாக வர்ணிக்கிறான் என்றாலும், அவற்றில் தசரதன், இராமன் பிரிவதற்கு முன்னாலிருந்த ஜீவகளை இல்லாதவனாகவேதான் இருந்தது போலக் கம்பன் காட்டுகிறான். அயோத்தியை விட்டு இடையே பல களியாட்டங்கள் நடந்தும் - மிதிலைக்குப் பக்கமாக வரும்போது தன்னை எதிர் கொள்ள வந்த ஜனகனுடன் வந்த இராமனைச் சந்திக்கிறவரைக்கும் தசரதன் உயிரில்லாமைக்குச் சமானமாகவே நடத்தப்படுகிறான் ; இராமனைச் சந்தித்த பிறகுதான் மறுபடியும் தசரதனுக்கு உயிர் வருகின்றது.

அதைக் கம்பன் எவ்வளவு அதிசயிக்கத் தகுந்ததாக அமைத்திருக்கின்றான் என்பதை அறிந்து அனுபவிக்கும் போதுதான் நாம் இலக்கியத்தின் இன்பத்தை அடைகின்றோம்.

அந்த அதிசயத்தைக் கம்பன் அமைக்காமல் விட்டிருப்பானாகில் முன்னே 'விசுவாமித்திரனைப் பின் பற்றி இராமன் போனது தசரதனுடைய உயிர் போய் விட்டது போல் இருந்தது' என்ற அமங்கலம் அகலாமல் தொடர்ந்திருக்கும்; உயிர்போன தசரதன்தான் சீதா கலியாணத்தில் கலந்துகொண்டிருப்பான்.

அந்த அமங்கலத்தை எப்படிக் கம்பன் மறந்து விடாமல் மாற்றுகிறான் என்பதைப் பாருங்கள். ஆம், மறந்துவிடாமல் கையடைப் படலத்தில்,

> "அன்ன தம்பியும்
> தானும் ஐயனும்
> மன்னன் இன்னுயிர்
> வழிக்கொண் டால்எனச்
> சொன்ன மாதவற்
> றொடர்ந்த சாயைபோல்
> பொன்னின் மாநகர்ப்
> புரிசை நீங்கினார்."

என்ற பாட்டுக்குப்பின் (1) தாடகை வதைப்படலம் (2) வேள்விப் படலம் (3) அகலிகைப் படலம் (4) மிதிலைக் காட்சிப் படலம் (5) குலமுறை கிளத்துப் படலம் (6) எழுச்சிப் படலம் (7) வரைக்காட்சிப் படலம் (8) பூக்கொய் படலம் (9) நீர் விளையாட்டுப் படலம் (10) உண்டாட்டுப் படலம் என்ற பத்துப் படலங் களைப் பாடிய பிற்பாடு, பதினோராவது படலமாகிய 'எதிர்கோள்' படலத்தின் இருபத்திரண்டாவது பாட்டில் அந்த அமங்கலத்தை அகற்றிவிட்டு, தசரதனை உயிர் வந்தவனாக்கி, விவாக மண்டபத்தில் வீற்றிருக்கத் தக்கவனாக்குகிறான்.



தசரதனை மீண்டும் உயிர் வந்தவனாகச் செய்கின்ற அந்தப் பாடலைச் சொல்லுமுன்னால், தசரதனை முற்றிலும் செயலற்றவனாக்கி, அயோத்தியிலிருந்து மிதிலைக்கு வருகிறவரைக்கும் இடையே நிகழ்ந்த எண்ணரிய இன்பகரமான விஷயங்கள் எதிலும் தசரத னுடைய மகிழ்ச்சியோ தொடர்போ இல்லாதபடி இயற்றி யிருக்கிற இலக்கியச் சிறப்பைச் சிறிது சிந்தித்துப் பார்ப்பது தகும்.

மேலே சொன்ன 'மன்னன் இன்னுயிர் வழிக்கொண் டால் என' என்ற பாட்டுக்கும், எதிர்கோள் படலத்தில் அந்த 'இன்னுயிர்' மீண்டும் வந்து மன்னனைச் சேர்ந்து விட்டதாகச் சொல்லுகிற பாட்டுக்கும் இடையே 790 பாடல்கள் இருக்கின்றன. இந்த 790 பாடல்களும் கதைக்குச் சம்பந்தமே இல்லாத வருணனைகளும் கற்பனைகளுமாகிய கவிதைக் கலையாகவே திகழ் கின்றன. இராமாயணத்தில் சீதா கலியாணத்துக்கு முன்னால்தான் சிங்கார ரஸத்தில் கவிச்சித்திரங்களைக் காட்ட அதிக இடம் இருக்கிறதை அறிந்து,கம்பன் அதை மிகவும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறான். சீதா கலியாணத்துக்குப் பிறகு பொதுமக்களின் சிங்கார நுகர்ச்சிகளைச் சித்திரிக்கப் போதுமான சந்தர்ப்பங்கள் பொருந்தவில்லை.

சீதா கலியாணத்துக்குப் பின் அயோத்திக்கு வருகிற வழியில் பரசுராமனோடு நடந்த சச்சரவினால் சந்தோஷத் திற்கு இடமில்லாமற் போய்விட்டது. அதன் பிறகு இராமனுக்கு 'முடிசூட்டிவிட்டுத் தசரதன் தவம் செய்யப் போவதற்கான ஆலோசனைகளில் அயோத்தியா

காண்டம் தொடங்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், கம்பன் எண்ணியபடி நாடக கதியில் கதையைக் கொண்டு போக அப்படிச் செய்வதுதான் அவனுடைய திட்டத்திற்கு ஒட்டியதாகும். இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யத் தீர்மானித்த பின் கைகேசியின் சூழ்வினை, இராமன் நகர் நீங்கி வனம்புகுதல், தசரதன் மரணம், பரதன் தாயாரை நிந்தித்துத் துறவு கொள்ளல், பாதுகையின் ஆட்சி, விராதன் வதம், சூர்ப்பணகை பங்கம், கரதூஷண மாரீச வதம், சீதா அபகரணம், அனுமான் சந்திப்பு, சுக்ரீவன் துயரம், சீதையின் ஆபரணங்களைக் கண்டு இராமன் துக்கித்தல், வாலி வதம், சுக்ரீவன் மறதி, அனுமான் சீதையைத் தேடல், லங்கா தகனம்-என்று வரிசையாகத் துன்பந்தரும் நிகழ்ச்சிகளாகவே இருப்பதனால் இங்கிதத் துக்கும் சிங்காரத்துக்கும் இடமேயில்லை.

பிறகு, சீதையைக் கண்டுவந்த அனுமான், இன்னும் ஒரு மாதந்தான் உயிரோடு இருப்பேன்; அதற்குள் என்னை மீட்காவிட்டால் இறந்து போவேன்" என்று பிராட்டி கண்டிப்பாகச் சொல்லிவிட்டதாகச் சொன்னதனால், உடனே சேனையைத் திரட்டிப் படை எடுக்க வேண்டிய அவசர காரியங்களைப் பார்க்க வேண்டியதாகிவிட்டது. அதன்பின் யுத்தம் இராவண சம்மாரம் வரை வேறு பேச்சுகளுக்கு வேலையில்லை. யுத்தம் முடிந்த உடன் சீதையின் அக்கினிப் பிரவேசம். அதன்பிறகு, பரதனுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியின் படி உடனே அயோத்திக்குப் போகவேண்டிய அவசரம். பரத்வாச ஆசிரமத்துக்கு வந்ததும் பதினான்கு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டதைக் கண்டு, பரதன் அக்கினிப் பிரவேசம் செய்துவிடுவானோ என்று அஞ்சி, அனுமானை முன்னால் அனுப்பி, பின்னால் இராமன் முதலானோர் வருவதை அறிவிக்கச் செய்த அவசரம்.



இப்படியாக நாடக முறையில் சொல்லுகின்ற கம்ப னுடைய கவிப்போக்கில் சீதாவிவாகத்துக்குப் பின்னால் வெறும் சிங்காரம், களியாட்டம், கற்பனை முதலியவை களில் பொழுதுபோக்க வாய்ப்பில்லை.

அதனால் தசரதன் சீதா கல்யாணத்துக்காக அயோத்தியை விட்டு மிதிலை வந்து சேருகிற வரைக்கும் கதைக்குச் சம்பந்தப்பட்ட வேறு நிகழ்ச்சி எதுவும் இல்லாததனால், அந்த வாய்ப்பைக் கலியாணத்துக்கு முன்னால் நடக்கும் களியாட்டங்களைப்போலச் சிங்காரக் கற்பனைகளைச் சித்திரிக்கிறான். அந்தச் சித்திரங்கள் தாம் இராமன் என்ற உயிர் தசரதன் என்ற உடலில் மீண்டும் வந்து சேர்ந்துவிட்டதாகச் சொல்லுகின்ற பாட்டுக்கும், முன்னால் 'தசரதனுடைய உயிர் அவனை விட்டுப் பிரிந்து விசுவாமித்திரரைப் பின்பற்றியது' என்று சொன்ன பாட்டுக்கும் இடையிலே உள்ள சுமார் எண்ணூறு பாட்டுகளும்.

எண்ணூறு பாட்டுகள் என்றால் அற்பமா, சொற் பமா? கதைக்குச் சம்பந்தமில்லாத இந்த எண்ணூறு பாட்டுகளையும் இயற்றும் முயற்சியினாலேயே 'தசரதன் உயிர் விசுவாமித்திரருடன் போய்விட்டதாகச் சொன்ன' விஷயத்தையே மற்றக் கவிஞர்கள் மறந்துவிட்டிருப் பார்கள். அப்படி மறந்து போயிருந்தாலும் அதை ஒரு குற்றமாகக் கூற முடியாது. ஆனால், கம்பன் மறந்தானா? மறந்திருந்தால் அவன் கம்பன் ஆவானா?

அந்தப் பாட்டைப் பாருங்கள்.

தசரதனை எதிர்கொள்ள ஜனகனும் மற்றவர்களும் வருகின்றார்கள். அவர்களோடு இராமனும் வந்தான். தசரதனை இராமன் அணுகினான், அவ்வளவுதான். அவன் எப்படி அணுகினான்?

"காவியும் குவளையும்
கடிகொள் காயாவும்ஒத்து
ஓவியம் சுவைகெடப்
பொலிவதோர் உருவொடே
தேவரும் தொழுகழல்
சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந்து
அரசன்மாடு அணுகினான்."

அடடா! என்ன அற்புதம்! எவ்வளவு ஞாபக சக்தி! எப்படிப்பட்ட கவித்திறம்!

இந்த இரண்டு பாட்டுகளையும் எடுத்து, இணைத்து, இடையிலே உள்ள 790 பாட்டுகளையும் எண்ணிப் பார்த்தால்தான் அந்த அற்புதக் கவிதா மேதையை அனுபவிக்க முடியும்.

இனி, இந்தக் கவியில் அடங்கியுள்ள சொற்களையும் கருத்துகளையும் கவனிப்போமானால் இலக்கியச் சுவை இன்னும் அதிகமாகும்.

இதன் பொருள், "நீலோற்பலப் பூவையும், குவளை மலரையும் காயாம் பூவையும் ஒத்து, சித்திரத்தையும் தோற்கடிக்கக்கூடியதான வடிவத்தோடு, தேவர்களும் தொழுது வணங்குகின்ற பாதங்களை உடையவனான சிறுவன் (இராமன்) முன்னே (உடலை விட்டுப்) பிரிந்து



போன உயிர் (மறுபடியும் அந்த உடலைச் சேர்ந்து கொள்ள) வந்ததென்ன அரசனை (தசரதனை) அடைந்தான்" என்பது.

இதில் 'இராமனாகிய உயிர் மீண்டும் வந்து தசரதனாகிய உடலில் சேர்ந்துகொண்டது' என்ற சுபஸ்வீகரண மங்கலம் இருப்பது மட்டும் அல்லாமல் அந்த உயிராகிய இராமனை வர்ணிக்கக் கம்பன் உபயோகித்திருக்கிற சொற்களிலும் முன்னைய ஒரு தொடர்ச்சி இருப்பது அதற்கு அதிகமான மெருகு தருகின்றது.

என்னவென்றால், ஆரம்பத்தில் 'இராமனே தசரதனுடைய உயிரும் உடலும் ஆகிவிட்டான்' என்று சொன்னபோது பயன்படுத்தின சொற்களையும், அந்த உயிர் பிரிந்து போய் மறுபடியும் தசரதனுக்கு உயிராக வந்து ஒப்புக்கொள்வதாகச் சொல்லுகின்ற இந்தப் பாட்டில் இருக்கிற சொற்களையும் இணைத்துப் பார்க்கவேண்டும்.

தசரதனுக்கு இராமன் உயிரான முதல் பாட்டு:

"காவியும் ஒளிர்தரு
கமலமும் எனவே
ஓவிய எழிலுடை
ஒருவனை அலதுஓர்
ஆவியும் உடலமும்
இலதென அருளின்
மேவினன் உலகுடை
வேந்தர்தம் வேந்தன்."

அதே உயிர் உடலைவிட்டுப் பிரிந்துபோய் மறுபடியும் வந்து கூடிவிட்டதாகக் கூறுகின்ற பாட்டு:

"காவியும் குவளையும்
கடிகொள் காயாவும் ஒத்து
ஓவியம் சுவைகெடப்
பொலிவதோர் உருவொடே

> தேவரும் தொழுகழல்
> சிறுவன்முன் பிரிவதோர்
> ஆவியந் தென்னவந்து
> அரசன்மாடு அணுகினான்."

இந்த இரண்டு பாட்டுகளிலும் 'காவி' என்பதும், 'ஓவியம்' என்பதும் பொதுச் சொற்களாகக் கவிஞன் எண்ணியே அமைத்தது போல் இருக்கின்றன. முதற் பாட்டில் 'காவி' என்ற மலரோடு கமலம் மட்டும் சேர்ந்தது. இரண்டாவது பாட்டில் 'காவி' யோடு குவளைப் பூவும், காயாம் பூவும் கலந்துவிட்டன. ஒரு மலர் அதிகமாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பூ மட்டும் அதிகமல்லாமல் 'ஓவியம்' என்ற உபமானமும் இரண்டாவது பாட்டில் அதிகமான சிறப்புப் பெறுகின்றது. என்னவெனில், முன் 'ஓவிய எழிலுடை ஒருவன்' என்று இராமன் உவமிக்கப்பட்டான். பின்னால், 'ஓவியம் சுவை கெடப் பொலிவதோர் உருவு' என்று முன்சொன்ன 'ஓவியம்' போன்ற அழகுக்கும் அதிகமாக 'ஓவியமும் கெட்டது' என்னும்படியான முன்னிலும் அதிகமான அழகு அமைக்கப்படுகிறது; ஏன் ?

வெறும் 'உயிரை'க்காட்டிலும் 'போய் வந்த உயிர் மிகவும் அருமையானது' என்னும் பொருத்தத்தைப் புலப்படுத்துகின்ற இதிலும் ஓர் இலக்கியச்சுவை இருக்கிறது.

'தசரதன் என்ற உடலுக்கு இராமன்தான் உயிர்' என்னும் கருத்தை இன்னும் எப்படியெல்லாம் கம்பன் விடாமல் தொடருகிறான் என்பதை நாமும் விட்டுவிடாமல் தொடர்வோம்.

இந்தப் பாடலுக்கு 232 பாடல்களுக்குப் பின்னால்— ஆம்; இருநூற்று முப்பத்திரண்டு பாட்டுகளுக்குப் பின்னால் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.



232 பாட்டுகளுக்குப் பின்னால், தசரதன் மிதிலையில் இருந்து தன்னுடைய மனைவிகள், குமாரர்கள், மருமக்கள், அயோத்தியிலிருந்து வந்திருந்த ஜனங்கள், பரிவாரங்கள் முதலான அனைவருடனும் அயோத்திக்குத் திரும்பி வரும் வழியில் பரசுராமன் சந்திக்கிறான். பரசுராமன் தன்னுடைய தந்தையை ஒரு க்ஷத்திரியன் கொன்றுவிட்டதற்காக 21 தலைமுறைக்கு க்ஷத்திரிய வம்சத்தையே கருவறுத்துவிடுவதாகக் கங்கணம் பூண்டவன். அதே கருத்தோடு க்ஷத்திரியனாகிய இராமனைப் போருக்கு அழைத்து வழிமறித்தான்.

பரசுராமனைக் கண்டதும் தசரதனுக்கு நடுக்கம் உண்டாகிவிட்டது. பரசுராமன் இராமனோடு போர் புரிய வந்திருப்பதாக அறைகூவி, "ஏ ராமா! மிதிலையிலிருந்த உளுத்துப்போன வில்லை வளைத்து முறித்துவிட்டோம் என்ற இறுமாப்புக்கொள்ள வேண்டாம். உன்னுடைய தோளாற்றலைப் பரிசோதிக்க ஆசைகொண்டு வந்திருக்கிறேன். உன்னோடு போர் புரிய வேண்டும் என்று என்னுடைய தோள்கள் தினவெடுக்கின்றன" என்றான்.

அதைக் கேட்ட தசரதன்,

> "அவன் அன்னது பகரும்
> அளவையின் மன்னவன் அயர்வான்
> புவனம் முழுவதும் வென்றொரு
> முனிவர்க்கருள் புரிவாய்

சிறுவனும் அயன் அரியும் அலர்
சிறுமானுடர் பொருளோ
இவனும் எனது உயிரும்
உனது அபயம் இனி என்றான்.''

''அவன் (பரசுராமன்) அப்படிச் சொன்னதும் தசரதன் அயர்ந்துபோய், 'உலகம் முழுவதையும் வென்று ஒரு முனிவருக்குத் தானமாகத் தந்துவிட்ட பரசுராமா! சிவனும் பிரம்மாவும் விஷ்ணுவுங்கூட உனக்குப் போரில் நிகராக மாட்டார்களே! அப்படியிருக்க அற்பமனிதராகிய நாங்கள் உனக்கு ஒரு பொருட்டா? (இவனோடு போர் தொடுக்கவேண்டாம்) இராமனும் என்னுடைய உயிரும் உனக்கு அபயம்'' என்பது பொருள்.

பின்னும் தசரதன் பரசுராமனைப் பலவாறு கெஞ்சிக் கேட்டுவிட்டு,

''சலத்தோடு இயைவிலன் என்மகன்
அனையான் உயிர்தபுமேல்
உலத்தோடு எதிர்தோளாய்எனது
உறவோடு உயிர்உகுவேன்
நிலத்தோடு உயர்கதிர் வான்உற
நெடியாய் உனது அடியேன்
குலத்தோடு அறமுடிவேல்இது
குறைகொண்டனன் என்றான்.''

''கல்லுக்குச் சமானமான தோள்களை உடைய பாசுராமா! என் மகன் (இராமன்) கோபமே இல்லாதவன். அவன் இறப்பானாகில் நானும் என்னுடைய சுற்றத்தார் அனைவரும் இறந்து போவோம். பெரியோய்! உமது அடியோனாகிய நான் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். என்னுடைய ராஜ்யமும் எங்கள் சூரிய வம்சமும்



சிறப்படையும்படி தாங்கள் அருளவேண்டும். நான் பூண்டோடு அழிந்து போகும்படி செய்துவிடக்கூடாது'' என்பது இதன் அர்த்தம்.

மேற்சொன்ன இரண்டு பாட்டுகளாலும் தன்னுடைய உயிர் இராமன்தான் என்பதைத் தசரதனே ஒப்புக்கொண்டு சொல்லுகிறான்.

இப்படியெல்லாம் தசரதன் கெஞ்சிக் கேட்டும் பரசுராமன் இணங்கவில்லை. இராமனோடு போர்தொடுக்கவே விரும்பினான். அதைக் கண்ட தசரதன் தன்னுடைய மகனுக்கு அபாயம் வந்துவிட்டதாக நிச்சயித்து மூர்ச்சையாகிவிடுகிறான். மன்னன் மூர்ச்சையாகிக் கிடக்கும்போதே இராமனுக்கும் பரசுராமனுக்கும் வாக்குவாதம் முற்றி, பரசுராமன் தந்த வில்லை வளைத்து, அம்பு தொடுத்து, அந்த அம்புக்கு இரையாகப் பரசுராமனுடைய தவத்தையெல்லாம் இராமன் பறித்துக்கொள்ளுகிறான். தோற்றுப்போன பரசுராமன் இராமனை வணங்கி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அங்கிருந்து போய்விடுகிறான்.

பரசுராமன் போனபின் மூர்ச்சித்துக் கிடந்த தசரதனை இராமன் தெளிவிக்கின்றான். இராமனுக்கு அபாயம் ஒன்றுமில்லை என்ற உணர்ச்சி உண்டானபிறகு தான் தசரதனுடைய உயிர் நிலைக்கிறது என்பதை,

''அழிந்துஅவன் போனபின்
அமலன் ஐயுணர்வு
ஒழிந்தனன் உயிர்உலைந்
துருகு தாதையைப்

பொழிந்தபேர் அன்பினால்
தொழுது முன்புக்கு
இழிந்தவான் துயர்க்கடல்
கரைநின்று ஏற்றினான்''

என்ற பாட்டால் விவரிக்கிறான். இந்தப் பாட்டுக்கு, ''தோற்றுப்போய்ப் பரசுராமன் சென்றுவிட்ட பிறகு, இராமன், ஐம்புல உணர்ச்சிகளும் அற்றுப்போனவனாக உயிர் நிற்குமோ நீங்கிவிடுமோ என்ற நிலைமையிற் கிடந்த தந்தையை அன்பினால் அபிஷேகம் செய்து ஆற்றித் தேற்றி, தொழுது வணங்கி, உணர்ச்சி உண்டாக்கி, துக்கக் கடலில் இருந்து கரையேற்றினான்'' என்பது பொருள்.

மேலே சொல்லப்பட்ட மூன்று பாட்டுகளில், (பரசுராமப் படலம்) முதல் பாட்டில்,

''இவனும் எனது உயிரும் உனது அபயம்''

இரண்டாவது பாட்டில்,

''என்மகன் உயிர்தபுமேல் எனதுஉறவோடு
உயிர்உகுவேன்''

மூன்றாவது பாட்டில்,

''உயிர்உலைந்து உளுகுதாதை''

என்ற தொடர்களால் 'இராமனே தசரதனுடைய உயிர்' என்ற கருத்தைக் கம்பன் உறுதிப்படுத்துகிறான்.

# 3. உடலுக்கு வந்த நோய்

இதுவரைக்கும், 'தசரதன் உடல், அந்த உடலுக்கு இராமனே உயிர்' என்று கம்பன் ஆரம்பத்தில் கற்பித்துக் கொண்டதை எப்படித் தொடர்ந்து சொல்லியிருக்கிறான் என்பதைப் பார்த்தோம். இனி, அந்த உடலிலிருந்து உயிர் பிரிந்து எப்படி மரணம் உண்டாகிறது; அந்த மரணம் உண்டாவதற்கு உடலுக்கு ஏற்பட்ட நோய் என்ன, அந்த நோய் வந்த விதம் எப்படி என்பதிலெல்லாம் கம்பன் காட்டுகின்ற கலைத்திறத்தையும் காண்போம்.

தசரதன் இராமனிடத்தில் ராஜ்ய பாரத்தை ஒப்படைத்துவிட்டு, தவம்புரிய ஆசைகொண்டு அமைச்சர்களுடன் ஆலோசித்து இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யத் தீர்மானித்தான். அதையறிந்த கூனியாகிய மந்தரை, கைகேசியின் மனத்தைக் கலைத்துவிடுகிறாள். விதிவசத்தினாலோ அல்லது வேறு என்ன விபரீதத்தினாலோ கைகேசிக்குத் தன் மகன் பரதன் அரசாள வேண்டும் என்ற ஆசை வந்துவிடுகிறது. அந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூனியே வழி சொல்லிக் கொடுக்கிறாள்.

வழக்கம்போல், தசரதன் கைகேசியின் அந்தப்புரத்துக்கு வந்தபோது, கைகேசி அலங்கோலமாகத் தரையில் புரண்டு கிடக்கிறாள். தசரதன் திடுக்கிட்டு அவளை வாரியெடுத்து, வருத்தத்திற்குக் காரணம்

கேட்டுக் கலங்குகின்றான். கைகேசி அந்த நிலைமைக்கு வேண்டிய பாசாங்குகளையெல்லாம் செய்து, கடைசியாக, முன்னே தனக்கு வாக்குத் தந்திருந்த இரண்டு வரங்களையும் கேட்கிறாள். மன்னன் உடனே தருவதாக ஒத்துக் கொள்கிறான். கைகேசி வரங்கேட்கிறாள் :

"ஏய வரங்கள் இரண்டில்
ஒன்றினால் என்
சேய் அரசாள்வது
சீதை கேளவன் ஒன்றால்
போய்வனம் ஆள்வது எனப்
புகன்று நின்றாள்
தீயவை யாவையினும்
சிறந்த தீயாள்."

"முன்னே தருவதாக வாக்களித்த இரண்டு வரங்களில் ஒரு வரத்தால் என் மகன் பரதன் அரசாள்வது ; இன்னொரு வரத்தால் சீதாராமன் வனத்துக்குப் போய் விடுவது என்று, தீமைகளுக்குள் தீமையாகிய கைகேசி சொல்லி நிறுத்தினாள்" என்பது அர்த்தம்.

இப்படிக் கைகேசி கேட்டதானது, எங்கிருந்தோ திடீரென்று ஒரு நாகப்பாம்பு கொத்திப் பிடுங்கிவிட்டது போல் இருந்தது, தசரதனுக்கு. அதை,

"நாகமெனும் கொடியாள் தன்
நாவின் ஈந்த
சோகவிடம் தொடரத்
துணுக்கம் எய்தா
ஆகம் அடங்கலும் வெந்து
அழிந்து அராவின்
வேகம் அடங்கிய வேழம்
என்ன வீழ்ந்தான்."



"நாகத்தைப் போன்ற கொடிய கைகேசியின் நாக்கிலிருந்து பாய்ச்சப்பட்ட அந்தச் சொற்களால் உண்டான துக்கம் எனும் விஷமானது தேகத்தில் பரவி, (தசரத மன்னன்)தேகம் முழுவதும் எரிச்சல் உண்டானவனாக வெந்து வெதும்பி, அரவந்தீண்டினதால் பலமெல்லாம் ஒடுங்கிப்போன ஒரு யானையைப் போல் விழுந்துவிட்டான்" என்பது பொருள்.

இந்தப் பாட்டினால், ஒருவித நோயும் இல்லாதிருந்த தசரதனுடைய உடலுக்குள் நோய்க்குக் காரணமாகும் ஒரு கொடிய விஷம் செலுத்தப்படுகிறது. அந்த விஷம் ஏற்கெனவே மன்னனுடைய மனத்தில் இருந்து கொண்டிருந்த கவலையோடு கலந்து, அவனுக்கு மரண வேகத்தைத் துரிதப்படுத்துகிறது என்பதைக் காட்டுவதே கம்பனுடைய கற்பனை.

கீழே விழுந்த தசரதன் நெடுநேரம் தன்னினைவு இல்லாமல் துடித்துப் புரண்டுவிட்டு, சிறிது பிரக்ஞை வந்த உடன், 'கைகேசியா இப்படிச் சொன்னது ! இராமனிடத்தில் அவ்வளவு பிரியம் வைத்திருக்கிற அவள் சொந்தப் புத்தியினால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டாள்' என்றெல்லாம் எண்ணி, "இது நீயாக உன் மனம் மாறிப்போய்ச் சொன்னதா, அல்லது வேறு யாராவது செய்த மோசமா?" என்று கேட்கிறான். அதற்குக் கைகேசி,

"திசைத்ததும் இல்லை,
எனக்குவந்து தீயோர்
இசைத்ததும் இல்லை,
முன்ஈந்த இவ்வரங்கள்

குசைப்பரியோய்! தரின் இன்று
கொள்வன், அன்றேல்
வசைத்திறம் நின்வயின்
வைத்து மாள்வன் என்றாள்.''

"நானாக ஒன்றும் மாறிப்போய்ச் சொன்னதும் அல்ல; எனக்கு யாரோ கெட்டவர்கள் வந்து சொல்லிக் கொடுத்துச் சொன்னதும் அல்ல. முன்னே நீங்களே எனக்குக் கொடுத்திருந்த வரங்களை இப்போது நானே கேட்கிறேன். கொடுத்தால் கொடுங்கள்; இல்லா விட்டால் பழியை உங்கள்மேல் போட்டுவிட்டு நான் இறந்து போகிறேன்'' என்றாள் என்பது இதன் பொருள்.

இதைக் கைகேசி சொல்லி முடிப்பதற்குள் தசரதன் மனம் சுழன்று, திகைப்படைந்து, அயர்வு மேலிட்டு, மறு படியும் பிரக்ஞையில்லாமல் விழுந்துவிடுகிறான். அதை அடுத்த பாட்டில் கம்பன் அமைத்திருக்கிற அழகைப் பாருங்கள். அந்தப் பாட்டில் அடங்கியிருக்கிற வேறு சில இலக்கிய அழகுகள் மட்டுமல்லாமல், 'இராமன்தான் தசரதனுடைய உயிர்' என்ற கருத்தையும் எப்படித் தொடர்ந்து காட்டுகின்றான் என்பது கவனிக்கத்தக்கது, அந்தப் பாட்டு :

"'இந்த நெடுஞ் சொல் அவ்
வேழை கூறு முன்னே
வெந்த கொடும் புணில்
வேல் நுழைந்த தொப்ப
சிந்தை திரிந்து திகைத்து
அயர்ந்து வீழ்ந்தான்
மைந்தன் அலாது உயிர்
வேறிலாத மன்னன்''



"இந்தப் பெரிய பேச்சை மிகவும் இரக்க சுபாவ முள்ள அந்தக் கைகேசி சொல்லி முடிக்கும் முன்னால், வெந்து போயிருந்த புண்ணில் வேல் விட்டு ஆட்டியதைப் போலத் துன்பம் அதிகரித்தவனாகி, சிந்தனை தடுமாறி, திகைத்து, அயர்ந்து விழுந்தான் தசரதன்'' என்பது பொருள்.

இதில் நாம் கருதிய கட்டுரைக்கு அவசியமானது 'மைந்தன் அலாது உயிர் வேறிலாத மன்னன்' என்பது தான். இந்தப் பாடல், முன் பரசுராமன் படலத்தில் 'இராமனே தசரதனுடைய உயிர்' என்பதற்காகக் கருத்து கள் அடங்கிய பாடல்களுக்குப் பின் 204 பாட்டுகளுக்கு அப்பால் இருப்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டுரையின் குறியாகிய 'இராமனே தசரதன் உயிர்' என்பதைக் காட்டுவது மட்டுமல்லாமல் இந்தப் பாட்டில் கம்பன் அமைத்திருக்கிற வேறு சில சிறப்புகளையும் இங்கேயே சொல்லிவிடுவது மிகை யாகாது. அந்தச் சிறப்பில் கம்பனுடைய கவி நயம் மட்டும் அல்லாமல், அவனுடைய அபூர்வமான ஞாபக சக்தியும் அடங்கியிருக்கிறது. அது எப்படியென்று பாருங்கள் :

இந்தப் பாடலில் கைகேசி 'எனக்கு யாரும் சொல்லித் தரவில்லை; நானேதான் கேட்கிறேன். கொடுத்தால் கொடுங்கள்; இல்லாவிட்டால் பழிபோட்டுச் சாகிறேன்'' என்ற இந்தப் பெரும் பேச்சைச் சொன்ன உடன் தசரதன் 'வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்தது ஒப்பத்' துன்பம் அடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

அதை நாம் படிக்கிறபோது, அது தசரதனுக்கு வந்த அதிக வருத்தத்தைக் காட்டுவதற்கு அழுத்தமான உபமானமாகச் சொல்லப்பட்டிருப்பதாகத்தான் சாதாரண மாக நினைப்போம். ஆனால், இலக்கியச் சுவையை நாடுகின்ற ரசனையோடு அதை ஊன்றிப் பார்க்கிற போதுதான் அதில் அமைந்துள்ள ஓர் அற்புதக் கவித்திறத்தை அநுபவிக்க முடியும். அந்த அழகு எதிர்பாரா விதமாகத் தானாகவே வந்து விழுந்துவிட்டதா, அல்லது அது கம்பனுடைய கவிதா சக்தியின் சிறப்பினால் எண்ணிச் செய்யப்பட்டதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் சிந்தித்துப் பார்ப்பதற்கு இந்தப் பாட்டுக்கு வெகு தூரம் முன்னால் இருக்கிற இரண்டொரு பாட்டுகளையும் இதனோடு இணைத்துப் பார்க்கவேண்டும். அப்படி இணைத்துப் பார்க்கிற போதுதான் பின்னால் சொல்லப்போகிற இந்த அழகு தானாக அமைந்தது அல்ல; ஆனால், கம்பன் கவிதா மேதையினால் அவனே வேண்டுமென்று எண்ணிச் செய்ததுதான் என்பதும், கம்பனைத் தவிர வேறு எந்தக் கவிஞனும் இதைச் செய்ய மறந்தே இருப்பான் என்பதும் புலப்படும். அந்த அழகு தானாக அமைந்ததோ, அல்லது கவிஞன் எண்ணி அமைத்ததோ, எப்படி யானாலும் சரி; அந்த அழகு என்னவென்று பார்ப்போம்:

இராமன் பிறப்பதற்கு வெகுநாளைக்கு முன்னால் ஒரு முனிவன் தசரதனுக்குச் சாபம் இடுகிறான்; அந்தச் சாபம் 'நீயும் என்னைப் போல உன் அருமை மகனைப் பிரிந்து, அந்தச் சோகத்தினால் இறக்கக் கடவாய்' என்பது. அச்சாபத்தின் தாபத்தைத் தசரதன்



அப்போது உணர முடியவில்லை. என் என்றால், அப்போது அவனுக்குப் பிள்ளை இல்லை. பிள்ளை இல்லையே என்ற ஏக்கமும் அவனுக்கு அப்போது இல்லை. மேலும், அப்போது தசரதன் மிகவும் இளமைப் பருவத்தில் இருந்ததனால் அதை அலக்ஷியமாக எண்ணி விடக்கூடிய நிலையில்தான் இருந்தான்.

அந்தச் சாபத்துக்கு வெகு காலத்திற்குப் பிறகு தசரதனுக்குக் கிழப்பருவம் ஆரம்பித்து, தன்னுடைய காதுக்கருகிலிருந்த தலைமயிரிற்சில நரைத்துவிட்டதைக் கண்ட பின்புதான் தனக்குக் குழந்தையில்லையே என்ற விசாரம் உண்டாயிற்று. உடனே குலகுருவான வசிஷ்டரிடம் முறையிட்டான். அவர் புத்திரகாமேஷ்டி யாகம் செய்யச் சொல்லுகிறார். யாகம் செய்து, இராமன் முதலானவர்கள் பிறக்கிறார்கள். இராமனுடைய அழகிலும் அறிவிலும் மயங்கிய மன்னன், அளவு கடந்த புத்திர வாஞ்சையினால் இராமனைத் தன் உயிர்போல் நினைத்து மகிழ்ச்சியில் முழுகிவிடுகிறான். பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக முனிவன் இட்ட சாபம் அடிக்கடி நினைவுக்கு வந்து வருத்தத் தொடங்கியது. அதனால் இராமன் தன்னை விட்டு எப்போது பிரிவானோ அப்போது தானும் இறந்து போக நேருமே என்ற கவலை வந்துவந்து வாட்டிக்கொண்டிருந்தது. அதனால் வெறும் ஆசையினால் உயிர் போல் போற்றப்பட்ட இராமன், உண்மையிலேயே தசரதனுடைய உயிராகிவிடுகிறான். (கம்பன் அப்படிக் காட்டுகிறான்.) அதனால் இராமனைப் பிரிவதென்றால் உயிரைப் பிரிவது போன்ற துன்பத்தை உண்டாக்கக்கூடியதாகப் போய்விட்டது. அந்தத்

துன்பத்தை விசுவாமித்திரர் தமது வேள்வியைக் காக்க இராமனைத் துணையாக அனுப்பும்படி தசரதனைக் கேட்ட போது,

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணில் ஆம் பெரும்புழையுள் கனல் நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்
உள்நிலா வியதுயரம் பிடித்துஉந்த
ஆருயிர்நின் றுஊச லாட
கண்ணிலான் பெற்றுஇழந்தான் என உழந்தான்
கடுந்துயரம் கால வேலான்"

என்ற பாட்டில் கம்பன் நன்றாகக் காட்டிவிட்டான். இந்தப் பாட்டில் முனிவர் இட்ட சாபமும், அதனால் மன்னனுடைய மனத்தில் இருந்துகொண்டிருந்த துயரமும், அந்தச் சாபம் பலித்துவிடும் காலம் வந்துவிட்டதோ என்று பயப்படுவதும், அதனால் உண்டான துன்பமும் காட்டப்படுகின்றன. அந்தத் துன்பத்தைக் கம்பன் 'மருமத்தில் எறி வேல் பாய்ந்த புண்ணில் ஆம் பெரும் புழையுள் கனல் நுழைந்தால் என' என்ற உபமானத்தால் சொல்லுகிறான். கவனிக்க வேண்டியது இந்த இடத்தில்தான்.

தசரதனுடைய நெஞ்சில் வேல் பாய்ந்த ஒரு புண் இருந்தது. அது ஆறாமல் புரையோடிப் பெரும் புழையாகப் பச்சைப்புண்ணாகவே இருந்தது. அந்தப் புண்ணில் நெருப்பைச் செருகியதுபோல் இருந்தது அந்தத் துன்பம். இன்னும் இதைவிட அதிகமாக எப்படிச் சொல்லுவது? 'விசுவாமித்திரருடன் இராமனை அனுப்பினால் அவனைப் பிரிந்து, தான் இறந்துபோக நேருமோ' என்று தசரதன் சந்தேகமாக எண்ணுகிறபோதே கம்பன் இத்தனை உபமானத்தையும் ஏகமாகச் சொல்லிவிட்டானே. இனி இராமன் 14 வருஷம் காட்டுக்குப் போய்விட வேண்டும் என்று கைகேசி வரம் கேட்கிறபோது இராமன் பிரிந்து, தான் இறந்து போகும் காலம் வந்துவிட்டது என்பது தசரதனுக்குச் சந்தேகமில்லாமல் தெரிகிற அந்தச் சமயத்தில் அவனுக்கு உண்டாகக்கூடிய துன்பத்திற்குக் கம்பன் என்ன உதாரணம் சொல்லப்போகிறான் என்று ஆய்ந்து பார்க்கிறபோதுதான் அந்த அழகு தென்படுகிறது. என்ன, எப்படிச் சொல்லுகிறான் கம்பன் என்பதைப் பாருங்கள்.



முன்னே விசுவாமித்திரர் இராமனைக் கேட்ட போது உண்டான துன்பத்தைக் காட்டுவதற்குச் சொல்லப்பட்ட 'எறிவேல் பாய்ந்த புண்ணில் ஆம் பெரும் புழையுள் கனல் நுழைந்தால் என' என்ற உபமானத்தை அப்படியே வைத்துக்கொண்டு, தொடர்ந்து இன்னும் அதிகத் துன்பத்தை உண்டாக்கும் ஓர் உதாரணத்தைச் சேர்க்கிறான். தொடர்ச்சி முரியாமல் அதே உதாரணத்தைப் பின்பற்றுகிற அழகு எதிலே இருக்கிறதென்றால், முன்னைய பாட்டுக்கும் பின்னைய பாட்டுக்கும் இடையில் 1351 பாட்டுகள் இருக்கின்றன என்ற உண்மையில் இருக்கிறது.

முன்னைய பாட்டில்—விசுவாமித்திரன் இராமனைக் கேட்டபோது,

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையுள் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்"

என்று சொல்லப்பட்டது.

பின்னைய பாட்டில் கைகேசி, 'இராமன் காட்டுக்குப் போகத்தான் வேண்டும். வாக்களித்த வரத்தைக் கொடுத்தால் கொடுங்கள்; இல்லாவிட்டால் பழி போட்டுவிட்டுச் சாகிறேன்' என்றபோது,

"இந்த நெடுஞ்சொல் அவ்
வேழை கூறுமுன்னே
வெந்த கொடும்புணில்
வேல்நுழைந்தது ஒப்ப"

என்று சொல்லப்படுகிறது. 1351 பாட்டுகளுக்குப் பின்னால் தொடர்ச்சியைப் பாருங்கள். அந்தத் தொடர்ச்சி 'வெந்த கொடும்புண்' என்பதில் இருக்கிறது. அதாவது, 'எறிவேல் பாய்ந்து புண்ணாகி யிருந்த பெரும் புழையுள்' கனல் நுழைந்து, வெந்து போயிருந்த கொடும் புண்ணில் வேல்விட்டு ஆட்டியது போல இருந்ததாம் தசரதனுடைய துன்பம். 'வெந்த கொடும் புண்ணில்' என்பதில் உள்ள 'வெந்த' என்ற ஒரே ஒரு பதத்தால் முன்னே சொன்ன அத்தனை கருத்துகளையும் அப்படியே இங்கும் கொண்டுவந்து, அதற்கும் மேலே அதிகமாகவும் சொல்லுகின்றான் கம்பன்.

கம்பன் கவிதையிலுள்ள எண்ணிறந்த இலக்கியச் சுவைகளுள் இப்படி வெகு தூரத்துக்கு முன்னால்—ஆயிரக்கணக்கான பாடல்களுக்கும் முன்னால்—சொன்ன விஷயங்களைவிடாமல் தொடர்ந்து, எடுத்ததை முடிக்கும் ஒப்பில்லாத கவித்திறம் கம்பனுக்கே சொந்தமானது. வேறு எந்தக் கவிஞனிடத்திலும் இந்த அரிய ஆற்றலைக் காண முடியாது.



இந்த 'வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்த' விஷயத்தை, இந்தப் பாட்டுக்கு எண்ணாயிரத்து எழுநூற்றுப் பதினாறு (8716) பாட்டுகளுக்குப் பின்னால் எவ்வளவு அற்புதமான புலமையோடு மீண்டும் கம்பன் எடுத்துரைக்கிறான் என்பதை இங்கேயே எடுத்துச் சொல்லிவிட வேண்டும் என்கிற ஆசை அதிகமாகிறது.

'தசரதன் என்ற உடலுக்கு இராமன் உயிர்' என்பது தான் எடுத்துக்கொண்ட விஷயம். அதற்கு இதுவும் சற்றே புறம்பானது என்றாலும், இதிலுள்ள மிகச்சிறந்த இலக்கியச் சுவையைக் கருதி, வாசிப்பவர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்றே எதிர்பார்க்கலாம்.

'வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்த' விஷயத்தை மீண்டும் 8716 பாட்டுகளுக்குப் பின்னால் எப்படிக் கம்பன் தொடர்ந்திருக்கிறான் என்பதைப் பார்க்கலாம்.

'இராமன் காட்டுக்குப் போகத்தான் வேண்டும்' என்று கைகேசி கேட்ட வரந்தான் வெந்த கொடும் புண்ணில் நுழைந்த 'வேல்.' இதை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த வரத்தைத் தசரதன் கொடுத்து விடுகிறான். இராமன் காட்டுக்குப் போகிறான். தசரதன் இறந்துபோகிறான். பிறகு மற்ற கதைகளெல்லாம் நடக்கின்றன.

இராவண சம்மாரம் முடிந்து, சீதை மீட்கப்படுகிறாள். சீதை தன் தூய்மையை மெய்ப்பிக்க அக்கினிப் பிரவேசம் செய்கிறாள். நெருப்பில் குதித்த சீதையை அக்கினி தேவன் சுடவில்லை. சீதாபிராட்டியின் தெய்விகக் கற்பின் சிறப்பை அக்கினி தேவனும் பிரம்மனும்

சிவபிரானும் இராமனுக்குச் சொல்லிச் சீதையை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறார்கள். அந்தச் சமயத்தில் அந்த வைபவத்தைக் கண்டு களிக்கும்படி சொர்க்கத்தி லிருந்த தசரதனைச் சிவன் முதலான தேவர்கள் பூலோகத்துக்கு வரச்செய்கிறார்கள். தசரதன் மறுபடியும் மகனைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பினால் மிக மகிழ்ச்சியோடு வானத்திலிருந்து பூமிக்கு வருகிறான். ஆனால், முன்னிருந்த மனித சரீரத்தோடு அல்ல; தேவ சரீரமாகிய சூக்கும சரீரத்தோடு வருகிறான்... சூக்கும சரீரம் என்பது இறந்து போனவர்கள் தேவலோகத்தில் நடமாடும் சரீரம். அந்தச் சரீரம் ஆவி உருவமாக இருக்கும். ஆனால், அவர்கள் விரும்பினால் பழைய மனித உருவம் போலவே பிறருடைய கண்ணுக்குத் தெரியும்படியாகவும் வரலாம். அந்த வடிவம் இறக்கும் போதிருந்த பழைய வடிவந்தான்.

* * *

இந்தச் சூக்கும சரீரம் என்பது மெய்யா பொய்யா; இருக்குமா இராதா என்பவற்றை இங்கு ஆராய வேண்டாம். அப்படிப்பட்ட ஒரு நிலை உண்டு என்பதைப் பல நூல்கள் சொல்லுகின்றன, அது உண்மையாகத்தான் இருக்கும் என்று நம்புகிறவர்கள் எத்தனையோ பேர்கள் இன்னும் இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் மட்டும் அல்ல; உலகமெங்கும் அப்படிப்பட்டவர்கள் உண்டு; ஐரோப்பாவில் அநேகர் உண்டு. இங்கிலாந்தில் அதை நம்புகின்றவர்கள் சிறந்த எழுத்தாளர்களிலும் இருக் கிறார்கள். மிகச்சிறந்த நாவல் ஆசிரியரான காலஞ் சென்ற 'கானன்டாயில்' என்பவர் அதைப்பற்றி அநேக





கட்டுரைகள் எழுதி, சூக்கும சரீரத்தோடு நடமாடுகிற கந்தர்வர்களைத் தாம் கண்ணாரக் கண்டதாகவும் எழுது கிறார். அந்தக் கந்தர்வர் உருவங்களைப் 'போட்டோ' வில் படம்பிடிக்கவும் முடியுமென்று முயன்றிருக்கிறார். அந்த நம்பிக்கை எப்படியோ போகட்டும்...

* * *

தசரதன் பிறருடைய கண்ணுக்குத் தெரியும்படி இராமன், சீதை முதலானவர்கள் இருந்த இடத்துக்குச் சூக்கும சரீரத்தோடு வருகிறான். தசரதனைக் கண்டதும் இராமன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகின்றான். வணங்கிய மகனை வாரியெடுத்து மன்னவன் மார்புற இறுகத் தழுவி, ஆனந்தக் கண்ணீரால் அபிஷேகம் செய்து, மகனோடு அயோத்தியில் வாழ்ந்த இன்பநினைவு களை எண்ணி மகிழ்ச்சியுற்று, உடனே கைகேசியினால் ஏற்பட்ட துன்ப நினைவுகளும் தோன்றி வருத்தப்படுத்த இராமனுக்குச் சொல்லலுற்றான் என்பதை,

"வீழ்ந்த மைந்தனை எடுத்துத்தன்
விலங்கல் ஆகத்தில்
ஆழ்ந்து அழுந்திடத் தழுவித்தன்
கண்ணின் நீராட்டி
வாழ்ந்த சிந்தையின் மனங்களும்
களிப்புற மன்னன்
போழ்ந்த துன்பங்கள் புறப்பட
நின்று இவை புகன்றான்"

என்ற பாட்டால் சொல்லிவிட்டு, அடுத்த பாட்டில், அந்த 'வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்த' விஷயத்தைத் தசரதனுடைய வாக்காக வைக்கிறான்.

கம்பராமாயணப் பிரகாரம் கைகேசி வரம் வாங்கிக் கொண்ட பிறகு, இராமன் தசரதனைச் சந்திப்பதே

இல்லை. வான்மீகி இராமாயணப் பிரகாரம் இராமன் தசரதனைச் சந்தித்துப் பலவித வாக்குவாதங்கள் நடந்த பின் தசரதனே இராமனுக்கு விடை கொடுத்து வனத்துக்கு அனுப்புகிறான். அந்த வேறுபாடுகளை இங்கே விவரிக்க வேண்டாம். ஆனால், கம்பராமாயணத்தில் இராமன் தசரதனைப் பார்க்கக்கூட இல்லை என்பதை மட்டும் மனத்தில் வைக்கவேண்டும்.

கைகேசியினுடைய பிடிவாதத்தால் மகனைப் பிரிந்து, அதனால் உயிர் பிரிந்த தசரதன் மறுபடியும் இங்கேதான் சந்திக்கிறான். ஆகையினால் கைகேசியின் கொடுமையை மகனிடம் சொல்லி, சலிப்புகளை ஆற்றிக் கொள்ள ஆசை வந்து, கைகேசி வாங்கிக்கொண்ட வரம் தன் மார்பில் வேல் பாய்ச்சியது போல் குத்திக் கொன்று விட்டது என்று சொல்லிக்கொள்ளுகிறான் தசரதன். அந்த அருமையான பாட்டில் கம்பன் தொடர்ந்திருக்கிற கருத்துகளைப் பாருங்கள் :

"..அன்று கேகயன் மகள் கொண்ட
வரம்என்னும் அயில்வேல்
இன்று காறும்என் இதயத்தின்
இடைநின்றது, என்னைக்
கொன்றும் நீங்கலது, இப்பொழுது
அகன்றது, உன் குலப்பூண்
மன்றல் ஆகமாம் காந்த
மாமணி இன்று வாங்க."

"மகனே ! அன்றைய தினம் கேகயன் மகளாகிய கைகேசி வாங்கிக்கொண்ட வரம் என்ற இரும்பு வேலாயுதம் என் மார்பில் இன்றைய வரையிலும் இருந்து துன்புறுத்திக்கொண்டே இருந்தது. என்னைக் கொன்ற பிறகுங்கூட அது நீங்காமல் எனது சூக்கும சரீரத்திலும் இருந்துகொண்டேயிருந்தது. இன்றைக்குக் காந்தமலை போன்ற உன்னுடைய மார்பை நான் தழுவின பிறகுதான், அது (இரும்பு வேல்) காந்தத்தினால் இழுக்கப்பட்டு நீங்கிற்று" என்பது இதன் பொருள்.



முன்னே 'வெந்த கொடும்புணில் வேல் நுழைந்தது ஒப்ப' என்று சொல்லப்பட்ட வேல்தான் இங்கே இந்தப் பாட்டில் இருக்கிற 'அயில் வேல்.' இராமனைப் பிரிந்து இறந்த துக்கம் தசரதனைச் சூக்கும சரீரத்திலும் தொடர்ந்து இப்போது மீண்டும் இராமனைச் சந்தித்துத் தழுவிக்கொண்ட பிறகுதான் நீங்கிற்று என்பது கருத்து. சொர்க்கத்திலும் நிம்மதி இல்லாதிருந்த தசரதனுக்கு இனிமேல்தான் சாந்தி உண்டாகிறது. 8716 பாட்டுகளுக்குப் பின்னால் எவ்வளவு அழகாக இந்தக் கற்பனையைத் தொடர்ந்திருக்கிறான் கம்பன் என்று அறிவதனால் உண்டாகும் இலக்கிய இன்பம் எவ்வளவு சிறந்தது என்பதைப் படிக்கிறவர்களே உணர்ந்துகொள்ள வேண்டியதுதான்.

இனி, தசரதன் என்ற உடலையும் இராமன் என்ற உயிரையும் மீண்டும் தொடர்வோம்.

கடைசியாக, 'தசரதனுக்கு இராமன்தான் உயிர்' என்ற கருத்தைக் காட்டுவதற்கு நாம் குறிப்பிட்ட பாட்டு இதுவேயாகும் :

"இந்த நெடுஞ்சொல்அவ்
வேழை கூறுமுன்னே
வெந்த கொடும்புணில்
வேல்நுழைந் ததொப்ப

> சிந்தை திரிந்துதிகைத்து
> அயர்ந்து வீழ்ந்தான்
> மைந்தன் அலாதுஉயிர்
> வேறிலாத மன்னன்."

இந்தப் பாட்டுக்குப் பன்னிரண்டு பாட்டுகளுக்குப் பின், தசரதன் கைகேசியை மிகவும் கெஞ்சி, இராமன் காட்டுக்குப் போகவேண்டும் என்பதை மட்டும் மாற்றும் படி கேட்டுக்கொள்கிறான் :

> "நின்மகன் ஆள்வான் நீஇனிது
> ஆள்வாய் நிலம்எல்லாம்
> உன்வயம் ஆமே ஆளுநி,
> தந்தேன், உரைகுன்றேன்
> என்மகன், என்கண், என்உயிர்
> எல்லா உயிர்கட்கும்
> நன்மகன் இந்த நாடுஇற
> வாமை நயஎன்றான்."

"உன் மகன் பரதனே அரசாளட்டும். நீயே ஆளு. இந்த ராஜ்யம் முழுவதும் உன்னுடைய மயமாகவே இருக்கட்டும். நான் சொன்ன சொல்லில் குறைபமாட்டேன். ஆனால், என் மகனான இராமன், என் கண்ணாகிய இராமன், என் உயிராகிய இராமன், உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் (இந்த நாட்டிலுள்ள எல்லாக் குடி ஜனங்களுக்கும்) நல்லவனான இராமன் இந்நாட்டை விட்டுப் போகாமல் இருக்கும்படியான ஒரு விஷயத்தில் மட்டும் நீ தயவு செய்யவேண்டும் என்றான்", என்பது இதன் பொருள்.

இதில் இராமனைத் தசரதன் 'என் உயிர்' என்று சொல்லுகிறான். 'இராமன் போனால் என் உயிரும் போய்



விடும்' என்பது கருத்து. இதன் கருத்தை இதற்கு அடுத்த பாட்டில் இதைவிட இன்னும் அதிகத் தெளிவாகச் சொல்லுகிறான் :

> "மெய்யே என்றன் வேர் அற
> நூறும் வினைநோக்கி
> நையா நின்றேன் நாவும
> உலர்ந்தேன் நளினம்போல்
> கையான் இன்றுஎன் கண்எதிர்
> நின்றும் கழிவானேல்
> உய்யேன் நங்காய் ! உன்அபயம்
> என்உயிர் என்றான்."

"கைகேசி ! சத்தியமே என்னை வேரறுக்கும் கருவி ஆகிவிட்டதைக் கண்டு மிகவும் வேதனைப்படுகிறேன். என் நாக்கும் உலர்ந்து போய்விட்டது — பேசவுங்கூட முடியவில்லை — தாமரை போன்ற கைகளையுடைய இராமன் என் கண்ணுக்கு முன்னால் இருந்துகொண்டிருப்பதைவிட்டுப் போய்விடுவானாகில், பெண்ணே ! நான் பிழைத்திருக்க மாட்டேன். ஆகையினால், என் உயிர் உனக்கு அடைக்கலம் என்றான்" என்பது இதன் அர்த்தம்.

'இராமன் என்னுடைய உயிர். அவன் போனால் உயிர் போய்விடும்' என்பது இதில் தெளிவாக விளங்குகின்றது.

இப்படியெல்லாம் கெஞ்சிக் கேட்டுங்கூட கைகேசியின் மனம் இளகவில்லை. அதைக் கண்டு மனம் கொதித்து மன்னன் சொல்கிறான் :

"ஏவம் பாராய் இன்முறை நோக்காய்,
அறம்எண்ணாய்,
ஆஎன் பாயோ அல்லை; மனத்தால்
அருள்கொன்றாய்,
நாஅம் பால்என் ஆருயிர் உணடாய்
இனிதுஞாலம்
பாவம் பாராது, இன்உயிர் கொள்ளப்
படுகின்றாய்."

"கைகேசி ! நீ உன் குற்றத்தை உணரவில்லை ; உறவின் முறையையும் கருதவில்லை; தர்மாதர்மத்தையும் எண்ணிப் பார்க்கவில்லை. வாயால் வரம் கேட்டு அம்பைப் பாய்ச்சி என் உயிரைப் போக்குகிறாய். நீ கொஞ்சங்கூட பச்சாதாபம் கொள்வாயென்று எனக்குத் தோன்றவில்லை. மனமார வேண்டுமென்றே 'அருள்' என்பதைக் கொலை செய்துவிட்டாய். இனி, இந்த உலகம் பழி பாவத்தைக்கூடப் பார்க்காமல் உன்னைக் கொன்றுவிடக்கூடிய நிலைமைக்கும் இறங்கிவிட்டாய்" என்பது இதன் பொருள். இந்தப் பாட்டில், 'நா அம்பால் என் ஆருயிர் உண்டாய்' என்பது, 'இராமனைக் காட்டுக்குப் போக வேண்டும் என்று சொல்லி என் உயிரைப் போக்குகிறாய்' என்ற பொருளில் இருப்பதனால், தசரதனுக்கு உயிர் இராமன் என்பது விளங்குகின்றது.

என்ன சொல்லியும் கைகேசியின் மனம் மாறவில்லை. கேட்ட வரங்களைக் கொடுத்தே தீரவேண்டும் என்று பிடிவாதம் செய்கிறாள். வேறு வழியின்றித் தசரதன் வரங்களைத் தருகின்றான்.



.... .... .... ....
"ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்
என்சேய் வனம்ஆள
மாய்ந்தே நான்போய் வானுலகு
ஆள்வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடும்
நெடிதுஎன் றான்."

"தந்தேன் தந்தேன்! என்னுடைய மகன் (இராமன்) காட்டுக்குப் போகும் இந்த வரத்தைத் தந்தேன். நான் இறந்தே போவேன். நான் வானுலகம் போவேன், ஆனால், இதனால் வரும் பழியாகிய அபகீர்த்தியை நீயும் உன் மகன் பரதனும் அடைந்து, அதனின்றும் நெடுங் காலத்துக்குக் கரையேற முடியாது" என்பது இந்தப் பாட்டின் அர்த்தம்.

இதில், 'என் மகன் இராமன் காட்டுக்குப் போவான். நானும் இறந்து போவேன்' என்பது தசரதனுடைய உயிர் நிலை இராமன் என்பதை உணர்த்துகிறது. இந்த வரங்களைத் தந்த உடனேயே தசரதன் தன்னை வாள்கொண்டு வெட்டிவிட்டது போன்ற நிலைமை அடைந்து மூர்ச்சையாகிவிட்டான். ஆனால், கைகேசியோ தன்னுடைய காரியம் வெற்றி பெற்றுவிட்ட களிப்போடு நிம்மதியடைந்து நித்திரை கொணடாள் என்பதை,

"கூறா முன்னம் கூறு படுக்கும்
கொலைவாளின்
ஏறாம் என்னும் வன்துயர் ஆகத்து
இடைமூழ்கத்

தேறான் ஆகிச் செய்கை மறந்தான்
செயல்முற்றி
ஊறா நின்ற சிந்தையி னாளும்
துயிலுற்றாள்''

என்ற பாட்டால் சொல்லப்படுகின்றது.

தசரதன் உணர்வில்லாமல் கிடக்கிறான். கைகேசி தூங்குகிறாள். இப்படியாக இரவு கழிகின்றது. கொஞ்சம் கொஞ்சமாகப் பொழுது விடிகின்றது. அந்த விடியற் காலத்தைப் பல பாட்டுகளால், நிலைமைக்கு ஏற்றவாறு கம்பன் வர்ணிக்கிறான். இரவின் இருள் போவதைச் சொல்லும்பொழுது, இரவு என்பதை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி, அந்தப் பெண், கைகேசி என்ற பெண்ணின் செய்கையைக் கண்டு வெட்கப்பட்டு, இந்த உலகத்துப் பெண்கள் முகத்தில்கூட விழிக்கக் கூடா தென்று விட்டதுபோலச் சித்திரிக்கப்படுகின்றது. அந்தப் பாட்டு.

''சேண் உலாவிய நாள்எலாம்
உயிர்ஒன்று போல்வன
செய்துபின்
ஏண் உலாவிய தோளினான்
இடர்எய்த ஒன்றும்
இரங்கிலா
வாள்நிலாநகை மாதராள்
செயல்கண்டு மைந்தர்முன்
நிற்கவும்
நாணினாள் என ஏகினாள் நளிர்
கங்குல்ஆகிய
நங்கையே''

என்பது. இந்தப் பாட்டின் பொருள் 'தேவலோகத்தில் (சம்பர அசுரனை வென்றபோது) உலாவிய நாளில் எல்லாம் கைகேசி தன்னுடைய உயிரும், கணவனாகிய தசரதனுடைய உயிரும் ஒரே உயிர்தான் என்று எண்ணி நடந்துகொண்டு, பிறகு இப்போது, அவ்வளவு வலிமை பொருந்திய தோளாற்றலுள்ள அந்தக் கணவன் அத்தனை துன்பம் அடைந்து கெஞ்சிக் கேட்டும் இரக்கம் காட்டாத, சந்திர ஒளி வீசக்கூடிய பல் வரிசையுள்ள அழகியான கைகேசியின் செயலைக் கண்டு மனிதர் களுக்கு முன்னால் நிற்கக்கூட வெறுப்படைந்தவள் போலக் குளிர்ந்த இரவு என்னும் பெண் போய்விட்டாள்' என்பது.



இதில் முன்னே சம்பராசுரனுடன் சண்டை செய்யத் தசரதன் தேவலோகத்துக்குப் போனபோது அவனுடன் போயிருந்த கைகேசி, சம்பராசுரனால் தன்னுடைய கணவனுடைய உயிருக்கு அபாயம் வரக்கூடிய தருணத்தில், தான் பெண் என்பதையும் மறந்து, சம்பரனுடன் போர் புரிந்து, கணவனுடைய உயிரைக் காப்பாற்றினாள். அப்படிப்பட்ட கைகேசி இப்போது கணவனுடைய உயிருக்கு நிச்சயமாக அபாயம் வருமென்று நினைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுங்கூட இரக்கம் கொள்ள மறுத்துவிட்டதால் தசரதனுடைய உயிர் போவதானாலும் சரி, இராமன் காட்டுக்குப் போயாக வேண்டும் என்று பிடிவாதம் காட்டினாள். அதனால் முன்னே 'உயிர் ஒன்று போல்வன' செய்த அவளுக்கு இப்போது உயிர் வேறாகப் போய்விட்டது. உயிர் ஒன்று என்ற உணர்ச்சி யிருந்தால் இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லி, கணவனுடைய உயிருக்கு வரப்போகிற அபாயம் தன்

உயிருக்கும் உண்டு என்பதைக் கண்டிருப்பாள். இங்கேயும் தசரதனுக்கு இராமன் உயிர் என்ற கருத்து காணப்படுகிறது.

பொழுது விடிந்தது. தசரதன் மூர்ச்சையாகவே கிடக்கிறான். கைகேசி தூங்கி எழுந்து சந்தோஷத்துடன் இருக்கிறாள். இந்தச் சமயத்தில் முதல் மந்திரியாகிய சுமந்திரர் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிட்டுத் தசரதனைத் தேடிக் கைகேசியினுடைய மாளிகைக்கு வருகிறார். மந்திரியின் வருகை கைகேசிக்கு அறிவிக்கப்படுகிறது. உடனே கைகேசி விரைந்துவந்து, சுமந்திரரை அரண்மனையின் வாசலிலேயே சந்திக்கிறாள்; இராமனை உடனே அழைத்து வரும்படி ஆணையிடுகிறாள். இராமனை அவசரமாகக் கைகேசி அழைத்து வரச் சொன்னதும் பட்டாபிஷேகத்திற்காகத்தான் என்று எண்ணிக்கொண்ட சுமந்திரர் வேகமாகச் சென்று இராமனை,

"கொற்றவர், முனிவர், மற்றும்
குவலயத்து உள்ளார் உன்னைப்
பெற்ற அன்று அன்னை போலப்
பெரும்பரிவு இயற்றி நின்றார்
சிற்றவை தானும் அங்கே
கொணர்கெனச் செப்பினாள் அப்
பொன்தட மகுடம் சூடப்
போதுதி விரைவின் என்றான்."

"இராமா! அரசர்கள் முனிவர்கள் மற்றும் இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் உன்னைப் பெற்றெடுத்தபோது உன் அன்னை அடைந்த சந்தோஷத்



தைப்போல உன் பட்டாபிஷேகத்தை வரவேற்றுச் சந்தோஷப்படுகிறார்கள். அதைப் போலவே மகிழ்வடைந்திருக்கிற உன் சிற்றன்னையாகிய கைகேசியும் உன்னை உடனே அழைத்துவரக் கட்டளையிட்டார்கள். அந்தப் பொன் மகுடத்தை அணிந்துகொள்ள விரைவாகப் புறப்படு" என்று இராமனைச் சுமந்திரர் அழைக்கிறார். உடனே இராமன் கைகேசியினுடைய வீட்டிற்கு வருகிறான். வாயிலிலேயே இருந்த கைகேசி, அவனையும் அங்கேயே சந்தித்து, "பரதன் பட்டாபிஷேகம் செய்துகொள்ள வேண்டும் என்றும், நீ தவக்கோலத்துடன் வனத்துக்குப் போய்ப் பதினான்கு வருஷங்கள் அங்கே வசித்திருந்துவிட்டு வரவேண்டும் என்றும் அரசர் கட்டளையிட்டார்" என்று சொல்லுகிறாள். உடனே இராமன் ஒத்துக்கொண்டு அங்கிருந்தபடியே விடைபெற்றுக்கொண்டு (தசரதனைக்கூடப் பார்க்காமல்) போய்விடுகிறான் வனத்துக்குப் புறப்பட.

இராமன் கோசலையிடம் வனத்துக்குப் போக விடைபெற்றுக்கொள்ள வருகிறான். இராமன் வனத்துக்குப் போவதாகச் சொன்ன வார்த்தையால் கோசலைக்கு அடக்க முடியாத வருத்தம் வந்து, அதைப்பற்றித் தசரதனிடம் முறையிட்டுக்கொள்ள நினைத்து, கைகேசியின் மனைக்குக் கோசலை வருகிறாள். மயக்கமுற்று உணர்வில்லாமல் கிடந்த மன்னவனைக் கண்டு கோசலை கலங்கிக்கொண்டிருக்கிறாள். அதே தருணத்தில் பட்டாபிஷேக முகூர்த்தம் நெருங்கிவிட்டதைக் கண்ட வசிஷ்டரும் அரசனை நாடி அங்கே வருகிறார். வந்த வசிஷ்டர் அரசன் கிடந்த நிலைமையைப் பார்த்து,

நிகழ்ந்ததையெல்லாம் கேட்டு, அரசனுடைய உயிருக்கு அபாயம் வந்துவிட்டதை உணர்ந்து, கைகேசிக்கு அறிவு சொல்கிறார் :

''முனியும் முனியும் செய்கைக்
    கொடியாள் முனமே முன்னி
'இனி, உன் புதல்வற்கு அரசும்
    ஏனையோர்க்கு இன் உயிரும்
மனுவின் வழிநின் கணவற்கு
    உயிரும் உதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே
    புனைவாய் பொன்னே' என்றான்.''

''கோபத்தையெல்லாம் அடக்கியாளக்கூடிய முனிவருங்கூடக் கோபிக்கத் தகுந்த கொடியவளாகிவிட்ட கைகேசிக்கு முன்னால் வசிஷ்ட முனிவன் வந்து, 'பொன்னைப் போன்ற கைகேசியே! இனியாவது யோசனை செய்து உன் மகனுக்குப் பட்டம் கட்டிக் கொள். ஆனால், இராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்பதை விட்டுவிடு. அந்த உபகாரத்தைச் செய்தால் தான் ஜனங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும். மனுவின் மரபில் வந்தவனாகிய உன் கணவனுடைய உயிரும் தப்பிக்கும். அதனால் உனக்கும் வசை நீங்கிப் புகழ் உண்டாகும்' என்றான்'' என்பது இப்பாடலின் அர்த்தம்.

இதில் 'நின் கணவற்கு உயிரும் உதவி' என்பதை 'இராமன் காட்டுக்குப் போகாமல் செய்து' என்பதற்கு நிகராக வைத்திருப்பதனால் 'இராமன் போவது உன்னுடைய கணவன் உயிர் போவது' என்கிறார் வசிஷ்ட முனிவர்.

இங்கேயும் 'இராமன் தசரதனுடைய உயிர்' என்பதைக் கம்பன் காட்டுகிறான்.



வசிஷ்டர் மேற்சொன்ன புத்திமதியைச் சொன்னவுடன் கைகேசி அழுது கண்ணீர் விட்டு, ''வாக்களித்த வரங்களைத் தர மறுத்து அரசன் பொய்பராகிவிடுவாரானால் நான் உயிரோடு இருக்க மாட்டேன்; என்னுடைய கோரிக்கை நிறைவேறாவிட்டால் இப்போதே இறந்து போகாமல் இருக்க மாட்டேன்'' என்று புலம்பினாள். அதைக் கண்ட வசிஷ்டருக்குக் கடுங்கோபம் உண்டாகிப் பின்வருமாறு ஏசுகின்றார் :

''கைகேசி! உன் கணவர் இறந்துவிடுவார் என்பதையும, உன் செய்கையை உலகம் ஒத்துக்கொள்ளாதுஎன்பதையும்,'இதனால் உனக்குப் பெரும் பழி உண்டாகி, அது நாளுக்கு நாள் அதிகரிக்கும் என்பதையும், இது மிகவும் பாவம் நிறைந்த காரியம் என்பதையும் நீ அறிவாய்; அறிந்தும் பிடிவாதம் செய்கிறாய். சொன்னாலும் கேட்க மறுக்கிறாய். இன்னும் உனக்கு நான் என்ன சொல்லுவது?......கொஞ்சங்கூட தாட்சண்யம் இல்லாமல், கணவனுடைய உயிர் போகிற வேதனைகளையும் கவனிக்காமல், புண்ணில் நெருப்பை நுழைத்தது போல விஷம் போன்ற பேச்சுகளைச் சொல்லுகின்ற நீ பெண்தானோ அல்லது நெருப்போ அல்லது பேயேதானோ? கொடியவளே! நீ இந்த உலகில் இருந்து என்ன பயன்? வசைதான் மிச்சம்... அரசன் சொல்லாமல் நீயே இராமனைக் கூப்பிட்டு, அவனைக் காட்டுக்குப் போகும்படி அரசன் ஆணையிட்டதாக அபத்தம் சொல்லிவிட்டாயே! இராமனோ காட்டுக்குப் போவதில் தவறமாட்டான். மன்னனுடைய புகழைக் கெடுத்து, அவனுடைய உயிரையும் போக்கு

கின்ற தீயவளே! உன்னைப் போன்ற கொடுமைக் காரரை நான் கண்டதேயில்லை. இனிமேல் என்ன செய்ய முடியும்!'' என்பன சொல்லி வசிஷ்டர் வருந்துகிறார்.

அந்தச் சமயத்தில் கொஞ்சம் பிரக்ஞை வந்த தசரதன், இராமனைக் காட்டுக்குப் போகும்படி கைகேசியே உத்தரவிட்டதாக வசிஷ்டர் சொன்னதைக் கேட்டவுடன் துள்ளித் துடித்து விழித்துப் பார்த்து, பிரலாபிக்கிறான். அப்படிப்பட்ட பல பாட்டுகளுக்குப் பின்னால்,

"ஏற்ற பகர்வேன் இனியான்
என்னை உன்னில் பிரிய
வற்றே உலகம் எனினும்
வானே வருந்தாது எனினும்
பொற்றேர் அரசே! தமியேன்
புகழே! உயிரே! உன்னைப்
பெற்றேன் அருமை அறிவேன்
பிழையேன், பிழையேன் என்றான்.''

"இனிமேல் நான் என்ன சொல்லி யாது பயன்? உன்னைவிட்டு என்னைப் பிரிப்பதை இவ்வுலகம் சகித்துக் கொள்ளும் என்றாலும், அதனால் வானுலகம் வருத்தப் படாது என்றாலும், ஏ இராமா! என்னுடைய புகழே! என் உயிரே! உன்னைப் பெற்ற அருமை எனக்குத்தான் தெரியும். மனிதரோ தேவரோ மற்றவரோ அறிய முடியாது; நான் இனிப் பிழைக்க மாட்டேன்'' என்று தசரதன் புலம்புகின்றான்.

இதிலும் 'என் உயிரே!' என்று தசரதன் இராமனைச் சொல்வது கவனிக்கத்தக்கது. அது வெறும் ஆசை மொழியாகச் சொன்னது மட்டும் அல்ல; கம்பன் கருதியே வைத்தது.



இப்படிப் பலவாறாகப் புலம்பிக்கொண்டே தசரதன் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு தடுமாறி, நாக்குழறி இறந்து போகும் தருணம் வந்துவிட்டதோ என்று எண்ண வேண்டிய நிலைமையை அடைந்துவிட்டான். அது கண்ட வசிஷ்டர், "ராஜனே, பயப்பட வேண்டாம்; நான் போய் இராமனைக் காட்டுக்குப் போகாதபடி தடுக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, இராமனைச் சந்திக்கப் போனார்:

"என்றே ஒன்றொன்று ஒவ்வா
இசைதந்து அரசன் உயிரும்
சென்றான் இன்றோடு என்னும்
தன்மை எய்தித் தேய்ந்தான்
மென்தோல் மார்பின் முனிவன்
'வேந்தே! அயரேல், அவனை
இன்று ஏகாத வண்ணம்
தகைவென் உலகோடு' என்றான்.''

என்று ஒன்றுக்கொன்று பொருந்தாத விதமாக நினைவு தடுமாறிய வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கி, 'இன்றோடு அரசன் இறந்தான்' என்று எண்ணும் நிலைமையை அடைந்து மன்னவன் ஒடுங்கி வருவதைக் கண்டு, மெல்லிய மான்தோலை அணிந்தவனாகிய வசிஷ்ட முனிவன், "வேந்தே, அயர வேண்டா. இராமன் காட்டுக்குப் போகாதபடி பொது ஜனங்களுடன் நானும் சொல்லி அவன் போவதைத் தடுத்துவிடுகிறேன்'' என்றான் என்பது பொருள். இந்தப் பாட்டிலுள்ள 'தகைவென்' என்ற பதத்தைக் கவனித்துக்கொள்ளுங்கள். அடுத்த பாட்டில்,

"முனிவன் சொல்லும் அளவில்
'முடியும் கொல்' என்று அரசன்
தனிநின்று உழல்தன் உயிரைச்
சிறிதே தகைவான் 'இந்தப்

புனிதன் போனால் இவனால்
போகாது ஒழிவான்' என்ன
மனிதன் வடிவம் கொண்ட
மனுவும் தன்னை மறந்தான்."

"அப்படிச் சொல்லிவிட்டு வசிஷ்ட முனிவன் போன போது, தசரதன் 'இராமன் காட்டுக்குப் போவதைத் தடுத்துவிட முடியுமா?' என்று எண்ணி, 'தடுத்துவிடக் கூடும்' என்று ஆசைப்பட்டு, உடலில் உள்ளும் தங்காமல் வெளியிலும் போகாமல் தனியே தவித்துக்கொண்டிருந்த தன்னுடைய உயிரை வெளியே போய்விடாதபடி தடுக்க முயன்றான். அப்படி முயல்வதற்கு அநுகூலமாக இருக்கும்படி, முன்னே இருந்து போய்விட்ட அந்த மனு என்பவனே மறுபடியும் பிறந்து வந்ததற்குச் சமானமானவனான தசரதன், 'இவர் போய்ச் சொன்னால் இராமன் வனத்துக்குப் போகாமல் நின்றுவிடுவான்' என்று எண்ணிக்கொண்டு சற்றே தன் துன்பங்களை மறந்தான்" என்பது இதன் அர்த்தம்.

'இராமன் காட்டுக்குப் போகாதபடி வசிஷ்டரால் தடுக்க முடியும் என்ற எண்ணத்தால் தன்னுடைய உயிரையும் போய்விடாதபடி தசரதன் தடுக்க முடிந்தது' என்று கம்பன் கற்பிக்கிறான். முனிவன் இராமனைத் தடுப்பதற்குப் பிரயோகித்த 'தகைவென்' என்ற முந்தின பாட்டிலுள்ள அதே பதத்தைப் பிந்தின பாட்டிலும் 'தனி நின்று உழல் தன் உயிரைச் சிறிதே தகைவான்' என்று பிரயோகப்படுத்தியிருப்பதையும் அறிந்து அனுபவிக்க வேண்டும். இராமன் காட்டுக்குப்போவதைத் தடுப்பதும், தசரதன் உயிர் போவதைத் தடுப்பதும் இரண்டும் ஒரே காரியமாகச் சித்திரிப்பதனால், இங்கேயும் தசரதன் உயிர் இராமனே என்ற கற்பனையைக் கவிஞன் தொடங்கியிருப்பது கண்கூடு.



இனி, தசரதனுடைய உயிர் இராமனே என்ற கற்பனைக்கு முத்தாய்ப்பாக, அந்த உயிர் எப்படி, எப்போது பிரிகிறது என்பதில் கம்பன் காட்டுகின்ற அதி அற்புதக் கவிதா மேதையைச் சொல்லுவோம். அதை வாசகர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். மேலே சொன்ன பாட்டில் இராமன் வனம் போகாதபடி வசிஷ்டர் தடுத்துவிடலாம் என்ற ஆசையினால் சற்றே ஆறுதல் அடைந்தவனாகி, மன்னன் மரண வேதனைத் துடிப்புகள் இல்லாமல், பேச்சும் நின்று களைப்போடு கண்களை மூடிக்கொண்டிருந்த நிலைமையைக் கண்ட கோசலை, 'கணவனுக்கு அபாயம் வந்துவிட்டதோ' என்று அஞ்சி, அரசனுடைய பாதத்தையும் உடலையும் முகத்தையும் தன் கைகளால் தடவிப் பார்க்கிறாள். அப்படித் தடவிக்கொண்டே "அரசே! குலகுருவாகிய வசிஷ்டர் சொன்னால் நமது ஐயன் இராமன் கேட்பான். வனம் போகாமல் வந்துவிடுவான். தாங்கள் வருத்தப்பட வேண்டாம்" என்று சொல்லுகிறாள்.

"மெய்யின் மெய்யே! உலகின்
வேந்தர்க் கெல்லாம் வேந்தே!
உய்யும் வகைநின் உயிரை
ஓம்பாது இங்ஙன் தேம்பில்
வையம் முழுதும் துயரால்
மறுகும் முனிவன் உடன்நம்
ஐயன் வரினும் வரும்ஆல்
அயரேல் அரசே! என்றாள்."

"சத்தியத்தின் வடிவமே! உலகிலுள்ள அரசர்க்கெல்லாம் அரசே! எல்லோருக்கும் நன்மையுண்டாகும்படி தாங்கள் உயிர் பிழைத்து இருக்கப் பார்த்துக்கொள்

ளாமல் இப்படிக் கலங்குவீர்களானால் உலகம் முழுவதும் துக்கத்தினால் துன்பப்பட நேரும். வசிஷ்ட முனிவருடன் நமது ஐயன் இராமன் வந்தாலும் வரலாம். ஆகையினால், தாங்கள் மனம் தளர வேண்டாம் என்றாள்'' என்பது பொருள்.

அப்படிச் சொன்ன கோசலைக்குத் தசரதன் கீழ்க் கண்டவாறு பதில் சொல்லுகிறான் :

''வன்மா யக்கை கேசி
வாக்கால் என்தன் உயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா
ளேனும் கூனி மொழியால்
தன்மா மகனும் தானும்
தரணி பெறுமாறு அன்றி
என்மா மகனைக் 'கான்ஏகு'
என்னான், என்னோ, என்றான்.''

''மகா மாயக்காரியான கைகேசி வரங்கேட்டு என்னை (அவளுடைய மகனுக்குப் பட்டம் கட்டிக்கொள்வதற்கு முன்னால்) இறந்து போகச் செய்ய வேண்டுமென்றே கூனியினுடைய சதியாலோசனையினால் செய்திருக்கிற வேலை இது. இராமன் பிரிந்தால் என் உயிரும் பிரியும் என்பதை அறிந்தே செய்திருக்கிறாள். இல்லாவிட்டால் தானும் தன் மகனும் ராஜ்யத்தை ஆள்வதற்கு, என் மகன் காட்டுக்குப் போய்விட வேண்டுமென்று ஏன் சொல்லுகிறாள் ?'' என்பது இப்பாட்டின் தாத்பரியம். இதிலும் 'இராமன் போவது தசரதனுடைய உயிர் போவதாகக்' கம்பன் சூசனையாகச் சொல்லுகிறான்.



இதற்கு அடுத்த பாட்டில்,

''பொன்ஆர் வலயத் தோளான்
கானோ புகுதல் தவிரான்
என்ஆர் உயிரோ அகலாது
ஒழியாது இதுகோ சலைகேள்
முன்நாள் ஒருமா முனிவன்
மொழியும் சாபம் உளதுஎன்று
அந்நாள் உற்றது எல்லாம்
அவளுக்கு அரசன் மொழிவான்.''

''கோசலை ! சொல்லுகிறேன். கேள். இரும்புக்கு நிகரான தோள்களையுடைய நம் இராமனோ காட்டுக்குப் போகாமல் இருக்கப் போவதில்லை ; என் உயிரும் போகாமல் இருக்கப் போவதில்லை. இதுவரையிலும் உன்னிடத்தில் சொல்லாதிருந்த ஒரு விஷயத்தை இப்போது சொல்கிறேன், கேள். வெகு காலத்திற்கு முன்னால் ஒரு முனிவன் எனக்கு இட்ட சாபம் ஒன்று உண்டு என்று அந்தச் சாபத்தைப்பற்றிய வரலாறுகளை அரசன் அவளுக்குச் சொல்ல ஆரம்பித்தான்'' என்பது இதன் அர்த்தம்.

தசரதன் தனக்குச் சாபம் வந்த விதத்தைச் சொல்கிறான் : ''கோசலை! இராமன் பிறப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னால் நான் வேட்டையாடச் சென்று, யானைகள் நீரருந்த வழக்கமாக வரக்கூடிய ஒரு நதித்துறைக்கு அருகில், மாலைப் பொழுதில் மறைந்து காத்துக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் இருட்டிவிட்ட பிறகு, யானை தும்பிக்கையால் தண்ணீர் இழுப்பது போன்ற ஓர் ஓசை கேட்டது. நான் சிறிதும் யோசனையில்லாமல் சப்தம் வந்த இடத்திற்குக் குறி வைத்துப் பாணத்தை

விட்டுவிட்டேன். அந்தப் பாணம் போய்ப் பாய்ந்த உடனே 'ஐயோ!' என்று அலறி விழுந்த அந்த மனிதக் குரலைக் கேட்டேன். 'அடடா! யானை என்று நினைத்து யாரோ மனிதன் மேல் அம்பெய்துவிட்டோமே!" என்று ஓடிப்போய்ப் பார்த்தேன். அங்கே ஒரு வாலிபன் பாணம் பட்டுத் துடித்துக்கொண்டிருந்தான். அவன் ஒரு முனிவனுடைய புதல்வன். கண்பார்வை அற்றுப்போன கிழவர்களாகிய தன் தாய் தந்தையருக்குத் தண்ணீர் கொண்டு போக வந்தவன் அச்சிறுவன். கவலையினால் கைகால் நடுக்கெடுத்து, தெரியாமல் செய்துவிட்ட குற்றத்துக்கு வருந்தி, அவனது வரலாற்றை விசாரித்தேன். அவன் தன் சரித்திரத்தைச் சொல்லி, 'இரண்டு கண்ணும் இல்லாத விருத்தாப்பியர்களான என் தாய் தந்தையர்களுக்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொண்டுபோக வந்தேன்; வினைப்பயனால் இப்படி விளைந்துவிட்டது. நீங்கள் வருத்தப்பட வேண்டாம். ஆனால், இந்தத் தண்ணீரை மட்டும் அவர்களுக்குக் கொடுத்து, நிகழ்ந்ததைச் சொல்லி என் நமஸ்காரத்தையும் தெரியப்படுத்துங்கள்' என்று சொல்லிவிட்டு இறந்துபோனான். நான் தாங்க முடியாத துயரத்தோடு அந்தக் கிழவர்கள் இருந்த இடத்திற்குத் தயங்கித் தயங்கி வந்தேன். காலடி ஓசையைக் கேட்ட அந்தக் கிழவர்கள் 'மகனே! என் இவ்வளவு நேரம்? எதனால் இப்படி மெதுவாக நடந்து வருகிறாய்? உன்னைப் பிரிந்து ஏங்கிக்கொண்டிருக்கிறோமே! ஓடி வா. வந்து தழுவிக்கொள்' என்று கை நீட்டி அழைத்தார்கள். நான் மிகவும் நடுங்கிக்கொண்டு நாக்குழறி, நடந்ததை எல்லாம் சொல்லி, 'தெரியாமற் செய்துவிட்ட பிழையை மன்னித்தருள வேண்டும்' என்று



அவர்களுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டேன். மகன் இறந்துவிட்டதைக் கேட்ட அவர்களுடைய துன்பத் துடிப்புகளை என்னென்று சொல்லுவேன்! அந்தத் துன்பத்தைக் கண்டு ஆற்றாதவனாகி, நான் 'அந்த நிமிஷம் முதல் அவர்களுடனேயே இருந்து, அவர்களுடைய புத்திரனைப் போலவே பணி செய்து, என் பாவத்தைத் தீர்த்துக்கொள்ள அநுமதிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு அந்தக் கிழவர்கள்

"கண்ணுள் மணிபோல் மகவை
 இழந்தும் உயிர்கா தலியா
உண்ண எண்ணி இருந்தால்
 உலகோர் என்னென் றுஉரையார்?
விண்ணின் தலைசே ருதும்யாம்;
 எம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா உடையாய்!
 அடைவாய் படர்வான்' என்னா"

என்றும்,

"தாவாது ஒளிரும் குடையாய்!
 தவறுஇங்கு இதுநின் சரணம்
காவாய்' என்றாய், அதனால்
 கடிய சாபம் கருதேன்.
ஏவா மகவைப் பிரிந்து, இன்று
 எம்போல் இடர்உற் றனைநீ
போவாய் அகல்வான் என்னாப்
 பொன்னாட் டிடைபோ யினரால்."

"கண்மணியே போன்ற அப்படிப்பட்ட அருமை மகனைப் பிரிந்து, இன்னும் இந்த உயிரின்மேல் ஆசை வைத்துச் சோறு தின்றுகொண்டிருந்தால் எங்களை உலகத்தார் என்ன சொல்லமாட்டார்கள்! நாங்கள் இதோ

இறந்து போகப்போகிறோம். நால்வகைச் சேனைகளை உடையவனே! நீயும் எங்களைப்போல் உன் அருமை மகனைப் பிரிந்து இறக்கக் கடவாய். தெரியாமல் செய்து விட்டேன், காப்பாற்ற வேண்டும்' என்று நீ கேட்டுக் கொண்டதனால் இதைக்காட்டிலும் பெரிய சாபமிட மனம் வரவில்லை. எங்கள் மகனைப் போலவே எதையும் ஏவாமல் செய்யக்கூடிய சத்புத்திரனைப் பிரிந்து நீயும் அந்தப் பிரிவாற்றாத் துன்பத்தினால் இறப்பாய்" என்றார்கள்.

"ஆனால், அப்போது அதனால் நான் சிறிதும் வருத்தமடையவில்லை.

"சிந்தை தளர்வுற்ற அயர்தல்
சிறிதும் இலனாய் இன்சொல்
மைந்தன் உளன்என் றதனால்
மகிழ்வோடு இவண்வந் தனன்ஆல்
அந்த முனிசொற் றமையும்
அண்ணல் வனம்ஏ குதலும்
எந்தம் உயிர்வீ குதலும்
இறையும் தவறா என்றான்."

"அவர்கள் அப்படி எனக்குச் சாபமிட்டதைப்பற்றி நான் அப்போது கொஞ்சங்கூட வருத்தப்படவில்லை. அதற்கு மாறாக, எனக்குப் புத்திரன் உண்டு என்பது அவர்களுடைய சாபத்தில் அடங்கியிருந்ததை எண்ணிச் சந்தோஷமே அடைந்தவனாக நகரத்துக்கு வந்தேன். அந்த முனிவருடைய சாபம் பலிக்க வேண்டிய காலம் இது. இராமன் வனம் போவதும், அதனால் என் உயிர் போவதும் சிறிதும் தவறா" என்றான் என்பது இந்தப் பாட்டின் அர்த்தம்.



இந்தப் பாட்டிலும், இராமன் போவதும் தசரதனுடைய உயிர் போவதும் ஒன்றாகவே சொல்லப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்படியாகத் தசரதன் தனக்குச் சாபம் வந்த சரித்திரத்தைக் கோசலைக்குச் சொல்லி, தனக்கு மரணம் சமீபித்துவிட்டதை உணர்ந்தான் என்றாலும், எப்படியாவது வசிஷ்டர் சமாதானம் சொல்லி இராமனைக் காட்டுக்குப் போகாமல் தடுத்துவிட்டால் தாவிலை என்ற சபலத்தினால், வசிஷ்டர் வரவை எதிர்பார்த்துக்கொண்டு உயிரை வைத்துக்கொண்டிருக்கிறான்.

இராமனைக் காட்டுக்குப் போகாமல் தடுத்துவிடுவதாக வெளியே வந்த வசிஷ்டரை, நகரத்து மக்கள் அரண்மனையில் நடந்த விஷயங்களைப்பற்றி விசாரிக்கிறார்கள், வசிஷ்டர், கைகேசி வரம் வாங்கிக்கொண்டதையும், அதனால் மன்னன் அடைந்துள்ள மரண வேதனையையும் ஜனங்களுக்குச் சொல்லுகிறார். இராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்றதைக் கேட்ட மகா ஜனங்கள் அளவு கடந்த துக்கம் அடைந்து, எப்படியாவது இராமன் வனம் போவதைத் தடுத்துவிட நினைக்கிறார்கள்.

இதற்குள் இராமன், அரண்மனையில் சுமித்திரை முதலான அனைவரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு, விடாப்பிடியாகத் தாங்களும் காட்டுக்கு உடன் வருவோம் என்று துணிந்துவிட்ட சீதை, லக்ஷ்மணன்—இருவருடனும் மரவுரி தரித்துக்கொண்டு காட்டுக்குப் பயணமாகிறான்.

அந்த இடத்தில் வசிஷ்ட முனிவர் வந்து. "இராமா, நீ காட்டுக்குப் போனால் அரசன் இறந்துவிடுவான்"

என்கிறார். அதற்கு இராமன், "தந்தை, தாய்க்குக் கொடுத்த வரங்கள் பொய்யாகிவிடாமல் நடந்துகொள்ள வேண்டியது என் கடமை. அவருக்கு அதனால் நேரும் துக்கத்தை மாற்றிவைக்க வேண்டியது குலகுருவாகிய தங்களுடைய கடமை. தர்மங்களுக்குப் பாதுகாப்பாளராகிய தாங்கள், என்னுடைய தர்மத்தை நான் செய்வதைத் தடுக்கலாமா?" என்று கூறுகிறான். அப்பொழுது முனிவர் வேறு ஒன்றும் சொல்ல முடியாமல் விழிக்கிறார்.

இராமனும் சீதையும் லக்ஷ்மணனும் சுமந்திரர் தேர்ப்பாகனாக, ஓர் இரதத்தில் ஏறிக்கொண்டு வனத்தை நாடிப் போகிறார்கள். நகரத்து மகா ஜனங்கள் அவ்வளவு பேரும் 'நாமும் இராமனுடன் சென்று அவன் தங்குகிற காட்டையும் நாட்டுக்குச் சமமாகச் செய்துவிடுவோம்' என்று இரதத்தை விடாமல் பின் தொடர்கிறார்கள். என்ன சொல்லியும் கேட்கவில்லை. பகலெல்லாம் பயணம் செய்து இரவைக் கழிக்க ஓரிடத்தில் இராமன் தங்குகிறான்; ஜனங்களும் தங்குகிறார்கள். நடு ஜாமத்தில் ஜனங்களெல்லாம் வழி நடந்த அலுப்பினால் அயர்ந்து தூங்கிவிட்ட பிறகு, இராமன் சுமந்திரரை இரகசியமாக அழைத்து, "ஜனங்கள் என்னைவிட்டுப் போகமாட்டார்கள். நாங்கள் மூவரும் இப்படியே வனத்துக்குள் போய்விடுகிறோம். நீங்கள் இரதத்தில் நாங்கள் இருப்பது போலவே பாவனை செய்து இரதத்தைத் திருப்பி அயோத்திக்கே ஓட்டுங்கள். ஜனங்களும் பின் பற்றி அயோத்தியை அடைவார்கள்" என்று வேண்டிக் கொண்டான். அப்படியே செய்வதாகச் சுமந்திரரும் இசைந்தார்.



இராமன், சீதை, லக்ஷ்மணன் மூவரும் வனத்தில் மறைந்துவிடுகிறார்கள். இரதம் அயோத்தியை நோக்கிப் புறப்படுகின்றது. ஜனங்களும் பின்னால் போகிறார்கள்.

இஃது இப்படியிருக்க, இராமனை வனம் போகாமல் தடுத்துவிடுவதாகச் சொல்லிவிட்டு அரண்மனையை விட்டு வெளியே வந்த வசிஷ்டர், மறுபடியும் உள்ளே போக மனம் வராமல், சுமந்திரருடைய வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தார். சுமந்திரர் இரதத்தோடு வந்தார். இராமனைக் காட்டில் விட்டுவிட்டு வந்த விவரங்களை எல்லாம் சுமந்திரர் சொல்லக் கேட்ட வசிஷ்டர் வருத்தம் மிகுந்து, வேறு வழியில்லாமல் சுமந்திரரோடு தாமும் அரண்மனைக்குள் புகுந்து, அரசன் படுத்திருந்த இடத்தை அடைந்தார்.

இதற்குள் 'இரதம் திரும்பி வந்துவிட்டது' என்று அரண்மனையில் இருந்தவர்கள் செய்த ஆரவாரம் அரண்மனையின் உள்ளும் புறமும் ஒலித்தது.

அதைக் கேட்ட தசரதன், போன உயிர் வந்தவன் போலக் கண் விழிக்கிறான்.

இங்கேதான், 'இராமன்தான் தசரதனுடைய உயிர்' என்று ஆரம்பித்த கற்பனையின் கவிதா சக்தியின் சிகரம் சித்திரிக்கப்படுகிறது. தசரதன் என்ற உடலை விட்டு, 'இராமன்' என்ற உயிர் எப்படிப் பிரிகிறதாகக் கம்பன் சொல்லுகிறான் என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். அங்கேதான் இந்தக் கற்பனையின் முத்தாய்ப்பு முடிகின்றது. பார்ப்போம்:

"இரதம்ஈங் குற்றது என்று ஆங்கு
யாவரும் இயம்பக் கேட்டு
வரதன்வந் துற்றான் என்னா
மன்னனும் மயக்கம் தீர்ந்தான்.
புரைதபு கமல நாட்டம்
பொருக்கென விழித்து நோக்கி
விரதமா தவனைக் கண்டான்.
'வீரன்வந் தனனோ' என்றான்."

'இரதம் வந்துவிட்டது' என்று அங்கிருந்த எல்லோரும் கூவியதைக் கேட்டு, 'இராமன் வந்துவிட்டான்' என்று அரசனும் மயக்கம் நீங்கித் தன்னினைவு வந்தவனாகி அதுவரையிலும் மூடிக்கொண்டிருந்த கண்களைச் சட்டென்று விழித்துப் பார்த்தான். எதிரில் நின்ற வசிஷ்டரைப் பார்த்து, 'வந்துவிட்டானா இராமன்?' என்றான் என்பது பொருள்.

இராமனை வனம் போகாமல் தடுத்துவிடுவதாகத் தைரியம் சொல்லிவிட்டுப் போனவர் வசிஷ்டரானதால் வசிஷ்டருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டுதான் தசரதன் தன்னுடைய உயிரையும் போய்விடாதபடி தடுத்துக்கொண்டு இருந்தான். தசரதன் இப்போது கண்ணை விழித்துப் பார்த்தபோது தன் முன்னால் முனிவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, இராமன் வந்துவிட்டதாகவே எண்ணிக்கொண்டு, 'வந்துவிட்டானா இராமன்?' என்று கேட்டான்.

வசிஷ்டர் என்ன பதில் சொல்லுவார் :

"இல்லை, என்று உரைக்கல் ஆற்றான்
ஏங்கினன் முனிவன் நின்றான்
வல்லவன் முகமே நம்பி
வந்திலன், என்னும் மாற்றம்



சொல்லலும், அரசன் சோர்ந்தான்
துயர்உறும் முனிவன் 'நான் இவ்
அல்லல் காண்கிலேன்' என்னா
ஆங்குநின்று அகலப் போனான்."

வசிஷ்ட முனிவர் வெட்கத்தாலும் வருத்தத்தாலும், 'இராமன் வரவில்லை' என்று சொல்ல வாய் வராமல் ஏங்கி நின்றார். அவருடைய முகத்தோற்றமே 'இராமன் வரவில்லை' என்று சொல்லுவதைக் கண்ட மன்னன் சோர்வு அடைந்தான். அந்தத் துன்பத்தைப் பார்க்கச் சகிக்காமல் வசிஷ்டர் அவ்விடத்தைவிட்டு அப்பால் சென்றுவிட்டார் என்பது அர்த்தம்.

வசிஷ்டர் அப்பால் சென்றதும் அவருக்கு அடுத்து நின்ற சுமந்திரனைப் பார்த்துத் தசரதன்,

"நாயகன் பின்னும் தன்தேர்ப்
பாகனை நோக்கி, 'நம்பி
சேயனோ அணியனோ' என்று
உரைத்தலும் அனையான், 'செய்ய
வேய்உயர் கானில் தானும்
தம்பியும், மிதிலைப் பொன்னும்
போயினன்' என்றான், என்ற
போழ்தத்தே ஆவி போனான்."

தசரத மன்னன் அதன் பிறகு தன் தேர்ப்பாகனாகிய சுமந்திரனைப் பார்த்து, 'இராமன் தூரத்தில் இருக்கிறானா, பக்கத்தில் இருக்கிறானா?' என்று கேட்டான். அதற்குச் சுமந்திரன், 'உயரமான மூங்கில் அடர்ந்த காட்டுக்குள் இராமன் தம்பியோடும் ஜானகியோடும் போய்விட்டான்' என்று சொன்ன க்ஷணமே தசரதன் உயிரும் போய்விட்டது என்பது.

'போயினன் என்றான், என்ற போழ்தத்தே ஆவி போனான்' என்று கவிஞன் கொடுத்திருக்கிற தீர்மான வேலைப்பாட்டில் அமைந்துள்ள இலக்கிய அழகு எண்ணற்கு அரியது என்பதை இங்குள்ள இலக்கிய இன்பத்தின் சிகரம்.

உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் தங்குகின்ற ஒரே உடலாக இருந்த தசரதனுக்கு, இராமன் பிறந்தபின் அந்த இராமனே உடலும் உயிரும் ஆகிவிடுகிறான். ஆரம்பத்தில் வெறும் ஆசையினால் உயிர் போலக் கருதப்பட்ட இராமன், சிறுகச்சிறுக உண்மையிலேயே தசரதனுடைய உயிராகவே உணரப்படுகிறான். இராமனை யாராவது கேட்டால் தசரதனுக்கு அவனுடைய உயிரைக் கேட்பது போல் உறுத்துகின்றது. இராமனைப் பிரிவதென்றால் தசரதனுக்கு உயிரைப் பிரிவது போன்ற வருத்தம் உண்டாகிறது. கடைசியில், இராமன் போனது தசரதனுடைய உயிர் போனது என்று முடிகிறது. இந்தக் கற்பனையைப் படிப்படியாக வளர்த்துக்கொண்டு போயிருக்கிற கவிதா சாதுரியத்தை அங்கங்கே பரவிக் கிடக்கிற பல பாட்டுகளையும் தொகுத்துப் பார்க்கிற போதுதான் காணமுடியும். அந்த இலக்கிய இன்பந்தான் இந்தக் கட்டுரையில் பிரதானமாக எடுத்துக்காட்டப்படு கிறது.

## 4. மதியின் மறு

கம்பன் கவிதையில் அநேக விதமான இலக்கிய இன்பங்கள் நிரம்பிக் கிடக்கின்றன. அவற்றுள், மற்றெல் லாக் கவிஞர்களும் 'என்ன சொன்னோம்' என்பதைக்கூட மறந்துவிடக்கூடிய வெகு சாதாரண உபமானங்களையும் வெகு அசாதாரணமாகும் விதமாகச் சிறிதும் மறக்காமல் 'எடுத்ததை முடிக்கின்ற அபூர்வமான ஆற்றல் கம்பனுக்கே ஏக போகம்' என்று தீர்மானமாகச் சொல்லி விடலாம்.

கம்பனுடைய உபமானங்கள் ஒவ்வொன்றும் ஆணித் தரமானதாகத்தான் இருக்கும். ஒவ்வோர் உபமானத் தையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடுதான் உபயோ கிப்பான். அந்தக் குறிப்பை அநேக ஆயிரம் பாட்டு களுக்கு அப்பால் அமைப்பான். அதை நாம் அறிய நேருகின்ற போது அதி அற்புதமான இலக்கிய இன்பத்தை அடைவோம். வேறு எந்தப் பெரும் புலவனிடத்திலுங்கூட அந்த அற்புதத்தைப் பார்க்க முடியாது. அதுவும் பத்தாயிரத்து ஐந்நூற்று எண்பத் தேழு பாட்டுகள் அடங்கினதாக அறியக்கிடக்கிற அவ்வளவு பெரிய காவியத்தில், சின்னஞ்சிறு விஷயங் களையும் சிறிதுகூட மறவாமல் தொடர்வது மிகவும் துர்லபமானது. இடைச்செருகல் என்று சில பாடல்களை நீக்கிவிட்டாலுங்கூட கம்பன் காவியம் அற்ப சொற்பம் அல்ல.

'சாதாரணம்' என்று நாம் கருதிவிடக்கூடிய ஓர் உபமானத்தை,ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு சொல்லி, அதைக் கவனித்துப் பார்க்கிறபோது எவ்வளவு அசாதாரண கவித்திறத்தோடு அமைத்திருக்கிறான் என்னும் இலக்கிய இன்பத்தை எடுத்துக்காட்ட ஓர் உதாரணத்தைச் சொல்லுவோம் :

கூனியினால் கலைக்கப்பட்ட கைகேசி தசரதனிடத்தில் வரம் வாங்குவதற்காகப் பாசாங்கு பண்ணுகிறாள். அதற்காகத் தன்னை அலங்கோலப்படுத்திக்கொள்கிறாள் :

" கூனி போனபின் குலமலர்க்
குப்பைநின்று இழிந்தாள்
சோனை வார்குழல் கற்றையில்
சொருகிய மாலை
வான மாமழை நுழைதரு
மதிபிதிர்ப் பாள்போல்
தேன்அ வாவுறு வண்டினம்
அலமரச் சிதைந்தாள்.''

கூனி போன பிற்பாடு கைகேசியானவள், பலவிதமான உயர்ந்த ஜாதிப் புஷ்பங்கள் பரப்பியிருந்த பஞ்சணையை விட்டு இறங்கினாள். கன்னங் கரேலென்று இருந்த அவளுடைய கூந்தலில் செருகப்பட்டிருந்த பூ முடிப்பை, இருண்ட மேகங்களுக்கு இடையே இருந்த சந்திரனை இழுப்பது போல் எடுத்து, அந்தப் பூச்செண்டில் தேனுக்காக நாடிக்கொண்டிருந்த வண்டுகள் பயந்து ஓடும்படி, அந்தப் பூமாலையைச் சின்னபின்னமாகப் பிய்த்தெறிந்தாள் என்பது பொருள்.



அடுத்த பாட்டில்,

" விளையும் தன்புகழ் வல்லியை
வேர்அறுத்து என்ன
கிளைகொள் மேகலை சிந்தினள்
கிண்கிணி யோடும்
வளைதுறந்தனள்; மதியினின்
மறுத்துடைப் பாள்போல்
அளக வாள்நுதல் அரும்பெறல்
திலகமும் அழித்தாள்.''

(இராமனைப் பெற்றவள் கோசலையானாலும் அவனிடத்தில் அளவற்ற வாஞ்சையுள்ளவளாக அவனை வளர்த்தவள் கைகேசியே; ஆனதால் கைகேசிக்கு) விளைந்து, கொடி ஓடிப் படர்ந்துகொண்டிருந்த 'புகழ்' என்ற செடியை வேரோடு பிடுங்கியெறிந்துவிட்டதைப் போல, தான் அணிந்திருந்த பல கிளைகளுள்ள 'மேகலை' என்னும் ஆபரணத்தை எடுத்து முரித்துப் பூமியில் சிதறிப் போட்டாள். மேலும், கிண்கிணி, கையிலிருந்த நவரத்தின வளையல்கள் — எல்லாவற்றையும் கழற்றி எறிந்தாள். சந்திரனிடத்திலிருந்து களங்கத்தை எடுத்துவிட்டது போல, அவளுடைய பூரணச்சந்திரனைப் போன்ற முகத்தில் நெற்றியில் கறுப்பாக இருந்த பொட்டையும் அழித்தாள் என்றும்,

அதற்கடுத்த பாட்டில்,

" தாவில் மாமணிக் கலன்மற்றும்
தனித்தனி சிதறி
காவி நன்குழல் கானிலம்
தைவரப் பரப்பிக்

காவிஉண்ட கண் அஞ்சனம்
கான்றிடக் கலுழாப்
பூஉதிர்ந் ததுஓர் கொம்புஎனப்
புவிமிசைப் புரண்டாள்.''

குற்றமில்லாத இரத்தின மணிகள் உள்ள மற்ற நகைகளையும் தனித்தனியே எடுத்தெறிந்துவிட்டு, புனுகு, கஸ்தூரி முதலியவைகளைக்கொண்டு வாசனை ஊட்டப்பெற்ற அவளுடைய கூந்தல் தரையில் விரிந்து பரவிக் கிடக்க, குவளை மலர் போன்ற அவளுடைய கண்களில் தீட்டப்பட்டிருந்த அஞ்சன மைகரைந்து வழிந்து ஓடும்படி கண்ணீர் விட்டு அழுதுகொண்டு, பூவெல்லாம் உதிர்ந்து போன ஒரு கொம்பு போலப் பூமியில் கிடந்து புரண்டாள் என்றும்,

கடைசியாக,

''நவ்வி வீழ்ந்துஎன நாடக
மயில் துயின்று என்ன
'கவ்வை கூர்தரச் சனகியாம்
கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்கும்' என்று அயோத்திவந்து
அடைந்த அம்மடந்தை
தவ்வை யாம்எனக் கிடந்தனள்
கேகயன் தனையை''

மான் விழுந்துவிட்டது போலவும், கலாபம் விரித்து நடனம் செய்துகொண்டிருந்த மயில் சாய்ந்துவிட்டது போலவும், (அயோத்திக்குப்) பல துன்பங்கள் இனி வரும்படி அங்கிருந்து அதன் லக்ஷ்மியாகிய சீதை போய் விடப்போகிறாள் என்பதை அறிந்து, அந்த ஸ்ரீதேவி போவதற்கு முன்னாலேயே அயோத்திக்கு வந்துவிட்ட



அவளுடைய அக்காள் மூதேவியைப் போலக் கிடந்தாள் கேகய ராஜன் மகளாகிய கைகேசி என்றும் மேற்சொன்ன நான்கு பாடல்களால் கைகேசியின் அலங்கோலத்தைக் கம்பன் அலங்கரிக்கிறான்.

முதல் பாட்டில், மேகத்தினிடையே இருந்த சந்திரனை இழுத்தெடுத்தது போல, கைகேசி தன் தலையில் அணிந்திருந்த புஷ்பங்களை எடுத்தெறிகிறாள்.

இரண்டாவது பாட்டில், அந்தச் சந்திரனிடத்தில் இருந்த களங்கத்தை எடுத்துவிட்டது போல, கைகேசி தனது நெற்றியிலிருந்த பொட்டைத் துடைத்துவிடுகிறாள்.

மூன்றாவது பாட்டில், அழுகையும் அமங்கலமும் ஆரம்பமாகின்றன.

நான்காவது பாட்டில், அயோத்தியில் லக்ஷ்மீகரம் போய் மூதேவித்தனம் குடி புகுந்துகொள்ளுகிறது.

இந்த நான்கு பாடல்களும் ஒரே குறிப்புக் கொண்டவை. அஃதாவது, இனிமேல் அயோத்தியில் விளையப்போகிற விபரீதங்களுக்கு அறிகுறிகளாக அமைக்கப்பட்டன. இதில் உபமானமாகச் சொல்லப்படுகிற முக்கிய விஷயம், சந்திரனைப் பிடித்து அதிலிருக்கும் களங்கத்தை அகற்றிவிடுவதுதான்.

''..........மதியினின்
மறுத்துடைப் பாள்போல்
அளக வாள்நுதல் அரும்பெறல்
திலகமும் அழித்தாள்.''

வழக்கமாக ஓர் ஒளி பொருந்திய பொருளில் இருந்து அதிலுள்ள இருளை அகற்றினால், அந்தப் பொருள்

முன்னிலும் அதிகப் பிரகாசம் அடைவது நிச்சயம். இங்கே கைகேசி, தன்னுடைய முகத்திலிருந்த திலகத்தை அழித்தபின் முன்னிலும் அதிக அழகையாவது சந்தோஷத்தையாவது அடைகிறாளா? இல்லை. அதற்கு நேர்மாறாக, அழகுக் குறைவையும் துக்கத்தையுமே அடைகிறாள். அப்படியிருக்க, கம்பன் இந்த உபமானத்தை என் உபயோகித்திருக்கிறான் என்பது இலக்கிய ரஸிகர்கள் எண்ணிப் பார்க்கத்தக்கது.

ஒரு சுமங்கலிப் பெண் தன் நெற்றியிலுள்ள திலகத்தை அழிப்பது இந்துக்களுக்கு அமங்கலத்துக்கு அடையாளம். அதே போல, சந்திரனுக்கு இயல்பாக இருக்க வேண்டிய களங்கம் போய்விடுவது உலகத்துக்கு உண்டாகப்போகிற உற்பாதங்களுக்கு அடையாளம் என்பது இயற்கை சாஸ்திரம். சந்திரனுக்குக் களங்கம் போய்விடுவது, சூரியனுக்குக் களங்கம் தோன்றுவது, மேகம் இல்லாமல் இடி இடிப்பது, நட்சத்திரங்கள் இடம் மாறுவது, வால் நட்சத்திரங்கள் வருவது முதலானவைகள் உலகத்துக்கு விபரீத காலம் வரப்போவதை அறிவிக்கக் கூடிய சின்னங்கள் என்பது இந்த நாட்டில் வெகுகாலமாக சாஸ்திர, இதிகாச புராணங்களில் சொல்லப்பட்டு வருகிற சத்தியங்களாக நம்பப்பட்டன. இக்காலத்திய மேல் நாட்டு அறிஞர்களும் இதில் உண்மை இருப்பதாகவே ஒத்துக்கொள்கிறார்கள்.

கம்பன் சிருஷ்டிக்கிற காவிய உலகத்துக்கு கைகேசி, அவளுடைய நெற்றியிலிருந்த திலகத்தை அழித்ததி லிருந்துதான் துன்பங்கள் ஆரம்பமாகின்றன. வரம் கேட்பதும், இராமன் வனம் போவதும், மன்னன் மரணம்



அடைவதும், பரதன் துறவு கொள்வதும், சீதையை இராவணன் சிறை வைப்பதும், வாலி வதமும், லங்கா தகனமும், யுத்தமும் இராவணாதியரின் அழிவும் என்னும் துக்கமான நிகழ்ச்சிகளே நிறைந்திருக்கின்றன. இராவண சம்மாரம் வரையிலும் கம்பனுடைய காவிய உலகத்திற்குத் துன்ப காலமே. இராவண சம்மாரத் திற்குப் பிறகு சீதை மீட்கப் பெற்றவளாகி, அவளுடைய மனம் குளிர்ந்த பிறகுதான் கம்பனுடைய உலகத்துக்குச் சுபிட்ச காலம் மீண்டும் ஆரம்பமாகின்றது. அந்த நல்ல காலம் வருகிறவரைக்கும் கம்பனுடைய கவியுலகத்தில் சந்திரன் களங்கம் இல்லாதவனாகவே இருந்து வந்த தாகக் கம்பன் சொல்லுகிறான்.

அஃது எப்படி என்பதைப் பார்ப்போம் :

இராவண சம்மாரம் முடிந்தது. இராமன், லக்ஷ் மணனை அனுப்பி, விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்யச் சொல்லிவிட்டு, அனுமானை அனுப்பி அசோக வனத்திலிருக்கும் சீதைக்கு இராவணன் அழிக்கப்பட்டு விட்ட சமாசாரத்தை அறியப்படுத்தச் செய்கிறான். அனுமான் அசோக வனத்துக்குச் சென்று, தன்னையே மறந்தவனாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இரண்டு கரங்களையும் கூப்பி உச்சியில் வைத்துக்கொண்டு, இராமநாமத்தைப் பூஜித்துக்கொண்டு, சீதைக்கு முன்னால் வந்து,

"ஏழை ! சோபனம், ஏந்திழை! சோபனம்,
வாழி சோபனம், மங்கல சோபனம்,
ஆழி யான அரக்கனை ஆரியச்
சூழி யானை குமைத்து சோபனம்."

'ஏழைமையை மேற்கொண்டு தவம் புரிந்தவளே, மங்களம். இனி ஆபரண அலங்காரங்களுடன் செல்வி யாகப் போகிறவளே மங்களம். நிரந்தரமான மங்களம். மங்களம் நிறைந்த நற்செய்தி. சமுத்திரத்துக்குச் சமான மான அரக்கன் இராவணனை மேலோனாகிய இராமன் கொன்றுவிட்டான், சோபனம்' என்று சொன்னான்.

இதைக் கேட்ட சீதைக்கு உண்டான எல்லையற்ற இன்ப உணர்ச்சியையும், அந்தப் பூரிப்பினால் ஏற்பட்ட பொலிவையும் கம்பன் ஓர் அற்புதமான பாட்டில் அமைக் கிறான். அந்தப் பாட்டைக் கவனமில்லாமல் சாதாரண மாகப் பார்க்கும்போது ஏதோ ஒரு நல்ல வர்ணனை மட்டுந்தான் தோன்றும். ஆனால், கம்பனுடைய புலமைக் கண்கொண்டு அதன் கருத்தை ஆராயும்போதுதான் அதன் அழகு புலப்படும். அந்தப் பாடல் :

"ஒருகலைத் தனிவெண் மதிநா ளொடும்
வருகலைக் குவரும் மாறு மான்உறப்
பொருகலைக் குலம் பூத்தது போன்றனள்
பருகல் உற்ற அமுது பயந்தநாள்."

இதன் அர்த்தம் : 'ஒற்றைக் கலையோடு மட்டும் இருண்டிருந்த அமாவாசைச் சந்திரன் நாளுக்கு நாள் ஒவ்வொரு கலையாக வளர்ந்து பூரணச் சந்திரன் ஆவதை விட்டு, பதினாறு நாள்களில் ஒவ்வொன்றாக வளர வேண்டிய எல்லாக் கலைகளும் ஏக காலத்தில் கூடி, அந்தச் சந்திரனுடைய களங்கமும் அதன் இயல்பான மான் வடிவத்தை அடைந்துவிடும்படி பூரணம் பெற்று விட்ட சந்திரனைப்போல் பூரிப்படைந்து பிரகாசித்தாள் சீதை. அந்த அமுதம் போன்ற நற்செய்தியைக் காது வழியாகப் பருகும் அந்தச் சமயத்தில், என்பது.



இதில் இராவணன் கொல்லப்பட்டுவிட்டான் என்ற தனக்கு இதமான சேதியைக்கேட்ட சீதை, அமாவாசைச் சந்திரனைப் போல ஒளி மழுங்கியிருந்த நிலைமை திடீ ரென்று மாற, உடனே பூரணச் சந்திரனைப் போலப் பிரகாசம் அடைந்தாள் என்பதுதான் முக்கிய கருத்து. அதற்கு 'அமாவாசைச் சந்திரனைப் போல் மங்கியிருந்த ஜானகி, அந்தச் சேதியைக் கேட்ட க்ஷணத்திலேயே பூரணச் சந்திரனாகப் பொலிவடைந்தாள்' என்று மட்டும் சொன்னாலே போதுமானது. அதைவிட்டுக் கம்பன் சுற்றி வளைத்து 'நாளொடும் வருகலைக்கு வரும் மறுமான் உற' என்று 'அந்தக் கலைகளோடு அதன் களங்கமும் பூரண உருவோடு பொருந்திக்கொள்ளும்படி' என்று களங்கத்தை அவசியம் போல வலிந்து வருவித்துச் சொல்லுவானேன் ?

ஏனென்றால், முன்னே 'மதியினின் மறுத் துடைப்பாள் போல்... அளக வாள்நுதல் அரும்பெறல் திலகமும் அழித்தாள்' என்றபடி, கைகேசி வரம் கேட்பதற்காகத் தன்னை அலங்கோலப்படுத்திக்கொண்ட போது சந்திரனிடத்திலிருந்து களங்கத்தை எடுத்துவிட்டாள். அதனால் கம்பனுடைய கவியுலகத்தில் பல விபரீதங்கள் விளைந்தன. இராவணன் ஒழிகின்ற வரையிலும் அந்த விபரீதத்தின் துன்பங்கள் மாறி, விபரீதங்கள் விட்டொழி கின்றன. ஆதலால், துன்பகாலம் நீங்கி இன்பகாலம் ஆரம்பிக்கிற இதே சமயத்தில் முன்னே சந்திரனிடத்தி லிருந்து நீக்கிவிட்ட களங்கத்தை மறுபடியும் அதனுடன் சேர்த்துவிடாவிட்டால் அந்த விபரீத சந்திரன் இருந்து கொண்டே இருப்பான் என்றுதான் கம்பன் இந்தப்பாட்டில்

வேண்டுமென்றே களங்கத்தை வலிய வருவித்துப் பேசுகின்றான்.

கைகேசி வரம் கேட்குமுன், 'மதியினின் மறுத்துடைப்பாள்போல' என்று களங்கத்தை எடுத்துவிட்ட பாடலுக்கும் இப்போது சீதாபிராட்டியின் துன்பங்களெல்லாம் தொலைந்து சுபிட்சம் ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக 'வரும்மறு மான்உற' என்று களங்கத்தைச் சந்திரனிடத்திலேயே திருப்பிச் சேர்த்துவிட்ட இந்தப் பாடலுக்கும் மத்தியில் எட்டு ஆயிரத்து அறுநூற்றுப் பதினாறு பாடல்கள் இருக்கின்றன என்பதை எண்ணும்போதுதான் கம்பனுடைய கவிதா சக்தியின் பெருமையும் அதனால் நாம் அடையும் இலக்கிய இன்பமும் சிறப்படைகின்றன.

## 5. விதியாவது ஒன்றாவது!

எந்த நியாயத்தையும் கட்டாயப்படுத்தாமல் கற்பிப்பது கம்பனுடைய கலைத்திறங்களில் ஒன்று. 'விதி' என்ற விஷயத்தை நெடுங்காலமாக எல்லா அறிஞர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த 'விதி'யை 'ஊழ்', 'வினைப்பயன்', 'தலையெழுத்து', 'கர்ம பலன்', 'தெய்வ சித்தம்' என்ற பல பெயர்களால் குறிப்பிடுகிறார்கள். நம்முடைய நாட்டு இலக்கியங்களில் இதற்கு ஏராளமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்நிய மொழி இலக்கியங்களிலும் 'விதி' என்பதன் கருத்து விரவியிருக்கின்றது. 'தெய்வ நம்பிக்கை' என்ற குறிப்பிட்ட கொள்கை இல்லாதவர்களுங்கூட இந்த 'விதி' என்பதிலுள்ள அர்த்தத்தை அங்கீகரிப்பதாகத்தான் எழுதியிருக்கிறார்கள். பொதுவாக, உலகத்தின் சிறந்த எழுத்தாளர்கள் எல்லோரும் இதைக் கையாண்டிருக்கிறார்கள்.

ஆனாலும், மனித சமூகத்திற்கு அறிவு வந்த நாள் தொட்டு இந்த 'விதி' என்பதும், 'கடவுள் உண்டா, இல்லையா' என்பதைப் போலவே விவாதத்துக்கான விஷயமாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

'விதி' என்பது நாம்செய்யும் காரியத்தின் பலன்தான் என்பதை ஏறத்தாழ எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அந்தக் காரியம் நாம் அறிய, நமது கண்ணுக்குமுன்னால் நடந்து, அதன் பலனை நேரடியாக அநுபவிக்கிறபோது அது சரியான 'காரண—காரியம்' ஆகிவிடுகிறது. அப்

போது அதை மறுக்க மனம் வருவதில்லை. ஆனால், அந்தக் காரணச் செயலை நாம் கண்ணாரக் காணாத காலத்தில் அதை ஒப்புக்கொள்ள முடிவதில்லை. அதுவும் ஒரு குறிப்பிட்ட காரியம் நேர்ந்துவிட்டதற்குக் காரணம் சமீபத்தில் நடந்த எதுவும் அல்ல. ஆனால், ஏதோ முன்ஜன்மம் என்று சொல்லுகிறார்களே அதில் நடந்த காரியத்தின் பலன் இது என்கிறபோது அதை நம்புவது எளிதல்ல. எல்லாச் சமயத்திலும் எல்லாக் காரியங்களிலும் அப்படி நம்பிவிடுவதும் சரியல்ல. 'விதி'யை நம்புவதாக எடுத்ததற்கெல்லாம், 'விதி', 'தலையெழுத்து' என்றே சொல்லிக்கொண்டு, சொந்த முயற்சிகளைவிட்டு, சோம்பிவிட நேர்ந்துவிடுகிறது. 'விதி'யை நம்பாததாக, எந்தக் காரியத்தையும் இஷ்டம் போல் முடித்துவிட முடியும் என்ற வெறும் அகங்காரத்தில் அழுந்திப் போகவும் நேரிடுகிறது. இந்த இரண்டு தீமைகளுக்கும் இடையில் 'விதி' என்பதைச் சரியான முறையில் மதித்து நடந்துகொள்வது கஷ்டந்தான் என்றாலும், அப்படி நடந்துகொள்வதுதான் அறிவு.

நம்முடைய இஷ்டம் போல நாம் கோரிய எல்லா விஷயங்களும் கூடிவருகிறபோது நாம் 'விதி' என்பதை மதிப்பதே இல்லை. அன்றியும், அதை மிகவும் அவமதித்து ஏளனம் செய்கிறோம். 'விதி'யை நம்புகின்றவர்களுங்கூட ஜனங்களுக்கு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் மூட்டிவிட்டுத் தங்களுடைய அற்ப ஆசைகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக 'விதியாவது ஒன்றாவது! வித்யென்று சொல்லுவது வீணர்கள் பேச்சு. சோம்பேறி வேதாந்தம்' என்று சொல்லிவிடுகிறார்கள்.



ஆனாலும், 'கர்ம பலன்' என்கிற 'விதி' என்பது உண்மைதான்; அதை மதித்து நடந்துகொள்வதுதான் அறிவுடைமை என்பதை எல்லா இலக்கியங்களும் போதிக்கின்றன. அந்த இலக்கிய போதனை இல்லாமலேகூட இந்த 'விதி'யை நம்பவேண்டிய கட்டாயம் நமக்கே வந்துவிடுகின்றது. எல்லாக் காரியங்களும் நம்முடைய இஷ்டம்போல முடிகிறபோது 'விதி' என்பதைச் சிறிதும் நினைக்காத நாம் ஒரு காரியத்தை எவ்வளவு எச்சரிக்கையுடன் கண்ணும் கருத்துமாக முயற்சி செய்தும் அது முடியாமலோ அல்லது நாம் எதிர்பார்த்த பலனுக்கு முற்றிலும் விரோதமான பலனைக் கொடுப்பதாகவோ போய்விடுகிறபோது நம்மையும் மறந்து அதை 'விதிப் பயன்' என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒப்பற்ற முறையில் அறங்களை வற்புறுத்திப் போதிக்கின்ற திருவள்ளுவருங்கூட, 'ஊழ்' என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று முடிக்கிறார். திருக்குறள் வெறும் திண்ணை வேதாந்தம் அல்ல. மனிதன் தன்னுடைய சொந்த முயற்சியினால் எதையும் சாதிக்க முடியும் என்று போதிக்கவென்றே எழுதப்பட்டது. செயலற்ற சோம்பேறித் தத்துவங்களைக் கண்டித்து, 'செய்—செய்—செய்' என்று தூண்டிவிடவே துணையான நூல். அந்தத் திருக்குறளில் மனிதன் செய்யவேண்டிய எல்லா முயற்சிகளுக்கும் மார்க்கம் சொல்லிவிட்டுக் கடைசியாக நம்முடைய முயற்சிகள் எல்லாம் முடியாமற் போய்விடுகிறபோது அது 'ஊழ் வினையின் விதி' என்று சமாதானப்படுத்திக்கொள்ள,

"ஊழில் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந்து உறும்"

என்றார்.

இந்த 'விதி'யை மறுக்கின்றவர்களும் தம்மை மறந்து ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற நியாயத்தைக் கம்பன் எப்படிக் கட்டாயப்படுத்தாமல் காண்பிக்கின்றான் என்பதைப் பாருங்கள்.

கைகேசி வரம் வாங்கிக்கொண்ட உடன் தசரதன் மூர்ச்சையாகிவிடுகிறான்; விடிந்தவுடன் பட்டாபிஷேகத்துக்காகத் தசரதனைத் தேடிக் கைகேசியின் மாளிகைக்கு வந்த சுமந்திரரைக்கொண்டு கைகேசி இராமனை வரவழைக்கிறாள்; வந்த இராமனை வாயிலிலேயே சந்தித்து, "பரதன் பட்டாபிஷேகம் செய்துகொள்ள வேண்டும் என்றும், நீ காட்டுக்குப் போய்ப் பதினான்கு வருஷம் தவசிகளோடு வசித்துவிட்டு வரவேண்டும் மன்றும் அரசர் ஆணை இட்டிருக்கிறார்" என்று சொல்லுகிறாள். இராமன் உடனே அதை ஏற்றுக்கொண்டு அங்கிருந்தபடியே வனம் போகப் புறப்பட்டான். தன்னுடைய தாயாகிய கோசலையிடம் விடை பெற்றுக் கொள்ளப் போகிறான். அவள் பரதனுக்குப் பட்டாபிஷேகம் என்பதைக் கேட்டு விகற்பம் எண்ணாமல் அதை அங்கீகரித்து வாழ்த்துகிறாள். ஆனால், இராமன் காட்டுக்குப் போக வேண்டும் என்பதைக் கேட்டுப் பதை பதைத்து, அதைப்பற்றி அரசனிடம் கேட்கப் போய்விடுகிறாள். அதன்பின், இராமன் சுமித்திரையிடம் சொல்லிக் கொள்வதற்காகப் போகிறான்.



அந்தச் சமயத்தில் இராமன் காட்டுக்குப் போவதைத் தடுத்துவிடுவதாகத் தசரதனுக்குத் தேறுதல் சொல்லிவிட்டு வசிஷ்டர் கைகேசியின் மாளிகைக்கு வெளியே வருகிறார். அங்கே பட்டாபிஷேகம் தாமதப்படுவதற்குக் காரணம் தெரியக் கூடிவிட்ட சிற்றரசர்களும் மகாஜனங்களும் முனிவரைக் கேட்கிறார்கள். கைகேசி வரம் வாங்கிக்கொண்டதையும், இராமன் வனத்துக்குப் போகப் புறப்பட்டதையும் வசிஷ்டர் சொன்னார். அதைக் கேட்டு அங்கிருந்த மகாஜனங்கள் ஓலமிட ஆரம்பித்து, அந்தச் செய்தி நகரத்தில் பரவுகின்றது. அதை,

"கேட்டான் இளையோன்
கிளர்ஞாலம் வரத்தி னாலே
மீட்டாள் அளித்தாள் வனம்
தம்முனை வெம்மை முற்றி
தீட்டாதவேல்கண் சிறுதாய்
எனயாவ ராலும்
மூட்டாத காலக் கடைத்தீ
எனமூண்டு எழுந்தான்."

கேட்டான் லக்ஷ்மணன் !...வரத்தினால் இராமனுக்குப் பட்டாபிஷேகம் என்பதை மாற்றி, அவனுக்கு வனவாசத்தைக் கொடுத்தாள் தன்னுடைய-அண்ணனுடைய சிறிய தாயான கைகேசி என்பவள். உடனே யுகாந்த கால நெருப்பைப் போல் சீறி எழுந்தான்.

கோபாவேசம் பொங்கிக் கண்களில் கனல் வீச, உடல் வியர்க்க, சண்டமாருதம் போலப் பெருமூச்சு விட்டு உகைளந்த பெருமானைப் போல நிமிர்ந்து நின்றான் லக்ஷ்மணன். "சிங்கக் குட்டிக்காகச் சமைத்த உணவை நாய்க்குட்டிக்கு ஊட்ட விரும்புகிறாளா கைகேசி!

நல்ல புத்தி!'' என்று கைகொட்டிச் சிரித்து, தன் வாளாயுதத்தை இடுப்பில் கட்டி, வில்லைக் கையிலேந்தி, அம்புத்தூணியைத் தோளில் தரித்துக்கொண்டு, மலை போன்ற தோளிலும் மார்பிலும் போர்க்கவசம் பூண்டு, அண்டமெல்லாம் நடுங்கிக் கடலும் குமுறும்படி நாணொலி எழுப்பி, தானும் தன்னுடைய தமையன் இராமனும் தவிர, மற்ற உயிர்களெல்லாம் நடுங்கி ஒடுங்கும்படி, ''என்னை எதிர்க்கின்றவர்களையெல்லாம் கொன்று குவித்துவிட்டு என் மன்னனாகிய இராமனுக்கே பட்டாபிஷேகம் செய்யப்போகிறேன். இதைத் தடுக்கக் கூடியவர் தடுக்கட்டும்'' என்றான்.

இப்படி, கண்டவர்கள் நடுங்கும்படி பேசிக்கொண்டு, லக்ஷ்மணன் இராஜ விதிகளில் திரியும்போது, சிற்றன்னை சுமித்திரையின் மனையில், கைகேசி இழைத்துவிட்ட கொடுமையைக் கேட்டுக் குலைந்து வருந்திய சுமித்திரைக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்த இராமன், லக்ஷ்மணன் போருக்கு அழைப்பது போன்ற வில்லோசையாகிய இடி முழக்கத்தைக் கேட்டான். உடனே இராமன் லக்ஷ்மணனை நாடி, ஆறாத நெருப்பையும் அணைத்துவிடக்கூடிய மழை மேகம் போல, இனிய சொற்களாகிய மழைத்துளிகளைச் சொரிந்துகொண்டே வந்தான். வந்து, ''அப்பனே! இமைப்பளவு நேரங்கூட நீ கோபிப்பதை நான் கண்டதில்லையே! அப்படிப்பட்ட நீ இவ்வளவு கோபத்தோடு ஆயுதபாணியாக யுத்த சன்னத்தனாக நிற்க வேண்டிய காரணம் என்ன?'' என்கிறான். அதற்கு லக்ஷ்மணன், ''சத்தியத்தைக் கெடுத்து, 'உனக்குப் பட்டாபிஷேகம் இல்லை' என்ற அந்த விஷம் போன்ற



வளாகிய கைகேசியின் கண்ணுக்கு முன்னால் உனக்கே பட்டம் கட்டப்போகிறேன். அதைத் தேவர்களே வந்து தடுத்தாலுங்கூட அவர்களைப் பொசுக்கிவிடத் தீர்மானித்துவிட்டேன். என் கையில் இந்த வில் இருக்கிறவரைக்கும் அந்தத் தேவர்களுங்கூட என்னைத் தடுக்கமாட்டார்கள். அப்படித் தடுத்தாலும் அவர்களையெல்லாம் என் பாணங்களுக்கு இரையாக்கிவிட்டு, உன் தந்தை உனக்குத் தருவதாகச் சொன்ன இந்த அயோத்தியின் அரசுமட்டும் அல்லாமல் ஈரேழு பதினான்கு உலகங்களையும், அவற்றிற்கு அதிபர்களான அரசர்களையும் ஆளக்கூடிய ஆதிபத்தியத்தை நான் உனக்குத் தருகிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட இராமன், ''லக்ஷ்மணா! நீதிகளுக்கும் ஒழுக்கத்திற்கும் இருப்பிடமாகி, கோபமே விளையாத நிலமாகிய உன் மனத்தில் இவ்வளவு கோபம் எங்கிருந்து வந்தது?'' என்றான்.

அதற்கு லக்ஷ்மணன், ''அண்ணா, இந்த இராஜ்யத்தை அரசாள வேண்டும் என்று நீ ஆசைப்படவில்லை. உன் தகப்பன் வற்புறுத்தி நீதான் ஆள வேண்டும் என்று கட்டாயப்படுத்தினதற்காக நீ ஒப்புக்கொண்டாய். அப்படியிருக்க, யாரோ கெட்ட எண்ணக்காரர்களுடைய சூழ்ச்சியினால் நீ அரசாள வேண்டியதில்லை, காட்டுக்குப் போக வேண்டும் என்றால் எனக்குக் கோபம் வருவதற்குக் காரணம் கேட்க வேண்டுமா?

......''உன்னுடைய விரோதிகள் உன்னைக் காட்டுக்கு ஓட்டுவதைப் பார்த்துக்கொண்டு என் உயிரை வைத்துக்கொண்டு தான் சும்மா இருப்பேனா?

என்னுடைய கண்ணுக்கு முன்னால் உனக்கு இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு, இப்போது இல்லையென்னும் கன்னெஞ்சனாகிய தசரத மன்னன் என்றா என்னையும் எண்ணிவிட்டாய்?'' என்றனன்.

அதற்கு இராமன், ''லக்ஷ்மணா ! குற்றம் தந்தை உடையது அல்ல. அவர் கொடுத்ததை இல்லையென்று சொல்லிவிட்டதாக நீ சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். இராஜ்யத்தை என்னிடம் அவர் தருவதாகச் சொன்னபோது யோசனையில்லாமல் நான் அதற்கு இசைந்ததுதான் குற்றம். மேலும்,

''நதியின் பிழைஅன்று
நறும்புனல் இன்மை; அற்றே
பதியின் பிழைஅன்று
பயந்து நமைப்புரந்தாள்
மதியின் பிழையன்று;
மகன்பிழை அன்று; மைந்த!
விதியின் பிழைநீ இதற்கு
என்கொல் வெகுண்டது? என்றான்.''

ஆற்றில் தண்ணீர் இல்லாமற்போவது ஆற்றின் தப்பிதம் அல்ல. அதைப் போல இது அரசனுடைய தப்பிதம் அல்ல ; நம்மைப் பெற்று வளர்த்த தாய் கைகேசியின் அறிவின் தவறுதலும் அல்ல ; மகன் பரதனுடைய தப்பிதமும் அல்ல. ஆனால், இது விதியின் குற்றம். இதற்காக நீ ஏன் கோபிக்க வேண்டும்?'' என்றான்.

இந்தப் பாட்டில் எல்லாம் 'விதி'யினால் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. விதி என்று இராமன் சொன்ன உடன் லக்ஷ்மணனுக்கு அந்த விதியின்மேல் அடங்காத



கோபமும் வெறுப்பும் உண்டாகிறது. சொல்லுகிறான் லக்ஷ்மணன் :

''உதிக்கும் உலை உள் உறு
தீஎன ஊதை பொங்கக்
கொதிக்கும் மனம் எங்ஙனம்
ஆற்றுவென் கோள் இழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல்
வானவர்க்கும் வலீஇதுஆம்
விதிக்கும் விதியா கும்என்
வில்தொழில் காண்டி'என்றான்''

கொல்லனுடைய உலையின் உள்ளேயிருந்து குபீர் என்று வருகிற நெருப்பைப் போலப் பெருமூச்சு விட்டு, ''அண்ணா! விதியாவது! வேறொன்றாவது! என் மனம் கொதிக்கிறதே, எப்படிப் பொறுப்பேன் ? இந்தக் கொடுமையைச் செய்த அந்தக் கைகேசியின் சூழ்ச்சிகளுக்கெல்லாம் மேலான சூழ்ச்சியானதும் தேவர்களாலும் தடுக்க முடியாத வலிமையுள்ளதென்று நீ நினைக்கிற 'விதி'க்கெல்லாம் விதியானதுமான என் வில் வேலையை இதோ காட்டுகிறேன், பார்!'' என்றான் லக்ஷ்மணன்.

இங்கே லக்ஷ்மணன், 'விதி'யை அலட்சியமாகப் பேசுகிறான். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடித்து விடலாம் என்று நினைக்கக்கூடிய தேகத் திமிர் உள்ளவர்கள் எல்லோரும் இப்படித்தான் பேசுவார்கள்.

இப்படி 'விதி' என்பதை மறுத்துப் பேசிய அதே லக்ஷ்மணன், பின்னால் என்ன சொல்லுகிறான் என்று பாருங்கள்.

இராமன் சொன்ன நியாயங்களினால் லக்ஷ்மணன் கொஞ்சம் கொஞ்சமாகக் கோபம் தணிகின்றான். பிறகு இராமன், சீதை, லக்ஷ்மணன்ஆகிய மூவரும் வனவாசம் போகிறார்கள்.

வனத்தில் வசிக்கும் பொழுது இராவணனுடைய ஏவலினால் மாரீசன் மாய மானாக வந்து சீதையை மயக்குகின்றான். அபூர்வ அழகு வாய்ந்த அந்த மானின் மேல் ஆசை கொண்டு அதைத் தனக்குப் பிடித்துத் தரும்படி சீதை இராமனை வேண்டுகிறாள். இராமனும் அதைப் பிடிக்க நினைக்கிறான். லக்ஷ்மணன் குறுக்கிட்டு இயற்கைக்கு முற்றினும் ஒவ்வாததான அவ்வளவு விசித்திரமான அந்த மான் ஏதோ வஞ்சனை இயற்ற வந்ததாகத்தான் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறான். இராமன் தயங்குகிறான். மான் ஓடி மறைந்துவிடுமே என்று சீதை இராமனைத் துரிதப்படுத்துகிறாள். இராமன்மானைப் பிடிக்கப் போகிறான்.

லக்ஷ்மணன் மீண்டும் இராமனைத்தடுத்து, ''மானைப் பிடிக்க வேண்டுமானால் நான் போகிறேன்'' என்கிறான். லக்ஷ்மணன் பேசின ஆக்ஷேபனைகளிலிருந்து அதைப் பிடித்துத் தரவேண்டும் என்ற ஆர்வம் அவனிடத்தில் இருக்க முடியாதென்று எண்ணின சீதை, ''நாயக! நீயே பற்றி நல்கலை போலும்—நாதா! நீங்களே அதைப் பிடித்துத் தரமாட்டீர்களா?'' என்கிறாள். அதைக் கேட்டு இராமன் மானைப் பிடிக்கப்போகிறான். ஏதோ வஞ்சனை வரப்போகிறது என்று அநுமானித்தலக்ஷ்மணன் சீதையைக் காத்துப் பர்ணசாலைக்கு வெளியே நின்றான் ......இராமன் மானைப் பிடிக்கப் பின்தொடர்ந்தான். அந்த மான் பிடிபட்டுவிடுவது போலநடித்துக் கொஞ்சம் கொஞ்சமாகச் சீதை இருந்த இடத்தைவிட்டு இராமனை வெகு



தூரம் இழுத்துக்கொண்டு போய்விட்டது. அதுவரையிலும் மெல்ல மெல்ல விளையாட்டுக் காட்டிக்கொண்டே போன அந்த மான், பிறகு வேகமாக ஓடத் தொடங்கியது. இராமனும் ஓடினான். வெகுதூரம் ஓடியும் மான் எட்டவில்லை. 'மாயமான்' என்று தம்பி சொன்னது சரிதான் என்று கண்டு, இராமன் அதன் மேல் அம்புவிட எண்ணி வில்லைத் தொடுக்கிறான். குறிப்பை அறிந்துகொண்ட மான், உயிருக்கு அஞ்சி வெகு வேகமாக ஓடுகின்றது. இராமன் பாணத்தை எய்துவிடுகிறான். அது அந்த மானின் மார்பில் பாய்ந்துவிட்டது. மாய உருவம் மறைந்து மாரீசன், 'சீதா! லக்ஷ்மணா!' என்று அண்டம் முட்டும்படியாக அபயக் குரலோடு அலறிக்கொண்டு விழுந்து மடிகின்றான்...... மாரீசன் கூவிய ஓசை இராமனுடைய குரல் போல் இருந்தது. அதைக் கேட்ட சீதை, நாயகனுக்கு ஆபத்து வந்துவிட்டதாக நடுங்கி விழுந்து மயங்கிவிட்டாள். அதைக் கண்டும் லக்ஷ்மணன் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். சீதை வெகு நேரம் புரண்டு, விழித்து, புலம்பி, எழுந்து, லக்ஷ்மணன் சற்றேனும் சலனப்படாமல் நிற்பதைக் கண்டு, ''என்னுடைய நாயகன் அரக்கனால் அடிபட்டு விழுந்துவிட்டதை அறிந்தும் இப்படி நின்றுகொண்டிருக்கிறாயே!'' என்கிறாள். அதற்கு லக்ஷ்மணன், ''அண்ணன் இராமனை அடிக்கக்கூடிய பலசாலி எந்த உலகத்திலும் இல்லை. நீங்கள் அதை அறியாமற் பேசுகின்றீர்கள். இராமனை யாரென்று நினைக்கிறீர்கள்? இராமனுக்கு அபாயம் வந்திருந்தால் இந்நேரம் அண்ட கோடிகள் அவ்வளவும் அழிந்திருக்குமே! சிவபிரான் எடுத்துத் திரிபுரங்களை எரித்த அந்த மாபெரும் வில்லுங்கூட எம்பிரான் இராம

னுடைய தோள் பலத்துக்கு நிகரில்லாமல் ஒடிந்து விழுந்தது உங்களுக்குத் தெரியாதா? இராமனுக்கு அழிவு வந்தால் உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் அழிவு வந்திருக்கும். சுருங்கச் சொல்லுகிறேன் : அந்த மான் பிடிபடாததைக் கண்டு அண்ணன் அம்பெய்திருக்கிறார். அந்தப் பாணம் பட்ட உடன் மானாக வந்த அரக்கன் மோசக் கருத்தோடு இப்படி அலறி விழுந்திருக்கிறான். அவ்வளவுதான். அதற்காக நீங்கள் கலங்கவேண்டா. கவலைப்படாமல் இருங்கள்'' என்கின்றான்.

சீதைக்குச் சமாதானம் உண்டாகவில்லை. நாயகனுக்கு அபாயம் என்றே நம்பிவிட்டாள். "ஒருநாள் பழகினாலும் பெரியவர்கள் அபாய காலத்தில் உயிரையும் கொடுப்பார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட அண்ணனுக்கு அபாயம் வந்துவிட்டதை அறிந்தும், அனுவளவேனும் அச்சப்படாமலும் அசையாமலும் நின்றுகொண்டிருக்கிறாயே !... சரி, நான் என் நாயகருக்கு அபாயம் வந்ததை அறிந்து சகித்துக் கொண்டிருக்க முடியாது. வேறு என்ன செய்ய முடியும்? அதோ எரிந்துகொண்டிருக்கும் காட்டுத்தீயில் விழுந்து மடிகின்றேன்'' என்று அந்தக் காட்டுத்தீயை நோக்கிப் புறப்பட்டாள்.

"தாமரை வனத்திடை
தாவும் அன்னம்போல்
தூமவெம் காட்டெரி
தொடர்கின் றாள்தனை
சேமவில் குமரனும்
விலக்கிச் சீர்அடிப்
பூமுகம் நெடுநிலம்
புல்லிச் சொல்லுவான்."



தாமரைக் காட்டுக்குள் தாவுகின்ற அன்னம் போல, அந்தக் காட்டுத்தீயில் தாவி விழுவதற்குப் போன சீதையை (அவளுடைய க்ஷேமத்தைக் கருதி அவளுக்குக் காவலாக வில்லேந்தி நின்ற) லக்ஷ்மணன் தடுத்து, அவளுடைய பாதத்தில் விழுந்து சொல்லுகிறான் :

"துஞ்சுவது என்னைநீர்
சொற்ற சொல்லையான்
அஞ்சுவென் மறுக்கிலன்
அவலம் தீர்ந்துஇனி
இஞ்சுஇறும் அடியனேன்
ஏகு கின்றனென்
வெஞ்சின விதியினை
வெல்ல வல்லமோ !''

"எதற்காக நீங்கள் இறக்க வேண்டும்? நீங்கள் சொன்ன வார்த்தைக்குப் பயப்படுகின்றேன், இனி, உங்கள் உத்தரவை மறுக்கமாட்டேன். தாங்கள் வருத்தப்பட வேண்டாம். இங்கேயே இருங்கள். இதோ நான் போகிறேன். விதியை வெல்ல நம்மால் ஆகுமா? (நடக்க வேண்டியது நடக்கட்டும்)'' என்றான்.

முன்னே 'விதிக்கும் விதியாகும் என் வில்தொழில் காண்டி!' என்று வீரம் பேசின லக்ஷ்மணன் இப்போது தன்னால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை என்று கண்டபின் 'வெஞ்சின விதியினை விலக்க வல்லமோ!' என்று தன்னையும் அறியாமல் 'விதி' என்பதை ஒத்துக்கொள்ளுகிறான். உண்மையில் லக்ஷ்மணன் ஒத்துக்கொண்டானோ இல்லையோ, ஊழ்வினையை ஒத்துக்கொள்ளாத நம்முள் சிலரையாவது ஒத்துக்கொள்ளும்படி கம்பன் கட்டாயப் படுத்தாமல் கற்பிக்கிறான். எந்த வார்த்தையை யார் வாக்கால் சொன்னால் சிறப்புறும் என்பதை அறிந்து அளந்து சொல்வதில் கம்பனுக்கு இணை கம்பன்தான்.

# 6. உதயமும் அஸ்தமனமும்

சூரிய அஸ்தமனத்தைப்பற்றியும் உதயத்தைப் பற்றியும் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். கதையின் தொடர்பை ஒட்டிய ஒரு குறிப்பை அந்தச் சூரியன்மேல் ஏற்றி, உதயத்தையோ அஸ்தமனத்தையோ 'தற்குறிப் பேற்றம்' என்ற இலக்கணத்தோடு பாடுவது கவிதையின் அழகுகளில் ஒன்று. அப்படிப் பாடுகிறபோது அஸ்த மனத்துக்குச் சொன்ன குறிப்புக்கும் உதயத்துக்குச் சொல்லும் குறிப்புக்கும் தொடர்பு இருக்காது. தொடர்பு இருக்கத்தான் வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. சில புலவர்கள் அஸ்தமனத்துக்குச் சொன்ன குறிப்புக்கும் உதயத்துக்குச் சொல்லும் குறிப்புக்கும் முரண் உண்டாகும்படி பாடிவிடுவதும் உண்டு. அந்த முரணும் படிப்பவர்களுக்குப் புலப்படாது. அப்போதைக்கு மனத்தில் உதிக்கிற ஒரு குறிப்பை அஸ்தமனத்தில் ஏற்றி, அதை முற்றிலும் மறந்துவிட்டு, அதற்குச் சிறிதும் தொடர்பு இல்லாத வேறு ஒரு புதிய குறிப்பை உதயத்துக்குச் சொல்லத்தான் வரும் மற்ற புலவர்களுக்கு. ஆனால், கம்பன் ஒருவன்தான் இந்த விஷயத்திலும் இணையற்ற கவிதா மேதையைக் காட்டி யிருக்கிறான். அதை அறிந்து அநுபவிக்கும்போது நாம் அடைகின்ற இலக்கிய இன்பம் மிகவும் சுவைதரத் தக்கதே. சில உதாரணங்களைச் சொல்லுவோம்.

விசுவாமித்திரருடைய வேள்வியைக் காக்க வந்த இராம லக்ஷ்மணர்களை வேள்வி முடிந்த பின் விசுவா மித்திர முனிவர் ஜனக மகாராஜன் ஏற்படுத்தியிருந்த



சுயம்வரத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறார். முனிவர், இராமன், லக்ஷ்மணன் ஆகிய மூவரும் மிதிலை யில் இராஜ வீதியில் போய்க்கொண்டிருந்தார்கள். அச் சமயத்தில் சீதை அரண்மனையின் உப்பரிகையில் வீதியின் ஓரமாக நின்றுகொண்டிருந்தாள். எதிர்பாரா வகையாக சீதையும் இராமனும் ஒருவரையொருவர் ஒரே காலத்தில் பார்க்கிறார்கள். உடனே,

"பருகிய நோக்குஎனும்
பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம்
உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும்
வாள்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு
இதயம் எய்தினார்."

விழுங்கிவிடுவது போல ஒருவரை ஒருவர் பார்த்த பார்வை என்ற பாசத்தினால் இழுக்கப்பட்டுச் சீதையின் உள்ளத் தில் இராமனும், இராமனுடைய உள்ளத்தில் சீதையும் புகுந்துகொண்டார்கள்.

அந்த நொடியிலேயே கட்டித் தழுவிக்கொள்ளக் காதல் கொண்டார்கள். ஆனால், இடமும் சமயமும் ஏற்றனவாய் இல்லை. தெருக்கோடிக்கு இராமன் போய் மறைகிறவரையிலும் சீதை அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். இராமன் மறைந்துவிட்டான்; சீதையும் தன்னை மறந்துவிட்டாள். மனத்தையும் மானத்தையும் இராமன் பின்னே பறிகொடுத்துவிட்டு, தற்காப்பும் தவறினவளாகி, மயங்கித் துவண்டு குழைந்து போனாள். தனக்கு வந்த துன்பம் இன்ன

தென்று பிறரிடத்தில் சொல்லிக்கொள்ளவும் முடியாமல் வேதனைப்படத் தொடங்கினாள். இருந்தாற்போ லிருந்து சீதைக்கு வந்துவிட்ட மாறுதல் எதனால் என்று புரியாமல் அவளுடைய தாதிமார்கள் தவித்தார்கள். மயங்கித் துவண்டுபோன சீதையைச் சேடிமார்கள் மெல்லக் கொண்டுபோய் மலரணையில் படுக்க வைத்து, பல விதமான பரிகாரங்களையும் செய்தார்கள். அவளுக்கு ஏற்பட்ட நோய்க்கு இவர்கள் செய்த பரிகாரங்கள் பலிக்குமா?

இராமனுடைய அழகை நினைத்துக் காம வேதனை யால் பெருமூச்சு விட்டுக்கொண்டு, தேகம் முழுவதும் தீப்பொறி பறக்கப் புகைந்து புழுங்கிப் படுக்கையில் புரண்டுகொண்டிருக்கிறாள் சீதை. இந்தச் சமயத்தில் சூரியன் அஸ்தமனம் ஆகிறான். ஏன்? எப்படி அவன் அஸ்தமிக்கிறான் என்பதைப் பாருங்கள் :

"அன்னமெல் நடையவட்கு
அமைந்த காமத்தீ
தன்னையும் சுடுவது
தரிக்கி லான்என
நல்நெடும் கரங்களை
நடுக்கி ஓடிப்போய்
முன்னைவெம் கதிரவன்
கடலில் மூழ்கினான்."

'அன்னம் போன்ற மென்மையான நடையழகியான சீதைக்கு ஏற்பட்ட காமத் தீ, தன்னையும் சுட்டு விட்டதைத் தாங்க முடியாமல் தன்னுடைய நீண்ட கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு, வெப்பமே வடிவான சூரியன் கடலில் முழுகினான்.'



சீதைக்கு உண்டான காம வெப்பம் தன்னையும் தாக்கினதற்குப் பயந்து, அந்த வெப்பத்தைத் தணித்துக் கொள்வதற்காகக் கடலில் முழுகினது போல் சூரியன் அஸ்தமித்தான் என்பது கருத்து.

இப்படிக் காமனுக்குப் பயந்து, தன் கதிர்களை ஒடுக்கிக்கொண்டு ஓடி ஒளிந்த சூரியன், மறுபடியும் எப்படி உதயமாகிறான் என்பதைப் பாருங்கள் :

உப்பரிகையின் மேல் நின்றுகொண்டு சீதை வீதியைப் பொழுது போக்காகப் பார்க்க நின்றுகொண் டிருந்தவள் ஆனதால், வீதியில் போகிறவர்கள் வருகிற வர்களை எப்படி எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் தொடர்ந்து பார்க்கலாம். அதனால், இராமன் தெருக் கோடிக்குச் சென்று மறைகிறவரையிலும் மனமாரப் பாத்துக்கொண்டேயிருந்தாள். ஆனால், இராமனோ என்றால், சீதை நின்றுகொண்டிருந்த மாளிகைக்குச் சமீபமாக வரும்போது நடந்துகொண்டே நேரே நிமிர்ந்து பார்த்தபோது கண்டது தான். நின்று பார்க்க நேரமில்லை. அவளைக் கடந்த பின் திரும்பிப்பார்ப்பதும் கண்ணியமல்ல. அப்படி நின்று திரும்பிப் பார்க்க மனத்துக்குள் ஆசை வந்தாலும், முனிவர் முன்னாலும் தம்பி பின்னாலும் நடந்ததால் அப்படிச் செய்ய முடிய வில்லை. ஆகையினால், ஒரே ஒருதரம் விழுங்க விழுங்கப் பார்த்தானே அதுதான். மறுமுறை பார்க்க முடியாதவ னாகி, முதல் தடவை பார்த்தபோது மனத்தில் பதிந்த வடிவத்தையே மீண்டும் மீண்டும் அநுபவித்துக்கொண்டே போய்விட்டான். விசுவாமித்திரரையும் இராம-லக்ஷ்மணர் களையும் ஜனகன் வரவேற்று, முறைப்படி உபசரித்து,

அவர்களைத் தனியே ஒரு மாளிகையில் தங்கச் செய்கிறான். பிறகு, அவர்களைக் காணவந்த ஜனகனுடைய குருவாகிய சதானந்தருடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு எல்லோரும் படுத்துக்கொள்ளுகிறார்கள். முனிவரும் லக்ஷ்மணனும் தூங்கிவிட்டார்கள். இராமனுக்குத் தூக்கம் வருமா? வரவில்லை. எழுந்தான். அந்த மாளிகையைச் சேர்ந்த நந்தவனத்தில் விளங்கிய ஒரு பளிங்கு மேடையில் அமர்ந்தான். 'கங்குலும் திங்களும் தனியும் தானும்அத் தையலும் ஆயினான்' என்று கம்பன் சொல்லுவது போல, நடு ஜாமத்தில், சந்திர ஒளியில், ஏகாந்தத்தில் தானும் தான் வரும்போது பார்த்த அந்தப் பெண்ணுமாக நெடுநேரம் உபாலம்பனத்தில் உழன்றான். பிறகு, மெல்ல மெல்ல வந்து மீண்டும் படுக்கையிற் படுத்துப் புரண்டுகொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் பொழுது விடிகிறது. சூரியன் உதயமாகிறான். எப்படி உதயமாகிறான்?

"ததையும் மலர்த்தார் அண்ணல் இவ்வண்ணம்
மயல்உழந்து தளரும் எல்லை
சிதையும் மனத்துஇடர் உடைய செங்கமல
முகம்மலரச் செய்ய வெய்யோன்
புதைஇருளில் எழுகின்ற புகர்முக யானையின்
உரிவை போர்வை போர்த்த
உதயகிரி எனும்கடவுள் நுதல்விழித்த
விழியேபோல் உதயம் செய்தான்."

'நெருக்கமாக மலர்கள் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவனாகிய இராமன், இப்படி வழியில் கண்ட பெண்ணின்மேல் ஆசைகொண்டு, படுக்கையில் புரண்டு துன்பப்பட்டுக்கொண்டிருந்த பொழுது, அப்படி வருத்தப் படுகிறவர்களுடைய துன்பமெல்லாம் நீங்கும்படியாகவும், தாமரை மொட்டுகள் மலரும்படியாகவும் அடர்ந்த இருள் என்னும் யானைத்தோலைப் போர்த்துக்கொண்டிருந்த உதயமலை என்னும் பரமசிவனுடைய நெற்றிக்கண் திறந்தது போல, சிவந்த சூரியன் உதயமானான்' என்பது பொருள்.



பாருங்கள், உதயகிரியின் உச்சியில் சூரியன் உதிக்கிறான்; உதயகிரி பரமசிவன். அந்த மலையைச் சுற்றிலும் உள்ள இருட்டு, யானைத்தோலாகிய போர்வை. பரமசிவன், யானை உருவத்தில் வந்த ஓர் அரக்கனைக் கொன்று, அந்த யானைத்தோலைப் போர்வையாகப் போட்டுக்கொண்டது புராணக் கதை. இந்த மலையின் உச்சியில் உதித்த சூரியன், பரமசிவனுடைய நெற்றிக் கண்ணாம். அந்த நெற்றிக்கண் திறந்ததுபோல் உதயம். பரமசிவனுடைய நெற்றிக்கண் ஒரே ஒரு தடவைதான் திறக்கப்பட்டது. அதற்கு முன்னும் திறக்கப்படவில்லை, பின்னும் திறக்கப்படவில்லை, அந்த ஒரே தரம் திறந்தது. எதற்கென்றால், தன்னுடைய தவத்தைக் கெடுக்க நினைத்த மன்மதனை எரிக்க. ஆகவே, பரமசிவனுடைய நெற்றிக்கண் திறந்தது என்றால் காமன் எரிந்தான் என்பது நிச்சயம்.

இப்பொழுது பாருங்கள். முன்னே காமனுக்குப் பயந்து கடலில் முழுகிய சூரியன், இப்போது காம தகனம் செய்த சிவபிரானது நெற்றிக்கண் போல் உதயம் செய்கிறான் என்பது தெளிவாகிறது. இதில் எவ்வளவு அழகும் ஆழ்ந்த கருத்தும் அமைந்திருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். காம உணர்ச்சியானது, 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலருமிந் நோய்' என்று வள்ளுவர் சொன்னது போல்,

மாலையில்தான் அதன் மணம் ஆரம்பமாகும்; இரவில் அதிகரிக்கும்; விடியற்காலையில் குறைந்துவிடும்; விடிந்த உடன் மறைந்துவிடும். இது அநுபவம். மாலையிலும் இரவிலும் விடியற்காலையிலும் காமனால் வேதனைப்படுகிற யாவரும் விடிந்தவுடன் அந்த வேதனையை வென்றவர்களாகவே இருப்பார்கள். அந்த உண்மையை இந்த அஸ்தமனத்திலும் உதயத்திலும் கம்பன் அழகுற அமைத்திருக்கிறான். தானாக அமைந்தது அன்று; அவன் அமைத்தது. அந்த அமைப்பின் சிறப்பு, அந்த அஸ்தமனப் பாடலுக்கும் இந்த உதயப்பாடலுக்கும் இடையில் தொண்ணூறு பாட்டுகள் இருக்கின்றன என்பதில் அதிகப்படுகிறது.

மற்றுமோர் உதாரணம் : சீதா கல்யாணத்திற்காகத் தசரதனும் அவனுடைய மனைவிமார்களும் அயோத்தி மாநகரத்து ஜனங்களும் நால்வகைச் சேனைகளுடன் மிதிலைக்குப் போகிறார்கள். வழியில் பல இடங்களில் தங்குகிறார்கள். அப்படி ஒரு மலைச்சாரலில் தங்கி, மலைவனத்தின் காட்சிகளை அநுபவித்துக்கொண்டிருந்த போது சூரிய அஸ்தமனம் சொல்லப்படுகிறது.

“ கால்வானகம் தேருடை
வெய்யவன் காய்கடும்கண்
கோல்மாய்கதிர் புல்லுளைக்
கொல்சினக் கோளரிமா
மேல்பால் மலையில்புக
வீங்குஇருள் வேறு இருந்த
மால்யானை ஈட்டம்என
வந்து பரந்தது அன்றே”



‘ஆகாயத்தில் ஒற்றைச் சக்கரத் தேரை நடத்துகின்ற சூரியன் என்னும் கொலைச்சினம் மிகுந்த சிங்கமானது, மேற்கு மலையிலுள்ள தன் குகைக்குள் புகுந்து மறைந்த உடனே, அதுவரையிலும் பல இடங்களில் பதுங்கி ஒளிந்துகொண்டிருந்த யானைக்கூட்டங்களெல்லாம் ஒன்றுகூடிவிட்டதுபோல், இருள் வந்து சூழ்ந்துகொண்டது’ என்பது கருத்து.

இதில், மலைச்சாரலுக்கு ஒத்த உபமானங்களாகிய சிங்கம், யானைக்கூட்டம்—இவற்றைக்கொண்டு சூரிய அஸ்தமனம் வர்ணிக்கப்படுகிறது.

அதே வரைக்காட்சிப் படலத்தில் பல பாடல்களுக்கும் பின் சூரிய உதயம் சொல்லப்படுகிறது.

“ மீனுடை எயிற்றுக் கங்குல்
கனகனை வெகுண்டு வெய்ய
கானுடைக் கதிர்கள் என்னும்
ஆயிரம் கரங்கள் ஓச்சி
தானுடை உதயம் என்னும்
தமனியத் தறியுள் நின்று
மானுடை மடங்கல் என்னத்
தோன்றினன் வயங்கு வெய்யோன்.”

‘மீன் போல நீண்டு வளைந்த கோரப் பற்களை உடைய இரணியனைக் கோபித்துத் தனது கிரணங்களாகிய பல்லாயிரம் கைகளை நீட்டிக்கொண்டு, உதயகிரி என்ற தங்கத்தூணைப் பிளந்துகொண்டு வெளிப்பட்ட நரசிங்கம் போல், சூரியன் உதயமானான் என்பது பொருள்.

முன்னே, சிங்கம் மறைந்த உடன் இருளாகிய யானைக் கூட்டங்கள் சூழ்ந்துவிட்டனவாக அஸ்தமனம்

கூறப்பட்டது. இங்கே அந்த யானைக் கூட்டங்களாகிய இருள் பறந்து ஓடும்படியான சூசனைக்காக, நரசிங்கம் போல உதயம் என்று கூறப்படுகிறது.

இந்த உதயத்துக்குப் பின் அதே அயோத்தி ஜனங்கள் பூக்கொய்து நீர் விளையாடுகிறார்கள். அன்பர்களும் காதலர்களும் நீரில் இறங்கி, ஒருவர்மேல் ஒருவர் நீரை இறைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் சூரியன் அஸ்தமிக்கிறான்.

"மானின் நோக்கியர் மைந்தரோடு ஆடிய
ஆன நீர்விளை யாடலை நோக்கினான்
தானும் அன்னது காதலித் தான்என
மீன வேலையை வெய்யவன் எய்தினான்."

'மான் போன்ற பார்வையுள்ள பெண்கள் தங்கள் காதலருடன் ஆடிய நீர் விளையாட்டைக் காண ஆசைப் பட்டவன் போலச் சூரியன் சமுத்திரத்தை அடைந்தான்.'

இந்தப் பாட்டில் சூரியன் சமுத்திரத்தில் இறங்கினான் என்று சொல்லப்படுகின்றது. முதலில் சொன்ன உபமானத்தில், காம உஷ்ணத்துக்குப் பயந்து அந்த உஷ்ணத்தைத் தணித்துக்கொள்ளுவதற்காகக் கடலில் முழுகிய சூரியன், காமனை எரித்த நெற்றிக்கண்ணைப் போல உதயகிரியின் உச்சியில் உதிக்கிறான், இதில், கடலில் அஸ்தமித்து மலையில் உதிக்கிறான். கற்பனைக்குத் தோதாக இருக்கும்படி கடலில் அஸ்தமிக்கச் செய்த சூரியனை மலையில் உதிக்கச் செய்கிறான் கம்பன்.

இரண்டாவது சொன்ன உதாரணத்தில், மேற்கு மலையில் தன் குகையில் மறைந்த சிங்கம் போல் அஸ்த



மித்த சூரியன் மீண்டும் கிழக்கு மலையின் உச்சியில் நரசிங்கமாக உதிக்கிறான். மலையில் மறைந்த சிங்கம் மலையில்தானே வெளிப்படவேண்டும்!

மூன்றாவதாக, நீர் விளையாட்டைக் காதலித்துக் கடலில் இறங்கிய சூரியன் மீண்டும் கடலிலேயே உதித்ததாக, அஸ்தமனப் பாட்டுக்குத் தொண்ணூற்றேழு பாட்டுகளுக்கு அப்புறம்,

"படர்திரைக் கருங்கடல் பரமன் மார்பிடைச்
சுடர்மணிக்கு அரசென இரவி தோன்றினான்."

'அலைகள் நிறைந்த கடலில் பள்ளிகொண்டிருக்கும் நாராயணனுடைய மார்பிலுள்ள கௌஸ்துவமணியைப் போலச் சூரியன் உதயமானான்' என்பது கருத்து.

தசரதனும் அயோத்தி மாஜனங்களும் மிதிலையை அடைந்தபின், கல்யாண காரியங்கள் ஆரம்பமாகின்றன. ஜனகன், தசரதன், வசிஷ்டர், சதானந்தர், இராமன், லக்ஷ்மணன், பரதன், சத்துருக்கனன், கோசலை, கைகேசி, சுமித்திரை முதலானவர்களும், மிதிலை ஜனங்களும், அயோத்தி ஜனங்களும் நிறைந்த மண்டபத்துக்குச் சீதையை அழைத்து வருகிறார்கள். மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்த்துப் பேரானந்தம் அடைகிறார்கள். இந்த நிகழ்ச்சி, பெண்ணைப் பார்த்து நிச்சயம் செய்கிற சம்பிரதாயம் போன்ற ஒரு சடங்கு. சீதையின் அழகைக் கண்டு, வசிஷ்டர்தான் மிகவும் அதிசயப்பட்டு, 'இராமன் திருமால்தான், இவள் மகாலக்ஷ்மிதான்' என்று மகிழ்ந்து பரவசப்படுகிறார். எல்லோரும் அவரவர்கள் மனத்தில் தோன்றியபடி பெண்ணைப்பற்றிப் புகழ்ந்து பூரிப்படைந்துகொள்

கிறார்கள். ஆனால் தசரதனோ, பெண்ணைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாமல், (எண்ணினதாகக்கூடச் சொல்லப்படவில்லை) உடனே விசுவாமித்திரரைப் பார்த்து, வேறொன்றும் சொல்லாமல், "கல்யாணத்திற்கு நல்ல முகூர்த்தம் என்றைக்கு என்பதைப் பாருங்கள்" என்று மட்டும் கேட்கிறான்.

'மறுநாள் நல்ல நாள்' என்று விசுவாமித்திரர் சொல்லுகிறார். முகூர்த்தம் நிச்சயம் செய்துவிட்டுச் சபை கலைகிறது. அந்தச் சமயத்தில் அஸ்தமனமும் ஆகிறது.

"அன்னம் அரிதில் பிரிய
அண்ணலும் அகன்றுஅப்
பொன்னின் நெடுமாடவரை
புக்கனன்; மணிப்பூண்
மன்னவர் பிரிந்தனர்கள்;
மாதவர்கள் போனார்;
மின்னும் சுடர்நாயகனும்
மேருவில் மறைந்தான்."

'அன்னத்தைப் போன்ற சீதை போனவுடன் இராமனும் தன்னுடைய விடுதிக்குப் போய்விட்டான். அங்கிருந்த அரசர்கள் எல்லோரும் கலைந்தார்கள். முனிவர்களும் போனார்கள். ஒளிகளுக்கெல்லாம் நாயகனாகிய சூரியனும் மேருமலையில் அஸ்தமித்தான்.'

இங்கே சூரியன் சீதையின் திருமணத்தை நிச்சயம் செய்யக் கூடியிருந்த சபையில் தானும் ஒருவனாக இருந்து, முகூர்த்த நாள் மறுதினமே என்பதை நிச்சயம் செய்துவிட்டு, மற்றவர்களைப் போல் அவனும் மறை



கிறான்......... அன்று இரவு திருமணத்திற்கு வேண்டிய அலங்காரங்கள் எல்லாம் அரண்மனையில் வெகு பரபரப்பாக நடந்தேறின. அடுத்த நாள், சீதைக்கும் இராமனுக்கும் திருமணம் என்ற நற்செய்தியை விடிவதற்குள் அந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் அறிவிக்க வேண்டும் என்று, அங்கங்கே யானைகளின் மேல் பேரிகை வைத்து முரசறைந்து விளம்பரப்படுத்தும்படி ஜனகன் கட்டளையிடுகின்றான்.

அந்த முரசொலியைக் கேட்ட மக்கள் வெகு சந்தோஷ ஆரவாரத்தோடு கல்யாணத் திருவிழாவைக் காண ஆயத்தம் ஆகிறார்கள். சூரியனும் அந்த முரசொலி முழக்கத்தைக் கேட்டதும், 'இருட்டு என்கிற திரையைக் கிழித்துக்கொண்டு மண விழாவைக் காண வருகின்றான் என்பது உதய வருணனை.

"அஞ்சன ஒளியானும்
அலர்மிசை உறைவாளும்
எஞ்சல்இல் மணம்நாளைப்
புணர்குவர் எனலோடும்
செஞ்சுடர் இருள்கீறித்
தினகரன் ஒருதேர்மேல்
மஞ்சனை அணிகோலம்
காணிய எனவந்தான்."

'மைவண்ணனாகிய இராமனும் மலரில் வாசம் செய்யும் மகாலக்ஷ்மியாகிய சீதையும் நாளைக்குக் குறைவற்ற திருமணம் புரிந்துகொள்ளப் போகிறார்கள் என்று (முரசொலியைக்) கேட்டதும், இருளைக் கிழித்துக் கொண்டு, தன் ஒப்பற்ற தேரின்மேல் ஏறிக்கொண்டு,

அழகு நிரம்பிய கல்யாணக் காட்சியைக் காண்பதற் கென்று வந்தது போலச் சூரியன் உதயமானான்.

அஸ்தமனப் பாடலுக்கும் உதயப் பாடலுக்கும் இடையே இருபது பாடல்கள்.

* * *

மற்றோர் உதாரணம் :

நகர மாந்தர்களெல்லாம் அழுதுகொண்டு பின் தொடர, இராமனும் சீதையும் லக்ஷ்மணனும் காட்டுக்குப் புறப்பட்டுவிட்டார்கள். அந்தச் சமயத்தில் சூரியன் அஸ்தமிக்கிறான்.

"மீன்புகழ் பெறவெயில்
ஒதுங்க மேதியோடு
ஆன்புகக் கதிரவன்
அத்தம் புக்கனன்
'கான்புகக் காண்கிலேன்'
என்று, கல் அதர்
தான்புக முடுகினன்
என்னும் தன்மையான்."

'நட்சத்திரங்கள் பிரகாசம் அடைய, வெயில் மறைய, எருமை பசு முதலிய கால்நடைகளெல்லாம் மேய்ச்சலில் இருந்து வீடுகளுக்குத் திரும்ப, சூரியன் அஸ்தமனம் அடைந்தான். ஏன் என்றால், இராமன் முதலானோர் காட்டிற்குப் போவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கச் சகிக்க முடியாமல் அவர்களுக்கு முன்னால் தான் காட்டுக்குப் போய்விடவேண்டும் என்று சூரியன் விரும் பினான்' என்பது கருத்து.

மேலும், 'கல் அதர்' என்ற அடைமொழியினால், கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் இருட்டில் நடக்கக் கஷ்டப்படுவார்கள். அதற்காக இருள் இல்லாமற் செய் வதற்கு எண்ணினது போல் சூரியன் இராமனுக்கு முன்னால் தான் காட்டுக்குப்போனான் என்ற கருத்துக்கும் இடமிருக்கிறது.



இப்படி, இராமனுக்கு முன்னால் தான் காட்டுக்குப் போய்விட்ட சூரியன், மறுநாள் மீண்டும் அயோத்தி மாநகரின்மீது பிரகாசிக்கிறான். இராமனுக்காக அநு தாபப்பட்டு, அவனுக்கு முன்னால் காட்டுக்குப் போய் விட்ட சூரியன் இராமனோடேயே போகிறதுதானே? இராமன் அயோத்திக்குத் திரும்பி வராமல் இவன் மட்டும் ஏன் வந்தான்? எதற்காக வந்தான் என்றால்,

"மீனீர் வேலை முரசியம்ப,
விண்ணோர் ஏத்த மண்இறைஞ்ச
தூநீர் ஒளிவாள் புடைஇலங்கச்
சுடர்த்தேர் ஏறித் தோன்றினான்;
'வானே புக்கான் அரும்புதல்வன்
மக்கள் அகன்றார்; வரும்அளவும்
யானே காப்பென் இவ்வுலகை'
என்பான் போல எரிகதிரோன்."

"சமுத்திர ஓசையாகிய முரசவாத்தியம் முழங்க, தேவர்கள் வாழ்த்துக் கூற, பூலோகத்திலுள்ளவர்கள் வணங்க, சுத்தப் பிரகாசமான கிரணங்களாகிய வாளா யுதங்கள் சூழ்ந்துவர, சுடராகிய தேரில் ஏறிக்கொண்டு, 'அரும்புதல்வனாகிய தசரதனோ இறந்துபோனான்; அவனுடைய மக்களோ ஒருவரும் ஊரில் இல்லை; அவர் கள் வருமளவும் நானே இந்த அரசாங்கத்தை ஆள்வேன்' என்று வந்த ஓர் அரசனைப் போல, சூரியன் உதய மானான்" என்பது பொருள்.

இராமன் காட்டுக்குப் போகுமுன்னால் தான் காட்டுக்குப் போய்விட்ட சூரியன், திரும்பி வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. எப்படியென்றால், சூரியன் இராமனுக்கு முன்னால் காட்டுக்குப் போனபோது தசரதன் உயிரோடிருந்தான். இராமன் காட்டுக்குள் போய்விட்டான் என்று பாதி ராத்திரிக்கு மேல் இராமனைக் காட்டில் விட்டுவிட்டு அயோத்திக்குத் திருப்பி வந்த சுமந்திரன் சொன்னபோதுதான் தசரதன் இறக்கிறான். நடு ஜாமத்துக்குமேல் தசரதன் இறந்துவிட்டதை அறிந்த சூரியன் புனராலோசனை செய்து, தன் திட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டியது ஆகிவிட்டது. எவ்வாறெனின், தசரதனோ இறந்துபோனான்; தசரதனுக்குப்பின் அந்த நாட்டை ஆளவேண்டிய உரிமை உள்ளவர்கள் யாரும் அயோத்தியில் இல்லை; இராமனும் லக்ஷ்மணனும் காட்டுக்குப் போய்விட்டார்கள்; பாட்டன் வீட்டிற்குக் கேகய நாட்டிற்குப் போயிருந்த பரதனும் அவனுடன் இருந்த சத்துருக்கனனும் இன்னும் கேகய நாட்டிலேயே இருக்கிறார்கள். ஆதலால், அரசாட்சியைக் கவனித்துக் கொள்ளத் தாயாதிக்காரர்கள் யாரும் இல்லை. தசரதன், சூரிய குலத்தைச் சேர்ந்தவன். ஆகையினால், இப்போதைக்கு அந்த அரசாட்சியை மேற்கொண்டு, தன்னுடைய குலத்துக்குப் பழிவராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை தன்னுடையதுதான் என்பதனைச் சூரியன் உணர்ந்தான். அதனால் உடனே, தன் திட்டத்தை மாற்றிக் கொண்டு விடிவதற்குள் அயோத்திக்கு வரவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுவிட்டது. அதற்காக மறுநாள் அயோத்தியில் சூரியன் உதிக்க வேண்டியதாகிவிட்டது.



இராமனுக்கு முன்னால் தான் போக வேண்டும் என்று காட்டுக்குப் போன சூரியன் இராமனைப் போலவே தவத்துக்குப் போனவனாக இருந்தான். ஆனால், திட்டத்தை மாற்றிக்கொண்டு திரும்பி வந்து அயோத்தியில் உதித்த சூரியன் அரசனாக வேண்டிய ராஜ சின்னங்களோடு உதயமாகிறான். முரசு வாத்தியமாகக் கடல் ஒலி, வேதியர் ஆசீர்வாதமாகத் தேவர்களின் வாழ்த்து, பூமியிலுள்ளவர்கள் காலையில் சூரிய நமஸ்காரமாக வணக்கம், வாளேந்திய சேனை வீரர்கள் சூழ்ந்து வருவது போலக் கிரணங்களாகிய வாள்கள்; சுடர்மயமாகிய ரதம்.

"……மக்கள் அகன்றார் வருமளவும்
யானே காப்பன் இவ்வரசை என்பான் போல"

என்று சொல்லப்படுகிறது. இதில், 'தசரதனுடைய நான்கு மக்களுள் ஒருவராவது இல்லை. அவர்களில் யாராவது வருமளவும் நானே காப்பேன்' என்று சொன்னதாக—பரத சத்துருக்கனர்களையும் சேர்த்துத்தான் சொல்லப் படுகிறதாக—இருந்தாலும், காரியத்தில் 'காட்டுக்குப் போன இராமன் திரும்பி வருமளவும்' என்றுதான் முடிகிறது. பரதன் ஊருக்கு வந்ததும், அவனே முடிசூட்டிக்கொள்ள வேண்டும் என்று தசரதன் சொன்னதாகக் கைகேசி முதலானவர்கள் சொல்லியும், பரதன் அரசாளச் சம்மதிக்காமல் தானும் தவவேடம் பூண்டு காட்டுக்குப் போய் அண்ணனை அழைக்கிறான். அண்ணன் வர மறுத்துத் தனக்குப் பதிலாகப் பரதனையே ஆளும்படி வேண்டிக்கொண்டும், பரதன் அண்ணனுடைய பாதுகையைச் சிம்மாதனத்தில் வைத்துவிட்டுத் தவமே புரிகின்றான்.

இராமன் காட்டுக்குப் போவதைக் கண்டு சகிக்காமல் அவனுக்கு முன்னால் தான் காட்டுக்குப் போய்விட விரும்பினவன் போல் சூரியன் போய்விட்டான் என்று சொன்ன அஸ்தமனப் பாட்டுக்கும், அப்படிப் போன சூரியன் அன்று இரவே தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தன்னுடைய குலமாகிய தசரதனுடைய பரம்பரையின் அரசாட்சிக்கு அபகீர்த்தி வந்துவிடக்கூடாது என்று இராமன் திரும்பி வருகிற வரையிலும் அயோத்தியை ஆளவேண்டிய பொறுப்பு தன்னுடையது என்று கண்டு, மீண்டும் அயோத்தியில் அரசாட்சியை மேற்கொள்ள வேண்டிய அரச சின்னங்களோடு தோன்றினான் என்று சொல்லுகிற உதயப் பாட்டுக்கும் உள்ள தொடர்பையும், அதனால் நாம் அடைகின்ற இலக்கிய இன்பத்தையும் பாருங்கள். அஸ்தமனப் பாடலுக்கும் உதயப் பாடலுக்கும் இடையில் எழுபத்தைந்து பாட்டுகள் இருக்கின்றன என்று கவனிக்கிறபோது அந்த இலக்கிய இன்பம் இன்னும் அதிகப்படுகிறது.

மற்றோர் உதாரணம் : இராமன் முதலானவர்கள் வனத்தில் புகுந்து நடந்து கங்கைக் கரைக்கு வருகிறார்கள். அங்கிருந்த தபோதனர்கள் இராமனை வரவேற்றுத் துதித்து உபசரிக்கிறார்கள். இராமன் அந்த மகரிஷிகளோடு தங்கியிருக்கும்போது, அங்கே கங்கையாற்றின் இரு கரைக்கும் அதிகாரியான வேடர்குலத் தலைவன் குகன் இராமனைக் கண்டுகொள்ள வந்தான்; வந்தவன் இராமனைக் கண்டு தரையில் விழுந்து வணங்கி, எழுந்து, கைகட்டி, வாய்பொத்தி நின்றான். இராமன் குகனை வெகு அன்போடு வரவேற்றுச் சமத்துவம் காட்டி



உட்காரச் சொல்லுகிறான். ஆனால், குகன் உட்கார மறுத்துவிடுகிறான். பிறகு, இராமன் குகனைப் பார்த்து, "நாம் இன்றைக்கு இங்கே தங்கி நாளைக் காலையில் ஆற்றைக் கடந்து அக்கரை போக வேண்டும். நீ உன் மனைக்குச் சென்று இருந்துவிட்டு விடியற்காலையில் படகோடு வர வேண்டும்" என்று போக விடை கொடுக்கிறான். அதற்குக் குகன், "செல்வர்க்கெல்லாம் செல்வனாகிய உன்னை இந்தக் கோலத்தோடு பார்த்த நான், நீ இங்கே புல்லணையில் இருக்க, நான் என் மனையில் போய் உறங்க மனம் வரவில்லை. உன்னை விட்டுப் பிரிய மாட்டேன். இங்கேயே தங்கிப் பணிவிடை செய்வேன்" என்றான். அதைக் கேட்ட இராமன் மிகவும் சந்தோஷமடைந்து, சீதை முகத்தையும் லக்ஷ்மணன் முகத்தையும் பார்த்து, குகனுடைய எல்லையற்ற பக்தியைப் பாராட்டிவிட்டு, "யாதிலும் இனிய நண்ப! இருத்தி ஈண்டு எம்மோடு—எல்லாவற்றிலும் இனிமையான நண்பனே! உன் விருப்பப்படியே இங்கே எங்களோடு தங்கியிரு" என்றான். குகன் அங்கேயே தங்கினான். இராமன் வனத்துக்கு வந்துவிட நேரிட்ட விவரங்களையெல்லாம் சொல்லும்படி குகன் கேட்க, லக்ஷ்மணன் சொன்னான். அப்போது சூரியன் அஸ்தமிக்கிறான்.

"விரியிருள் பகையை ஓட்டி,
திசைகளை வென்று, மேல்நின்று,
ஒருதனி திகிரி உந்தி,
உயர்புகழ் நிறுவி, நாளும்
இருநிலத்து எவர்க்கும் உள்ளத்து
இருந்தனன் என்ன வீந்த
செருமலி வீரன் என்னச்
செங்கதிர்ச் செல்வன் சென்றான்."

"விரித்த இருளாகிய பகைவர்களைத் துரத்தி, திக்குகளையெல்லாம் வென்று, தனக்கு மேல்அதிகாரி எவரும் இல்லாதபடி ஏகாதிபத்தியம் உள்ளவனாகி, தனி அரசு செலுத்தி, மக்களுக்கெல்லாம் பாரபட்சமில்லாது நீதி செலுத்தி, உயர்ந்த புகழை நிலைநாட்டி, அதனால் உலகத்திலுள்ள எல்லோருடைய உள்ளத்திலும் குடி கொண்டிருந்தவனாகிய வலிமையுள்ள அரசன் இறந்து விட்டது போலச் சூரியன் மறைந்துவிட்டான்" என்பது பொருள்.

இந்தப் பாட்டு, உலகத்துக்குச் சுபிட்சம் உண்டாக்கிப் புகழடையும் மன்னனுக்கும் சூரியனுக்கும் சிலேடை போன்றது. ஓர் அரசன் முதலில் தன்னுடைய நாட்டை அந்நியர்கள் படையெடுக்காதபடி அவர்களை ஓட்ட வேண்டும். தன்னுடைய நாட்டின் எல்லைப்புறங்களில் தனக்கு யாரும் எதிரி இல்லாதபடி எல்லைகளையெல்லாம் வெல்ல வேண்டும். பிறகு, தன்னுடைய நாட்டில் தனக்கு மேல் எவருக்கும் அதிகாரம் இல்லாதபடி தனி ஆட்சி செலுத்த வேண்டும். எல்லோருக்கும் சமமான நீதி வழங்கக்கூடிய செங்கோல் நடத்த வேண்டும். அதனால் மக்கள் அவனை மகிழ்ந்து போற்றும்படியான புகழ் அடைய வேண்டும். அப்படிப்பட்ட மன்னன் ஒருவன் இறந்து போனால் உலகம் இருளடைந்து வழி தெரியாது வருத்தம் அடையும்......அப்படிப் போலச் சூரியன் அஸ்தமித்தான் என்பது இப்பாட்டின் விரிவுரை.

இதில் சூரியன் ஓர் அரசனாக விளங்குகிறான். அவனும் இருள் என்ற பகைவர்களை ஓட்டுகிறான். திக்கு களிலும் இருள் புகாமல் காக்கிறான். தனக்கு மேல் எவரும் இல்லாத ஆட்சி செலுத்துகிறான். உலகத்திலுள்ள எல்லோருக்கும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒளியும் சுபிட்சமும் உண்டாக்குகிறான். அதனால் அவனே பிரதானமானவனாக மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றுப் புகழ் அடைகிறான். அவன் மறைந்தவுடன் உலகம் இருள் அடைந்துவிடுகிறது என்பது சிலேடைப் பொருள்.



இந்தப் பாடலில், இதற்கு முன்னால் உதயப் பாடலில் சொல்லப்பட்ட, சூரியன், 'இராமன் வருமளவும் அயோத்தியை அரசாள மேற்கொண்ட அரசனாக வந்தான்' என்ற கற்பனை தொடர்கின்றது. அது ஓர் இலக்கிய அழகுதான். ஆனாலும், இதில் ஒரு நல்ல அரசன் 'இறந்து' போனது போலச் சூரியன் அஸ்தமித் தான் என்பதில் ஓர் அவச்சொல் இருக்கிறது. 'சூரியன் செத்துப் போனான்' என்பது அந்தச் சொல். 'சூரியன் செத்துப் போனான்' என்றால் உலகத்துக்குச் சூரியனால் உண்டாகக்கூடிய எல்லா ஜீவசக்திகளும் போய்விடு கின்றன. சூரியன் இல்லாமல் உலகம் உயிர் வாழ முடியாது. மேலும், சூரியன் இறந்துபோன பிறகு கம்பனது காவிய உலகமும் செத்துப்போய்விடும். இராமாயணக் கதையும் அதற்கு மேல் நடக்காது.

ஆகையினால், இப்படிச் செத்துப்போனவனாகச் செய்துவிட்ட சூரியனை மீண்டும் கம்பன் எப்படி உயிர் பெறச் செய்கிறான் என்பதைப் பாருங்கள். அதுவும் முன்னே சொன்ன அஸ்தமனங்களுக்கும் உதயங்களுக்கும் இடையிலே, எவ்வளவோ நிகழ்ச்சிகளைக் குறிக்கிற எத்தனையோ பாட்டுகள் இருக்க, இந்த அஸ்தமனப் பாட்டுக்கும், அடுத்த உதயப் பாட்டுக்கும் இடையில்

மட்டும் ஒரு நிகழ்ச்சியும் இல்லாமல், இரண்டே பாட்டு களுக்குப் பின் மாலையில் இறந்துவிட்ட சூரியன் விடிவதற்குள் உயிர் பெற்றுப் புனர்ஜன்மம் அடைகிற தாகச் சொல்கிறான். இது தானாக அமைந்தது அன்று; கவிஞன் அறிந்தே அமைத்தது என்பதில்தான் இலக்கிய இன்பம் இருக்கிறது. வெகு அவசரமாகச் சூரியனைக் கம்பன் உயிர் பெறச் செய்கிறான்.

சூரியன் அஸ்தமனமாகி இருட்டிய பின் இராமனும் சீதையும் ஓர் ஆச்சிரமத்துக்குள் தூங்குகிறார்கள். அப்படித் தூங்குகின்ற அண்ணனையும் மதனியையும் லக்ஷ்மணன் அந்த ஆச்சிரமத்துக்கு வெளியில் வில்லுங் கையுமாக இமை கொட்டாமல் நின்றுகொண்டு காவல் புரிகிறான். அவ்வளவு பயபக்தியுடன் அண்ணனைக் காத்து நிற்கிற லக்ஷ்மணனுடைய அரிய சேவையைப் பார்த்து அதிசயப்பட்டுக்கொண்டே குகனும், இராம னுடைய நிலையை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டுக்கொண்டு, தானும் தூங்காமல் லக்ஷ்மணனுக்குச் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டிருக்கிறான்—இவ்வளவு தான் அஸ்தமனத்துக்கும் உதயத்துக்கும் இடையிலுள்ள நிகழ்ச்சி. சூரியன் உதிக்கிறான் :

" துறக்கமே முதல வாய
தூயன யாவை யேலும்
மறக்குமா நினையல் அம்மா !
வரம்பில தோற்றும் மாக்கள்
'இறக்குமாறு இது' என் பான்போல்
முன்னைநாள் இறந்தான் பின்நாள்
'பிறக்குமாறு இது' என் பான்போல்
பிறந்தனன் ; பிறவா வெய்யோன்."



'சொர்க்கம் முதலான பரிசுத்தமான இடங்களையும் மறந்துவிடுகின்றனவோ என்னவோ ! கோடானுகோடி ஜீவர்கள் இறந்துபோவதும் மீண்டும் பிறப்பதும் இப்படித்தான் என்பதைக் காட்டுவது போல, முதல் நாள் இறந்துவிட்ட சூரியன் மறுநாள் பிறந்துவிட்டான்! அவன் பிறப்பு, இறப்பு இல்லாதவன். ஆன்மாவும் பிறப்பு இறப்பு இல்லாதது என்பதையும் காட்டுவான் போல் இருக்கிறது' என்பது கருத்து.

சொர்க்கத்துக்குப் போனவர்கள் மீண்டும் பிறவித் துன்பத்தை அடைவதில்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால், எத்தனையோ கோடி ஜீவர்கள் நித்தம் நித்தம் இறக்கிறார்கள், பிறக்கிறார்கள். எங்கிருந்துதான் வரு வார்களோ, தெரியவில்லை! ஒருகால், சொர்க்கத்துக்குப் போனவர்களுங்கூட அந்தச் சொர்க்கத்தை மறந்துவிட்டு மறுபடியும் உலகத்துக்கு வர விரும்புகிறார்களோ என்னவோ, தெரியவில்லை! அப்படிக் கோடிக்கணக்கான உயிர்கள் தினந்தோறும் இறந்து பிறப்பது இப்படித் தான் என்பதை நினைப்பூட்டுவது போல முன்னை நாளில் இறந்துவிட்ட சூரியன் பின்னை நாளில் பிறந்து விட்டான்......என்பது விரிவுரை.

இதில் நமக்கு வேண்டியது. 'இறந்த சூரியன் மீண்டும் பிறந்துவிட்டான்' என்பதுதான்.

* * *

அடுத்த சூரிய அஸ்தமனம், சூர்ப்பணகை இராமனால் விரட்டப்பட்டுப் போகிறபோது சொல்லப் படுகிறது. சூர்ப்பணகை தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள இராமனிடத்தில் செய்த மோகன முயற்சிகள்

ஒன்றும் முடியாமற்போகவே, அதற்கு வேண்டிய வேறு சூழ்ச்சிகளை ஆலோசனை பண்ணிக்கொண்டு மறுநாள் வரலாமென்று மறைகின்றாள். அவளோடு சூரியனும் அஸ்தமனம் செய்கிறான். எப்படியாவது இராமனை அடைந்துவிடவேண்டும் என்று விடிய விடியத் தன் இராக்ஷஸ மாயங்களையெல்லாம் எண்ணிக் காம வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறாள். அப்போதுசூரியன் உதயமாகிறான். எப்படியாவது இராமனை அடைந்து விட வேண்டும் என்று எண்ணுகிற சூர்ப்பணகைக்குச் சூரியன் எப்படி உதயமாகிறான் பாருங்கள் :

"ஆன்ற காதல் அஃது உற எய்துழி
மூன்று லோகமும் மூடும் அரக்கராம்
ஏன்ற காரிருள் நீக்க இராகவன்
தோன்றி னான்என வெய்யவன் தோன்றினான்."

அவ்வளவு அதிகமாக அந்தச் சூர்ப்பணகை இராமன் மேல் கொண்ட ஆசை வளர்ந்திருக்க, மூன்று உலகத்தையும் மூடிக்கொண்டிருக்கும் அரக்கராகிய அடர்ந்த இருளைப் போக்க இராமன் தோன்றினது போலச் சூரியன் உதயமானான்.

அஸ்தமனத்துக்கும் உதயத்துக்கும் உள்ள தொடர்பு நன்றாகத் தெரிகிறதல்லவா ?

* * *

இராவணன் சீதையைப் பர்ணசாலையோடு தூக்கிக் கொண்டு போனபின், மானைப் பிடிக்கப்போன இராமனும் அவனுக்கு அபாயம் வந்துவிட்டதாகச் சீதை முடுக்கப் போன லக்ஷ்மணனும் பர்ணசாலை இருந்த இடத்துக்கு வந்து பார்க்கிறார்கள். சீதையோடு பர்ணசாலையும் காணப்படவில்லை. தேடிக்கொண்டு நெடுந்தூரம் தெற்கே



வருகிறார்கள். குற்றுயிரோடு கிடந்த சடாயுவைச் சந்திக்கிறார்கள். சடாயு இராமனுக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு இறந்து போனான். சடாயு தந்தைக்குச் சமமானவன் ஆனதால் இராமன் அவனுக்கு ஈமக்கடன் செய்கிறான். தானும் அந்தத் துக்கத்துக்குத் தாயாதிக்காரன் ஆனதால், சூரியனும் ஈமக்கடன் செய்ய ஸ்நானம் செய்வதற்காகச் சமுத்திரத்தில் மூழ்குகின்றான்.

"பல்வகைத் துறையும் வேதப்
பலிக்கடன் பலவும் முற்றி
வெல்வகை குமரன் நின்ற
வேலையின் வேலை சார்ந்தான் ;
தொல்வகைக் குலத்தின் வந்தான்.
துன்பத்தால் புனலும் தோய்ந்து
செல்வகைக்கு உரிய எல்லாம்
செய்குவான் என்ன, வெய்யோன்."

"வேத முறைப்படி எல்லாத் துறைகளிலும் செய்ய வேண்டிய பலிக்கடன் சடங்குகளையெல்லாம் குறைவின்றி இராமன் செய்து நின்ற வேளையில், அதே குலத்தில் வந்தவனாகிய சூரியனும், சடாயுவின் மரணத்துக்குத் தானும் துக்கம் கொண்டாடி, சடாயுவின் ஆன்மா நல்ல கதி அடைவதற்காகச் செய்ய வேண்டியதையெல்லாம் தான் செய்ய நீரில் முழுகப்போனது போலச் சமுத்திரத்தைச் சார்ந்தான்" என்பது பொருள்.

* * *

இதற்கடுத்த பல பாட்டுகளில், சூரிய அஸ்தமனத்தில் வந்த இருட்டில் இராமன், சீதையின் பிரிவாற்றாமையோடு சடாயு இறந்துபோன துயரமும்

சேர்ந்து பொறுக்க முடியாத வேதனையடைகிறான், சீதையைப் பறிகொடுத்துவிட்டதான மானக்கேட்டை நினைத்துத் தன்னையும் தன் வில்லாண்மையையும் இகழ்ந்துகொள்கிறான். இப்படியாக, இராமன் இரவு முழுவதும் கண் மூடாமல் சீதையை நினைத்துக் கொண்டே புலம்புகிறான். அப்படி அவன் கண்கள் மூடாமலிருந்தது ஏன்? இயற்கையாக இரவில் குவிந்து மூடிக்கொள்ள வேண்டிய தாமரைகளான அவனுடைய கண்கள் இயல்புக்கு விரோதமாக, மூடாமல் விழித்த வண்ணமாக இருந்தன என்பதற்குக் கம்பன் காரணம் கற்பிக்கிறான், பாருங்கள்.

"யாம்அது தெரிதல் தேற்றாம் ;
மின்னகை சனகி என்னும்
காமரு திருவை நீத்தோம் ;
முகமதி காண்கி லாதோ
தேமரு தெரியல் வீரன்
கண்எனத் தெரிந்த செய்ய
தாமரை, கங்குல் போதும்
குளியலர்த் தண்மை என்னா !"

"வெற்றிமாலை அணிந்த வீரனாகிய இராமனுடைய கண்கள் தாமரைக் கண்கள் என்று சொல்லப்படுகின்றன. அப்படியானால் இரவிலுங்கூட அந்தத் தாமரைகள் குவியாமல் இருந்த காரணம் என்னவாக இருக்கும்? நாம் அதை அறிய முடியவில்லை. ஒருகால் 'மின்னலைப் போன்ற பல்லொளி வீசும் அழகியான சீதை, எப்போதும் தாமரையில் வசிக்கக்கூடிய லக்ஷ்மி. அந்தச் சீதையை வெளி உலகில் இழந்துவிட்டோம். அவள் வசிக்கும் இடமாகிய (இந்தக் கண்ணாகிய) தாமரையிலாவது



அவளுடைய சந்திரவதனம் தோன்றாதோ என்று அந்தத் தாமரைக் கண்கள் மூடாமல் விழித்துக்கொண்டே இருந்தனவாம்'' என்பது இதன் பொருள்.

எனவே, இராமன் தன்னுடைய கண்ணாகிய தாமரை மலரில் சீதையாகிய திருமகள் இருக்கிறாளா என்று தேடிக்கொண்டு விழித்திருந்தான். இப்படி அவன் தேடி, அங்கே சீதையைக் காணாமல் பற்பல விதமாக வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில் சூரியன் உதயமாகிறான். எதற்காக உதிக்கிறான்? பாருங்கள்.

"முடிநாட் டியகோட்டு உதயத்து
முற்ற எற்றான் ; முதுகங்குல்
விடிநாள் கண்டும் கிளிமிழற்றும்
மென்சொல் கேளா வீரற்குஆண்டு
அடிநாள் செந்தா மரைஒதுங்கும்
அன்னம் இலளால் யான்அடைந்த
கடிநாள் கமலத்து என்அவிழ்ந்து
காட்டு வான்போல், கதிர்வெய்யோன்."

'உதயகிரியின் உச்சியில் சூரியன் உதயமானான். எதற்காக என்றால், பொழுது புலர்ந்துங்கூடக் கிளி கொஞ்சுவதைப்போலப் பேசக்கூடிய சீதையின் சல்லாபத்தைக் கேளாது வருந்திக்கொண்டிருக்கும் இராமனுக்கு, 'இராமா! உன் கண்ணாகிய உபமானத் தாமரையில் மட்டும் அல்ல, வழக்கமாக ஆதிகாலம் தொட்டுச் சீதை வசிக்கிற இடமாகிய உண்மையான தாமரையிலுங்கூட அவள் இல்லை. நீயே பார்த்துக்கொள்' என்று தாமரை மலர்களை விரித்துக் காட்டுவதற்காகச் சூரியன் உதயம் செய்தான்'' என்பது கருத்து.

இராமனுடைய தாமரைக் கண்கள் இரவிலும் குவியாமல் சீதையைத் தேடிக்கொண்டிருந்தன. அங்கே சீதை காணப்படவில்லை. ஒருகால், அந்தத் தாமரையில் இல்லாத சீதை அவளுடைய வாசஸ்தலமாகிய இயற்கையான தாமரைக்கே போய்விட்டாளோ என்று இராமனுக்குச் சந்தேகம் வரலாம். அந்தச் சந்தேகத்தையும் நிவர்த்தி செய்துவிடுவது போலச் சூரியன் உதயமாகி, தாமரை மலர்கள் அலர்ந்தன என்பது விரிவுரை.

* * *

இப்படியாகக் கம்பன் சூரிய அஸ்தமனத்துக்கும் உதயத்துக்கும் தொடர்பு வைத்திருப்பதைக் காணலாம். கம்பராமாயணத்திலுள்ள எல்லா அஸ்தமன உதயப்பாட்டுகளையும் அவற்றின் தொடர்புகளையும் சொல்லுவதற்கு இந்தப் புத்தகத்தில் இடமில்லை. இன்னும் ஓரே ஓர் உதாரணத்தை மட்டும் சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்வோம்.

அசோகவனத்தில் சீதையைக் கண்டு, மோதிரம் கொடுத்து, சூளாமணியைப் பெற்றுக்கொண்டு, இலங்கையைக் கொளுத்திவிட்டு, அநுமான் இராமனிடத்தில் சீதையின் நிலைமையைச் சொன்னதும் இராமன் இலங்கையின்மேல் படையெடுக்கிறான். சேதுபந்தனம் செய்து, இராமன் வானர சேனையுடன் இலங்கைக்கு வந்து தங்குகிறான். ஒரு குன்றின்மீது இருந்துகொண்டு, தன்னிடம் சரண்புகுந்த விபீஷணன் காட்ட, இராமனும்



சுக்ரீவன் முதலியவர்களும் இலங்கையின் காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் இராவணன், தன் அரண்மனையின் உச்சியில் இருந்து கொண்டு தன் சேனையைப் பார்வையிடுகிறான். விபீஷணன், இராமன் முதலானவர்களுக்கு இராவணன் முதலானவர்களைக் காட்டுகிறான். இராவணனைப் பார்த்த சுக்ரீவன் திடீரென்று ஆகாயத்தில் கிளம்பி, இராவணன்மீது பாய்ந்து, மல்யுத்தம் செய்து, இராவணன் தலைகளிலிருந்த மகுடங்களைப் பறித்துக்கொண்டு இராமனிடத்துக்கு வந்துவிடுகிறான். அந்தத் தருணத்தில் சூரியன் அஸ்தமிக்கிறான் :

*"தன்தனிப் புதல்வன் வென்றித்*
*தசமுகன் முடியில் தைத்த*
*மின்தளிர்த் தனைய பல்மா*
*மணியினை வெளியில் கண்டான் ;*
*'ஒன்றுஒழித்து ஒன்றாம் என்று*
*அவ்வரக் கனுக்குஒளிப் பான்போல்*
*வன்தனிக் குன்றுக்கு அப்பால்*
*இரவியும் மறையப் போனான்."*

'தன்னுடைய மகனான சுக்ரீவனுடைய வெற்றியினால் இராவணனுடைய தலைகளில் இருந்த கிரீடங்களும் அவற்றிலிருந்த பல பெரிய இரத்தினங்களும் பறிக்கப்பட்டு, அவற்றைச் சுக்ரீவன் ஆகாய மார்க்கத்தில் கொண்டுபோவதைக் கண்ட சூரியன், ஒன்றிருக்க ஒன்றாக முடியுமோ என்று அந்த இராவண அரக்கனுக்குப் பயந்து ஓடி ஒளித்துக்கொள்ளப் போவது போல் மறைந்து போய்விட்டான்' என்பது பொருள்.

சுக்ரீவன் சூரிய புத்திரன். அவன் இராவணனுடைய மகுடங்களைப் பறித்துக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பினான். அதைப் பார்த்தான் சூரியன். இராவணனுக்குக் கோபம் வந்துவிட்டால் சூரியன், சந்திரன் முதலான கோள்களைக்கூடப் பிடித்துத் தண்டித்துவிடக்கூடியவன். ஆனதால், தன்னுடைய மகன் செய்துவிட்ட குற்றத்துக்காகத் தன்னை ஏதாவது செய்துவிடுவானோ என்று அஞ்சி, இராவணனுடைய கண்ணுக்குப் படாமல் உடனே மறைந்துகொள்ள ஓடிவிட்டவன் போலச் சூரியன் அஸ்தமனமானான். மேலும், அந்த மகுடங்களில் இருந்த மணிகள் சூரியனைப் போல் பிரகாசமுள்ளவை. அவற்றைப் பறித்துக்கொண்டு சுக்ரீவன் வெளியில் கிளம்பினான். வானத்தில் கிளம்பிய சுக்ரீவனைப் பின் தொடர இராவணன் வானத்தைப் பார்க்கலாம். அப்போது வானத்தில் சூரியன் இருந்தால், 'தன்னுடைய மகுடங்களின் ஒளிதானாக்கும்' என்று தன்மீது பாய்ந்துவிடுவானோ எனப் பயந்தான் என்று வியாக்கியானம் பண்ணினாலும் பொருந்தும்.

ஆகவே, இராவணனுக்குப் பயந்து சூரியன் ஓடி மறைந்துகொண்டான் என்பது இந்த அஸ்தமனத்தின் அலங்காரம். இராவணனோ யதேச்சாதிகாரி; மூர்க்கன்; அராஜகமான எதையும் செய்துவிடக் கூசமாட்டான். அப்படிப்பட்ட இராவணனுக்கு அஞ்சி மறைந்த சூரியன் மறுபடியும் எப்படி வெளிப்படுகிறான் என்பதைப் பாருங்கள்,

"அளித்தகை இல்லா ஆற்றல்
அமைந்தவன் கொடுமை அஞ்சி



வெளிப்படல் அரிதுஎன்று உள்ளி
வேதனை உழக்கும் வேளை,
களித்தவர் களிப்பு நீங்கக்
காப்பவர் தம்மைக் கண்ணுற்ற
ஒளித்தவர் வெளிப்பட்டன்ன
கதிரவன் உதயம் செய்தான்."

'கருணையில்லாமல், வெறும் பலம் மட்டும் உள்ள ஒருவனுடைய கொடுமைக்குப் பயந்து, வெளியில் வர முடியாமல் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறபோது (கொடுமைகளைச் செய்து அதில் களிப்படைந்திருக்கிற) அந்தக் கொடுமைக்காரனுடைய களிப்பு நீங்கும்படியாகச் செய்து, எல்லோரையும் காப்பாற்றக்கூடிய ஓர் உபகாரி வந்துவிட்டால் அவனைக் கண்டு, (வெளியே வரப் பயந்துகொண்டிருந்தவர்கள்) தைரியமாக வெளியில் வரத் துணிவது போலச் சூரியன் உதித்தான்' என்பது இதன் பொருள்.

அஸ்தமனத்துக்கும் உதயத்துக்கும் உள்ள பொருத்தம் எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள்!

இராவணன் கருணை இல்லாதவன்; ஆனால் வெகு பலசாலி. அவன் என்ன செய்துவிடுவானோ என்று பயந்து ஒளிந்துகொள்ள ஓடிப்போன சூரியன் இரவெல்லாம் வெளியில் வரப் பயந்துகொண்டிருக்கையில், துஷ்டர்களை அடக்கி மற்றவர்களைக் காப்பதற்காகவே இராமன் வந்திருக்கிற தைரியத்தின்மேல் வெளிப்பட்டது போல் உதயமாகிறான்.

# 7. சர்வ கலாசாலை

கம்பராமாயணம் ஒரு சர்வ கலாசாலை. அதில் காணப்படாத கலை அரிது. அநேக ஆயிரம் ஆண்டு களாகத் தமிழன் பல கலைகளிலும் கைதேர்ந்தவன் என்பது சரித்திர பூர்வமான சத்தியம். தமிழ் மக்களின் அந்தக் கலைப்பண்பு கம்பன் காவியத்தில் உச்சம் பெற்றிருப்பது மறுக்க முடியாத உண்மை.

கவிதை, சிற்பம், சித்திரம், சங்கீதம், நடனம், நாட்டியம், நாடகம், பட்சி சாஸ்திரம், மிருக சாஸ்திரம், தாவர சாஸ்திரம், வான சாஸ்திரம், சோதிட சாஸ்திரம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் முதலிய அனைத்தும் அதிலே அடங்கி இருப்பதால் கம்பராமாயணத்தை ஒரு சர்வகலாசாலை என்பது வெறும் கற்பிதம் அல்ல. மேலே சொல்லப்பட்ட எல்லாக் கலைகளின் அறிவும் கம்பனில் அங்கங்கே காணப்படுகின்றன. ஒரு சமூகத்தின் நாகரிகத்தை மதிப்பிடுவதற்கு அதிலுள்ள கலைகள் தாம் அளவுகோல். கம்பராமாயணத்தைப்போல் அவ்வளவு கலைச்சுவை நிறைந்த இலக்கியத்தை எந்த மொழி யிலும் காண முடியாது என்பது கற்றறிந்தோர் கண்ட தீர்ப்பு.

கம்பராமாயணத்திலுள்ள கலைகளைப்பற்றிய பாட்டு களைமட்டும் பொறுக்கித் தொகுத்தால் அதே ஒரு தனிப் பெரும் புத்தகமாகிவிடும். அப்படி ஒரு புத்தகத்தை உண்டாக்குவதும் தமிழுக்கு ஓர் உயர்ந்த உபகாரமாகும். அதை வேறு வேலையாக விட்டுவிட்டு இப்போதைக்கு அவசியமான சிலவற்றை மட்டும் சிந்திப்போம்.



சிற்பம், சித்திரம், சங்கீதம், நடனம் முதலிய கலை களைப்பற்றிய கருத்துகள் தமிழ் இலக்கியங்களில் எங்கே பார்த்தாலும் நிரம்பியிருக்கின்றன. அவைகளைப் பற்றிய ரஸனையும் தமிழ் மக்களிடம் அதிகமாக உண்டு என்பதும் அநுபவம். ஏனெனில், நெடுங்காலமாகவே தமிழர்களுடைய வாழ்க்கை, கலை வாழ்க்கையாகவே இருந்து வந்திருக்கிறது. அதனால் தமிழ் இலக்கியங் களுள் தலைசிறந்த காவியமாகிய கம்பராமாயணத்தில் மேற்சொன்ன இன்பக்கலைகளைப்பற்றிய பாட்டுகள் மிகுந்து இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால், மற்றெல்லாப் புலவர்களின் முறைகளிலும் மாறுபட்ட தென்னும் விதத்தில் கம்பன் இந்தக் கலைகளைக் கையாண்டிருக்கிற விதம், அவனுடைய கவிதைக்கலை யின் மேன்மையைக் காட்டும். எனினும், இந்தக் கலைகளை விட்டுவிட்டு, விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்ற விஷயங்களைக் கம்பன் எப்படி எடுத்தாளுகின்றான் என்பதில் நாம் அடையக்கூடிய இலக்கிய இன்பத்தை நாடுவோம்.

விஞ்ஞானம்—மெய்ஞ்ஞானம் என்ற இந்த இரண்டுக் குந்தான் உலகம் உண்டான நாள்தொட்டு ஓயாத போட்டி. விஞ்ஞானம் என்பது வெறும் யந்திர தந்திர சாதனங்கள். மெய்ஞ்ஞானம் என்பது, மனிதனுக்கு இந்த உலக வாழ்வுக்குமேல் இன்னும் ஏதாவது உண்டா இல்லையா ? அவனைப் பிறக்கச் செய்து, வளரச்செய்து, அவனையும் மீறி அவனை இறக்கச்செய்துவிடுகிற ஏதோ ஒரு சக்திக்கும் அவனுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா என்பவை பற்றிய ஐயம் திரிபுகளை ஆராய்வது.

விஞ்ஞானம் என்பது கண்ணுக்கு முன்னால் காணும் சக்திகள். மெய்ஞ்ஞானம் என்பதும் கண்ணும் மற்ற புலன்களும் மனமுங்கூட காணாத சக்திகள் விஞ்ஞானத்தின் பலாபலன்கள் உடனுக்குடன் கிடைக்கக்கூடியவை; மெய்ஞ்ஞானத்தின் பலாபலன் வெறும் நம்பிக்கைதான்; பலாபலன் என்னவென்று குறிப்பாகக்கூட எவராலும் சொல்ல முடியாது. விஞ்ஞானத்தை மறுப்பது கடினம். மெய்ஞ்ஞானத்தை மறுப்பது எளிது.

விஞ்ஞானத்தின் விளைவுகள் அவ்வளவு ஆசை யூட்டக்கூடியனவாக இருந்தாலும், அத்தனை நிச்சயமான சக்திகளையும் யந்திர தந்திர சாதனங்களையும் விட்டுவிட்டு மனிதன் ஒருநாள் மாண்டுதானே போகிறான் என்ற ஐயமோ அச்சமோ மனிதனுக்கு அப்போதைக்கப்போது உண்டாகத்தான் செய்கிறது. விஞ்ஞானத்தையே மிகவும் விரும்பி மெய்ஞ்ஞானத்தை வெறுத்துப் பேசிப் பிரசாரம் செய்கிற யதார்த்தவாதியையுங்கூட இச் சந்தேகம் விட்டபாடில்லை. இந்தச் சந்தேகம் வருகிற இடத்தில்தான் மெய்ஞ்ஞான உணர்ச்சி ஆரம்பமாகிறது. அப்படி ஆரம்பமாகிற உணர்ச்சியும் அதிக நேரம் நிலைப்பதில்லை. வெகு சீக்கிரத்தில் மீண்டும் விஞ்ஞானத்திலேயே விழுகிறது. ஏனெனில், விஞ்ஞானம் தன் உடலைப்பற்றியது. மெய்ஞ்ஞானம் வெறும் உணர்ச்சியைப்பற்றியதுதானே. உடலின் சுகதுக்கங்களின் முன்னால் நிற்கிற மனிதனுக்கு உணர்ச்சியின் இன்பதுன்பங்கள் இரண்டாம் பக்ஷந்தான். அதனால் தான் மனிதன் விஞ்ஞானத்தையே பெரிதும் விரும்புகிறான், மெய்ஞ்ஞானத்தையே நாடப் புறப்பட்டவர்களிடங்கூடப் பல பேர் இந்த உடலின் ஆசையினால்



காயகற்பம் முதலான விஞ்ஞான வித்தைகளில் இறங்கி விடுகிறார்கள். மிக உயர்ந்த காயகற்பம் செய்து கொண்டவர்களுங்கூடச் செத்துத்தான் போனார்கள் என்பதை எண்ணிக்கொண்டிருக்க முடிவதில்லை.

ஆகையினால், உலக வாழ்வில் விஞ்ஞானம் வெகு முக்கியமான இடம் பெறுகின்றது. அதை விலக்கிப் பேசிக்கொண்டிருப்பது வீண் முயற்சியோ என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது. அதை இப்போது (1946இல்) நம்முடைய இந்திய நாட்டின் சரித்திரம் நன்றாக எடுத்துக்காட்டுகிறது. எப்படியெனில்:

மகாத்மா காந்தியவர்கள் மெய்ஞ்ஞான மார்க்கத்தைப் போதிக்கவென்றே வந்தவராக வாழ்ந்து வந்தார். மெய்ஞ்ஞானம் என்பது வெறும் நம்பிக்கையைச் சேர்ந்ததுதான் என்றாலும், காந்தியைப் போல மெய்ஞ்ஞானத்தின சிறப்பை இவ்வளவு பிரத்யக்ஷமாக நடந்து காட்டி, அதற்கு இவ்வளவு ஆக்கம் தேடினவர்கள் யாருமே இதுவரையிலும் இப்பூமியில் பிறந்ததில்லை யென்று அநேக மேல் நாட்டு அறிஞர்களும் சொல்லுகின்றார்கள். நமக்கும் அது நன்றாகத் தெரிகிறது. அதனை மறுத்துப் பேசுகின்றவர்களுடைய மனமுங்கூட அதற்கு ஓரளவேனும் ஒத்துக்கொள்ளும்.

மகாத்மாவின் மெய்ஞ்ஞான வாழ்க்கையை எல்லா நாட்டு மக்களும் வாழ்த்துகிறார்கள். எனினும், மெய்ஞ்ஞானத்தைக்காட்டிலும் மனித வர்க்கத்துக்குத் தீமையே அதிகம் செய்துள்ள விஞ்ஞானத்தைத்தான் எல்லோரும் விழைகின்றார்கள். பிற நாட்டாரைப்பற்றியே பேச

வேண்டாம். நெடுங்காலமாக மெய்ஞ்ஞான உணர்ச்சியிலேயே ஊறிய பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் என்று நாம் இறுமாப்பு அடைகிற நம் இந்திய மக்களுக்குள்ளேயும், விஞ்ஞானத்தை விட்டு, அவர் கூறியுள்ள மெய்ஞ்ஞானத்தை எண்ணுகிறவர்கள் எத்தனை பேர்? நம்முடைய நாட்டின் எல்லா மக்களையும் ஏகமாகச் சொல்லுவதை விட்டுவிட்டு, அந்த மகாத்மாவினால் இவ்வளவு மகத்துவம் அடைந்து, இப்போது இந்திய நாட்டின் தேசிய அரசாட்சியை ஆரம்பித்திருக்கிற 'காங்கிரஸ்' ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களிலாவது விஞ்ஞானத்தைக்காட்டிலும் காந்தி வாழ்ந்து காட்டிய மெய்ஞ்ஞானந்தான் சிறந்தது என்று சிந்தனையிலாவது ஒத்துக்கொண்டவர்கள் எத்தனை பேர்? அந்தக் காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயும் காந்தியத்தையே தம்முடைய மூச்சாகப் பேசி வந்தவர்களிலேயும் காந்தியடிகளின் மெய்ஞ்ஞான வாழ்க்கையில் ஒரு சிறு அளவேனும் உண்மையாகச் செய்கையிற் காண்பித்து, மெய்ஞ்ஞானமே விஞ்ஞானத்திலும் தீமை குறைந்தது என்றாவது நடந்துகொள்ளுகிறவர்கள் எத்தனை பேர்?

விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய சிலரைத் தவிர, மற்ற காங்கிரஸ்காரர்களுங்கூட, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, விஞ்ஞான சக்திகளைப் பெருக்கிக் கொள்வதற்குக் காந்தியின் மெய்ஞ்ஞான சக்தியை ஒரு கருவியாக மட்டும் கருதுகிறார்களே தவிர, வேறில்லை. நாமும் மற்ற நாடுகளைப் போல, 'அணுகுண்டுகளை எப்போது செய்யப்போகிறோம்' என்ற ஆசைதான் நம்முள் அநேகருக்கு. அணுகுண்டினால் நேரக்கூடிய



அழிவுகளை நேர்முகமாக அறிந்த நாடுகளெல்லாம் 'அந்த அணுகுண்டு செய்யும் அறிவை அடியோடு மறந்துவிட்டால்தான் நல்லது' என்று பேசுகின்றனவே தவிர, செயலில் ஒவ்வொரு நாடும் அந்தக் குண்டு செய்யத் தெரியும் விஞ்ஞானத்தைத் தானும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற இரகசிய ஆராய்ச்சிகளில் தான் அதிகமாக ஈடுபடுகின்றன.

இப்போதைய உலகத்துக்கு விஞ்ஞானத்தைக்காட்டிலும் மெய்ஞ்ஞான போதனைதான் அதிகம் வேண்டும் என்பதை அனைவரும் ஆமோதிக்கிறார்கள். ஆனாலும் விஞ்ஞான முயற்சிகளைத்தான் அதிகம் விரும்பிச் செய்கிறார்கள். இதைச் சொல்வது குற்றம் சாட்டுவதற்காக அன்று; மனிதனுடைய இயல்பைக் காட்டுவதற்காகவே. இயல்பாக உடலின் சுகபோகங்களையே நாடுகின்ற மனிதன் விஞ்ஞான சக்திகளையே மிகவும் அதிகமாக விரும்புகின்றான். உடலின் சுகபோகங்களுக்கு விஞ்ஞானத்தின் சக்திகள் மிகவும் அதிகமாக உபயோகப்படுவதும் உண்மைதான்.

கைத்தொழில்கள் அழிந்து, யந்திரத் தொழில்கள் அதிகப்பட்டு, அதனால் உற்பத்தியாகும் அளவற்ற சரக்குகளை விற்பதற்காக வியாபாரப் போட்டி விருத்தியாவதும், அதனால் யுத்தங்கள் வருவதும், அந்த யுத்தங்களில் வெற்றி பெறுவதற்காகப் புதுப்புதுக் கொலைக் கருவிகளைக் கண்டுபிடிப்பதும், அவற்றால் கோடிக் கணக்கில் மக்களைக் கொன்று குவிப்பதுவும் விஞ்ஞானத்தின் விளைவுகளே. இலாபநஷ்ட கணக்குப் பார்க்கிற போது, விஞ்ஞானத்தினால் கிடைக்கிற போக இன்பத்

தைக்காட்டிலும் சோகத் துன்பமே பன்மடங்கு அதிக மாகத் தெரிகின்றது, ஆனால். பல நாளைக்குப் பின்னால் வருகிற மொத்த நஷ்டத்தைக்காட்டிலும் உடனே கிடைக்கின்ற சொற்ப லாபத்தைத்தான் நாம் சுகமெனக் கருத முடிகிறது. விஞ்ஞான சக்திகளைத் தீமை பயக்கச் செலவிடாமல் நன்மை பயக்க மட்டும் செலவிட முடியு மானால், அதனால் தோன்றும் இன்பங்கள் அநேகம் உண்டு. அப்படி நன்மையான காரியங்களுக்கே விஞ்ஞான சக்தியைப் பிரயோகிக்க வேண்டும் என்று தான் அதன் விருத்திக்காகப் பேசுகிறவர்களும் பிரயத்தனப்படுகிறார்கள்.

எனவே, விஞ்ஞானம் மனிதனுக்கு வேண்டும். இலக்கியம் தோன்றினது முதல் இந்த விஞ்ஞான சக்திகளை நாம் வெவ்வேறு விதங்களில் அறிந்து வருகிறோம். புராணக்கதைகளில் இவை வரங்களால் கிடைத்த சக்திகளாக வர்ணிக்கப்படுகின்றன. அப்படிப் பட்ட விஞ்ஞான சக்திகளை அதிகம் அடைந்து, அவற்றைத் தீயவழிகளிலேயே பிரயோகம் செய்தவர்கள் தாம் 'அரக்கர்கள்' என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அநுமானிக்க ஆதாரமிருக்கிறது. பிற்காலத்திய கதைகளில் இந்த விஞ்ஞான சக்திகள் இயற்கையின் தத்துவங்களாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன. தற்காலத் தில் அது 'ஸயன்ஸ்' என்ற பெயரில் சாஸ்திரமாக விளங்குகிறது. இந்த விஞ்ஞான சக்திகளைப் புலவர்களும் போற்றிப் பாடியிருக்கிறார்கள். கம்பனும் அதன் சூசனை காட்டுகிறான். காவியங்களிலும் அற நூல்களிலும் இந்த விஞ்ஞானத்தைப்பற்றிய விரிவுகளைக் காண முடியாது.



விஞ்ஞான சக்தியோ அல்லது வேறு சக்தியோ அந்தச் சக்தியைத் தர்மமான வழியில் பிரயோகிக்க வேண்டும் என்ற உணர்ச்சிக்கு அடிப்படையான அறிவையும் அன்பையுந்தான் காவியங்களும் அறநூல்களும் புகட்டு கின்றன.

அதற்குமேல் விஞ்ஞானத்தின் சக்திகளையும் அவற்றைப் பெறும் விதங்களையும் விரிப்பது அவற்றின் வேலையல்ல. காவியங்களும் அற நூல்களும் மெய்ஞ் ஞானத்தையே முக்கியமாகக் கருதுமாதலால், விஞ்ஞானங் களை விவரிக்க இஷ்டமும் வராது; இடமும் தராது.

மேலும், விஞ்ஞான சக்திகளின் வெளித்தோற்றம் சாசுவதமானதல்ல. வெவ்வேறு காலங்களில் அது வெவ் வேறு விதமாக இருக்கும். ஆனதால், அதைக் குறிப்பிட்ட ஒரு யந்திரத்திலோ கருவியிலோ அடக்கிக் காட்டிவிட முடியாது. உதாரணமாக, ஆதிகாலத்தில் வெறும் கவண் கல்லாக இருந்த குண்டு-துப்பாக்கிக் குழாயின் வாய் வழி யாக வெடி மருந்தைப் போட்டு, அதற்கு மேல் ரவைகளைப் போட்டு, கெட்டித்துக் கீழே திரி வைத்து, அதில் நெருப்பு வைத்துச் சுடுகின்ற துப்பாக்கியாயிற்று. பிறகு, அதே துப்பாக்கி நெருப்பு வைக்காமல் சுடுகின்ற தோட்டாத் துப்பாக்கி ஆயிற்று. அப்படி ஒரு தோட்டாத் துப்பாக்கியாக இருந்தது, பிறகு நிமிஷத்துக்கு நூற்றுக் கணக்கில் சரமாரியாகக் குண்டுகளை வீசக்கூடிய 'மாக்ஸிம்' துப்பாக்கியாகவும், 'ப்ரென்' துப்பாக்கி யாகவும் மாறிற்று. அதே துப்பாக்கியின் விஞ்ஞான வித்தைதான் இப்போது அணுகுண்டாகி உலகத்தை ஆட்டுகின்றது. இனி வரும் காலத்தில் இந்த அணு

குண்டையும் அலட்சியம் செய்துவிடக்கூடிய மற்றோர் உருவம் அதற்கு உண்டாகலாம். ஆகையினால், இந்த விஞ்ஞானக்கருவிகளைக் குறிப்பிட்ட ஒரு வடிவில் வர்ணிக்க முடியாது.

மனிதனுக்கு மனிதன் மாச்சரியம் இருந்தே வந்திருக்கிறது. அதனால், நாட்டுக்கு நாடு யுத்தம் நடந்து வந்திருக்கிறது. இதற்குப் படைபலத்தைப் பற்றிச் சொல்ல வந்த வள்ளுவர், படையின் கட்டுப் பாட்டையும் தைரியத்தையும் உயிருக்கு அஞ்சாத மறத்தைப்பற்றியும் மட்டும் பேசினாரேயல்லாமல் கருவிகளைப்பற்றிப் பேசவேயில்லை. அதனால்தான் திருக்குறள் எக்காலத்துக்கும் பொருந்துவதாக இருந்து வந்திருக்கிறது.

அதனால்தான் விஞ்ஞானத்தை ஒருபடியாகச் சொல்ல முடியாது. அதனால் சாசுவதமான அறிவையும் அதில் காண முடியாது.

ஆனால், மெய்ஞ்ஞானம் அப்படியன்று. அது அன்றைக்கும், இன்றைக்கும், இனி வரும் என்றைக்கும் ஒரே மாதிரியாக இருந்துவரும் ஒரு பொருளைப்பற்றிச் சொல்லப்படுவது. ஆனதால், அதை எப்போது எப்படிச் சொன்னாலும் மாறாது. மெய்ஞ்ஞானம் என்பது 'தெய்வ சக்தி' என்றோ, அல்லது 'இயற்கை' என்றோ, நாம் சொல்லுகின்ற ஒரு விஷயத்தின் மூல விக்ரஹம். விஞ்ஞானம் என்பது அந்த விஷயத்தின் உத்ஸவ விக்ரஹம். மூலம் ஒரே விதமாக இருக்கும்; உத்ஸவ விக்ரஹத்தின் அலங்காரம் அடிக்கடி மாறும். இதுதான் விஞ்ஞானத் துக்கும் மெய்ஞ்ஞானத்துக்கும் உள்ள வேறுபாடு.



மூல சக்தியைப்பற்றிப் பாடுகின்ற புலவர்கள் எல்லோரும் ஏறத்தாழ அதை ஒரே விதமாகத்தான் சொல்ல முடியும். ஆனால், விஞ்ஞானங்களைக் குறிப்பிடும் புலவர்கள் அவரவர்கள் கவிதைக் கலைத்திறத்துக்கும் தீர்க்க திருஷ்டிக்கும் தக்கவாறு நுணுக்கம் காட்டுவார்கள். கம்பன் விஞ்ஞானத்தைப்பற்றிய நுணுக்கம் ஏதேனும் சொல்லி இருக்கிறானா என்று பார்ப்போம் :

இயற்கையில் உள்ள சக்திகளை இன்னின்ன விதமாகப் பிரயோசனப்படுத்திக்கொள்ளலாம் என்ற தீர்க்க திருஷ்டியினால் கவிஞன் பின்னால் வரக்கூடிய ஒன்றை முன்னாலேயே சொல்லுவதும் உண்டு. அது அந்தக் கவிஞனுடைய வெறும் விருப்பத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பட்ட விஷயமானாலும் நமக்கு அது ஜோஸியம் சொன்னது போலவே தோன்றும். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சுமார் நாற்பது வருஷங் களுக்கு முன்னால் ஒரு பாட்டுப் பாடினார். அதில் 'இந்திய மக்கள் சுதந்தரம் அடைந்தால் இன்னின்ன காரியங்களைச் சாதிப்போம்' என்று வெறும் விருப்பமாகவுள்ள அநேக விஷயங்களை வெளியிடுகிறார். அந்தப் பாட்டில் அவர் கூறுகிறார் :

"காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்"

'காசியிலே புலவர் பேசுகின்ற பேச்சைக் காஞ்சிபுரத்தில் கேட்கும்படி அதற்கு ஒரு கருவியைச் செய்வோம்' என்பது பொருளாக இருக்கிறது.

இதில் சொல்லப்படுகிற கருவி நிச்சயமாக நாம் இப்போது 'வானொலி' என்று கேட்கிற 'ரேடியோ'தான்.

பாரதியார் இந்தப் பாட்டைப் பாடின காலத்தில் மேல் நாடுகளிலுங்கூட 'ரேடியோ' இருக்கவில்லை. இப் பாட்டுக்குச் சுமார் பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு தான் கம்பி இல்லாத் தந்திப் பேச்சு கண்டுபிடிப்பதற் கான முயற்சிகள் முளைத்தன, இது 'இப்படி இப்படி யெல்லாம் கருவிகள் இருந்தால் நல்லது' என்ற வெறும் விருப்பத்தைக் கற்பனையாக்கிக் கவிஞனுடைய ஆவேசத் தினால் வெளியிட்டதாகத்தான் இருக்கும். ஆனாலும் இதில் ஒரு தீர்க்கதரிசனம் அமைந்திருக்கிறதல்லவா?

இதைக்காட்டிலும் வியப்புண்டாக்கக்கூடிய ஒரு விஷயத்தைக் கம்பன் காவியத்தில் நாம் காண்கிறோம். என்னவெனில் :

இராமனுடைய அம்பினால் அடிபட்டு விழுந்த மாரீச னுடைய அபயக் குரலைக் கேட்டு, இராமனுக்கு அபாயம் வந்துவிட்டதாக நினைத்த சீதையின் பிடிவாதத்தால் லக்ஷ் மணன் இராமனை நோக்கிப் போய்விடுகிறான். அந்தச் சமயத்தில் இராவணன் சன்னியாசி வேடத்துடன் வந்து, சீதையைப் பர்ணசாலையோடு புஷ்பக விமானத்தில் வைத்துக்கொண்டு போய்விடுகிறான். லக்ஷ்மணன் வருவதைப் பார்த்த இராமன், மாரீசன் கூவின சப்தத்தை கேட்டுத்தான் தம்பி வந்திருக்கிறான் என்பதை உணர்ந்து, அப்படிச் சீதையைத் தனியே விட்டுவிட்டு லக்ஷ்மணன் வந்துவிட்டதால் அவளுக்கு என்ன அபாயம் நேருமோ என அஞ்சி, லக்ஷ்மணன் வந்துவிட்ட காரணத்தை விசாரிக்கிறான். லக்ஷ்மணன் நடந்ததையெல்லாம் சொல்லி, சீதை நெருப்பில் விழுந்து இறந்துபோகப் போனதையும் அறிவிக்கிறான்.



பிறகு, வெகு வேகமாக இருவரும் பர்ணசாலை இருந்த இடத்துக்கு வருகிறார்கள். அங்கே சீதையும் இல்லை ; பர்ணசாலையும் இல்லை; பர்ணசாலையைப் பூமியோடு பேர்த்து எடுத்திருப்பதையும், அருகில் ஒரு தேரின் சக்கரச் சுவடுகளையும் பார்த்தார்கள். இராமன் புலம்பு கிறான்; லக்ஷ்மணன், 'புலம்பிக்கொண்டு காலம் போக்கு வதில் பயனில்லை ; அந்தத் தேர்ச்சக்கரத்தின் சுவடு களைப்பின்பற்றி அதுநெடுந்தூரம் போய்விடுமுன் பிடிக்க முயலவேண்டும்' என்று இராமனிடம் சொல்லுகிறான்.

"ஆம் அதே இனி அமைவது என்று அமலனும் மெய்யில்
தாம் வார்கணை புட்டிலும் முதலிய தாங்கி
வாம மால்வரை மரன்இவை மடிதர வயவர்
பூமிமேல் அவன்தேர் சென்ற நெடுநெறி போனார்."

'ஆம் ; அதுதான் இனிச் செய்யவேண்டியது' என இராமனும் தன்னுடைய அம்பறாத்தூணியைச் சரியாகக் கட்டிக்கொண்டு புறப்பட, கல்லையும் மரங்களையும் சாய்த்துத் தள்ளிக்கொண்டு அந்தத் தேரானது பூமியின் மேல் போயிருக்கிற சுவடுகளைப் பின்பற்றி நெடுந்தூரம் போனார்கள்.

இந்தப் பாட்டில் 'பூமிமேல் அவன் தேர் சென்ற நெடு நெறி போனார்' என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். அடுத்த பாட்டில்,

"மண்ணின் மேல்அவன் தேர்சென்ற
சுவடெலாம் ஆய்ந்து
விண்ணின் ஓங்கிய தொருநிலை
மெய்யுற, வெந்த
புண்ணின் ஊடுஒரு வேல்என
மனம்மிகப் புழுங்கி
எண்ணி, 'நாம்இனிச் செய்வதுஎன் ?
இளவலே!' என்றான்."

பூமியின்மேல் அந்தத் தேர் போயிருந்த சுவடுகள் இருக்கிறவரையிலும் போய், அதற்குமேல் அந்தத் தேர் ஆகாயத்தில் கிளம்பியிருக்கிற உண்மையை அறிந்து, புண்ணில் வேல் நுழைந்தது போலத் துன்பமடைந்து, எண்ணியெண்ணிப் பார்த்து, 'தம்பி! இனிமேல் நாம் என்ன செய்வது?' என்று இராமன் சொன்னான் என்று சொல்லப்படுகிறது.

இதைச் சிந்தித்துப் பார்ப்போம். புஷ்பக விமானம் என்பது ஆகாயத்தில் பறந்து போகக்கூடிய ஒரு விமானம். புராணங்களில் சொல்லப்படுகிற புஷ்பகம் என்ன விதமாக இருக்கும் என்று எந்தப் புராணத்திலும் விவரம் கிடையாது. அது ஆகாயத்தில் பறக்கக்கூடியது என்ற ஒன்றுதான் அறியக் கிடைத்தது. புராணங்களில் ஆகாய விமானத்தைப்பற்றிப் படிக்கிறபோது அப்படியும் ஓர் இரதம் இருக்குமா என்று ஆச்சரியப்பட்டோம். இக் காலத்தில் 'ஏரோப்ளேன்' என்ற பெயரில் ஆகாய விமானம் சர்வ சாதாரண விஷயமாகிவிட்டது. இந்த விமானங்கள் எல்லாம் யந்திரப் பறவைகள்தாம்; இவை ஆகாயத்தில் பறந்தாலுங்கூட ஆகாயத்தை அடைவதற்கு முன், பூமியில் ஓடித்தான் ஆகாயத்துக்குக் கிளம்ப வேண்டும். பறவைகளைப் போல இந்த விமானங்கள் இருந்த இடத்திலிருந்து வானத்தில் எழும்ப முடியாது. இன்றைக்கு நாம் பார்க்கிற 'ஏரோப்ளேனை'ப் போலவே இராவணனுடைய ஆகாய விமானமும் பூமியின்மேல் ஓடிய பிறகுதான் ஆகாயத்தில் கிளம்பியிருப்பதாகக் கம்பன் சொல்லுகிறான்.



வால்மீகி இராமாயணத்தில் புஷ்பகத்தைப்பற்றிய பேச்சே இல்லை. மற்ற எல்லாப் பகுதிகளிலும் போலவே இந்த இடத்தில் கம்பனுடைய கதைப்போக்கும் அதன் உபகரணங்களும் வால்மீகிக்கு முற்றிலும் வேறுபட்டன. இராவணன் தனியே வந்து, சீதையைப் பலாத்காரமாகத் தொட்டுத் தூக்கி இடுப்பில் இடுக்கிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிவிட்டதாக வால்மீகி சொல்கிறார். கம்பனோ, 'இராவணன் தனக்குள்ள சாபத்தினால் சீதையைத் தீண்ட அஞ்சி, பர்ணசாலையோடு பெயர்த்துப் புஷ்பகத்தில் கொண்டுபோனதாகச்' சொல்லுகிறான். சொந்தமாகப் புஷ்பக விமானம் உள்ள இராவணன் அதைக் கொண்டுவந்தான் என்பதும், வால்மீகரே சொல்லியிருக்கிற அவனுக்குள்ள சாபத்துக்கு அஞ்சிப் பர்ணசாலையோடு சீதையைத் தூக்கிச் சென்றான் என்பதும், அப்படிப் பர்ணசாலையைப் பெயர்த்தெடுப்பது கைலாய மலையை ஆணிவேரோடு அசைத்துவிட்ட அவனுக்கு வெகு அநாயாசமான காரியம் என்பதும், அப்படி 'அவன் சீதையைத் தீண்டாமல் எடுத்துப் போனதுதான் உலகம் வணங்கத்தக்க சீதையினுடைய பெண்மைக்குப் பெருமை தரும்' என்று ஆழ்ந்த சிந்தனையின் பேரில் அப்படிக் கதையைத் தொடுத்ததும் கம்பனுடைய கவிதா மேதையைக் காட்டுகின்றது.

சீதையை இராவணன் ஆகாய விமானத்தில் வைத்துக்கொண்டு போனான் என்றும், சீதையையும் பர்ணசாலையையும் காணாது கலங்கிய இராமலக்ஷ்மணர்கள் ஒரு தேரின் சக்கரச் சுவடுகளைப் பார்த்து, அவற்றைப் பின்பற்றிச் சென்றார்கள் என்றும், அந்தச்

சக்கரச் சுவடுகள் பூமியில் தெரிந்த வரையிலும் சென்று, அந்தத் தேர் ஆகாயத்தில் கிளம்பிவிட்டதற்கப்புறம் சுவடுகளைக் காணமுடியாமல் விமானம் சென்ற திசையை அறியமாட்டாமல் திகைத்தார்கள் என்றும் கம்பன் சொல்லுகிறான். கம்பன் இராமாயண காவியத்தைச் செய்தது ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஆகாய விமானம் என்பது வெறும் புராணப் புளுகாகத்தான் இருந்திருக்க முடியும். அப்படியிருக்க, ஓர் ஆகாய விமானம் தரையில் ஓடித்தான் ஆகாயத்தில் கிளம்புகிறது என்ற இன்றைய உண்மையை அவன் எப்படிக் கண்டானோ! ஒருகால், அந்தப் பாட்டு ஓர் இடைச்செருகல் பாட்டாக இருக்கலாமோ என்று எண்ணவும் இடமில்லை. 'ஏரோப்ளேன்' வந்தது கடந்த நாற்பது வருஷங்களுக்குள்ளாகத்தான். இந்தப் பாட்டை நான் நாற்பது வருஷங்களுக்கு முன்னால், நான்காவது பாரத்திலே, பாடப்புத்தகத்தில், கம்பராமாயணப் பகுதியாகப் படித்தேன்.

இந்தப் பாட்டில் ஒரு விஞ்ஞான நுட்பம் விளங்குகிறது. அது கற்பனையோ தீர்க்க தரிசனமோ ஜோசியமோ அல்லது கவிஞனுடைய ஆசையின் ஆவேசமோ அல்லது 'பூர்வ ஜன்ம ஜன்மாந்தரங்கள்' என்று சொல்லுகிறார்களே, அந்தத் தொடர்பினால் ஏற்பட்ட நினைவுதானோ, எப்படியோ இருந்துபோகட்டும். ஆனால், நமக்கு இதில் ஓர் இலக்கிய இன்பம் இருக்கிறது என்பது மட்டும் கண்கூடு.



மற்றோர் இடத்தில், மின்சார விளக்கை ஏற்றுவது போலக் கம்பன் ஓர் 'எலக்ட்ரிக் ஸ்விச்' செய்கிறான். அதைப் பாருங்கள் :

சடாயுவுக்கு ஈமக்கடன்களைச் செய்துவிட்டு, அன்றைய இரவை ஒரு மலையில் கழித்து, மறுநாள் சீதையைத் தேடிக்கொண்டு வெகுதூரம் போகிறார்கள்; சீதையைக் காணாமல் வெகு வருத்தத்தோடு ஒரு சோலையில் தங்குகிறார்கள். அது ஓர் உய்யான வனமாக இருந்தது ; அதிலிருந்த ஒரு பளிங்கு மண்டபத்தில் இரவைக் கழிக்க ஒதுங்குகிறார்கள். நள்ளிரவில் இராமனுக்குத் தாகம் உண்டாகிறது. தண்ணீர் கொண்டு வரும்படி இராமன் தம்பிக்குச் சொன்னான். இளையவன் தண்ணீர் இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு போகிறான். அப்போது அந்தச் சோலையிலிருந்த அயோமுகி என்னும் அரக்கி லக்ஷ்மணனைக் கண்டு காமுறுகிறாள்; லக்ஷ்மணனிடத்தில் வந்து தன் ஆசையை வெளிப்படுத்துகிறாள். லக்ஷ்மணன் மறுக்கிறான். அவள் வெகுநேரம் கெஞ்சுகிறாள். லக்ஷ்மணன் அவளைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்துகிறான். அவள் ஆசை மேலீட்டால் அவனுக்குத் தீங்கு செய்ய மனம் வராமல் அவனைக் கொண்டுபோய்த் தனது குகையில் அடைத்துக்கொண்டு தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ளலாம் என்று லக்ஷ்மணனைத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறாள்.

தண்ணீருக்காகப் போன தம்பி நெடுநேரமாகியும் திரும்பி வராததைக் கண்ட இராமன், சீதையைக் கொண்டுபோனவர்கள் அவனையும் கொண்டுபோய்

விட்டார்களோ, அல்லது அவர்களைக் கண்டுபிடித்துப் போர் செய்துகொண்டிருக்கிறானோ, அந்தப் போரில் ஏதாவது அபாயம் நேர்ந்துவிட்டதோ என்று பலவிதமாக எண்ணிக்கொண்டு புலம்பித் தேறி, லக்ஷ்மணனைத் தேடிக்கொண்டு இருட்டில் புறப்படுகிறான். நெடுநேரம் தேடியும் லக்ஷ்மணன் போன இடம் புலப்படவில்லை.

லக்ஷ்மணனைத் தூக்கிக்கொண்டு போன அயோமுகிக்கும் அவனுக்கும் சச்சரவு நடந்து, அயோமுகியின் மூக்கையும் காதுகளையும் லக்ஷ்மணன் அறுத்துவிடுகிறான். அரக்கி அலறிக் கத்துகிறாள். அந்த ஓசை இராமனுக்கு எட்டிற்று. யாரோ அரக்கியின் குரலாக இருக்கிறதென்று, தம்பிக்குத் துணை போக நினைத்து, அந்த ஓசை எழுந்த திசையில் வேகமாகப்போக எண்ணுகிறான். நடு இரவில் மரச்செறிவுகளால் இருள், அந்தகாரத்தினும் அதிகமாக இருக்கிறது. வழி தெரிவதற்காக இராமன் மின்சாரம் உண்டாக்குகிறான்.

"அங்கியின் நெடும்படை வாங்கி அங்குஅது
செங்கையில் கரியவன் திரிக்கும் எல்லையில்
பொங்கிஇருள் அப்புறத்து உலகம் புக்கது;
கங்குலும் பகல்எனப் பொலிந்து காட்டிற்றே"

"கரியவனான இராமன் அக்கினி பாணத்தை எடுத்து, அதைக் கையினால் திருகின உடனே, அங்கிருந்த அடர்ந்த இருள் அடுத்த உலகத்துக்கு ஓடிப் புகுந்து கொண்டது. இராத்திரி வேளையும் பட்டப்பகல் போல விளங்கிற்று."

ஓர் அஸ்திரத்தை எடுத்துத் திருப்பினானாம்: (அல்லது முறுக்கினானாம்) உடனே வெளிச்சம் உண்டா



யிற்றாம். இது மின்சாரச் சாவியை(ஸ்விட்சை)த் திருப்புவதுபோல் இருக்கிறதல்லவா? அல்லது ஒரு மின்சாரக் கைவிளக்கை(பாட்டரி லைட்டை)த் திருப்புவது போல் இல்லையா? இந்தப் பாட்டிலுள்ள கருத்து கம்பனுடைய மனோதர்மத்தில் உதித்த ஒரு கற்பனையாகத்தான் இருக்கும். இருந்தாலும், இனிமேல் வருகிற எதிர்கால உலகத்தில் கம்பியில்லாமல், 'பாட்டரி' இல்லாமல், மற்றும் இப்போது நாம் அறிந்திருக்கிற மின்சார சம்பந்தம் எதுவும் இல்லாமல், ஒரு கருவியை எடுத்துத் திருப்பின உடனே வெளிச்சம் உண்டாகும்படியாக விஞ்ஞான அறிவு விருத்தியாகலாம் அல்லவா? இதுதான் கவிஞனுடைய தீர்க்க திருஷ்டி என்று சொல்லப்படுவது.

விஞ்ஞானத்தின் எல்லையற்ற சக்திகளைக் குறிப்பன போன்ற பாடல்கள் கம்பன் காவியத்தில் எண்ணிறந்தன இருக்கின்றன. சேதுபந்தனம் செய்வதற்காக வருணனை வழி வேண்டி, சமுத்திர ராஜன் வருவதற்குத் தாமதமானதால் கோபித்து, இராமன் சமுத்திரத்தின்மேல் விடுகின்ற ஒரே ஓர் அம்பால் ஏற்பட்டதாகக் கம்பன் சொல்லுகிற விபரீதங்களைக் கவனித்துப் பார்த்தால், சமுத்திரத்தில் ஒரே ஓர் அணுகுண்டைப் பிரயோகம் செய்து என்னென்ன கேடுகளை விளைவிக்கலாம் என்று இக்காலத்து விஞ்ஞானப் பேரறிஞர்கள் ஊகிக்கிறார்களோ அத்தனை கேடுகளும் அதிலே காணப்படுகின்றன.

யுத்த காண்டத்தில், இந்த விஞ்ஞான சக்தியின் விளைவுகள் இன்னும் விரிவாகச் சூசிக்கப்படுகின்றன. யுத்தப் பாட்டுகளைக் கம்பனைப் போல வேறு எந்தக் கவிஞனும் சலிப்புத் தட்டாத முறையில் பாட முடியாது.

ஒரே விதப் பாணத்தைப்பற்றிப் பல இடங்களில் பாடினாலும் ஒவ்வோர் இடத்திலும் அந்தப் பாணம் புதுப்புது விதமாகத்தான் புகுந்து வேலை செய்யும். இராமன், இராவணன் முதலானவர்கள் பிரயோகிக்கிற அஸ்திர சஸ்திரங்கள் எப்படி எப்படியெல்லாம் அழிவுகளைச் செய்தன என்பதை ஊன்றிப் பார்த்தால், இக்காலத்து யுத்தக் கருவிகளைச் செய்வதற்கென்றே ஆயுள் முழுவதும் ஆராய்ச்சி நடத்துகின்ற விஞ்ஞானிகளும் வியப்படைந்து, அப்படிப்பட்ட கருவிகளைச் செய்ய விருப்படைவார்கள். கற்பனை உலகத்தில் கம்பன் காட்டுகிற விஞ்ஞான வேலைகள் அத்தனையும் ஒரு காலத்தில் உண்மையாகவே நடந்தாலும் நடக்கலாம்.

## 8. மெய்ஞ்ஞானம்

மெய்ஞ்ஞானம் என்பது உண்மையான அறிவு அல்லது உண்மையைப்பற்றிய அறிவு. எந்த உண்மை என்றால், என்றென்றும் உண்மையாக இருக்கிற உண்மை. என்றென்றும் உண்மையாக இருக்கிற உண்மை எது? இந்த உலகமா, சூரியனா, சந்திரனா? அல்ல. இந்த உலகமும் சூரியனும் சந்திரனும் மற்றும் ஆகாயத்தில் விளங்குகின்ற நக்ஷத்திரங்களுங்கூட ஒரு காலத்தில் இல்லாமற்போய்விடும் என்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லப்பட்டு வருவதை இதுவரையிலும் நாம் 'புராணப் புளுகுகள்' என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், அது புளுகு அல்ல என்று ஐரோப்பிய விஞ்ஞான அறிஞர்கள் தக்க சான்றுகளுடன் காட்டுகிறார்கள். எப்படிப் போல என்றால்: செடி கொடி மரங்களுக்கும் உயிர் உண்டு; உணர்ச்சிகளும் உண்டு. அவற்றைக் கிள்ளினாலும் வெட்டினாலும் அவை துன்பப்படுகின்றன. ஆதலால், அப்படிக் கிள்ளுவதும் வெட்டுவதுங்கூட ஜீவஹிம்சையைப்போன்ற பாவம் என்று நம் முன்னோர்கள் சொன்னபோது அதை நாம் புராணப் புளுகு என்று சொன்னோம். ஆனால், ஜகதீச சந்திர போஸ் என்ற வங்காள விஞ்ஞானி, வெகு நுட்பமான கருவிகளைக்கொண்டு, செடிகொடிகளின் தசை, எலும்பு, நரம்பு, நாடி, இரத்த ஓட்டம், உயிர், உணர்ச்சி என்பனவற்றைத் தனித்தனியே நிரூபித்துக் காட்டின பிறகுதான், செடிகொடிகளும் ஜீவர்கள் என்பது உண்மைதான் என்று ஒத்துக்கொண்டோம். அதைப்

போலவே, இந்தச் சூரியன் ஒரு காலத்தில் இல்லாமற் போவான் என்பதையும் புராணப் புளுகாக எண்ணின நாம், இப்போது ஐரோப்பிய வான சாஸ்திரிகள் சரியான கருவிகளைக்கொண்டு நிமிஷத்துக்கு நிமிஷம், நாளுக்கு நாள், மாதத்துக்கு மாதம், வருஷத்துக்கு வருஷம் சூரியனுடைய வெப்பம் குறைந்துகொண்டே வருவதாகவும், இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து சூரியன் உஷ்ணமும் ஒளியும் இல்லாமல் மறைந்துவிடுவான் என்றும் கணக்குகளுடன் விளக்கிக் காட்டுகிற போது அஃது உண்மையாகத்தான் இருக்குமென்று நினைக்கிறோம். ஆதலால், சூரியன், சந்திரன், பூமி, நக்ஷத்திரங்கள் முதலான எல்லாம் ஒரு காலத்தில் அழிந்துதான் போகும் என்று தெரிகிறது. அப்படி இவைகளெல்லாம் அழிந்து போன பிறகு எது இருக்கும் என்ற இந்தக் கேள்விக்குப் பதில் கண்டுபிடிக்க முயல்வதுதான் மெய்ஞ்ஞான ஆராய்ச்சி. பூமி, சூரியன் முதலானவைகள் இப்போது நம் கண்முன் இருக்கிற உண்மைகள் தாம் என்றாலும், அவைகள் என்றென்றும் உண்மையாக இருக்கக்கூடிய உண்மைகள் அல்ல. என்றென்றும் உண்மையாக இருக்கக்கூடிய உண்மையானது இந்தச் சூரிய சந்திர பூமிகளுக்கு அப்பாற்பட்டதாகத்தான் இருக்கிறது. அந்த மெய்ஞ்ஞான அறிவை நாடுவதுதான் மெய்ஞ்ஞானம்.

விஞ்ஞானம் என்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படுகிற நம்முடைய ஐந்து புலன்களுக்குள் எட்டக்கூடிய விஷயங்களை மட்டும் பற்றியது. ஆகையால், விஞ்ஞானம் என்பது இந்த ஐம்புலன்களுக்கு



ஆதாரமான ஐந்து பூதங்களாகிய மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பனவற்றில் அடங்கிக் கிடக்கும் சக்திகளைக் கண்டறிந்து, அந்தச் சக்திகளை நம்முடைய சாமர்த்தியத்துக்குத் தகுந்தபடி பயன்படுத்திக்கொள்வது எவ்வளவு விஞ்ஞான அறிவோடு எவ்வளவு வியக்கத்தக்க எந்திர தந்திரக் கருவிகளைக் கண்டுபிடித்தாலும், அல்லது வேறு எப்படிப்பட்ட விஞ்ஞான வித்தைகளைச் செய்தாலும் அவைகள் அனைத்தும் இந்தப் பஞ்சபூத சக்திகளுக்குள்ளேதான் அடங்கிவிடும். இந்தப் பஞ்ச பூதங்களுங்கூடச் சூரிய சந்திராதிகளைப் போல ஒரு காலத்தில் அழிந்துவிடக்கூடியவை. ஆதலால், அந்த மெய்ஞ்ஞானப் பொருளாகிய என்றென்றும் உள்ளதான உண்மை, இந்த விஞ்ஞானத்திலோ விஞ்ஞானத்துக்கு ஆதாரமான ஐந்து பூதங்களிலோ அடங்கினதல்ல. அந்த மெய்ஞ்ஞான உண்மைப் பொருள் இந்தப் பஞ்ச பூதங்களுக்குள் அகப்படாமல் இருக்கிற காரணத்தால்தான் அது வெறும் பஞ்ச பூதங்களால் மட்டும் யாக்கப்பட்டுள்ள நம்முடைய புலன்களுக்கும் எட்டுவதில்லை.

'எவ்வளவு விஞ்ஞான வித்தைகளைச் செய்துவிட முடிந்தாலும், அந்த விஞ்ஞானத்தின் மூலமாக மெய்ப் பொருளைக் கண்டுவிட முடியாது' என்ற உண்மையைத் தாயுமானவர் வெகு அழகாக,

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும் கட்டலாம்
ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட் டலாம்
வெந்தழலில் இரசம்வைத்து ஐந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ண லாம்

வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொள்ள லாம்
சந்ததமும் இளமையோடு இருக்கலாம் மற்றொரு
சரீரத் தினும்புகுதல் ஆம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது, சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே''

என்று சொல்கிறார். இந்தப் பாட்டு நமக்கு மிகவும் சலித்துப்போன பாட்டாக இப்போது தோன்றினாலும் இதிலுள்ள கருத்துகள்தாம் என்றும் உண்மையானவை.

விஞ்ஞான வித்தைகளுக்கு எட்டாத அந்த மெய்ஞ் ஞானப் பொருளை அறிய வேண்டுமென்று கணக்கிலடங் காத காலந்தொட்டு இந்நாட்டிலிருந்த எண்ணரிய பெரியோர்கள் எத்தனையோ விதங்களில் முயன்று, அந்த முயற்சிகளைப்பற்றிய அனுபவங்களை எழுதி வைத்தும் போதித்தும் வந்திருக்கிறார்கள். அந்த முயற்சிகளுக்கான அறிவு நூல்களும் ஆராய்ச்சிக்காரர் களும் இவ்விந்திய நாட்டில் உள்ளது போன்ற அளவில் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்பது உலகப் பிரசித்தமானது. நம் நாட்டில் உதித்த வெவ்வேறு மகாத்மாக்கள் வெவ்வேறு விதமாக இதை விளக்கி வந்திருக்கிறார்கள்.

உலகங்களெல்லாம் அழிந்த பின்பும் அழியாதிருப் பதும், என்றென்றும் உள்ளதுமான இந்த மெய்ப் பொருளின் நம்பிக்கைதான் நம்முடைய உலக வாழ்க்கை



யின் நிலையாமையை நினைப்பூட்டிக்கொண்டே இருப்பது. அந்த நினைப்பினால்தான் மனிதன் மிருகங் களுக்கு மாறுபட்டவனாக இருக்கிறான். அதே நினைப்பு தான் மனிதனுக்கும் இயல்பாக உள்ள மிருகத் தன்மை களைக் குறைத்துச் சமுதாயத்தின் சமாதானத்தைக் காத்து வருகிறது. இந்த மெய்ஞ்ஞான உணர்ச்சியை வளர்ப்பதற்கு வாய்மையும் ஜீவகாருண்ய ஒழுக்கமுந்தாம் அடிப்படைகள் என்பதை உலகத்தின் எல்லா நாடுகளிலும் தோன்றிய உத்தமர்கள் உபதேசித்தும் அதற்கிணங்க வாழ்ந்து காட்டியும் வந்திருக்கிறார்கள். அந்த வாய்மையும் ஜீவகாருண்யமும் பொருந்திய மெய்ஞ்ஞான வாழ்க்கைக்குக் கொல்லாமையும் பொய் சொல்லாமையுந்தாம் சாதனங்கள் என்பது நெடுங்கால மாக நிச்சயமான அறிவு. இதைத் திருவள்ளுவர்,

''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று''

என்ற அருமையான குறளில் அடக்கியிருக்கிறார். 'மனிதனுக்கு மிக உயர்ந்த அறம் எதுவென்றால் கொல்லாமை. அதற்கு அடுத்தபடி உயர்ந்த அறம் பொய் சொல்லாமை' என்பது இதன் பொருள். இந்தக் கொல்லாமை என்பதே,

''தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை''

என்றும், பொய்யாமை என்பதை,

''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு''

என்றும் விளக்குகிறார்.

அஃதாவது, தன் உயிர் போலவதாக இருந்தாலும் தான் மற்றோர் உயிரைக் கொல்லக்கூடாது என்பதும், உத்தமர்களுக்கு வழி காட்ட ஒளி தரக்கூடிய விளக்கு பொய் சொல்லாமைதான் ; மற்ற விளக்குகள் அல்ல என்பதும் இவ்விரண்டு குறள்களின் அர்த்தம்.

வட மொழியிலும் தமிழ் மொழியிலும் மற்றும், இந்த வடமொழிக்கும் தமிழுக்கும் தொடர்புடைய இந்திய நாட்டின் எல்லா மொழிகளிலும் மேற்சொன்ன இரண்டு தர்மங்களையும் வலியுறுத்துகிற இலக்கியங்கள் எண்ணிறந்தன. சுருங்கச் சொன்னால், இந்திய நாட்டின் நாகரிகம் முழுவதும் இந்த இரண்டு அறங்களின்மேல் கட்டப்பட்ட அறமனையே ஆகும்.

ஆனால், இந்த இரண்டு அறங்களையும் போதிக்கிற நூல்களும் கடைப்பிடித்த மகாத்மாக்களும் வெவ்வேறு விதங்களில் எழுதியும் வாழ்ந்து காட்டியும் இருக்கிறார்கள்.

இந்த இரண்டு அறங்களையும் வாழ்ந்து காட்ட வென்றே இப்போது நம்மிடை அவதரித்து வாழ்ந்து வந்த மகாத்மா காந்தியவர்கள் நம்முடைய பழைய அறநூல்களுக்கு மிகவும் நூதனமான அர்த்தம் நடந்து காட்டினார்.

காந்தியடிகளின் ஒப்பரிய வாழ்க்கையினால் நெடு நாளாகச் சமூக வாழ்க்கையில் மங்கிக் கிடந்துவிட்ட 'ஜீவகாருண்ய ஒழுக்கத்துக்கும்', 'பொய் சொல்லாத விரதத்துக்கும்' மிகவும் புதிதான ஒளி உண்டாகியிருக்கிறது.



'கொல்லா விரதமும், பொய்யா விரதமும்' இன்னதென்று காந்தியடிகளைப் போல இவ்வளவு தெளிவாகத் தெரியச் சொன்னவர்களும் இவ்வளவு புனிதமாக நடந்து காட்டினவர்களும் சரித்திர சாட்சியாக எவருமே இல்லை என்று, கொல்லாமையிலும் பொய்யாமையிலும் ஈடுபட்ட மனமுடைய அறிஞர்கள் எல்லோரும் ஒருமித்துச் சொல்லுகிறார்கள்.

இனி, இந்தக் காந்தியந்தான் என்ன ? காந்தியடிகள் கடைப்பிடித்துள்ள செயல் முறைகளைப் போன்ற கருத்துகள் நம் தமிழ் இலக்கியங்களில் எங்கேனும் உண்டா என்பதைப்பற்றிச் சற்று ஆராய்வோம். காந்தி சொல்லுகின்ற சத்திய சாந்த நெறியைத்தான் எல்லா மகான்களும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய இலக்கியங்களில் எண்ணிறந்த சான்றுகள் இருக்கின்றன. ஆனால், இந்தச் சாந்தம், சத்தியம் என்ற அறங்களைக் காந்தியடிகள் உணர்ந்திருந்த மாதிரியே உணர்ந்தவர்கள் யாரேனும் உண்டா, அதற்கு இலக்கியம் உண்டா, அந்த இலக்கிய இன்பம் எது என்பவைதாம் இங்கே சொல்லப் புகுவது.

அதைச் சொல்லும் முன்னால் இந்தக் காந்தியம் என்ன என்பதை வரையறுத்துக்கொள்ள வேண்டும். வரையறை இல்லாவிட்டால் குழப்பம் குறுக்கிடும்.

காந்தியம் என்பது: தீமையை நன்மையால் தீர்க்க முயல்வது. அந்த நன்மையும் தூய்மையுள்ளதாக இருக்க வேண்டும். தூய்மையான நல்ல காரியங்களையே செய்து தீமையைத் தீர்க்க முடியாவிட்டாலும் அந்தத் தீமையைத் தீர்க்கப் பிரார்த்தனையும் தவமும் புரிந்து

தன்னையே அதற்குப் பலியாகக் கொடுத்துவிட வேண்டுமேயல்லாமல், தன்னுடைய முயற்சிகளின் பரிசுத்தத்தைக் கெடுத்துக்கொண்டு வேறு முறைகளை விரும்பிவிடக்கூடாது என்பதுதான்.

கொலை செய்வதைக் கொலை செய்து நீக்கிவிட முடியாது. பொய் பேசுவதைப் பொய் பேசி மாற்றிவிட முடியாது. மூர்க்கனை மூர்க்கத்தனம்காட்டி நல்லவனாக்கிவிட முடியாது. சுருங்கச் சொன்னால், நெருப்பை நெருப்பைக்கொண்டே அணைக்க முடியாது. நெருப்பை அவிக்க அதற்கு நேர்மாறான நீர்தான் வேண்டும். வம்பைக் குறைக்க அன்பு வேண்டும். பொய்களைக் குறைக்க வாய்மையே பேச வேண்டும். இதில் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று செய்யாமல் ஒரே உறுதியான தூய்மை வேண்டும். அப்படி ஒரே வழியில் வெற்றி கிடைக்குமா என்ற சந்தேகமே வரக்கூடாது. அந்த ஒரே வழியில் நின்று அதற்காக உயிரையும் விட்டுவிடச் சித்தமாக இருப்பதே காந்தி வழி.

தான் கோரிய முறையில் உலகத்துக்கு நன்மை உதிக்காவிட்டால் பட்டினி கிடந்தாவது இச்சா மாத்திரமாக உயிரை விட்டுவிட வேண்டும் என்பதுதான் காந்தியம்.

கருத்துரையாகச் சொன்னால், பரிசுத்தமான முறைகளில் தீமைகளைத் தீர்க்க முடியாவிட்டால், அந்தப் பரிசுத்தத்தில் குறைந்துவிடாமல் பட்டினி கிடந்து உயிரை விட்டுவிட வேண்டும். அந்தத் தியாகமே பின்னாலாவது நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை.



இதுதான் காந்தியம். இதை உலகத்துக்கு உபதேசிக்க, காந்தி மகான் கையாண்ட முறைகளில் மிகவும் புதுமை உள்ளது. தீமையை அன்பு வழியில் தீர்க்க முடியாவிட்டால், அதற்காகப் பட்டினி கிடந்து தவம் புரிவதும், அதிலும் மாறுதல் ஏற்படாவிட்டால் அந்தப் பட்டினியில் இறந்தே போகத் துணிவதும், வேறு எந்தச் சாந்தி போதகரும் மேற்கொள்ளாத முறை. அப்படி இதற்கு முன்னால் இப்படி மேற்கொண்டவர்கள் இருந்திருந்தாலும் அவர்கள் உலக வாழ்க்கையினின்றும் ஒதுங்கியிருந்து காடுகளிலும் மலைக்குகைகளிலும் மறைவாக இருந்திருக்கலாம். அவர்களுடைய முயற்சிகள் சமுதாயத்தோடு சேர்ந்த சரித்திரங்கள் அல்ல. தனிமையில் வசித்துக்கொண்டு தம்மை நாடி வருகிற மக்களுக்கு மட்டும் சாந்தோபதேசம் செய்வதற்கும், உலக வாழ்வின் பல துறைகளிலும் உண்டாகும் பற்பல தொல்லைகளையும் பொறுத்துக்கொண்டு சாந்த நிலை தவறாதிருப்பதற்கும் அளவிடக்கூடாத வேறுபாடு உண்டு.

இவ்வளவு அபூர்வமாக காந்தியடிகள் எண்ணியதைப் போல, சாந்த வழியை மேற்கொண்டு தீயவர்களுக்கும் ஒரு மன மாற்றத்தை உண்டாக்க முயல வேண்டும் என்றும், அது முடியாவிட்டால் அதற்காகக் கொலை வழியை மேற்கொண்டுவிடாமற் பட்டினி விரதம் கிடந்து மாண்டு போவதே புகழுடையது என்றும் வேறு யாராவது சொன்னதுண்டா என்பதுதான் இங்கே நாம் கவனிக்க வந்த இலக்கிய இன்பம். கம்பன்—ஆம், கம்பன்தான்; வேறு யார்?—மிகப் புதுமையாகத் தோன்றுகின்ற காந்தியக் கருத்தையும் தமிழுக்குப் பழமையாக்கி

விட்டான் என்பதைப் பார்க்கிறபோது நமக்கு உண்டாகும் இலக்கிய இன்பத்தை என்னென்போம்!

'இராமாயணத்திலா? இராவணாதி அரக்கர்களைப் பூண்டோடு கொன்றொழிப்பதையே குறியாகக்கொண்ட இராம கதையிலா? கொலைக்கருவியாகிய கோதண்டத்தோடு கூடிய இராமனிடத்திலா கொல்லா விரதம்? இராமாயணத்திலா அஹிம்சை? இராவண வதத்திலா காந்தியம்? இது என்ன விந்தை!' என்ற எண்ணங்கள்தாம் நமக்கு உடனடியாக உண்டாகின்றன.

ஆம்; இந்த எண்ணங்கள் நமக்கு எழுவது மிகவும் நியாயமானதுதான்.

மனிதனுடைய ஆராய்ச்சிக்குள் அகப்பட்ட உயர்ந்த தத்துவங்கள் எல்லாவற்றிற்கும் இருப்பிடம் போன்றது கம்பன் காவியம். இகபோகங்களைப்பற்றியோ, ஆன்ம விசாரணையைப்பற்றியோ உலகம் இன்றளவும் அறிந்துள்ள மிக உயர்ந்த கருத்துகள் அத்தனையும் அடங்கியது கம்பன் கவிதை.

கொல்லா விரதத்தை நெடுங்காலமாகத் தன் உயிரெனப் போற்றி வந்தவன், தமிழன். கொல்லா விரதத்துக்குச் சிறப்புத் தராத தமிழ் இலக்கியமே இல்லை. தமிழ் வாழ்க்கையின் சிகரமாகிய இந்தக் கொல்லா விரதத்தைப்பற்றிக் கொஞ்சமாவது பேசாமலிருப்பது தமிழுக்குத் தலைசிறந்த காவியத்தை இயற்றிய கம்பன் என்ற தமிழனுக்கு இயலாதது.

ஆதலால், கம்பன் இந்தக் கொல்லா விரதந்தான் மனிதனுடைய எல்லா விரதத்திலும் மேலானதென் பதையும், அந்தக் கொல்லா விரதத்தின் வழியில் ஒரு



நல்ல காரியத்தைச் சாதிக்க முடியாவிட்டால் அதற்காகப் பட்டினி கிடந்து இறந்து போவதே புகழுடையது என்றும் மகாத்மா காந்தி சொல்லுவதைப் போலவே சொல்லுகிறான். அதையும் இராவணனைக் கொல்ல வென்றே அவதரித்த அந்த இராமன் வாக்கில் புகுத்தியே சொல்ல வைக்கிறான். அதை நாம் படிக்கிற போது நமக்கு உண்டாகும் இலக்கிய இன்பம் அளவற்ற தாகும்.

எப்படி என்பதைப் பார்ப்போம்:

இராவணாதியரைக் கொல்லவென்றே பிறந்த இராமனுக்கு இராவணனைக் கொல்லுகிறவரையிலும் கொல்லாமையைப்பற்றிச் சிந்திக்க அவசியமும் அவகாச மும் இல்லாதது போலவே கம்பனுடைய கதைப்போக்கும் நிகழ்ச்சிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இராவணனைக் கொன்றவுடன் 'ஐயோ, கொன்று விட்டோமே!' என்ற துக்கம் இராமனைப் பீடிக்கிறது. அந்தச் சமயத்தில் கொல்லா விரதத்தின் மேன்மையை இராமன் விபீஷணனுக்குச் சொல்லி 'இந்த இராவணனைக் கொன்றதைக்காட்டிலும் நான் பட்டினி கிடந்து மாண்டு போயிருப்பதே மேல்' என்று மிகவும் வருத்தத்தோடு சொல்லுகிறான். அதைப் பாருங்கள்!

இராமனுக்கும் இராவணனுக்கும் இறுதிப்போர் வானத்தில் ஆகாய விமானத்தில் நடக்கிறது. இராவ ணனுக்குச் சொந்தமாகப் புஷ்பகம் என்னும் ஆகாய விமானம் உண்டு. அதன்மீது பறந்துகொண்டு இராமனைத் தாக்க ஆரம்பித்தான். இராமன் பார்த்தான்; தானும் அவனுக்குச் சமானமாக ஆகாயத்தில் பறந்து

யுத்தம் நடத்தினாலல்லாமல் இராவணனை வெல்வது கடினம் என்று கண்டு, உடனே இந்திரனுக்குச் செய்தி யனுப்பினான். உடனே இந்திரன் தனக்குச் சொந்தமாக உள்ள புஷ்பகத்தை அதன் சாரதி மாதலி என்பவனுடன் அனுப்புகிறான். அதில் ஏறிக்கொண்டு நெடுநேரம் போர் புரிந்து இறுதியாக இராமனுடைய பாணம் இராவண னுடைய மார்பில் ஊடுருவிப் பாய்ந்து உயிரையும் கொண்டுபோய் விடுகிறது.

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெல்லப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனை
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிரகுடித்துப் புறம்போயது
ராகவன்தன் புனித வாளி."

"மூன்று கோடி வருஷங்களுள்ள ஆயுள், அரும் பாடுபட்டுச் செய்த தபோபலங்கள், பிரம்மதேவன் 'எங்கிருந்து யார் வந்தாலும் உன்னை வெல்ல முடியாது' என்று முன்னே கொடுத்திருந்த வரம், திக்குகளையெல் லாம ஜெயித்த புஜபல பராக்கிரமம் — முதலான எல்லா வற்றையும் விழுங்கி ஏப்பமிட்டுவிட்டு, இராவணனுடைய மார்பில் ஊடுருவிப் புகுந்து உயிரையும் கவர்ந்துகொண்டு அப்பால் ஓடிவிட்டது, இராமனுடைய பரிசுத்தமான பாணம்" என்பது இதன் பொருள்.

இராமபாணம் பாய்ந்து, அவனுடைய உயிர் போகிற வேகத்தில் இராவணன், ஆகாய விமானத்திலிருந்து



தலைகீழாக ஒரு மலை விழுந்ததுபோல், பூமியின்மேல் விழுந்துவிட்டான்.

உடனே இராமன் ஆகாயவிமானத்தைக் கீழே இறக்கும்படி சாரதிக்குச் சொல்ல, மாதலி விமானத்தைப் பூமியில் இறக்கினான். இராமன் விமானத்தைவிட்டிறங்கி, பூமியிற் கிடந்த இராவணன் அருகிற் சென்று, கம்பீரமான அவனுடைய வடிவத்தை ஆவலோடு பார்வையிடுகிறான்.

இராவணன் பிரம்மாவின் மூன்றாவது பேரன்; ஆதலால், பிராம்மணன்; வேதங்களையெல்லாம் கரை காணப் படித்தவன்; சிவன், பிரம்மா-இவர்களை நோக்கிக் கடுமையான தவங்களைச் செய்து அருமையான வரங் களைப்பெற்றவன்; வீராதிவீரன். வீரன் என்று சொல்லத் தகுந்த ஒருவனுக்கு அடையாளம் என்னவென்றால், உயிருக்கு ஆசைப்பட்டுப் பகைவனுக்குப் பணியாமை. உயிர் போவது நிச்சயம் என்று அறிந்த பின்னும் அடி பணியாமையே வீரம். இராவணனிடத்தில் அந்த வீரம் நிறைந்திருந்ததைக் கம்பன் காட்டுகிறான்.

இராவணனுடைய வீரத்தைக் குறிப்பிட மிகவும் சுருக்கமாக இரண்டொரு பாட்டுகளை மட்டும் இங்கே சொல்வது குற்றமாகாது.

இராமன் படையெடுத்து வருகிற வரையிலும் எப்படி யாவது சீதையை வசப்படுத்திவிடலாம் என்று எண்ணி யிருந்தான். இராமனோடு நடத்திய முதல் நாள் யுத்தத் துக்குப் பிறகு அந்த எண்ணம் அடியோடு அழிந்து விட்டது. எப்படியெனின், முதல் நாள் யுத்தத்தில் தோற்றுப்போய், சேனைகளையெல்லாம் இழந்துவிட்டு,

"வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறும்கையோடு இலங்கை போனான்."

அப்படிப் போன இராவணன் மிக்க மனவேதனையோடு தன் அந்தப்புரத்தில் ஆயாசம் தீர்த்துக்கொள்ளப் படுத்திருக்கிறான். சீதையை விட்டுவிடும்படி பல தடவைகளில் புத்தி சொன்னவனாகிய பாட்டன் மாலியவான், மீண்டும் புத்தி சொல்ல இதுதான் தக்க தருணம் என்று இராவணனிடத்தில் வந்து, முதல் நாள் சண்டையைப் பற்றியும் இராமனுடைய போர்த்திறத்தைப்பற்றியும் விசாரிக்கிறான். அப்போது இராவணன் தன்னுடைய தோல்வியையும் தனக்கு நேர்ந்த என்றுமில்லாத அவமானத்தையுங்கூட மறந்துவிட்டு, பதினைந்து பாட்டுகளில் இராமனுடைய பெருமையையும் அவனுடைய போர்த்திறமையையும் மனமாரப் புகழ்ந்து பேசுகிறான். கடைசியாக,

"வாசவன் மாயன் மற்றை
மலருளோன் மழுவாள் அம்கை
ஈசன்என்று இனைய தன்மை
இனிவரும் இவரால் அன்றி
நாசம்வந்து உற்ற போதும்
நல்லதோர் பகையைப் பெற்றேன்
பூசல்வண்டு உறையும் தாராய்
இதுஇங்கு புகுந்தது என்றான்."



"தாத்தா ! இராமனுடைய சாமர்த்தியத்தை என்னென்று மெச்சுவேன் ! எனக்கு நாசமே வருவதானாலுங்கூட இந்திரன், விஷ்ணு, பிரமன், (மழுவாள் கையில் ஏந்திய) சிவன் என்று சொல்லப்படுகிற அற்பர்களாகிய இவர்களால் அல்லாமல் நல்ல பகைவனை எதிர்த்திருக்கிறேன் என்ற மகிழ்ச்சி எனக்குண்டு. வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிற மலர் மாலையை அணிந்த என் பாட்டனாரே ! இன்றைய யுத்தத்தின் விளக்கம் இது தான்" என்று சொல்லுகிறான் இராவணன். இப்படி இராமனை இராவணன் மெச்சுகின்ற இந்த 15 பாட்டுகளில் மேலே சொன்ன பாடலுக்கு முந்தின பாட்டிலேயே,

"போய்இனித் தெரிவது என்னே !
பொறையினால் உலகம் போலும்
வேய்எனத் தகைய தோளி
இராகவன் மேனி நோக்கி
தீஎனச் செறியும் வீரச்
சேவகச செய்கை கண்டால்
நாய்எனத் தகுது மன்றே
காமனும் நாமும் எல்லாம்."

"இன்னும் என்னத்தைச் சொல்வது, தாத்தா ? பூமி தேவியைப் போன்ற பொறுமையுடைய சீதை என் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேனென்கிறாள் என்பதன் இரகசியத்தை இன்றைக்குக் கண்டு கொண்டேன். அடடா ! அந்த இராமன்தான் என்ன அழகு! அவ்வளவு அழகனாகிய அவனைக் கணவனாக அடைந்த அவள் மற்ற யாரையும் கண்கொண்டு பார்க்க மாட்டாள் என்பது திண்ணம். அது மட்டுமா? அந்த இராமனுடைய அழகை மட்டும் பார்த்து அவனிடத்தில் காதல் கொண்

டிருக்கிற இவள், அவனுடைய யுத்த சாமர்த்தியத்தையும் பார்த்துவிடுவாளானால் (இதுவரை சீதை இப்படி இராமன் யுத்தம் புரிவதைப் பார்த்திருக்க முடியாது) என்னை மட்டுமா, அந்த மன்மதனையுங்கூட நாய்க்குச் சமானமாகத்தான் கருதுவாள்'' என்பது விரிவுரை.

இதனால், முதல் நாள் போருக்குப் பிறகு, சீதை தனக்கு வசப்படுவாள் என்ற ஆசை இராவணனுக்கு அறவே அழிந்துவிட்டது. பின் ஏன் சீதையை விட்டு விடவில்லை என்றால், 'பகைவன் படையெடுத்து வந்து யுத்தம் ஆரம்பித்த பிறகு உயிருக்கு ஆசைப்பட்டு அடி பணிந்தான்' என்ற அபகீர்த்திக்கு ஆளாகக்கூடாது என்ற மறத்தன்மை என்னும் வீர உணர்ச்சியினால்தான்.

அதனால்தான், இந்திரஜித்து தான் முயன்ற நிகும்பலை யாகம் கெட்டுப்போன பிறகு, லக்ஷ்மணனோடு சண்டையிட ஆற்றாதவனாகி, இனி தன் தந்தையான இராவணனுக்குச் சீதையை விட்டுவிடும்படி யோசனை சொல்லாவிட்டால் நாசம் வந்துவிடும் என்று கண்டு, அதைச் சொன்னபோதும் இராவணன் சம்மதிக்கவில்லை.

சீதையை விட்டுவிடும்படி இந்திரஜித்து யோசனை சொன்னதற்கு இராவணன் சொல்லுகின்ற மறுமொழியிலும் அவன் வெறும் வீரத்திற்காக மட்டும் போர் நடத்தினானேயல்லாமல் வேறல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்திரஜித்துக்குப் பதில் சொல்லுகிற முறையிலுள்ள பல பாட்டுகளில் இரண்டை மட்டும் கவனிப்போம் :



"பேதைமை உரைத்தாய் மைந்த !
உலகெலாம் பெயரப் பேரா
காதைஎன் புகழி னோடு
நிலைபெற அமரர் காண
மீதெழும் மொக்கு ளன்ன
யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ
இருபது திணிதோள் உண்டாய்.''

என்றும்,

"வென்றிலன் என்ற போதும்
வேதம்உள் ளளவும் நானும்
நின்றுளன் அன்றோ ? மற்று அவ்
இராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுதல் ஒருகா லத்தும்
தவிருமோ பொதுமைத்து அன்றோ ?
இன்றுளார் நாளை மாள்வர்
புகழுக்கும் இறுதி உண்டோ ?''

'புத்தியில்லா யோசனை சொல்லுகின்றாய், மகனே! உலகங்களெல்லாம் அழிந்துபோகிற காலத்திலுங்கூட என்னுடைய கதை அழியாதிருக்கும்படியாக என் பிரதாபங்களை நிலைநாட்டி வைத்துத் தேவர்களெல்லாம் பார்த்திருக்க, நீர்மேல் குமிழி போன்ற நிலையற்றதாகிய இந்தச் சரீரத்தை விட்டுவிடுவதை விட்டு, சீதையை விட்டுவிடுவதா ! அப்படிச் செய்தால் இருபது தோள்கள் இருந்தும் பயனென்ன ?

'நான் வெற்றியடையப் போவதில்லையென்றே வைத்துக்கொள்வோம். அப்படியானாலும் வேதங்களாகிய சத்தியம் உள்ளளவும் (இராவணன் உயிருக்கு ஆசைப்பட்டுச் சீதையை விட்டுவிட்டுச் சரணமடைந்துவிடாமல் முன்வைத்த காலைப் பின்வாங்காமல் வீரனாக இறந்தான்

என்ற) என்னுடைய கீர்த்தியும், நான் வெற்றி பெற்று இராமன் வீர மரணம் அடைந்து அவன் புகழ் நிலைப்பதாகவே வைத்துக்கொண்டாலும், எவ்வளவு காலம் இருந்தாலும் ஒருநாள் செத்துத்தானே போக வேண்டும்? இது மாற்ற முடியாத பொது விதியல்லவா? இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக்கு இறந்து போவார்கள். — ஆனால், புகழுக்கு மரணம் என்பது உண்டோ?' என்பது இந்த இரண்டு பாட்டுகளுக்கும் பொருள். இதில் 'புகழ்' என்று இராவணன் சொல்லுவது, 'வீரன்' என்ற புகழ்தான். ஆகையால், இராவணன் வீரத்தை விரும்பி உயிரைவிட்டவன் என்பது விளங்குகிறது. இராவணன் என்ற ஒருவன் இருந்தானோ இல்லையோ? அவன் இவ்வளவு வீரத்தோடு விளங்கினானோ இல்லையோ?—அந்த உண்மைகளை எவராலும் அறிய முடியாது. ஆனால், இப்படிப்பட்ட ஓர் இராவணனைக் கம்பன் தன்னுடைய இலக்கியத்தில் உருவாக்கித் தந்து இலக்கிய இன்பத்தை ஊட்டுகிறான்.

இனிக் கொல்லா விரதத்தைத் தொடர்வோம். பாணம் பாய்ந்து உயிரிழந்து பூமியில் விழுந்து கிடந்த வீரனாகிய இராவணனை,

"காதலித்த உருவாக, அறம்வளர்க்கும்
கண்ணாளன் தெரியக் கண்டான்"

என்றபடி தர்மத்தை வளர்க்கும் காவலனாகிய இராமன் விரும்பத் தகுந்த கம்பீர உருவமாகிய இராவணனுடைய உடலை ஆசையோடு நன்றாக அருகிற்சென்று பார்த்தான். இறந்து கிடந்த இராவணனுடைய முகப்பொலிவு எப்படி இருந்தது என்றால்,



"வெம்மடங்கல் வெகுண்டனைய சினம்அடங்க
மனங்அடங்க வினயம் வீய
தெம்அடங்க பொருதடக்கை செயல்அடங்க
மயல் அடங்க ஆற்றல் தேய
தம்அடங்கும் முனிவரையும் தலையடங்க
நிலையடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தனஅம் முறைதுறந்தான்
உயிர்துறந்த முகங்கள் அம்மா!"

பயங்கரமாகிய சிங்கத்தின் கோபத்தைப் போன்ற அவனுடைய சினம் அடங்கிப்போய், விஞ்ஞான சாமர்த்தியங்களெல்லாம் விழுந்துபோய், பகைவர்கள் அஞ்சி நடுங்கி அடங்கிவிடும்படி போர் புரியக்கூடிய தோளாற்றலெல்லாம் தொலைந்துபோய், பிணமாகக் கிடந்த அந்த முறைகெட்ட இராவணனுடைய உயிர் போன முகங்கள், அவன் முன்னாளில் தவம் செய்து கொண்டிருக்கும் முனிவர்களை அடித்து உதைத்துத் துன்புறுத்தி, அதனால் அளவற்ற களிப்படைந்த காலங்களில் இருந்ததைக்காட்டிலும் களையுள்ளனவாகக் காணப்பட்டன.

அந்தக் களை பொருந்திய கம்பீர வடிவத்தைக் கண்ட இராமனுடைய மனத்தில் கவலையும் கருணையும் ஒருங்கே உதித்துத் தன்னைத்தானே நொந்துகொண்ட பல எண்ணங்கள் எழுகின்றன. அந்த எண்ணங்களாவன: "அடே! இவ்வளவு கம்பீரமும் களையும் கல்வியும் அழகும் ஆற்றலும் அமைந்த இவனை நாம் வசப்படுத்தி, இவனுக்கு நல்லறிவு வரும்படியாக மனமாற்றத்தை உண்டாக்கி, இவனையும் வாழ வைத்து, நாமும் சந்தோஷப்படாமல் இவனைக்கொன்றுதானேவிட்டோம். இந்தக் கொலைத்தொழிலால் அடைந்தவெற்றி உண்மை

யான வெற்றியாகாது; இது பொய்யான வெற்றி. இவனைக் கொன்றதைக்காட்டிலும் நான் பட்டினி கிடந்து இறந்து போயிருந்தால் அழியாத புகழாவது கிடைத்திருக்குமே'' என்று எண்ணுகிறான்.

இதுதான் காந்தியத்தின் எண்ணம். தான் தியாகம் செய்து துன்பங்களைச் சகித்துக்கொண்டு, எதிரிக்கு நல்லுணர்வு வரக்கூடிய மனமாறுதலை உண்டாக்க வேண்டும். அது முடியாவிட்டால் பட்டினி கிடந்து செத்துப்போக வேண்டுமேயல்லாமல் கொலைத்தொழிலில் இறங்கிவிடக்கூடாது என்பதுதான் காந்தியத்தின் கருத்து.

இப்படி இராமனுக்கு உண்டான எண்ணங்களை அருகிலிருந்த விபீஷணனிடத்தில் சொல்லி நொந்து கொள்ளுவது போலக் கம்பன் பாடுகின்ற கவிகளைக் கவனிக்க வேண்டும்.

மூன்று பாட்டுகளால் கம்பன் மேற்சொன்ன காந்தியக் கருத்துகளை இராமன் வாக்கால் வெகு தெளிவாகச் சொல்லுகிறான். இந்த மூன்று பாட்டுகளுக்கு இதுவரையிலும் பொருள் விளங்கவேயில்லை. இந்தப் பாட்டுகளுக்கு இதுவரையிலும் அர்த்தம் எழுதினவர்கள் எல்லோரும் உளறியடித்திருக்கிறார்களேயல்லாமல் உரை காணவில்லை. அது அவர்கள் குற்றமில்லை. ஏனெனில், காந்தியடிகளைப் போன்ற ஓர் உதாரணத்தை அவர்கள் கண்டவர்கள் அல்ல. கம்பனுடைய அதி அற்புதமான மூளையில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே காந்தியக் கருத்துகள் உதித்திருந்ததையும் நாம் இதுவரை காண முடியவில்லை.



மகாத்மா காந்தியின் சொல்லையும் செயலையும் கண்ட பிறகுதான் கம்பன் பாட்டுக்குப் பொருள் புலப்படுவதாக இருக்கிறது :

அந்த மூன்று பாட்டுகளைப் பாருங்கள். இராமன் விபீஷணனிடத்தில் சொல்லுகிறான்:

> "வென்றியால் உலகம் மூன்றும்
> மெய்ம்மையான் மேவி னாலும்
> பொன்றிஆர்க் கின்ற தோளைப்
> பொதுவற நோக்கும் போது
> குன்றுஆ சுற்ற தன்றே
> இவனெதிர் குறித்த போரில்
> பின்றியான் முதுகிற் பட்ட
> பிழம்புள தழும்பின் அம்மா !''

"விபீஷணா! இராவணனைக் கொன்றுவிட்டேன்; அதனால் வென்றுவிட்டேன். இந்த வெற்றியால் இராவணன் ஆதிக்கியத்துக்கு அடங்கியிருந்த மூன்று லோகத்தையும் நான் அடைந்துவிட்டேன் என்பது உண்மை. அதனால் என்னுடைய தோளாற்றலின் பெருமை குறைந்துவிட்டாலும் தோள்கள் பூரித்துத் துடிக்கின்றன. ஆனால், இவனைக் கொன்றுவிட்ட இந்த என்னுடைய செயலை நான் என்னுடைய அசாதாரண நிலைக்குத் தகுந்தபடி ('பொது அற-' பொது விதிகளைக்கொண்டு என்னை நான் சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளாமல், பொது அல்லாத எனக்குத் தகுந்த அசாதாரண விதிகளைக்கொண்டு) அளந்து பார்க்கிறபோது, என்னுடைய தோளாற்றலின் பெருமை குறைந்து போய் குற்றமுள்ளதாகிவிட்டது. நான் பின்னடைந்து முதுகிட்டு ஓடி, முதுகில் அடிபட்டு, அதனால் அழியாத

அபகீர்த்திச் சின்னமான தழும்பை அடைந்துவிட்டவனைப் போல் என் மனம் வருந்துகின்றது'' என்பது இந்தப் பாட்டின் விரிவுரை.

இதன் விளக்கம் என்னவென்றால், 'இவனைக் கொன்றுவிட்டதனால் இவன் ஆண்ட மூன்று லோகத்தையும் நான் அடைந்துவிட்டது உண்மைதான். அதனால் என்னுடைய தோள்கள் துடித்து உடல் பூரித்தாலும், உள்ளமும் உணர்ச்சியும் பூரிப்படையவில்லை. ஏன் என்றால், நான் சாதாரண மனிதன் அல்லேன். அதன் சாதாரணச் சட்டங்களைக்கொண்டு இந்தக் காரியத்தை நான் செய்துவிட்டது சரிதானா என்று பார்க்கக்கூடாது. 'பொது அற' நோக்க வேண்டும். சாந்த மயமான சைதன்னியப் பொருளிலிருந்து வந்த நான் இவனுக்கு ஒரு மன மாறுதலை உண்டாக்கி நல்வழி காட்ட முடியாமல், சாதாரண மனிதர்களைப் போலவே எதிர்த்துப் போர் புரிந்து கொன்றுவிட்டதை நினைத்துப் பார்க்கிற போது நான் வென்றுவிட்டவனாக என்னை மதிக்க நியாயமில்லை. உண்மையில் தோற்றுப்போனவன் நான் தான். அதுமட்டுமன்று. அந்தத் தோல்விக்கு அழியாத அடையாளமாகப் புறங்கொடுத்து ஓடி, முதுகில் மறைக்க முடியாத பெரிய தழும்பையும் அடைந்துவிட்டவனாகக் கருதுகின்றேன் என்பதாகும். இந்த விளக்கத்தை, இதற்கு அடுத்த பாட்டு உறுதிப்படுத்துகிறது :

> "கார்த்தவீ ரியன்என் பானால்
> கட்டுண்டான் என்னக் கற்கும்
> வார்த்தைஉண்டு, அதனைக் கேட்டு
> நாணுறும் மனத்தி னேற்கு
> போர்த்தொழில் பிறகிட்டு ஏற்ற
> புண்ணுடைத் தழும்பு போலாம்
> நேர்த்ததும் காண லுற்ற
> ஈசனார் இருக்கை கிற்க.''



*(விபீஷணா!)* இராவணன் பரமசிவனுடைய இருப்பிடமாகிய கைலாய மலையை ஆணிவேரோடு அசைத்து எடுத்தவன். அதற்காகப் பரமசிவன் சினந்து அவனை அந்தப் பர்வதத்தின்கீழ் அழுத்திவிட நினைத்த போது இராவணன் அந்தப் பரமேசுவரனும் சொக்கிப்போகும்படி சாமகானம் பாடிப் பரமசிவனிடத்தில் நீண்ட ஆயுளையும் வாளாயுதத்தையும் பரிசு பெற்றவன், அப்படிப்பட்ட இவனை நான் கொன்றுவிடாமல் புத்தி புகட்டியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! அது ஒருபுறம் இருக்க, இவன் கார்த்தவீரியார்ச்சுனன் என்ற ஒரு கந்தர்வனால் கட்டப்பட்டு, சிறை கிடந்தான் என்று சொல்லப்படுகிற வார்த்தையும் உண்டு. அதைக் கேட்ட நான் மிகவும் வெட்கமடைகின்றேன், ஏனெனில், ஒரு சாதாரண கந்தர்வன் கட்டிப்போட்டிருந்த இவனை நான் வெட்டித்தானே போட்டேன். வெட்டுவதைக்காட்டிலும் கட்டுவதன்றோ சாமர்த்தியம். ஆகையினால், நான் இவனைக் கொலைசெய்துவிட்ட இந்தக் காரியத்தைப் போரில் புறங்கொடுத்து முதுகில் அடிபட்டு அதனால் புண்பட்ட தழும்புக்குச் சமானமாகத்தான் நினைக்க வேண்டும். அந்தத் தழும்பும் ஆறிப்போன தழும்பல்ல; 'புண்ணுடைத் தழும்பு.' எந்நேரமும் உபத்திரவம் உண்டாக்கி உறுத்திக்கொண்டே இருக்கக்கூடிய தழும்பாக இருக்கிறது என்பது இப்பாட்டின் கருத்து.

இதற்கடுத்த பாட்டைக் கவனியுங்கள். இந்த மூன்றாவது பாட்டுத்தான் மேலே சொல்லிவந்த காந்திய தத்துவத்திற்கு முத்தாய்ப்பு.

அந்தக் கடைசிப் பாட்டைச் சொல்லுமுன்னால் சில கேள்விகளை எழுப்பி, அவற்றிற்குப் பதில் சொல்லிக் கொண்டால் பாட்டு சுபைமாகப் புரியும். சரி, இராவணனைக் கொல்லாமல் என்ன செய்திருக்க வேண்டும்? இந்தக் கேள்விக்குப் பதில் இராமன் பேசுகின்ற மனோபாவத்திலிருந்து தெரிவது என்னவென்றால், இராவணனைக் கொல்லாமல் அவனுக்கு நல்லறிவு வரும்படியாக ஒரு மனமாறுதலை உண்டாக்கியிருக்க வேண்டும் என்பதாகும்.

அதை எப்படிச் செய்வது? அவனோ பகைமையே பாராட்டி, அங்கதனைத் தூதனுப்பி, சமாதானத்துக்கு வரச்சொன்னபோதும் மறுத்துவிட்டான். மேலும், முதல் நாள் போரில் இராவணன் முற்றிலும் தோல்வி அடைந்து, சேனைகளையும் ஆயுதங்களையும் இழந்துவிட்டு, ஏகாங்கியாக நின்றதைக் கண்டு (இராமன்),

" ஆள்ஐயா னினக்கு அமைந்தன
மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை
இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாஎன நல்கினன்
நாகிளம் கமுகில்
வாளை தாவுறு கோசல
நாடுடை வள்ளல்''



'இராவணா, உன்னுடைய சேனையெல்லாம் பூளைப் புஷ்பங்கள் போலப் பறந்து போனதைக் காண்பாய். சேனையில்லாமல் ஆயுதமும் இல்லாமல் நிற்கிற உன்னோடு, போர் புரிவது எங்கள் தர்மம் அல்ல. ஆகையினால், இன்று போய், போருக்கு வருவதானால் நாளைக்கு வா; இல்லை, சமாதானத்துக்கென்றால் இப்பொழுதே தயார்,'' என்று சூசனையாகச் சொன்னதையுங் கூட மதிக்காமல், சமாதான எண்ணமே சிறிதுமின்றி, மேலும் மேலும் சண்டைக்கே புதுப்புதுச் சூழ்ச்சிகளைச் செய்துகொண்டிருந்தான். அப்படிப்பட்ட இவனைக் கொல்லாமல் வேறு என்ன செய்து, அவனுக்கு நல்லறிவு புகட்டி மனமாறுதலை உண்டாக்கியிருக்க முடியும்?— இந்தக் கேள்விக்கு இராமனுடைய மனப்போக்கின்படி பதில் என்னவென்றால், அவன் இப்போது சமாதானத்துக்கு வரவில்லையானாலும், அவனைக் கொல்லாமல் கார்த்தவீரியார்ச்சுனன் செய்தது போலச்சிறைப்பிடித்துக் கட்டிப்போட்டிருந்தால் சிறுகச்சிறுக அவனுக்கு மனமாற்றத்தை உண்டாக்கியிருக்கலாம் என்பதாம்.

இன்னொரு கேள்வி: மனமாறுதல் ஏற்படுவதற்கு அவனுடைய மனமும் பக்குவப்பட்டிருந்தால்தானே முடியும்? சாத்விகம் அதிகமாக உள்ளவர்களுக்கு வெகு விரைவில் மனமாற்றம் உண்டுபண்ணலாம். ராஜஸம் மேலிட்டவர்களானாலும் கொஞ்சம் சிரமப்பட்டால் மனமாறுதலை உண்டாக்கிவிடலாம். வெறும் தாமஸமே நிறைந்தவனுக்கு மனமாற்றம் உண்டாக்கவே முடியாது. அப்படியிருக்க, இவனுக்கு எப்படி நல்லறிவு வரச் செய்திருக்க முடியும்?—இந்தக் கேள்விக்கு இராமன் பதில்:

அப்படியே அவன் வெறும் தாமஸ குணமுள்ளவனாக இருந்தாலும் அவனை நான் கொன்றிருக்கக்கூடாது. அது எனக்குப் புகழ் தருவதன்று. நான் கொலைத் தொழிலைச் செய்திருக்கக்கூடாது. நான் என்ன செய்திருக்க வேண்டுமென்றால், கொல்லா விரதத்தை மேற்கொண்டு, பட்டினி கிடந்து, மாண்டு போயிருக்க வேண்டும். அப்படிச் செய்திருப்பேனேயானால், 'இராவணனைக் கொல்லவென்றே கோதண்டத்தோடு வந்த இராமன், தன்னுடைய சொந்த இயல்பாகிய கருணையை மேற்கொண்டு, இராவணனைக் கொல்ல மறுத்துப் பட்டினி கிடந்து மாண்டுபோனான்' என்ற பெரும் புகழ் எனக்கு உலகத்தில் நிரந்தரமாக நிற்கும். இப்போது எனக்குக் கிடைத்தது என்னை ஏளனம் செய்ய நினைப்பவர்களுடைய பரிகாசச் சிரிப்புத்தான். ஆகையினால், இந்தக் கொலைத்தொழிலால் அடைந்த வெற்றி, பொய்யான வெற்றிதான் என்பது. இந்தப் பதிலை இதற்கு அடுத்த பாட்டு சொல்லுகிறதா, இல்லையா என்று பாருங்கள்.

"மாண்டுஒழிந்து உலகில் நிற்கும்
வயங்குஇசை முயங்க மாட்டாது
ஊண்தொழில் உகந்து தெவ்வர்
முறுவல்என் புகழை உண்ண
பூண்தொழில் அமைந்த மார்பா !
'போர்புறம் கொடுத்தார் போன்ற
ஆண்தொழி லோரிற் பெற்ற
வெற்றியும் அவத்தம்' என்றான்."

இந்தப் பாட்டுக்குப் பதம் பதமாக அர்த்தம் பார்ப்போம்:



மாண்டு ஒழிந்து—நானாக என் உயிரைத் துறந்து, உலகில் நிற்கும் — அதனால் உலகத்தில் நிலைக்கக் கூடிய, வயங்கு இசை — பிரகாசமான புகழை, முயங்க மாட்டாது—அடையாமல், ஊண்தொழில் உகந்து—சோறு தின்றுகொண்டிருக்க ஆசைப்பட்டு உயிரை வைத்துக் கொண்டிருந்து, தெவ்வர் முறுவல் என் புகழை உண்ண— எனக்கு வேண்டாதவர்களின் ஏளனச் சிரிப்பு என்னுடைய புகழை அழிக்க, பூண்தொழில் அமைந்த மார்பா! —ஆபரணங்களை அணிந்த மார்பனாகிய விபீஷணா ! போர் புறம் கொடுத்தார் போன்ற - யுத்தத்தில் அஞ்சி முதுகு காட்டி ஓடினவர்களைப் போன்று, ஆண் தொழிலோரிற் பெற்ற — இந்த யுத்த முறையில் கொலை செய்து அடைந்த, வெற்றியும் அவத்தம் — ஜயமும் அசத்தியமான வெற்றி, என்றான்—என்று சொன்னான்— என்பது பதப்பொருள்.

இந்தப் பாட்டிலுள்ள பதங்களைப் பாருங்கள்.

'மாண்டு ஒழிந்து, உலகில் நிற்கும் வயங்கிசை முயங்க மாட்டாது, ஊண் தொழில் உகந்து, தெவ்வர் முறுவல் என் புகழை உண்ண, பூண்தொழில் அமைந்த மார்பா ! போர் புறங்கொடுத்தார் போன்ற ஆண் தொழிலோரில் பெற்ற வெற்றியும் அவத்தம்' என்றான்.

இந்தப் பதங்களைத் தனித்தனியே அர்த்தம் செய்து பார்க்க வேண்டும். அப்போதுதான், இப்போது மகாத்மா காந்தியவர்கள் கடைப்பிடித்து நடந்து காட்டி, உபதேசித்து வந்த 'அஹிம்சா சத்திய' மார்க்கத்தையேதான் கம்பன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே சொல்லி

யிருக்கிறாள் என்பது விளங்கும். 'என்றும் உள தென் றமிழ்' என்றும் கம்பன் தமிழைப்பங்றிச் சொன்னதன் உண்மையும் உணரலாம். என்றைக்கும் உள்ளன வாகக்கூடிய சத்தியங்களையும், அவற்றிற்கான அறங் களையுமே குறியாகக்கொண்டது தமிழ் இலக்கியம் என்ற பொருளைப் புகட்டுவதே 'என்றுமுள தென்றமிழ்' என்ற கம்பன் வாக்கின் கருத்து.

இனி பதங்களின் அர்த்தங்களைப் பாருங்கள் :

**மாண்டு ஒழிந்து** — நானாக (இச்சா மாத்திரமாக என் உயிரை விட்டு ஒழிய வேண்டும் — இச்சா மாத்திர மாக உயிரை விடுவதென்றால், அதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. அஃதாவது, அன்ன ஆகாரத்தை மறுத்து உயிர் துறப்பது. அப்படி நான் மாண்டு ஒழிந்திருந்தால்,

**உலகில் நிற்கும் வயங்கும் இசை** — உலகத்தில் நிலைத்து நிற்கக்கூடிய அழியாப்புகழ் கிடைத்திருக்கும். என்ன புகழ் என்றால், இராமன் இராவணனைக் கொல்ல வென்றே அவதரித்ததும், அப்படிக் கொல்லுவதற்கு வேண்டிய ஆயுத பலங்களும் மற்றெல்லாச் சக்திகளும் இருந்துங்கூடக் கொலை செய்ய மனமில்லாமல் பட்டினி கிடந்து இறந்து போனானே! என்ற அழியாப் புகழ் கிடைத்திருககுமே — அந்தப் புகழை.

**முயங்கமாட்டாது** — அடைய மாட்டாதவனாகி, **ஊண்தொழில் உகந்து** - உயிரோடு இருந்து சாப்பிட்டுக் கொணடிருபபதில் ஆசை வைத்து. **தெவ்வர் முறுவல் என் புகழை உண்ண** - என் பகையாளிகளெல்லாம் சிரித்து எளனம் செய்து என் புகழை அழித்துவிடும்படி யாக என்ன எளனம், எப்படிச் சிரிப்பு, என் புகழ் அழியும்



என்றால்—"இந்த இராமனைச் சத்திய ரூபியாகவும் சைதன்ய மூர்த்தியாகவும் இருக்கிற கருணாநிதியான பரப்பிரம்மத்தின் அம்சம் என்று சொன்னார்களே! சீ! இவ்வளவுதானா இந்த இராமன்! கார்த்த வீரியார்ச்சுனன் என்ற ஒரு சாதாரண கந்தர்வன் கட்டிச் சிறையில் வைத் திருந்த இராவணனை - வாலியினுடைய வாலில் பத்துத் தலைப் பூச்சியாகத் தொத்திக் கொண்டிருக்கக் கட்டுண்டு கிடந்த இராவணனை - சிறைப் பிடிக்கவோ கட்டிப் போடவோ முடியாமல் எட்ட இருந்து பாணம் போட்டுக் கொன்றுதானே விட்டான். இவனா நாராயணனுடைய அம்சம்! இவனா அவதார புருஷன்! இவனா பரப்பிரம் மத்தின் பகுதி!" என்று சிரித்து எளனம் செய்வதனால் என் புகழை விழுங்கி ஏப்பமிட்டுவிடுவார்கள். ஆதலால்,

**பூண்தொழில் அமைந்த மார்பா!** — ஆபரணங் களை அணிந்த மார்பனாகிய விபீஷணா!

**போர் புறங் கொடுத்தார் போன்ற** — சண்டைக்குப் பயந்து முதுகிட்டு ஓடினவர்களைப் போன்ற, — இங்கே சண்டைக்குப் பயந்து முதுகிட்டு ஓடுவதாவது :— பரப் பிரம்மத்தின் பிரதிநிதியான இராமனுக்குச் சொந்தமான பலம் கருணை என்ற ஆயுதந்தான். சத்தியம் தவறாத சாந்தந்தான் கருணாநிதியான பகவானுடைய அம்சமான இராமனுக்குத் தைரிய ஸ்தானம். அந்தக் கருணா பல மான சாந்தத்தை விட்டு, அதற்கு நேர்மாறான கொலையை மேற்கொண்டதனால், இராமன் தன் னுடைய சுதர்ம தைரியத்தை இழந்தவனாகிவிட்டான். அந்தத் தைரியம் போய்விட்டதனால் ஆயுத பலத்தின் பின் ஓடி ஒளிய வேண்டியதாகிவிட்டது. அதனால்

இராமன் போரில் புறங்கொடுத்தவனாகத் தன்னைக் கருதுகிறான். அப்படிப் போரில் புறங்கொடுத்தார் போன்ற, ஆண் தொழிலோரீற் பெற்ற வெற்றியும் அவத்தம் என்றான்.

யுத்த முறையில் கொலை செய்து அடைந்த இந்த வெற்றியும் அசத்தியம் என்றான். ஆண்தொழில் என்பது போர்த்தொழில். 'பெருங்கொலை வழியாம் போர் வழியில்' அடைகின்ற வெற்றி, கருணாமூர்த்தியான கடவுளின் அம்சம் என்ற ஆன்ம உணர்ச்சியுள்ள எனக்குப் பொய்யான வெற்றியாகத்தான் புலப்படுகின்றது. எனக்கு அவத்தம் இல்லாத சத்தியமான வெற்றி எது என்றால், ஸாத்விகத்தையே கடைப்பிடித்துப் பட்டினி கிடந்து மாண்டொழிந்து போயிருக்க வேண்டும் என்று இராமன் சொன்னான் என்பது இந்தப் பாட்டில் ஐயந்திரிபற விளங்குகின்றது. இதுதான் காந்தீயத்தின் அடிப்படை. மெய்ஞ்ஞான உணர்ச்சியும் இதுவேதான்.

இந்த 'மெய்ஞ்ஞானம்' என்றதை நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும், மிகவும் புதிய முறையில் மகாத்மா காந்தியவர்கள் சொல்லியதாக நினைக்கிற இந்த மெய்ஞ்ஞான உணர்ச்சி ஏற்கெனவே நம்முடைய இலக்கியத்தில் இருப்பதைக் காணும்போது அதில் ஓர் அபூர்வமான 'இலக்கிய இன்பம்' நமக்கு உண்டாகிறதல்லவா? அது போதும்.